T.N.L.A Debates

1989

Vol 8.. No 1

5 April 1989

144297

வெளியீடு 14-9-1989 Issued 14-9-1989

எழும்பூர், சென்னை-600008.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 5, 1989–தொகுதி 8–எண் 1
Wednesday, the 5th April, 1989–Volume 8-No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

600 009
144297

உள்ளடக்கம்

5—4—1989

பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் i–iii

Personnel of the Government of Tamil Nadu v–vii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி) .. ix–xi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி.) .. xiii–xxii

1. வினாக்கள்—விடைகள்.—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 1–30

2. தகவல் கோரல்—

(அ) பேரவையின் விவாதங்கள் இடையூறுகள் இல்லாமல் சுமுகமாக நடைபெற வேண்டியதன் அவசியம் குறித்து .. .. .. 30–31

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து. .. .. 32–50

(இ) தம்மைக் கொல்ல முதலமைச்சர் ஆணையிட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் வெளியே தெரிவித்துள்ள குற்றச்சாட்டு குறித்து .. .. 32–40

(ஈ) பார்வையாளர்கள் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டது குறித்து .. .. .. 41

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

கோவை செல்வபுரம் பகுதியில் தி.மு.க. இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளது குறித்து .. .. .. .. 40, 42–49

4. உரிமைப் பிரச்சினை—

'தினகரன்' நாளிதழ் மீது .. .. 50–57

பக்கங்கள்

5. கவன ஈர்ப்பு—

கோவை வசந்தா மில், ஜனார்த்தனா மில் மற்றும் திருப்பூர் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து .. .. .. 57–60

6. அவையில் நடைபெற்ற முன்னைய நிகழ்ச்சிகள் குறித்த பிரச்சினை .. .. 61–65

7. விதி 109-இன் கீழ் உறுப்பினர் தன்னிலை விளக்கம்—

சென்னையில் வீட்டுவசதி வாரிய மனை ஒதுக்கீடு, அடுக்கு மாடி கட்டட அனுமதி ஆகியவற்றில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்த முதலமைச்சரின் 65–93
அறிக்கை .. .. .. .. 94–97

8. தீர்மானம்—

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசியவர் மீது நடவடிக்கை .. .. .. 93–94

9. மானியக் கோரிக்கைகள், 1989-90— விவாதமும், வாக்கெடுப்பும்.—தொடர்ச்சி

கோரிக்கை எண். 20—வேளாண்மை
கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. } 97–154

திரு. பி. காளியப்பன் .. 97–99
திரு. கே. சின்னசாமி .. 99–101
திரு. ஆர். ஈஸ்வரன் .. 101–107
திரு. ஆர். மகேந்திரன் .. 107–110
திரு. பொன். விஜயராகவன் .. 111–114
திரு. கோ. வீரையன். .. 115–120
திரு. எல். மூக்கையா .. 120–123
திரு. கோ. பூவராகன் .. 123–132
திரு. அ. பாப்பா சுந்தரம் .. 133–136
மாண்புமிகு திரு. கோ.சி. மணி .. 136–153

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. 154–155

## தமிழ்நாடு அரசின ஆளுநரும் அமைச்சரவையும்.

**ஆளுநர்—டாக்டர் பி.சி. அலெக்சாண்டர்**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

முதலமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :—** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மது விலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத் துறை.

2. கல்வி அமைச்சர் .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட), ஆட்சி மொழி, சட்ட மன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல்.

3. சட்ட அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றிய சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைபற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப்.

4. வருவாய்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

| | |
|---|---|
| 5. போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள். |
| 6. அறநிலையத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: அறநிலையத் துறை, வீட்டு வசதி, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள், மற்றும் சின்கோனா. |
| 7. வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கோ. சி. மணி: வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி. |
| 8. உணவு அமைச்சர் . . . | மாண்புமிகு ஆற்காடு நா. வீராசாமி: உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள். |
| 9. செய்தி—தொழிலாளர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. பொன்முத்துராமலிங்கம்: செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 10. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை. |



| | |
|---|---|
| 11. பொதுப்பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. துரைமுருகன்: பொதுப்பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட), திட்டப்பணிகள். |
| 12. சமூக நலம்—ஊரகத் தொழிற்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: சமூகநலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமி தானம் மற்றும் கிராம தானம். |
| 13. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர். |
| 14. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், நகர அமைப்பு, குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல். |
| 15. மின்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. என். நேரு: மின்சாரம் மற்றும் பால். |
| 16. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம். |
| 17. கைத்தறித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். தங்கவேலு: கைத்தறி, நெசவாலைகள், நகர்ப்புற மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு. |
| முதலமைச்சரின் பேரவைச் செயலர். | திரு. எல். கணேசன் |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

GOVERNOR OF TAMIL NADU—Dr. P. C. ALEXANDER

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. Chief Minister .. .. | **The Hon. Dr. M. KARUNANIDHI :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise. |
| 2. Minister for Education .. | **The Hon. Prof. K. ANBAZHAGAN :** Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology. |
| 3. Minister tor Law .. .. | **The Hon. Thiru S. J. SADIQ PASHA:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money-lending and Legislation on Chits and Wakf. |
| 4. Minister for Revenue .. | **The Hon. Thiru NANJIL K. MANOHARAN :** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act. |
| 5. Minister for Transport .. | **The Hon. Thiru M. KANNAPPAN :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways. |
| 5. Minister for Hindu Religious and Charitable Endowments. | **The Hon. Thiru K. P. KANDASAMY:** Hindu Religious and Charitable Endowments, Housing, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona. |

7. Minister for Agriculture .. **The Hon. Thiru KO. SI. MANI :** Agriculture, Agricultural Re-finance, Agricultural Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex level including the Federation and Food Production.

8. Minister for Food .. .. **The Hon. Thiru Arcot N. VEERASAMY :** Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics.

9. Minister for Information and Labour. **The Hon. Thiru Pon. MUTHU-RAMALINGAM :** Information and Publicity, *Film Technology*, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indian Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

10. Minister for Rural Development and Local Administration. **The Hon. Thiru VEERAPANDI S. ARUMUGAM :** Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

11. Minister for Public Works .. **The Hon. Thiru DURAIMURUGAN:** Public Works, Minor Irrigation including Special Minor Irrigation, Programme Works.

12. Minister for Social Welfare and Rural Industries. **The Hon. Thirumathi SUBBU-LAKSHMI JAGADISAN :** Social Welfare including Children and Women's Welfare, Beggers, Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramadan.



13. Minister for Adi-Dravidar Welfare. ... **The Hon. Dr. E. RAMAKRISHNAN:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

14. Minister for Public Health ... **The Hon. Dr. K. PONMUDI *alias* DEIVASIGAMANI :** Public Health, Medicines, Town Planning, Water Board and Environmental Pollution Control.

15. Minister for Electricity .. **The Hon. Thiru K. N. NEHRU :** Electricity and Milk.

16. Minister for Animal Husbandry. **The Hon. Dr. K. CHANDRA-SEKARAN :** Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation.

17. Minister for Handlooms .. **The Hon. Thiru S. THANGAVELU :** Handlooms, Textiles, Urban Development, Slum Clearance Board and Accommodation Control.

Parliamentary Secretary to Chief Minister. Thrru L. GANESAN

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன்.

### பேரவைத் துணைத் தலைவர்

திரு. பி. துரைசாமி.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மு. இராமநாதன்.

திரு. என். கணபதி.

திரு. பெ. சீனிவாசன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திரு. சி. கோவிந்தராஜன்.

### செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

(அகர வரிசைப்படி.)

| | |
|---|---|
| சீனிவாசன், திரு. சா., பி.எஸ்ஸி., .. | முதுநிலை குழு அலுவலர். |
| சாமிநாதன், திரு. பொ. க. .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல்., | துணைச் செயலாளர். |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல்., | துணைச் செயலாளர். |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி.ஏ., பி.எல்., | துணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. கு.அ., பி.ஏ., .. | குழு அலுவலர். |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| கனகசபாபதி, திரு. பெ. சு., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| கேசவராம், திரு. சு., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா, திருமதி., பி.எஸ்ஸி., | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி.சி., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| ஜான், திரு. வ. சா., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |



| | |
|---|---|
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல்., | தலைமை நிருபர் (பேரவை). |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ., | தலைமை நிருபர் (குழுக்கள்). |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் அகர வரிசைப்படி.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 'அ' | | |
| 1 அங்கமுத்து, திரு. கே. | .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.) |
| 2 அசேன், திரு. ஜெ. | .. | இராணிப்பேட்டை |
| 3 அண்ணாதுரை, திரு. கே. | .. | பட்டுக்கோட்டை |
| 4 அண்ணாதுரை, டாக்டர் கே. | .. | வரகூர் (செ.வ.) |
| 5 அண்ணாநம்பி, திரு. ஆர். | .. | அவிநாசி (செ.வ.) |
| 6 அண்ணாமலை, திரு. எம். | .. | அரூர் (செ.வ.) |
| 7 அதியமான், திரு. ஆ. | .. | சேடப்பட்டி |
| 8 அப்துல்சமத், திரு. பா. | .. | வாணியம்பாடி |
| 9 அப்துல் லத்தீப், திரு. எம். | .. | சேப்பாக்கம் |
| 10 அர்ஜுனன், திரு. கே. | .. | தாரமங்கலம் |
| 11 அழகர்சாமி, திரு. சோ. | .. | கோவில்பட்டி |
| 12 அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13 அறிவழகன், திரு. ஆ. | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 14 அன்பழகன், பேராசிரியர் க. | .. | அண்ணாநகர் |
| 15 அன்பழகன், திரு. வ. | .. | செய்யாறு |
| 16 அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 'ஆ' | | |
| 17 ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 18 ஆண்டி அம்பலம், திரு. மெ. | .. | நத்தம் |
| 19 ஆறுமுகம், திரு. த. | .. | அரியலூர் |
| 20 ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ. | .. | சேலம்-2 |
| 'இ' | | |
| 21 இரகுமான்கான், திரு. அ. | .. | பூங்காநகர் |
| 22 இராசமாணிக்கம், திரு. இரெ. | | குத்தாலம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ' இ '—தொடர்ச்சி. | |
| 23 | இராசமாணிக்கம், திரு க.வெ.வீ. | மேலூர். |
| 24 | இராசன், திரு. வி.பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 25 | இராசு, திரு. வி.கே. .. | அரக்கோணம் (செ.வ.) |
| 26 | இராசு, திரு. வெ. .. | குளத்தூர் (செ.வ.) |
| 27 | இராசேந்திரன், திரு. அ. .. | பேரளூர் |
| 28 | இராதா, திரு. எஸ்.ஆர். .. | மதுரை கிழக்கு |
| 29 | இராதாகிருஷ்ணன், திரு. டி... | சோழவந்தான் |
| 30 | இராமகிருஷ்ணன், டாக்டர் எ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 31 | இராமகிருஷ்ணன், திரு. நா. .. | கம்பம் |
| 32 | இராமச்சந்திரன், திரு. எம். .. | திருவோணம் |
| 33 | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. | விளாத்திகுளம் |
| 34 | இராமச்சந்திரன், திரு. ந. .. | செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. ஏ.எம். .. | ஆத்தூர் |
| 36 | இராமசாமி, திரு. கே.வி. .. | கரூர் |
| 37 | இராமசாமி, திரு.வி. .. | திருச்செங்கோடு |
| 38 | இராமசாமி, திரு. கே. ஆர். .. | திருவாடானை |
| 39 | இராமநாதன், திரு. மு. .. | கோவை (மேற்கு) |
| 40 | இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர் |
| 41 | இராஜேந்திரன், திரு. கே.ஆர். | பர்கூர் |
| 42 | இராஜேந்திரன், திரு. பி.வி. | வேதாரண்யம் |
| 43 | இளம்வழுதி, திரு. .. | எழும்பூர் (செ.வ.) |
| | ' ஈ ' | |
| 44 | ஈஸ்வரன், திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| | ' உ ' | |
| 45 | உகம்சந்த், திரு. எஸ்.டி. .. | மதுராந்தகம் |
| 46 | உதயசூரியன், திரு. தா. .. | சின்னசேலம் |
| 47 | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | தஞ்சாவூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ' எ ' | |
| 48 | எட்டியப்பன், திரு. ஆர். .. | பெரணமல்லூர் |
| | ' ஏ ' | |
| 49 | ஏகாம்பர ரெட்டி, திரு. எ. .. | பள்ளிபட்டு |
| | ' க ' | |
| 50 | கண்ணப்பன், திரு. மு. .. | பல்லடம் |
| 51 | கண்ணன், திரு. எஸ்.பி. .. | அணைக்கட்டு |
| 52 | கணபதி, திரு. என். .. | குறிஞ்சிப்பாடி |
| 53 | கணேசமூர்த்தி, திரு. என் .. | மயிலாப்பூர் |
| 54 | கணேசமூர்த்தி, திரு. ஏ. .. | மொடக்குறிச்சி |
| 55 | கணேசன், திரு. எல். .. | ஒரத்தநாடு |
| 56 | கணேசன், திரு. க.சொ. .. | ஜெயங்கொண்டம் |
| 57 | கணேசன், திரு. சா. .. | தியாகராயநகர் |
| 58 | கணேசன், திரு. வே. .. | மங்களூர் (செ.வ.) |
| 59 | கந்தசாமி, திரு. கே. .. | கிணத்துக்கடவு |
| 60 | கந்தசாமி, திரு. கே.பி. .. | திருச்செந்தூர் |
| 61 | கரீம், திரு. எம்.கே. .. | கடலூர் |
| 62 | கருணாநிதி, டாக்டர் மு. .. | துறைமுகம் |
| 63 | கருப்பசாமி, திரு. எஸ்.எஸ். | சாத்தூர் |
| 64 | கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபனாசம் |
| 65 | கன்னையன், திரு. க. .. | தொட்டியம் |
| 66 | கஜபதி, திரு. டி.ஆர். .. | ஆற்காடு |
| 67 | காஞ்சனா, டாக்டர் க. .. | கிருஷ்ணகிரி |
| 68 | காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. | முதுகுளத்தூர் |
| 69 | காளியப்பன், திரு. பி. .. | ஒட்டன்சத்திரம் |
| 70 | கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து. | சிதம்பரம் |
| 71 | கிருஷ்ணன், திரு. சி. .. | ஓமலூர் |
| 72 | குணசேகரன், திரு. ஏஸ். .. | தலைவாசல் (செ,வ.) |
| 73 | குமரி அனந்தன், திரு. .. | சாத்தான்குளம் |
| 74 | குருநாதன், திரு. சு. .. | பாளையங்கோட்டை |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'க'—தொடர்ச்சி. | |
| 75 குருமூர்த்தி, திரு. ஜி.ஜி. .. | பவானி |
| 76 கோதண்டம், திரு. ஏ. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 77 கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | மேட்டுப்பாளையம் |
| 78 கோவிந்தசாமி, திரு. சி. .. | திருப்பூர் |
| 79 கோவிந்தசாமி, திரு. வி.சி. .. | காவேரிப்பட்டினம் |
| 80 கோவிந்தராஜன், திரு. சி. .. | நெல்லிக்குப்பம் |
| 81 கோவிந்தன், திரு. வெ. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 'ச' | |
| 82 சண்முகம், திரு. சி. .. | ஆலந்தூர் |
| 83 சந்திரசேகர், திரு. வி.பி. .. | பொள்ளாச்சி |
| 84 சந்திரசேகரன், டாக்டர் க. .. | ஆலங்குடி |
| 85 சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. | கடையநல்லூர் |
| 86 சம்பத், திரு. ஏ.ஜி. .. | முகையூர் |
| 87 சற்குணம், திருமதி எஸ்.பி. .. | இராதாகிருஷ்ணன் நகர் |
| 88 சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன், டாக்டர் மு. | இளையான்குடி |
| 89 சாதிக்பாட்சா, திரு. எஸ்.ஜே. | உடுமலைப்பேட்டை |
| 90 சாந்தகுமாரி, டாக்டர் த. .. | தாராபுரம் (செ.வ.) |
| 91 சாமிநாதன், திரு. ஆர். .. | திருமங்கலம் |
| 92 சிங்காரம், திரு. ஆர். .. | பேராவூரணி |
| 93 சிவசுப்பிரமணியன், திரு. சா. | ஆண்டிமடம் |
| 94 சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. | பனைமரத்துப்பட்டி |
| 95 சிவலோகம், திரு. எஸ். .. | புவனகிரி |
| 96 சின்னசாமி, திரு. கே. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 97 சின்னசாமி, திரு. ரா. .. | தர்மபுரி |
| 98 சின்னசாமி, திரு. வி.கே. .. | பவானிசாகர் |
| 99 சீரங்கன், திரு. எம். .. | மேட்டூர் |
| 100 சீனிவாசன், திரு. பெ. .. | சிவகாசி |
| 101 சுந்தர், திரு. கே. .. | உத்திரமேரூர் |
| 102 சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவன்கோடு |
| 103 சுந்தரம், திரு. க. .. | பொன்னேரி (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| ச—தொடர்ச்சி. | |
| 104 சுந்தரம், திரு. கே.ஆர். .. | குடியாத்தம். |
| 105 சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர். |
| 106 சுந்தரராஜ், டாக்டர் எஸ். .. | பரமக்குடி (செ.வ.). |
| 107 சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. | கன்னியாகுமரி. |
| 108 சுப்பிரமணியம், திரு. து.க. | சத்தியமங்கலம். |
| 109 சுப்பிரமணியன், திரு. அ.லெ. | திருநெல்வேலி. |
| 110 சுப்பிரமணியன், திரு. வே.நா. | பெருந்துறை. |
| 111 சுப்பு, திரு. ஏ. .. | ராசிபுரம். |
| 112 சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | ஈரோடு... |
| 113 சுப்பையா, திரு. வ. .. | திருமயம். |
| 114 செங்குட்டுவன், திரு. ஏ. .. | மயிலாடுதுறை. |
| 115 செங்கை சிவம் திரு. | பெரம்பூர் (செ.வ.). |
| 116 செங்கோட்டையன், திரு. கே.ஏ. | கோபிச்செட்டிபாளையம். |
| 117 சேட்டு, திரு. எம். .. | செங்கம் (செ.வ.). |
| 118 சொக்கர், திரு. ரா. .. | விருதுநகர். |
| 119 சௌந்திரபாண்டியன், திரு. த. | சமயநல்லூர் (செ.வ.). |
| 'ட' | |
| 120 டேனியல் ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம். |
| 'த' | |
| 121 தங்கபாண்டியன், திரு. வே. | அருப்புக்கோட்டை. |
| 122 தங்கம், திரு. அ. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 123 தங்கராஜன், திரு. எஸ். ஏ. .. | திண்டுக்கல். |
| 124 தங்கராஜு, திரு. ஏ. .. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.). |
| 125 தங்கவேல், திரு. எம். .. | முசிறி. |
| 126 தங்கவேல், திரு. என். .. | குன்னூர் (செ.வ.). |
| 127 தங்கவேலு, திரு. ச. .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.). |
| 128 தம்புசாமி, திரு. வி. .. | திருவாரூர் (செ.வ.). |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| | **த—தொடர்ச்சி.** | |
| 129 | தமிழ்மணி, திரு. வீ. .. | செங்கல்பட்டு. |
| 130 | தயாளன், திரு. ஏ. சி. .. | ஆரணி. |
| 131 | தனபாலன், திரு. கே. ஆர். ஜி. | சேலம்-1. |
| 132 | தனராஜ், திரு. வி. .. .. | வந்தவாசி (செ.வ.). |
| 133 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 134 | திருமூர்த்தி, டாக்டர் து. | திருப்போரூர் (செ.வ.). |
| 135 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 136 | துரை சந்திரசேகரன், திரு. | திருவையாறு. |
| 137 | துரைசாமி, திரு. பி. .. | நாமக்கல் (செ.வ.). |
| 138 | துரைபாண்டி, திரு. பெ. .. | மானாமதுரை (செ.வ.). |
| 139 | துரைமுருகன், திரு. .. | காட்பாடி. |
| 140 | துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 141 | தென்னரசு, திரு. எஸ். எஸ். | திருப்பத்தூர். |
| 142 | தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |
| | **'ந'** | |
| 143 | நஞ்சப்பன், திரு. ந. .. | பெண்ணாகரம். |
| 144 | நடராசன், திரு. ஆ. .. | பேரூர். |
| 145 | நடராசன், திரு. பொ. .. | திருத்தணி. |
| 146 | நடேச உடையார், திரு. எகால் மு. .. | ரிஷிவந்தியம். |
| 147 | நடேசன், திரு. ஆர். .. | திருவட்டாறு. |
| 148 | நந்தகோபால கிருட்டிணன், டாக்டர் கோ. | பண்ருட்டி. |
| 149 | நாராயணன், திரு. ராம. .. | காரைக்குடி. |
| 150 | நூர்முகமது, திரு. செ. .. | பத்மநாபபுரம். |
| 151 | நேரு, திரு. கே. என். .. | லால்குடி. |
| | **'ப'** | |
| 152 | பஞ்சாட்சரம், திரு. ஆர். | மேல்மலையனூர். |
| 153 | பழனிச்சாமி, திரு. டி. கே. | திருவொற்றியூர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| | **ப—தொடர்ச்சி.** | |
| 154 | பழனிச்சாமி, திரு. ஜி. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 155 | பழனிசுவாமி, திரு. க. .. | எடப்பாடி. |
| 156 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.). |
| 157 | பன்னீர்செல்வம், திரு. மா. .. | சீர்காழி (செ.வ.). |
| 158 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 159 | பாப்பா உமாநாத், திருமதி | திருவரம்பூர். |
| 160 | பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை. |
| 161 | பால்ராஜ், திரு. எஸ். .. | மதுரை (மத்திய). |
| 162 | பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. | திருநாவலூர். |
| 163 | பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 164 | பாலையா, திரு. ஆ. .. | கொளச்சல். |
| 165 | பிச்சாண்டி, திரு. கே. .. | திருவண்ணாமலை. |
| 166 | பிச்சைமுத்து, திரு. ரெ. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 167 | பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. | தென்காசி. |
| 168 | புகழேந்தி, திரு. இ. .. | கடலூர். |
| 169 | பூவராகன், திரு. கோ. .. | விருத்தாசலம். |
| 170 | பெரியசாமி, திரு. என். .. | தூத்துக்குடி. |
| 171 | பெரியசாமி, திரு. ஐ. .. | ஆத்தூர். |
| 172 | பெரியசாமி, திரு. வே. .. | அந்தியூர் (செ.வ.). |
| 173 | பெரியண்ணன், திரு. அ. .. | புதுக்கோட்டை. |
| 174 | பெருமாள், திரு. செ. .. | ஏற்காடு (ஆ.வா.). |
| 175 | பொன்முடி, திரு. டி. .. | தண்டராம்பட்டு. |
| 176 | பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க. | விழுப்புரம். |
| 177 | பொன். முத்துராமலிங்கம் | மதுரை (மேற்கு). |
| 178 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 179 | பொன்னுசாமி, பேராசிரியர், கே. | மருங்காபுரி. |
| 180 | பொன்னுபிள்ளை, திரு. ஜி. .. | தேனி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| " ம " | |
| 81 மகேந்திரன், திரு. ஆர். .. | நாட்ராம்பள்ளி. |
| 82 மணி, திரு. ஆச்சியூர், எம். .. | நாங்குநேரி. |
| 83 மணி, திரு. கே. ஏ. .. | கபிலர்மலை. |
| 84 மணி, திரு. கோ. சி. .. | கும்பகோணம். |
| 85 மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.). |
| 86 மதிவாணன், திரு. இரா. .. | ராயபுரம். |
| 87 மலர்மன்னன், திரு. அ. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 88 மனோகரன், திரு. நாஞ்சில் கி. | திருவல்லிக்கேணி. |
| 89 மனோகரன், திரு. பா. .. | சிவகங்கை. |
| 90 மாசிலாமணி, டாக்டர் சி. ரா. | திண்டிவனம். |
| 91 மாசிலாமணி, திரு. தி. ரா. | பூந்தமல்லி. |
| 92 மாதப்பன், திரு. கொ. .. | பாலக்கோடு. |
| 93 மாரப்பன், திரு. பி. .. | காங்கேயம். |
| 94 மாரிமுத்து, திரு. அ. .. | வ:ணூர் (செ.வ.). |
| 95 முகமது சித்திக், திரு. எம். | பூம்புகார். |
| 96 முத்துசாமி, திரு. ப. .. | வேடசந்தூர். |
| 97 முத்தையன், திரு. எம். .. | சங்கராபுரம். |
| 98 முத்தையா, திரு. எம். .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 99 முருகேசன், திரு. பொ. .. | காஞ்சிபுரம். |
| 100 முல்லைவேந்தன், திரு. வ. .. | மொரப்பூர். |
| 101 முனிரத்தினம், திரு. ஆ. மு. | சோளிங்கர். |
| 102 முனிரத்தினம், திரு. எஸ். ஆர். | திருவள்ளூர். |
| 103 மூக்கன், திரு. ஆர். .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.). |
| 104 மூக்கையா, திரு. எல். .. | பெரியகுளம். |
| 105 மோகன், திரு. இரா. .. | சிங்காநல்லூர். |
| 106 மோசஸ், திரு. எம். .. | நாகர்கோவில். |
| " ய " | |
| 107 யசோதா செல்லப்பா, திருமதி .. | வலங்கைமான் (செ.வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| " ர " | |
| 208 ரமணி, திரு. கே. .. | கோவை (கிழக்கு). |
| 209 ரமணி நல்லதம்பி, திருமதி. .. | ராதாபுரம். |
| 210 ரவி அருணன், திரு. .. | அம்பாசமுத்திரம். |
| 211 ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. | ஓசூர். |
| 212 ராமச்சந்திரன், திரு. கே. .. | மன்னார்குடி. |
| 213 ராமச்சந்திரன், திரு. சி. .. | திருப்பரங்குன்றம். |
| 214 ராமசாமி, திரு. மொஞ்சனூர், ப. | அரவக்குறிச்சி. |
| 215 ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ஆலங்குளம். |
| 216 ராஜு, திரு. எச். எம். .. | உதகமண்டலம். |
| 217 ராஜேந்திரன், திரு. எம். எஸ். கே. | இராமநாதபுரம். |
| " ல " | |
| 218 லட்சுமி, திருமதி. பி. .. | வால்பாறை (செ.வ.). |
| " வ " | |
| 219 வரதராஜன், திரு. ஆர். .. | சங்கரி (செ.வ.). |
| 220 வரதராசன், திரு. உ. ரா. .. | வில்லிவாக்கம். |
| 221 வல்லரசு, திரு. பீ. என். .. | உசிலம்பட்டி. |
| 222 விஜயராகவன், திரு. பொன். | கிள்ளியூர். |
| 223 விஜயேந்திரையா, திரு. டி. சி. | தளி. |
| 224 வீராசாமி, திரு. ஆற்காடு நா. | புரசைவாக்கம். |
| 225 வீரையன், திரு. கோ. .. | நாகப்பட்டினம். |
| 226 வெங்கடாசலம், திரு. பெ. .. | வீரபாண்டி. |
| 227 வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஓய். .. | ஸ்ரீரங்கம். |
| 228 வெள்ளிங்கிரி, திரு. யூ. கே. .. | தொண்டாமுத்தூர். |
| 229 வேணு, திரு. கி. .. .. | கும்மிடிப்பூண்டி. |
| 230 வைத்தியலிங்கம், திரு. மீ. அ. | தாம்பரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| " ஸ " | |
| 231 ஸ்டாலின், திரு. மு. க. .. | ஆயிரம் விளக்கு. |
| " ஜ " | |
| 232 ஜெயலலிதா, செல்வி, ஜெ. .. | போடிநாயக்கனூர். |
| " ஹ " | |
| 233 ஹமீது இப்ராகிம், திரு. அ.மு. | கடலாடி. |
| " ஸ்ரீ " | |
| 234 ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். .. | சைதாப்பேட்டை. |
| 235 ஆஸ்கார் சி. நிக்ஸி, திரு. | நியமன உறுப்பினர். |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்:

திரு. கு. அழகிரிசாமி .. தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989, ஏப்ரல் 5, புதன்கிழமை

பங்குனி 23, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. துரைசாமி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

" மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும் "

மனத்தின் தூய்மை, செய்யும் செயலின் தூய்மை ஆகிய இவ்விரண்டும் சேர்ந்து இனத்தின் தூய்மையைப் பொறுத்தே ஏற்படும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### பணியில் இருக்கும்போது இறந்துபோகும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை.

30—(*வினா எண். 605) —திரு. ஆர். இங்காரம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பணியில் இருக்கும்போது இறந்துபோகும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, பணியில் இருக்கும்போது இறந்துபோகும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தும் திட்டம் எதுவும் இல்லை.

[1989 ஏப்ரல் 5

திரு. ஆர். சிங்காரம் : துணைத் தலைவர் அவர்களே, தற்போது வழங்கப்படுகின்ற உதவித் தொகையை வழங்குவதிலே மிகவும் காலதாமதம் ஆகிறது. இதைத் தவிர்க்கும் பொருட்டு, இத்தனை மாதத்திற்குள்ளாக இந்த உதவித் தொகை வழங்கப்படவேண்டும் என்ற ஒரு கால எல்லையை நிர்ணயிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, அப்படிக் காலதாமதம் ஆனதற்கான குறிப்புகள் ஏதாவது இருந்து, அவைகள் அரசுக்கு அனுப்பி வைக்கப்படுமானால், உடனடியாக அந்தக் குறை தீர்க்க வழி காணப்படும்.

திரு. மு. க. ஸ்டாலின் : துணைத் தலைவர் அவர்களே, கழக அரசு தொடங்கிய இந்தத் திட்டத்தின் மூலம் எத்தனை பேர்களுக்கு எவ்வளவு ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, 1—1—1974 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. அதாவது பணியில் இருக்கும்போது இறந்துவிடுகின்றவர்களுடைய குடும்பங்களுக்குப் பாதுகாப்பு நிதி அளிக்கின்ற திட்டம் தொடங்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் 34,824 குடும்பங்களுக்கு இந்தப் பாதுகாப்பு நிதி தரப்பட்டு இருக்கிறது. இதன் மூலமாக 44 கோடியே 69 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியபடி அந்தக் குறிப்பை நான் அனுப்பி வைக்கிறேன். மேலும் இந்த உதவித் தொகையைப் பொறுத்தவரையில் கூட்டுறவு மத்திய வங்கி ஊழியர்கள், கோவில் அர்ச்சகர்கள், நீண்ட பல வருடங்களாக நிரந்தரமாக்கப்படாமல் இருக்கின்ற அரசு ஊழியர்கள் ஆகிய இவர்களுக்கும் அந்த உதவித் தொகை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இப்போது எவ்வளவு செலவாகிறது என்பதை நான் குறிப்பிட்டிருக்கிறேன். இவைகளைப் பற்றி எல்லாம் பரிசீலித்துத்தான் முடிவு எடுக்கவேண்டும்.

திரு. பெ. சீனிவாசன் : துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியிலேயிருந்து சற்று மாறுபடுவதற்காக மன்னிக்க வேண்டும். விபத்திலே இறக்கும் தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கப்பட்டு இருக்கிறது. இதில் தீப்பெட்டித் தொழிலில் சம்பந்தப்பட்டு உள்ளவர்களைச் சேர்க்கவில்லை. அதைச் சேர்க்கின்ற உத்தேசம் உண்டா ?



1989 ஏப்ரல் 5]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, விபத்திலே இறப்பவர்களுடைய பட்டியலை நேற்று முன்தினம் நான் இந்த அவையிலே படிக்கும்போது, தீப்பெட்டித் தொழிலாளர்களைப் பற்றியும் படித்தேன். அது என்ன காரணத்தால் மாண்புமிகு உறுப்பினருடைய செவியில் ஏறவில்லையோ எனக்குத் தெரியவில்லை.

திருமதி பாப்பா உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகை என்பது ஓர் ஆண்டுக்கு மேல் பணிபுரிந்தவர்களுக்குத்தான் வழங்கப்படும் என்று ஏதாவது நிபந்தனை உண்டா ? அப்படி ஏதாவது நிபந்தனை இருந்தால், அது தளர்த்தப்பட்டு, பணியில் இருக்கும் ஊழியர்கள் அனைவருக்கும் இந்த உதவித் தொகை கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, அப்படி எதுவும் நிபந்தனை இருப்பதாகத் தெரியவில்லை. பணியில் இருக்கின்ற அலுவலர்கள் இறந்துவிடுவார்களானால், அந்தக் குடும்பத்திற்கு இந்த உதவி அளிக்கப்படுகிறது.

திரு. ஆர். நடேசன் : துணைத் தலைவர் அவர்களே, அரசு வேலையில் இருந்து இறந்துபோகும்போது, அவருடைய குடும்ப வாரிசுகளுக்கு வேலை போட்டுக் கொடுப்பதாக இருந்தது. இப்போது மின்சார வாரியத்தில் 2,500-க்கும் மேற்பட்ட மனுக்கள் குவிந்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். தயவு செய்து இந்த அரசு அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி இது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே மின்சார வாரியத்தில் மனுக்கள் குவிந்திருப்பதாகச் சொன்னார்கள். குவிந்திருப்பதில் ஏற்படுகின்ற கஷ்ட நஷ்டங்களை அரசு எண்ணிப் பார்த்துத்தான் இதைப்பற்றி முடிவுகளை எடுக்க வேண்டி இருக்கிறது.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் பகுதி நேர நிரந்தர ஊழியர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கும் இந்த உதவித் தொகை அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது இப்போது அரசின் ஆய்வில் இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பணியில் இருக்கும்போது இறந்து போகும் அரசு ஊழியர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கும் போது, அவர்களுடைய மனைவிமார்களுக்கு வழங்கப்படுகிறது. ஆதரவற்ற பெற்றோர்கள் இருந்தால், அவர்களுக்கும் அதில் பங்கு வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பணியிலுள்ள அலுவலர்கள் இறந்துவிடுவார்களேயானால், ஆதரவற்ற அந்தக் குடும்பத்திற்குத்தான் அந்த உதவி வழங்கப்படுகிறது. ஆதரவற்றவர்கள் யார் இருந்தாலும் அவர்களுக்கு வழங்கப்படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையிலிருந்து, பணியிலுள்ளவர்கள் இறக்கும்போது அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய உதவித் தொகையை கட்டாயமாக போஸ்ட் ஆபீசில் டெபாசிட் செய்ய வேண்டுமென்று அந்தத் துறையிலே உள்ளவர்கள் வலியுறுத்துகிறார்களே, அதை நிறுத்துவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது அரசின் கவனத்திற்கு இதுவரையில் கொண்டுவரப்படவில்லை. இப்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற காரணத்தால் அது குறித்து ஆய்வு செய்யப்படும்.

திரு. கே. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூ. 10,000 உதவிப் பணம் வழங்குகிற போது அதில் அரசின் பிடித்தம் எவ்வளவு ? தற்போது வழங்கப் படுவதில் அரசின பிடித்தம் எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முன்பு ரூ. 10,000 வழங்கப்பட்டபோது அரசு பிடித்துக்கொண்டது மாதம் ரூ. 1 என்ற அளவில். பிறகு, அது ரூ. 20,000 ஆக ஆக்கப்பட்டதற்குப் பிறகு மாதம் ரூ. 3 என்ற அளவில் பிடித்தம் செய்யபபடுகிறது. அத்தோடு இன்னொரு விளக்கத்தையும் சொல்ல விரும்புகிறேன். இப்போது ரூ. 3 என்ற அளவில் பிடித்தம் செய்து இருந்தாலும் கூட, அரசுக்குக் கிடைக்கின்ற வருவாய் ரூ. 3 கோடி தான். ஆண்டு ஒன்றுக்கு அரசு நிதியாகத் தர வேண்டி இருக்கிற தொகை ஏறத்தாழ ரூ. 6 கோடி.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் ஏற்கெனவே இறந்தவர் குடும்பத்திற்கு உதவி செய்யக்கூடிய முறை அமலில் இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் இந்த உயர்த்தப்பட்ட தொகை அமலுக்கு வருமா என அறிய ஆசைப்படுகிறேன்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினருடைய ஆசை எங்களுக்கும் இருக்கிறது. அந்த ஆசை நிறைவேற நிதிநிலை இடம் தருமா என்கின்ற நிலையும் இருக்கிறது.

### ஆலத்தூரில் உயர்நிலைப் பள்ளி.

31 (*வினா எண் 48)-திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், ஆலத்தூரில் உயர்நிலைப் பள்ளி துவக்க கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே·

(அ) ஆம்.

(ஆ) அரசாங்கத்தின் ஆய்வில் உள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடவாசல் ஊராட்சி ஒன்றியம், ஆலத்தூரில் ஒரு உயர்நிலைப் பள்ளியைத் துவக்குவதற்காக அந்தக் கிராமத்திலிருக்கின்ற பொது மக்கள் பங்குத் தொகையாக எவ்வளவு தொகை செலுத்தப்பட்டுள்ளது ? அதற்கான அனுமதி அரசினிடத்திலிருந்து அனுப்பப்பட்டு விட்டதா என்பதைத் தங்கள் மூலமாக தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : உயர்நிலைப் பள்ளி தொடங்க வேண்டுமானால், பொதுமக்கள் அதிலே ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று எடுத்துக்காட்ட ரூ. 10,000 செலுத்த வேண்டும். ரூ. 5,000 மட்டுமே செலுத்தப் பட்டுள்ளது. ரூ. 10,000 செலுத்தி, மேலும் கட்டிடம் கட்டுவதற்கு என ரூ. 12,000 செலுத்திய வேண்டுகோள் உள்ள பள்ளிகள் பற்றிய மிக விரிவான பட்டியல் அரசினிடத்திலே இருக்கிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொல்கின்ற நேரத்திலே, அதேபோன்று அரசுக்கு செலுத்த வேண்டிய பங்குத்

தொகையைக் கட்டி , பல பள்ளிகளுக்கு அனுமதி வழங்க வேண்டிய பட்டியல் பெரியதாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பல ஆண்டுகளுக்கு முன் செலுத்திய அந்தப் பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வேண்டுகோள் அரசாங்கத்தினுடைய பட்டியலில் இடம் பெற்று, இந்தப் பள்ளிக் கூடங்களிலே, எந்த வட்டாரத்தில், எந்தப் பள்ளிக்கு முன்னுரிமை வழங்குவது என்று ஆய்வு செய்து, முன்னுரிமை வழங்குகிற அந்த முறையை ஆய்வு செய்து தீர்மானிப்பதற்காக ஒரு உயர்மட்டக் குழு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த உயர்மட்டக் குழுவினுடைய பரிசீலனையின்படி பல்வேறு அடிப்படைகளிலே முன்னுரிமை உள்ள பள்ளிகளுக்கு இப்படிப்பட்ட உயர்நிலைப் பள்ளியைத் துவங்குவதற்கான அனுமதி வழங்கப்படும்.

(முற்பகல் 9-10)

**திரு. பி. என். வல்லரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டி தொகுதியில் விக்கிரமங்கலம் என்ற கிராமத்தில் இருக்கிற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்க கோரிக்கையும், விளங்குளப்பட்டியில் இருக்கிற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்க கோரிக்கையும் அரசுக்கு வந்துள்ளதா ? அதை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கோரிக்கைகளும் முறையான ஆய்வுக்கு உரியனவாக இருக்கின்றன.

**திரு. த. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்? எத்தனை உயர்நிலைப் பள்ளிகளுக்கு பணம் கட்டியிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 160 பள்ளிகள் தொடர்பாக இப்படிப்பட்ட வேண்டுகோள்கள் இருக்கின்றன.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு யேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலத்தூரில் உயர்நிலைப் பள்ளித் துவக்குவதற்காக 5 ஆயிரம் ரூபாய் மட்டுமே செலுதப்பட்



டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். எனக்கு கிடைத்திருக்கிற தகவலின்படி பொதுமக்கள் பங்குத் தொகை முழுவதும் செலுத்தப்பட்டு விட்டதாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி பொது மக்கள், மாணவர்களுடைய நலன் கருதி இந்த ஆண்டே அந்த உயர்நிலைப் பள்ளியைத் துவக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா ? என்று தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொது மக்கள் செலுத்த வேண்டிய இந்த பத்தாயிரத்திலே 5 ஆயிரம் ரூபாய் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது என்றும் கட்டிடத்திற்கான பங்குத் தொகையாக செலுத்த வேண்டிய ரூ. 12,500 முழுவதும் செலுத்தப்படவில்லை என்றும் இந்தக் கருத்துருவில் காணப்படுகிறது. அது மட்டும் அல்லாமல், அந்தப் பள்ளி எந்த இடத்தில் கேட்கப்படுகிறதோ அதிலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்தில் 4 துவக்க நடுநிலைப் பள்ளிகளும், 4 உயர்நிலை, மேல் நிலைப் பள்ளிகளும் உள்ளன. இவைகளெல்லாம் ஒன்றாகக் கணக்கிடப்படுகின்றன. எனவே, துவக்கப்பள்ளி 3, நடுநிலைப் பள்ளி ஒன்று என்று இருக்கக்கூடும். உயர்நிலைப் பள்ளியும் மேல்நிலைப் பள்ளியுமாக நமக்கிருக்கின்றன. 20 கிலோ மீட்டர் தொலைவு வரையிலே பக்கத்தில் உயர்நிலைப் பள்ளி இல்லாத இடங்களிலும் கேட்கப்படுகிறது. எனவே எவற்றிற்கு முன் உரிமை வ்ழங்கப்படுவது என்பதும், அவர்கள் செலுத்திய தொகை மட்டும் அல்லாமல், மேலும்அந்தப் பகுதியினுடைய வட்டாரத்தினுடைய கல்வித் தேவையைப்பூர்த்தி செய்வதற்கு எது முக்கியம் என்பதும் ஆய்வு செய்யப்பட்டுத்தான் முடிவு செய்யப்படுகிறது.

**திரு. கோ. பூவராகன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியைத் துவங்குவதற்கு அரசாங்கத்தில் என்னென்ன நிபந்தனைகள் வைத்திருக்கிறார்கள்? அதிலே ஆண்கள் பள்ளிக்கும், பெண்கள் பள்ளிக்கும் தனியாக ஏதாவது சலுகை தரப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஒரு புதிய பள்ளிக்கூடம் துவங்க வேண்டுமானால் அந்த வட்டாரத்தினுடைய மிக இன்றியமையாத தேவை கருதப் பட வேண்டும். குறைந்தபட்சத் தொகை பொது மக்கள் சார்பாக செலுத்தப்படுவதல்லாமல் கட்டிடங்கள் கட்டுவதற்குத் தேவை யான நிதியை அரசு ஒதுக்க முடியுமா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும். தளவாடங்கள், ஆய்வுக் கூடங்கள் இவைகளை ஏற்படுத்துவதற்கும் நிதி வேண்டும். எனவே, இவையெல்லாம் சேர்த்து ஒருமுகமாக வழங்கப்பட முடியா

விட்டாலும் கூட விரைவிலே அதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும். இவைகள் இருக்கிறபோது தான் உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்குவது மாணவர்களுக்கு தகுந்த கல்வி வழங்க ஏதுவாக இருக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற நிலைமையில் 8ஆவது படித்துவிட்டு, 9 ஆவது வகுப்பு சேர்வதற்கு செல்லுகிறபோது உயர்நிலைப் பள்ளிகளிலே, மேல்நிலைப் பள்ளிகளிலே சேருவதற்கு இடம் இல்லை என்று தள்ளி வைக்கப்படுகிறார்கள். அப்பேற்பட்ட ஊர்களில், தூரத்தைக் கணக்கிடாமல் அவர்கள் 22,500 ரூபாய் கட்டியிருந்து, கட்டிடம் கொடுத்தால், அங்கேயெல்லாம் முன் உரிமை கொடுத்து அந்தப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கடந்த 2, 3 ஆண்டுகளாக ஏற்கெனவே நடைபெற்ற நிர்வாகத்திலே போதுமான அளவுக்கு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியை அரசு துவங்குவதற்கு, அதற்கான புதிய செலவை ஏற்க முடியாத ஒரு சூழ்நிலையில், தனிப்பட்ட முறையில் பெற்றோர்கள் சங்கமோ அல்லது அந்தப் பள்ளிக் கட்டிடக் குழுவோ, ஆசிரியர்களின் ஊதியத்தையும் ஏற்றுக் கொண்டு ஒப்புதல் தந்த பள்ளிகளுக்குத்தான் முன் உரிமை வழங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே அப்படி நடைபெறத் துவங்கிவிட்ட காரணத்தால் இப்போதுள்ள நெருக்கடியான நிலையில் அந்த வகையிலேயே முன் உரிமை வழங்க வேண்டிய நிலைமை அரசுக்கு இருக்கிறது. இருந்தாலும் ஒரு சில பள்ளிக் கூடங்கள் அரசு பொறுப்பிலே நடத்துவது என்று சொன்னால், கேட்கிற பல்வேறு பள்ளித் தேவைகளில் எவை எவைகளுக்கு முன்னுரிமை வழங்குவது என்பதில் ஒரு உயர் மட்டக் குழு பல்வேறு அடிப்படைகளைக் கொண்டு முடிவு செய்து தீர்மானிக்க இருக்கிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி நிறுவுவதில் பல்வேறு கிராமங்களிலே பங்குத் தொகையை செலுத்தியிருக்கிறார்கள். ஆனால் பல ஆண்டுகளாக அந்தப் பங்குத் தொகை செலுத்தப்பட்டும் பள்ளிகள் அங்கு நிறுவப்படாமல் இருக்கின்றன. இதற்கு ஒரு கால வரைமுறை செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். ஏனென்றால், எங்களது தொகுதியில் உள்ள வீராணம் என்னும் பள்ளிக்கு 5 ஆண்டுகளுக்கு முன்னாலே ரூ. 25,000 செலுத்தியும் இன்னும் அங்கு பள்ளி வரவில்லை என்ற குறைபாடு உள்ளது. இதற்கு எவ்வளவு காலவரையறை என்று நீங்கள் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய நிதிநிலை அறிக்கையில் கல்வித் துறைக்கு பெரும் தொகையை ஒதுக்கி வழங்கினாலும் கூட மேலும் தேவைப்படுவதை ஒதுக்கக்கூடிய வாய்ப்பைப் பொறுத்து விரைந்து நிறைவேற்றப்படும்.

**நியாய விலைக் கடைகளில் முறை கேடுகள்.**

32—(* வினா எண் 194) திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாய விலைக் கடைகளில் முறைகேடுகள் நடந்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நியாய விலைக் கடைகளில் நடக்கும் முறைகேடுகளைக் களைய தேவையான நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு மட்டும் நிரந்தரப் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் 389 பேர் ; தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் 2,442 பேர் ; பதவி குறைப்பு செய்யப்பட்டவர்கள் 79 பேர் ; ஊதிய உயர்வு நிறுத்தம் செய்யப்பட்டவர்கள் 194 பேர் ; அபராதம் விதிக்கப்பட்டவர்கள் 4,205 பேர் ; காவல் துறையில் வழக்கு பதிவு செய்யப்பட்டவர்கள் 92 பேர்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் அரிசி வாங்கச் செல்லும்போது, அரிசியை வாங்கிய பின்னால், அங்கு சீனி வாங்குவதற்கும் மற்றும் எண்ணெய்கள் வாங்குவதற்கும், அந்தக் கார்டிலே அதை அடித்துவிடுகிறார்கள். வாங்கியதைப் போல காட்டிவிடுகிறார்கள். பொது மக்களுக்கு மிகவும் இடையூறாக இருப்பதால், இதை உடனடியாகத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு அப்படிப்பட்ட நடவடிக்கையிலே சில ஊழியர்கள் ஈடுபட்டுக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தான் நான் விளக்கமாக அறிக்கை கொடுத்திருக்கிறேன். இனிமேல், எங்கேயாவது அப்படிப்பட்ட புகார்கள் வருமேயானால், அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்.

[1989 ஏப்ரல் 5

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நடைபெறுகிற நியாயவிலைக் கடைகளில் நடக்கின்ற முறைகேடுகளைக் களைவதற்கு ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கும் ஒரு கண்காணிப்புக் குழு அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ? அது எப்போது நிறுவப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த கண்காணிப்புக் குழுவினுடைய காலம் 31 மார்ச்சு 1989 அன்று முடிவு அடைந்து விட்டது. புதிய கண்காணிப்புக் குழு விரைவில் அமைக்கப்படும்.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசுக்கு கெட்ட பெயர் உண்டாக்குகின்ற வகையிலே, திருப்பத்தூர் நகரத்திலே 12 கிலோ அரிசி கொடுக்கப்பட வேண்டும் என்று உத்தரவு இருந்தாலும், நகரத்திலே 9 கிலோ, கிராமத்திலே 7 கிலோ என்று கொடுக்கப்படுகிறது. அதை மாற்றியமைத்து, உடனடியாக கொடுக்க வேண்டிய 12 கிலோ அரிசியைக் கொடுப்பதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இதே புகார்கள் இந்த மன்றத்திலே தெரிவிக்கப்பட்டவுடன், ஏற்கெனவே அரிசியைக் குறைத்துக் கொடுக்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தாலும் மீண்டும் ஒரு முறை எல்லா ரேஷன் கடைகளுக்கும், எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒரு குடும்பக் கார்டுக்கு உறுப்பினருடைய எண்ணிக்கை அடிப்படையில் அதிக பட்சம் 12 கிலோ அரிசி கொடுத்தேயாக வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கும் இதே பிரச்சினை நமது அவையினுடைய கேள்வி நேரத்திலே இடம் பெற்றது. அரசாங்கம் சில நடவடிக்கைகளை உறுதியாக எடுத்து வருவதை நாம் பார்த்து வருகிறோம். ஆனால் இந்த வேலையை செய்யக்கூடிய ஊழியர்கள், அதிகாரிகள் பேரிலே நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். தப்பு செய்பவர்கள் பேரிலே கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த விஷயத்தினால் மட்டும் இந்தப் பிரச்சினை நிற்கப் போவதில்லை. காரணம் இது ரொம்ப விரிவான முறையிலே, திருடிக் கொண்டுபோய், இந்தப் பொருள்களை வெளிக் கடைகளிலே விற்பனை செய்வது என்பது வழக்கத்திற்கு வந்திருக்கிறது. இது மக்களுடைய உணர்வைக் கிளப்பும் முறையில் இருக்கிறது.



1989 ஏப்ரல் 5]

எனவே, அந்தந்த ரேஷன் கடைகளின் வட்டாரங்களிலே உடனடியாக கண்காணிப்புக் குழுக்களை, தேவையானால் அரசியல் கட்சியினுடைய பிரதிநிதிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட எம். எல். ஏ க்கள் மற்றும் பெரிய மனிதர்களில் நல்ல மனது உள்ளவர்களை அப்படிப்பட்ட கமிட்டியிலே நியமித்து மக்கள் மத்தியிலே இதைக் கொண்டு செல்வதற்கான உடனடி நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களுடைய இந்தக் கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.

திரு. வி.பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகளில், அங்கிருக்கின்ற பொருட்களை விற்பனை செய்கின்ற வியாபாரிகளாக, தனியார்கள் ஒரு கடைக்கு 10 பேர் என்று ஒரு தொகுதிக்கு 300 பேர் இருக்கிறார்கள். அவர்கள்தான் ரேஷன் கடைகளில் இருக்கின்ற பொருட்களைக் கடத்திச் சென்று விற்கிறார்கள். அப்படிக் கடத்திச் சென்று விற்கின்ற வியாபாரிகளைத் தண்டிக்கிற வகையில் ஏதாவது குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : ரேஷன் கடைகளிலே விநியோகிக்கப்படுகின்ற அந்தப் பொருட்களை விற்பதும் குற்றம். வாங்குவதும் குற்றம். அப்படி குறிப்பிட்ட புகார்கள் அரசிற்கு வருமானால் தயவு தாட்சண்யமில்லாமல் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. பெ. சீனிவாசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவுத் துறையில், ஃபுட்செல்லிலே காவல் துறை ஆய்வாளர்கள் மற்றவர்கள் வேலை செய்கிறார்கள், அவர்கள் கடந்த காலத்திலே நியமிக்கப்பட்டவர்கள். உணவுப் பங்கீட்டிலே ஏற்படுகின்ற ஊழல்களில் பெரும் பகுதிக்கு இவர்கள் துணை போகிறார்கள் என்பது நாட்டுமக்கள் மத்தியிலே இருக்கிற பிரச்சினை. தயவுசெய்து அவர்களை முழுவதுமாக மாற்றி புதிய காவல் துறையினரை அதில் நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் குறைபாடு அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் வெளியே ஒரு துண்டறிக்கையை ஒட்டி வைத்திருக்கிறார்கள். மத்திய அரசே விலையைக் கூட்டினாலும், மாநில அரசு விலையைக் கூட்டவில்லை என்று ஒரு அறிக்கை எழுதி வைத்திருக்கிறார்கள். இது அரசிற்குத் தெரியுமா அல்லது அரசினுடைய உத்தரவுப்படிதான் ஒட்டப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : அரசிற்கு அப்படிப்பட்ட தகவல் இல்லை. அரசாங்கத்தாலும் அப்படி உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளிலே அரிசி மட்டுமல்லாமல், மண்ணெண்ணெயும் விநியோகிக்கப்படுகிறது. அதிலே குறைவாக அளந்து பொதுமக்களுக்குத் தருகிறார்கள் என்ற புகார் பரவலாக உள்ளது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதேபோல, ரேஷன்கடைகளுக்கு வருகின்ற மண்ணெண்ணெயை வெளி மார்க்கெட்டிலே விற்கக்கூடிய சூழ்நிலை பல இடங்களிலே ஏற்படுகிறது. அமைச்சர் அவர்களுக்கு அது கவனத்திற்கு வந்ததா? அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் என்ன என்பதோடு, நியாய விலைக் கடைகளிலே பொருட்கள் வாங்குவதற்காகச் செல்கின்ற பொதுமக்களுக்கு அவர்கள் கேட்கின்ற அளவிற்கு, எல்லா நியாய விலைக் கடைகளிலும் என்னென்ன பொருட்களைத் தருகிறோமோ, அந்தப் பொருட்கள் அத்தனையும் ஸ்டாக், இருப்பு இருக்கின்ற அளவிற்கு அதைக் கவனிக்கின்ற ஒரு மேற்பார்வை உள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல பல இடங்களிலேயிருந்து அந்தப் புகார்கள் அரசிற்கு வந்தன. குறிப்பாக எடை குறைத்துக் கொடுப்பது கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரையிலே ஒரே யூனிபார்மாக இருந்தது. இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டவுடன் அமைச்சர் என்ற முறையிலே, நானும் அதிகாரிகளும் பரவலாக சோதனை நடவடிக்கைகளிலே ஈடுபட்டு இப்போது அந்தப் புகார்கள் குறைந்திருக்கின்றன. அதைப்போலவே, ஸ்டாக்கைப் பொறுத்துக் கேட்டார்கள், எல்லாக் கடைகளிலும் தேவையான ஸ்டாக் இப்போது இருக்கிறது.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுப் பொருட்கள் பங்கீட்டுத் துறையில்



ஏற்படும் முறைகேடுகளை உடனடியாக அரசிற்குத் தெரிவிக்க எந்த டெலிபோன் எண்ணிற்கு தகவல் தரவேண்டும் என்பதை அரசு சொல்லுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, பதிவாளர் அலுவலகத்திற்கு 843773 என்ற டெலிபோன் நம்பருக்கும், டி.சி. நார்த்-க்கு 841067 என்ற எண்ணிற்கும் டி.சி. சௌத்-க்கு 843144 என்ற எண்ணிற்கும் தொலைபேசியிலே தொடர்பு கொண்டால், உடனடியாக இரண்டு, மூன்று மணி நேரத்திற்குள்ளாக அங்கிருந்து அதிகாரிகள் அந்தக் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று பரிசோதித்து, நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

வெளிச் சந்தையில் அரிசி, நெல் விலையைக் குறைக்க நடவடிக்கை.

33—(* வினா எண். 206)—திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெளிச் சந்தையில் கிடைக்கும் அரிசி, நெல் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ஆம். அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து தனியார் வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வரும் நெல்லுக்கு லெவி உண்டா ? அவ்வாறு இருந்தால் எத்தனை விழுக்காடு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்படுகின்ற நெல்லுக்கு லெவி வசூலிப்பது இப்போது இல்லை.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரும் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று ஏழை எளியவர்களுக்கு 5 கிலோ அரிசி இனாமாகக் கொடுக்கின்ற திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. அந்த அரிசி பெறுகின்ற நேரத்தில் சில ஏழை எளியவர்கள் கார்டு வாங்கக் கூட பணம் இல்லாத காரணத்தால் கார்டு

வாங்க முடியாமல் இருக்கிறார்கள். அப்படி கார்டு வாங்க முடியாத ஏழை எளியவர்கள் அரிசியைப் பெறுவதற்கு ஏதேனும் வழிவகையை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் யார், யார் இடத்தில் கார்டு இருக்கிறதோ அவர்களுக்குத் தான் இந்தத் திட்டம் அமல் செய்யப்படும். புதிதாக மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பதைப் போல அரசு நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தால், புதிய குழப்பங்கள் ஏற்படும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் வெளிச்சந்தையில் விற்கின்ற அரிசியின் விலையைக் குறைக்க முடியுமா என்று கேட்டு இருக்கிறார்கள். இதில் வெளிச் சந்தை, உள் சந்தை என்று இரண்டு இருக்கிறது. அதேபோல் நியாயவிலை, அநியாய விலை என்று இரண்டு இருக்கிறது. இந்த நியாயவிலைக் கடை, அநியாய விலைக் கடை இந்த இரண்டினுடைய வித்தியாசத்தை நீக்க 'Dual Pricing Policy' இந்த பாலிசியை ஒரே பிரைசிங் பாலிசியாக வைப்பதற்கு அரசிடம் ஏதாவது குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறிப்பு இல்லை.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பக்கத்து மாநிலத்திலிருந்து அல்லது சிறு விவசாயிகளிடமிருந்து சிறிய அளவில் கொள்முதல் செய்து நாள் ஒன்றுக்கு 2 மூட்டை, 3 மூட்டை அரிசியை விற்கின்ற சிறிய வியாபாரிகளை மாவட்ட விநியோகத்துறையைச் சார்ந்தவர்கள், உணவுத் துறையைச் சார்ந்த காவல் பிரிவைச் சார்ந்தவர்கள் மிகவும் துன்புறுத்துகிறார்களே, அதைத் தடுக்கின்ற வகையில் அவர்களுக்கு, அந்த சிறிய வியாபாரிகளுக்கு ஒரு சிறப்பு உரிமம் வழங்கி அவர்கள் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப் போல ஒரு மூட்டை, இரண்டு மூட்டை அரிசியை வைத்துக்கொண்டு வியாபாரம் செய்கிறவர்களுக்கு அதிகாரிகள் தொல்லை கொடுக்கக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக இப்படிப்பட்ட சிறு





வியாபாரிகள் வியாபாரம் செய்ய வேண்டும் என்றால் 'ரீடெயில் லைசென்ஸ்' கேட்டால் அவர்களுக்கு தாராளமாக லைசென்ஸ் வழங்கும்படி அரசு உத்திரவு போட்டிருக்கிறது.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வியாபாரிகள் 50 சதவீதம் லெவி கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை 25 சதவீதமாகக் குறைக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதே நமக்குத் தேவையான அளவுக்கு நெல் கொள்முதல் ஆகவில்லை. ஆகவே இன்னும் அதை 25 சதவீதமாகக் குறைத்தால், நாட்டில் அரிசிப் பஞ்சம் ஏற்படும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நியாயவிலைக் கடைகளில் போடுவது ஒரு கார்டுக்கு 12 கிலோ. எப்படிப் பார்த்தாலும் ஒரு சிறு குடும்பமாக இருந்தால் கூட ஒரு நாளைக்கு ஒரு கிலோ அரிசி தேவைப்படுகிறது. ஆகவே வெளிச் சந்தையில் தான் அதிகமாக அரிசியை வாங்குகிறார்கள். சாதாரணமாக இன்று நல்ல அரிசி கிலோ 6 ரூபாய், 7 ரூபாய் என்ற விலைக்கு சென்று விட்டது. ஆகவே சாதாரண, நடுத்தர மக்கள், ஏழை மக்கள் வாங்க முடியவில்லை. இதற்கு பிரதானமான காரணம் விளைகின்ற காலங்களில் விவசாயிகள் விற்கும் போது எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒரு குவிண்டால் நெல் 300 ரூபாய்க்கு மேல் விற்பது கிடையாது. ஆனால் 1½ குவிண்டால் நெல் தான் 1 குவிண்டால் அரிசி என்று தெரியும். ஆகவே அரிசியை 4½ ரூபாய், 5 ரூபாய்க்கு மேல் விற்க வேண்டிய தேவையில்லை. ஆகவே மொத்த வியாபாரத்தில் விளைகின்ற காலத்தில் அத்தனை நெல்லையும் அரசு கொள்முதல் செய்து நியாயமான விலையில் காலம் முழுவதும் சிறு வியாபாரிகள் மூலமாக யாருக்கும் விநியோகம் செய்யக் கூடிய முறையில் ஏற்பாடு செய்தால் விலை ஏறாமல் இருக்கும். அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்பக் கார்டுக்கு 12 கிலோ அரிசி கொடுப்பதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 160 கோடி ரூபாய் இந்த அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. எனவே, 12 கிலோவுக்கு அதிகமாக குடும்பக் கார்டுக்கு அரிசி கொடுக்கக் கூடிய உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை. அடுத்து, வெளி மார்க்கெட்டில் விற்கக் கூடிய அரிசியைப் பற்றிச் சொன்னார்கள். அரசு இப்போது தமிழ்நாட்டில் விளையக் கூடிய எல்லா நெல்லையும் கொள்முதல் செய்து காலம் முழுவதும் விநியோகிக்கின்ற செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(முற்பகல் 9–30)

இருந்தாலும் கூட, வெளிச் சந்தையிலே அதிகமாக விலை ஏறி விடக் கூடாது என்பதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இன்றையதினம் 4 ரூபாய் 50 காசு, 4 ரூபாய் 60 காசிற்கு நல்ல அரிசி எங்கெங்கே தேவையோ அங்கேயெல்லாம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வெளிச் சந்தையிலே விற்கப்படுகின்ற அரிசிக்கு எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லை. எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்.

**திரு. ஏ. சி. தயாளன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலத்திலிருந்து நெல் கொண்டு வருவதற்கு அரசு ஏதாவது தடை விதித்து உள்ளதா அல்லது கொண்டு வரலாம் என்பதற்கு உத்தரவு ஏதாவது உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலத்திலேயிருந்து அரிசி கொண்டு வந்து இங்கே வியாபாரம் செய்வதற்கு இந்த அரசாங்கம் எந்தவிதமான தடையும் பிறப்பிக்கவில்லை.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வெளிச் சந்தையிலே அரிசி விலையைக் குறைப்பதற்கு, எவ்வளவுபேருக்கு வேண்டுமானாலும், சில்லரை வியாபாரிகளுக்கு ரீடெயில் லைசென்ஸ் வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். அப்படி ரீடெயில் லைசென்ஸ் வழங்கியதற்குப் பிறகு ஃபுட் செல்லில் இருக்கக்கூடிய காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அந்த ரீடெயில் லைசென்ஸ் வைத்திருப்பவர்களிடம் சென்று, குறிப்பிட்ட சில காலங்களுக்கு அவர்கள் வழக்குகள் கொடுக்க வேண்டுமென்றும் மாமூல் கொடுக்க வேண்டுமென்றும் அவர்களை நிர்ப்பந்தப் படுத்தி, அவர்களை வேலையிலே ஈடுபடச் செய்யாமல் தொந்தரவு கொடுக்கக் கூடிய நிகழ்ச்சிகளைப் பற்றி இந்த அரசு அறியுமா? அப்படிப்பட்ட தொல்லைகள் அந்த ரீடெயில் வியாபாரிகளுக்கு ஏற்படாமல் தடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரீடெயில் வியாபாரிகளுக்குத் தொல்லைகள் தராமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஃபுட் செல்லிலே இருக்கக்கூடிய காவல் துறையினர் சிலர் அப்படிப்பட்ட தொல்லைகள் கொடுத்து வந்தார்கள். அவர்களெல்லாம் மாற்றப்பட்டு இருக்கிறார்கள். இதுவரையில் ஃபுட் செல்லைப் பொறுத்த வரையில் இரண்டு ஆண்டுக் காலம்,



மூன்று ஆண்டுக் காலம் அவர்கள் இந்தத் துறையிலே பணியாற்றலாம் என்ற ஒரு நிலை இருந்தது. இந்த புஃட் செல்லுக்கு வருவதற்கு காவல் துறையினர் பெரும்பாலும் விரும்புகிறார்கள். அதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். எனவே இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், அதைத் தடுக்கின்ற வகையில் ஓராண்டு காலத்திற்கு மேல் இந்த புஃட் செல்லிலே பணியாற்றக் கூடிய காவல் துறை அதிகாரிகளை நீட்டிக்கக் கூடாது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லெவி முறையில் கொள்முதல் செய்யப்படுகின்ற நல்ல அரிசி பொது விநியோகத்திற்கு வரவேண்டும். உதாரணமாக, ஆற்காடு கிச்சிலி சம்பா என்பது உலகப் பிரசித்தி பெற்றது. அதைக் கொள்முதல் செய்கிறார்கள். ஆனால் பொது விநியோகத்திற்கு வருவது இல்லை. தனிப்பட்ட முறையிலே இவைகளை விற்றுவிட்டு அதற்கு மாறாக குறைந்த ரக அரிசி பொது விநியோகத்திற்கு வருகிறது என்பது குறைபாடு. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன். அதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு லெவி கொடுக்கும்போது வியாபாரிகள் யாரும் ஆற்காடு கிச்சிலி சம்பா நெல்லைக் கொடுப்பதில்லை. ஏனென்றால் அதை வெளி மார்க்கெட்டிலே அதிக விலைக்கு விற்க முடியும் என்பது அவர்களுக்கே தெரியும். எனவே லெவிக்கு எந்த அரிசி அல்லது நெல் கொடுக்க முடியுமோ அதைத்தான் அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரிசி அல்லது இந்த நெல்தான் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் யாரிடத்திலும் வற்புறுத்துவது இல்லை.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு மாவட்டம் அரிசியைக் கொண்டு போவதற்குத் தடை இருப்பது நீக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மழை பெய்யாமல் விளைச்சலும் குறைவாக இருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில் மாவட்டத்திற்கு மாவட்டம் அரிசியையோ நெல்லையோ எடுத்துக் கொண்டு போவதை, அனுமதியில்லாமல் எடுத்துக்கொண்டு போவதை அரசாங்கம் உற்சாகப்படுத்தாது.

[1989 ஏப்ரல் 5

## தொழிற்சாலைகளில் முறைமாற்றம்.

34—(* வினா எண். 119) **திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தொழிற்சாலைகளில் வேலை நேரத்தை 6 மணியாகக் குறைத்து 4 முறை மாற்றம் (Shift) கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா—

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் வேலை நேரத்தைக் குறைத்து, முறைமாற்றம் செய்கின்ற செயற்குறிப்பு அரசிடம் தற்பொழுது இல்லை.

**திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் முதன் முதலாக, இந்தியாவிலேயே மே தினத்தை விடுமுறை நாளாக அறிவித்தார்கள். அதைப்போல இந்தத் திட்டத்தையும் இந்தியாவிலேயே முதல் முறையாக ,4 முறை, தொழிலாளர்கள் வேலை செய்கின்ற 'ஷிப்ட் முறை' யைக் கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மரண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தொடர்பான முடிவுகளை அரசு, ஆலை நிர்வாகம், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இவர்களோடு கலந்து கொண்டு இணக்கமான முடிவுகளை மேற்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப்போன்ற திட்டத்தைக் கொண்டு வருவதால் உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமல்லாமல் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் உதவும் என்ற வகையிலே தொழிலாளர்களிடமிருந்து அரசுக்கு முறையீடுகள் வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக அரசுக்கு முறையீடுகள் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்தச் சங்கடங்கள் எல்லாம் முத்தரப்புப் பேச்சு வார்த்தை மூலம் முடிவு கட்டப்பட வேண்டும்.



1989 ஏப்ரல் 5]

**திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால அனுபவங்களை வைத்து வாரத்திற்கு 5 நாள் வேலை தினங்களாக இருப்பதை 6 தினங்களாக மாற்ற வேண்டுமென்று பெருவாரியான அரசு ஊழியர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்களா? ஆம் எனில், அரசு அதைப் பரிவோடு ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

**திரு. ப. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 8 மணி நேரம்தான் வேலை நேரம் என்று உலகம் பூராவும் இருக்கிற இந்த நேரத்தில் சில தொழிற்சாலைகள், குறிப்பாக செட்டிநாடு சிமெண்ட் நிறுவனம் போன்ற நிறுவனங்கள், அங்கே இருக்கிற தொழிற்சங்கத்தோடு $8\frac{1}{2}$ மணி நேரம் வேலை நேரம் என்று ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தை மாற்றி 8 மணி நேரம்தான் வேலை நேரம் என்று கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை விதிகளின்படி வாரம் 48 மணி நேரம், ஒரு நாளைக்கு 9 மணி நேரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அதற்கு முரண்பாடாக ஒப்பந்தம் இருந்தால், முறைப்படி அரசு இயந்திரங்களுக்குத் தெரிவித்தால், முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது 'பாக்டரி ஆக்ட்' பிரகாரம் 8 மணி நேரம் வேலை என்று இருக்கிறது. அந்த 8 மணி நேரத்திற்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி இல்லாமல்—அவர்கள் தொழிற்சங்கத்தின் சம்மதத்தோடு என்று கூறினார்கள்—தொழிலாளர் சம்மதமோ தொழிற்சங்கத்தின் சம்மதமோ இல்லாமல் $8\frac{1}{2}$ மணி, 9 மணி, $9\frac{1}{2}$ மணி நேரம் 'ஓவர் டைம்' வேலை வாங்கப்படுகிறது. அது சம்பந்தமாக மேலதிகாரிகளுக்கு, பாக்டரி இன்ஸ்பெக்டர்களுக்கு என்ன 'கம்பிளைன்ட்' அனுப்பினாலும் அந்த அதிகாரிகள் அதுபற்றி ஒன்றும் கேட்பதில்லை; விசாரிப்பது கூட கிடையாது. குறிப்பாக, தொழிற்சாலைகள் கண்காணிப்புப் பொறியாளர் வேலூரில் இருப்பவர்—மாதம் ஒரு தட்வையாவது தொழிற்சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்க வேண்டுமென்று இருந்தாலும், அவர் தொழிலாளர்களைச் சந்திப்பதும் கிடையாது; தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடு பேசுவதும் கிடையாது. ஆகையால் அப்படிப்

பட்ட அதிகாரிகள் எந்த இடத்தில் இருக்க வேண்டுமோ அங்கே அவரை இருக்கச் செய்து, விதிமுறைகளின்படி காரியங்களைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி தொழிற்சாலை விதிகளுக்கு முரண்பாடாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தால், அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தொழிற்சாலை ஆய்வாளர்கள் பலமுறை சென்று முறையாக ஆய்வு செய்யவில்லை என்று சொன்னார்கள். குறிப்பிட்ட புகார் ஏதாவது இருந்தால், அந்தப் புகார் பற்றி அரசுக்குத் தெரிவித்தால், அந்தக் குறிப்பிட்ட புகாரை ஒட்டி இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**திரு. அ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் பெண் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதை அரசு அறியுமா? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் பெண்களை காலை 6—00 மணிக்கு முன்னாலும் மாலை 7—00 மணிக்குப் பின்னாலும் வேலையிலே அமர்த்தக் கூடாது என்பது விதி. அதனால் தொழிற்சாலைகள் சட்டம் 66 (1)ன் கீழ் அரசிடம் விதிவிலக்குப் பெற்று 7 மணி முதல் 10 மணி வரையில் பெண்களை வேலையில் அமர்த்தலாம். விதிவிலக்கு தரும்போது பெண்களுக்கு அங்கே பாதுகாப்பு இருக்கிறதா, அவர்களுக்கு போக்குவரத்து வசதி இருக்கிறதா என்பதைக் கருத்தில் கொண்டு அரசு விதிவிலக்கு வழங்குகிறது. இதற்கு முரண்பாடாக எங்காவது தொழிற்சாலைகள் நடவடிக்கை மேற் கொண்டிருந்தால் அந்தக் குறிப்பிட்ட தொழிற்சாலை பற்றி அரசுக்குத் தெரிவித்தால் உரிய நடவடிக்கை உடனே மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—40)

**ஆதி திராவிடர்கள் வீடுகளின் வடிவமைப்பை மாற்றுதல்**

**35—(*வினா எண் 70).—திரு. எஸ். டி. உகம்சந்த், திரு. வி. தமிழ்மணி, திரு. என். பழனிவேல் மற்றும் திரு. வி. தம்புசாமி:**



மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்கள் வீடுகளின் வடிவமைப்பை மாற்ற வேண்டும் என்னும் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆதி திராவிடர்களுக்கு உறுதி செய்யப்பட்ட கான்கிரீட் கூரையுடன் வீடுகள் கட்டுவதென அரசு ஏற்கெனவே முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். டி. உகம்சந்த்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். (Holl w Block) என்ற உறுதி வாய்ந்த அந்தக் கற்களைக் கொண்டு வீடுகளைக் கட்டினால் மிகவும் வலுவாக அமையும் என்று சொல்லப்படுகிறதே. எனவே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய தகவல் அரசினிடத்தில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் இப்போது பழுதடைந்திருக்கின்றன. அவைகளை மீண்டும் பழுதுபார்த்துத் தருவதோடு மட்டுமல்லாமல், இப்போது கட்டிக் கொண்டு வருகின்ற ஓட்டு வீடுகள் மற்றும் பழுதடைந்த வீடுகளின் கூரைகளை மாற்றி கான்கிரீட் தளம் அமைத்துக் கொடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் பெருமக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதில் ஒரு மாறுதல் செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த மக்களுக்கு வரை

விட்டு எங்கோ ஒரு இடத்தில் 50 வீடுகளோ அல்லது 25 வீடுகளோ கட்டி அவர்களைக் காலம், காலமாக ஒதுக்கப்பட்டவர்களாகவே வைக்கக் கூடிய முறையில்தான் நிலைமை இருப்பது போன்று நம் மனதில் ஏற்படுகிறது. ஆகவே, அந்த நிலைமையை மாற்றுவதற்கு ஏதாவது புதியதொரு வழியை இந்த அரசு கண்டு பிடிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அத்தோடு அவை சின்னச்சின்ன வீடுகளாக இருக்கின்றன. அங்கே போதிய வசதிகள் இல்லை. எனவே, நாம் வீட்டைக் கட்டிக் கொடுத்தாலும்கூட அதிலே நான்கைந்து குழந்தை குட்டிகளோடு வாழ்க்கை நடத்துவதற்கான வசதிகள் இல்லை. ஆகவே, அதை எல்லாம் பரிசீலித்து அந்த வீடுகளை நன்கு குடித்தனம் நடத்தக்கூடிய அமைப்புக்களாகக் கட்டிக் கொடுக்க அரசு முயற்சிக்குமா என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் :** துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. தம்புசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடுகள் கட்டிக் கொடுப்பது என்ற பெயரால் இருக்கின்ற குடியிருப்புக்களை அகற்றுகின்ற நிலைமை ஏற்படுகிறது. எனவே, அவரவர்கள் குடிசைகள் போட்டிருக்கின்ற இடத்திலேயே வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அத்தோடு நகராட்சிகளில் இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கும் இந்த வீட்டு உதவித் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் :** துணைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றியும் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். பீட்டர் ஆல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, Every thing is under consideration என்று சொல்கிறார். எனவே, அவர்களை Minister for Consideration என்று அழைக்கலாமா என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பதில் இல்லை)

**திரு. வ. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்



குத் தீ பிடிக்காத இலவச வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய திட்டத்தை முதன்முதலாக தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் 1975ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவந்து, ஒரே ஆண்டிலே 87,000 வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்கள். அப்படிக் கட்டிக் கொடுக்கிற நேரத்தில் செய்யாறு தொகுதியில்கூட பல ஆதி திராவிட காலனிகள் பயன் அடைந்தன. இன்றைக்கு அந்த வீடுகள் எல்லாம் பழுதடைந்த நிலைமையில் இருக்கின்றன. 13 ஆண்டுகளைக் கடந்துவிட்ட காரணத்தால் அந்த வீடுகள் எல்லாம் பழுதடைந்து மழைக் காலங்களில் தண்ணீர் ஒழுகுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, கலைஞர் அவர்கள் ஆட்சியில் கட்டப்பட்ட அந்த வீடுகளைச் சீர் செய்து, பழுது பார்க்க அரசினிடத்தில் குறிப்பு ஏதாவது இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்:** துணைத் தலைவர் அவர்களே, பழைய வீடுகளைப் புதுப்பிக்கிற அளவுக்கு நிதி நிலைமை சரியில்லாத காரணத்தால், அவர்களுடைய மேலான கருத்துக்களை அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்காக வீடுகளைக் கட்டிக் கொடுத்தாலும்கூட அவை பன்றிக் குடிசைகள் போல் சின்னச்சின்ன வீடுகளாகக் கட்டப்படுவதைப் பார்க்கிறோம். பன்றி அடைவது போன்ற வீடுகள் கட்டப்படுகின்றன. எவ்வளவோ பணத்தைச் செலவழிக்கிறோம். ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி., தாட்கோ, காமராஜர் வீடு கட்டும் திட்டம் போன்ற பல திட்டங்களின் மூலம் நாம் வீடுகளைக் கட்டி வருகிறோம். ஆனால், ஒரு ரூம் மட்டும் கட்டியிருக்கிறோம். அந்த ரூம் கட்டிவிட்டு அதோடு முடிந்துபோகிறது. தயவுசெய்து இதை இரண்டு ரூம்களாக மாற்றி ஒரு கிச்சன், ஒரு திண்ணை என்ற அளவுக்கு இருக்க வேண்டும். இதற்கான வீட்டினுடைய வடிவமைப்பை மாற்றிக் கொடுப்பதற்கான ஒரு திட்டத்தைக் கொஞ்சம் சேர்த்து பணம் அதிகமாக ஒதுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமை சரியில்லாத காரணத்தினாலே இவ்வாறான வீடுகள் கட்டப்படுகின்றன. மத்திய அரசு நிதிநிலைமையைப் பெருக்கிக் கொடுத்தால் இதற்குண்டானவற்றை ஆய்ந்து ஆவனசெய்து, நாம் அந்த வீடுகளை நல்ல முறையில் கட்டிக் கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 5

## திருவையாறு நகரில் ஆதி திராவிடர் நலத்துறை மாணவர்கள் விடுதிக்குப் புதிய கட்டிடம்

36—(*வினா எண். 216)— திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவையாறு நகரில் அமைந்துள்ள ஆதி திராவிடர் நலத் துறை மாணவர்கள் விடுதிக்கு புதிதாக கட்டிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, திருவையாறு ஆதி திராவிடர் மாணவர்கள்' விடுதிக்குக் கட்டிடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் விடுதி கட்ட திருவையாறில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ? எவ்வளவு தொகை? எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதம் செய்யப் படுகின்ற நேரத்திலே, கோர்ட்டில் ஸ்டே வாங்கப்பட்ட காரணத்தினால் அது தடைப்படுத்தப்பட்டுள்ளது. அந்தத் தடை நீக்கப்பட்டு, விடுதி கட்டுவதற்கான ஏற்பாடுகளை அரசு மேற் கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. ஆசையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள் நலத்துறையின் சார்பாக மாணவர்களுக்கு விடுதி அமைக்க நில ஆர்ஜிதம் செய்ய முற்படுகின்ற நேரத்தில் நீண்ட சட்ட விதிகளைக் கடைப் பிடிக்கவேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தினால், நிலத்துக் குச் சொந்தக்காரர்கள் அந்த நிலத்தைக் கொடுக்க மறுத்து, தடையைப் பெறுகின்ற அளவுக்கு வந்துவிடுகிறார்கள். எனவே அது காலதாமதப்படுகிறது. சில இடங்களில் தடுத்து நிறுத்தப் படுகின்றது. இதனாலேகூட பல மாணவர்கள் விடுதிகள், அதைப் போல காலனி வீடுகள், ஊருக்கு ஒதுக்குப்புறத்திலே நீண்ட தூரம் தள்ளி அமைக்கிறார்கள். இது கடந்த காலத்திலே இருந்த நிலைமையை தீண்டத்தகாதவர்களைப்போல, நடத்துவதைப் போல சுட்டிக்காட்டுகிற அளவுக்கு இருக்கிறதை தெரிந்துகொண் டிருக்கிற காரணத்தினாலே, அதை மாற்ற சட்டவிதிகள் மாற்றப் படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



1989 ஏப்ரல் 5]

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய் கின்ற நேரத்திலே, நிலம் ஆர்ஜிதம் செய்கின்ற அதிகாரி களால் அது ஆர்ஜிதம் செய்யப்படுகின்ற அளவுக்கு அதைப் பரிசீலனை செய்து செய்யவேண்டும். வேண்டுமென்றே ஒரு சில காரணங்களை மனதில் கொண்டு, ஆர்ஜிதம் செய்கின்ற காரணத் தினால், கோர்ட்டிலே ஸ்டே வாங்குகின்ற அளவுக்கு அது வந்துவிடுகிறது. அதைப் பற்றி அரசு தனியாக பரிசீலனை செய்து அது நேராவண்ணம் காக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருப்ப தால் இந்தக் கேள்வியை நான் கேட்கின்றேன். கள்ளர் சீரமைப் புத் துறையில், 38 பள்ளி மாணவர் விடுதிகள் இருக்கின்றன. அதில் 8 பள்ளி மாணவர் விடுதிகள் அரசுக்குச் சொந்தமான கட்டடங்கள். பாக்கியிருக்கின்ற 30 பள்ளி மாணவர் விடுதி கள் கட்டடங்களும் சுகாதார வசதியுமின்றி, விளையாட்டு மைதானம் இன்றி, மாணவர்கள் சிரமத்தோடு வாடகைக் கட்ட டத்தில் இருக்கின்றனர். அரசாங்கம் ஆண்டுதோறும் வாடகை கட்டிவிடுகிறது. எனவே பள்ளி மாணவர்களுக்கு அரசு சொந் தமாக சுகாதார வசதியோடு கூடிய, மாணவர் விடுதிகள் கட்டிக் கொடுக்குமா என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றிய வினாக் களை தனியே கொடுத்துக் கேட்பார்களேயானால், அது பற்றிய முழு விவரத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடிக்கு 20—11—1985 ஆம் ஆண்டு ரூ. 28 லட்சம் ஒதுக்கீடு செய்த அந்த ஆதிதிராவிட மாணவர் விடுதிகள் இன்னும் கட்டிமுடிக்கப் படாமல் இருக்கின்றனவே. நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டுள்ளது. அதைக் கட்டி முடிக்க சீக்கிரம் ஏற்பாடு செய்யப் படுமா? எப்போது அது நடக்கும்?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி அரசு தீவிரமாக முடிவெடுத்து செயல்படச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 5

திரு. மீ. அ. வைத்திலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆதி திராவிடர் நலத் துறை மாணவர் விடுதிகளில் சென்ற காலங்களில் சரியான சுகாதார வசதி, குடிதண்ணீர் வசதி போன்ற வசதிகள் இல்லாத இடங்களில் அவைகளை உள்ளாட்சி அமைப்புகள் செய்து தர முன்வந்தால் அதற்கு விதிகளில் இடம் இல்லையென்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட விடுதிகளில் மேற்கண்ட வசதிகளை சம்பந்தப்பட்ட ஒன்றியங்களோ, பேரூராட்சிகளோ, ஊராட்சிகளோ செய்ய முன் வந்தால் தாராளமாகச் செய்யலாம் என்கிற வகையில் அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு ஆவன செய்து, முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறை மாணவர் விடுதிக்கு கட்டிடங்கள் கட்ட நில ஆர்ஜிதம் செய்வதில் உள்ள கஷ்டங்களை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் நாகப்பட்டினம், குறிச்சியில் ஆதி திராவிடர் நலத்துறை மாணவர் விடுதிக்கு நில ஆர்ஜிதம் செய்தும், கட்டிடம் கட்டுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறதே, அது விரைவில் கட்டி முடிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரங்களை உடனடியாக பரிசீலனை செய்து அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் நடைபெறுகின்ற மாணவர் விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்கள். அதுபோல மாணவர்களின் எண்ணிக்கையை கூடுதலாக்கி சேர்க்கின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரம் வேண்டுமானால்., தனிக் கேள்வி கேட்டால் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 5]

கோவை மாநகராட்சியில் மின் விநியோகம்.

37 (* வினா எண்—154: திரு. கே. ரமணி) மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சியில் தினமும் காலை 7-00 மணி முதல் 10-00 மணிவரை மின் விநியோகம் நிறுத்தப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தொடர்ந்து மின்சாரம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, (அ) மாநிலத்தில் உள்ள சில அனல் மின் நிலையங்களில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட கோளாறுகள் காரணமாக மின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதால் நகர்ப்புறங்கள், 4 பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் காலையில் 1½ மணி நேரமும் மாலையில் 1½ மணி நேரமும் மின் விநியோகம் நிறுத்தப்படுகிறது.

(ஆ) நிலைமையை விரைவில் சீர் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தில் நமது மாண்புமிகு அமைச்சர் சொன்ன மாதிரி 1½ மணி நேரம் அல்ல, அதற்கு மேல் சில சமயங்களில் 2, 3 மணி நேரங்கூட மின்சாரம் வராமல் தடைப்பட்டு விடுகிறது. அதுவும் முக்கியமான நேரத்தில் மின்சாரம்நின்று விடுகிறது. அதற்கு ஒட்டு மொத்தமாக மின்சாரம் உற்பத்தி செய்வதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. இங்கே அனல் மின் நிலையத்தில் கூட பிரச்சினை இருக்கிறது என்று செய்தி வந்திருக்கிறது. அதுவும் உண்மை என்று நினைக்கிறேன். ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் இங்கே நிச்சயமாக மின் விநியோகத்தில் கோளாறு இருக்கும் என்று தெரிய வருகிறது. இது குறித்து, அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா? மேலும் சரியான மின் ஓட்டம் இல்லாததாலும் இப்படி அடிக்கடி ஏற்படுகிறது என்றும் சொல்லுகிறார்கள். ஆகவே அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரைப் பொறுத்த வரையில் மின் விநியோகம் செய்வது மின் வாரியம் அல்ல. அங்கே இருக்கின்ற மாநகராட்சிதான் மின் விநியோகம் செய்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய குறிப்புகள்படி அவர்கள் சரியாக மின் விநியோகம் செய்ய அறிவுறுத்தப்படுவார்கள்.

திரு. அ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியில் சேர்க்கப்பட்ட பேரூராட்சிப் பகுதிகளில் மின்சாரம் தற்சமயம் மின் வாரியம் மூலம் விநியோகிக்கப்படுகிறது. இதனால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இப்பகுதிகளில் மின் விநியோகத்தை மாநகராட்சியிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுக்கு அது இன்னும் நல்ல சௌகரியமாக இருக்கும் என்று உறுப்பினர் கருதினால் அதை செய்வதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே; கோவை மாவட்டம், திருப்பூர் நகரத்திற்கு மேட்டுப்பாளையத்திலிருந்து வரக்கூடிய குடிநீர் தடையின்றி வருவதற்காக கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்னால் பீடர் லைன் உருவாக்கப்பட்டு, முறையாகத் தடையின்றி தண்ணீர் விநியோகம் நடந்து கொண்டிருந்தது. தற்போது பீடர் லைனுக்கும் மின் வெட்டு ஏற்படுத்தும் காரணத்தால், 6 நாளைக்கு ஒரு முறை தண் ணீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது, 10 நாட்களுக்கு ஒரு முறை விநியோகம் ஆகிறதென்பதை அரசு அறியுமா? அப்படி அறியுமானால் பீடர் லைனுக்கு தனியாக மின்சாரம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொதுவாக குடிதண்ணீர் எடுக்கப்படுகின்ற இடங்களிலே, அவர்களுக்கு 24 மணி நேரமும் மின் சப்ளை உறுதி செய்யப்பட்டு, மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்துள்ளதை மேற்கோள் காட்டி, உடனடியாக நிவர்த்திசெய்ய ஆவன செய்யப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே கோயம்புத்தூர், தஞ்சாவூர், இன்னொரு நகரம், இந்த மூன்று நகராட்சிகள், மாநகராட்சிகள் மின்சாரத்தைப் பொதுமக்களுக்கு நேரடியாக விநியோகம் செய்கின்றன. இப்போது கோவை நகராட்சி, சிங்காநல்லூர் நகராட்சி இணைந்து மாநகராட்சியாகி இருக்கின்றது. எங்களுக்கு அதிக மின்சாரம் தேவையென்று மாநகராட்சி மின்சார இலாக்கா தம்முடைய மின் வாரியத்திற்குப் பல முறை விண்ணப்பித்தும், கேட்டும் தேவையான மின்சாரத்தை மின்சார வாரியம் அந்த மாநகராட்சிக்கு வழங்காத காரணத்தால், அங்கே மின் தட்டுப்பாடு மிக அதிகமாகி மின்வெட்டு பல முறை ஏற்படுகிறதென்ற செய்தி மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு வந்ததா?





அதை உடனடியாக மாற்றி, தேவையான மின்சாரத்தை அந்த மாநகராட்சிக்குத் தருவதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்களுடைய கேள்விக்குப் பதிலாக இதுவரையில் கோவை மாநகராட்சிக்குப் பற்றாத அளவுக்கு மின்சாரம் தருகிறார்கள் என் குறிப்பு எதுவும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மின் உற்பத்தியில் சில பல கோளாறுகள் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், ஆங்காங்கு மின் விநியோகம் தடைப்பட்டிருக்கிறது என்பது உண்மை. அவை விரைவில் சீர் செய்யப்பட்டவுடன் கோவை மாநகராட்சிக்குத் தேவையான அளவுக்கு மின்சாரம் வழங்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதால் விநியோகம் சிரமமாக இருக்கிறதென்பதை ஏற்றுக் கொண்டாலும், அதைக் களையக் கூடிய நடவடிக்கையாக தமிழ் நாட்டிலேயுள்ள சர்க்கரை ஆலைகளில் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம். அந்த ஆலைகளுக்கு வருடத்தில் 6 மாதங்களுக்கு கரும்பு கிடைக்காத காரணத்தால் இயங்காமல் இருக்கின்றன. அவைகளுடைய ஸ்டீம் டர்பைன் உற்பத்தித்திறன் 60 மெகாவாட்டாகும். எனவே அந்த ஆலை அதிபர்களுடன் தொடர்பு கொண்டு, 6 மாத காலத்திற்கு அவர்களை அதிலிருந்து மின்சார உற்பத்தி செய்து, தமிழ்நாட்டு மின்சார வாரியத்திற்கு வழங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய மொத்த மின்சாரத்தில் 49 சதவிகிதம் உயர் அழுத்தம், குறைவு அழுத்தம் தொழிற்சாலைகள் உபயோகிக்கின்றன. இதில் பெரும்பகுதியான தொழிற்சாலைகள், உயர் அழுத்த மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கேப்டிவ் பவர் ஜெனரேட்டர்கள் வைத்திருப்பதால், அவர்களுக்கு வழங்கக்கூடிய டீசலை ரூ. 3.90 என்பதற்குப் பதிலாக ரூ. 2.90 என்று வழங்கினால், அவர்களே தேவையான அளவுக்கு மின்சாரம் உற்பத்தி செய்யலாம். இதனால் அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய இழப்பை சரிசெய்து, தமிழ் நாட்டினுடைய மின்சாரத் தட்டுப்பாட்டை ஒரே நாளில் சரி செய்யலாமென்ற உண்மை நிலை இருப்பதால், அரசாங்கம் இதைப் பற்றி முழுப் பரிசீலனை செய்யுமா என்பதைத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதுபோல புதிதாக அமைக்கப்படுகிற சர்க்கரை ஆலைகளிலே கரன்ட் உற்பத்தி செய்யப்படும் ஏற்பாடு நடைபெற்று, இரண்டு இடங்களிலே பவலை நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்

அவர்களுடைய குறிப்புகளை மேற்கோள்காட்டி, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்வதோடு டீசலை மத்திய அரசு ரூ. 2.90க்கு குறைத்துக் கொடுத்தால், அதை அவர்களுக்கு வழங்குவதில் இந்த அரசுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள எண்ணூர் அனல் மின் நிலையம், இந்த அரசு பொறுப்பேற்பதற்கு 4 அல்லது 5 மாதங்களுக்கு முன்பே பழுதுபட்டிருந்தும், இதுகாறும் அது சீர் செய்யப்படவில்லை என்று தெரிய வருகிறது. அதைச் சீர் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றும், எவ்வளவு விரைவில் அது சீர்செய்யப்படும் என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் விரைவாக சீர்செய்வதற்காக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதே மேலும் ஒரு யூனிட் பழுதடைந்து, அதுவும் சீர் செய்யப்பட்டு தற்போது மின் உற்பத்தி நடந்து கொண்டிருக்கிறது. இப்போது அதன் வேலைகள் முடிவடைந்து 15 நாட்களுக்குள்ளாக ஒரு யூனிட்டும், 7-வது மாதத்தில் இன்னொரு யூனிட்டும் செயல்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) பேரவையின் விவாதங்கள் இடையூறுகள் இல்லாமல் சுமுகமாக நடைபெற வேண்டியதன் அவசியம் குறித்து

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் வைக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கையின்மீது முக்கியமான பொது விவாதம் முடிந்து, ஒவ்வொரு மானியமாக



எடுத்துக்கொண்டு மக்களுடைய பிரச்சினைகள் மீது தீவிரமான விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கிற சமயம் இது. மக்கள் மத்தியில் எதிர்பார்ப்புகள் அதிகமாகிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், இங்கே நடைபெறும் விவாதங்களில் ஒரு துளி நேரம்கூட, இந்த சபையின் நேரம் ஒரு துளி கூட வீணாகக் கூடாது— அநியாயமாகப் போகக் கூடாது. விதிமுறைகளுக்கு, கட்டுப்பாடுகளுக்கு மாறாக இந்த சபை போகக் கூடாது என்பதை நான் மட்டுமல்ல எங்கள் கட்சி சார்பிலேயே உங்களுக்கு வேண்டுகோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்து உறுப்பினர்களும், அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் அதைத்தான் விரும்புகிறார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம். இந்த நிலைமையில் தலைவரான தாங்கள் முக்கியமானதொரு பொறுப்பிலிருந்து கொண்டு எங்களுடைய உரிமைகளைப் பரிபூரணமாகப் பாதுகாக்கிறீர்கள். அந்த நிலைமையில் தற்போதைய விவாதங்களில் எந்தவிதமான இடையூறுகளும் இல்லாமல் நாம் செயல்படுவதற்கும் தொடர்ந்து விவாதத்தைக் கொண்டு போவதற்கும் உறுதி செய்தாக வேண்டும். குறிப்பான பிரச்சினைகளான கடுமையான வறட்சியும், மோசமான உணவுத் தட்டுப்பாடும் வரும் அபாயம் இருக்கிறது என்கிற இந்தச் சமயத்தில் ஜனங்களுடைய எதிர்பார்ப்பை இங்கே பிரதிபலிக்கிற முறையில் நடக்கிற விவாதத்தை ஒழுங்காகத் தாங்கள் நடத்தி வைத்திட உங்களோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் பரிபூரணமாக ஒத்துழைக்கும். எந்தக் காரணத்தைக் கொண்டும், இந்த அவையினுடைய நேரத்தில் ஒரு நிமிஷத்தைக் கூட நஷ்டப்படுத்துகிற வகையில் எங்கள் பக்கத்திலிருந்து எந்த ஒரு நடவடிக்கையும் வராது என்று நான் உறுதி கூறுகிறேன். அதே நேரத்தில் உங்களிடமிருந்து பாதுகாப்பையும் எதிர்பார்க்கிறோம். அரசும் இதற்குத் தகுந்த மாதிரி சில நடவடிக்கைகளை எடுத்து இந்த உத்திரவாதத்தைத் தர வேண்டும். சபையும் அமைதியாக நடக்க வேண்டும். சட்ட மீறலும், விதி மீறலும், தவறுகளும் நடக்காமல் நடைபெற வேண்டும் என்ற கருத்தை எங்கள் கட்சியின் கருத்தாக, நேற்றையதினம் கூடிய கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் தங்களுக்கு வேண்டுகோளாக விடுக்கிறேன். இதை my Submission on behalf of my party என்ற முறையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களுடைய உணர்வுகளை இந்தப் பேரவை மதிக்கிறது. பேரவையின் நிகழ்ச்சியைச் சுமுகமாக நடத்த அனைத்து உறுப்பினர்களின் ஆதரவையும் வேண்டுகிறேன். இனிப் பேரவையின் நிகழ்ச்சிகள் ஒழுங்காக நடைபெறும் என்று தெரிவித்துக்கொண்டு அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் போகலாம். (குறுக்கீடு).

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : ஒத்திவைப்புத் தீர்மானம்தான் முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகுதான் உரிமைப் பிரச்சினை (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதலில் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வோம். பிறகு உரிமைப் பிரச்சினை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வினாக்கள் முடிந்தவுடன் பிற அலுவல்களை எழுப்புவதற்கு முன்னால் உரிமைப் பிரச்சினை எழுப்ப வேண்டும் என்பதுதான் விதி 221.

(இ) தம்மைக் கொல்ல முதலமைச்சர் ஆணையிட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் வெளியே தெரிவித்துள்ள குற்றச்சாட்டு குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, பொது முக்கியத்துவம் வாய்ந்துள்ள பிரச்சினை குறித்து இங்கே எழுப்ப விரும்புகிறேன். இந்த அவையில் இடம்பெற்றுள்ளவர்களில் இருவர் மிக முக்கியமானவர்கள். ஒருவர் இந்த அவையினை நடத்துகிறவர், அவர் இல்லாவிட்டால் இந்த அவையே இல்லை என்று சொல்லுகிற அளவுக்கு இருப்பவர். அதாவது he is the pivot on which the legislature revolves என்கிற அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த முதலமைச்சர் அவர்கள். அதே அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த எதிர்க் கட்சித் தலைவரவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது பாதகமான ஒரு விளைவு ஏற்படக் கூடிய ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். விஷம் கொடுத்து என்னை சாகடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது ; ஆட்கள் அனுப்பப் பட்டிருக்கிறது. பிரசாதம் என்ற பெயரிலே விஷம் கலந்த பிரசாதம் அனுப்பப்பட்டிருக்கிறது என்று அவர்கள் பத்திரிக்கையிலே குற்றச்சாட்டுச் சொல்லியிருக்கிறார்கள். எனவே இது குறித்து இது உண்மைதானா என்று அறிந்துகொள்ளக்கூடிய உரிமை இந்த அவைக்கு உண்டு. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அப்படிச்செய்தாரா, இல்லையா என்று நாட்டு மக்களுக்குத் தெரியவேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இப்படி ஒரு பாதகமான குற்றச்சாட்டைச் சொல்லி இருக்கிறாரே; அதை அவைக்கு வெளியே சொல்லியிருக்கிறாரே. அது குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையிலே இப்படி அவர் பேசி இருப்பது நியாயம் தானா? அப்படிப்பட்ட ஒரு முதலமைச்சரை நாம் இந்த அவையிலே வைத்திருக்கிறோமா ? அது பற்றிய விளக்கம் இந்த மன்ற உறுப்பினர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் தெரிந்தாக



வேண்டும். எனவே இதைப்பற்றி விவாதம் நடத்திவிட்டுத்தான் மற்றப் பிரச்சினைகளுக்கு அவை செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அரசியலில் வன்முறை மூலமாக, யாரையும் கொலை செய்துவிட்டு அரசியலை நடத்த வேண்டுமென்று விரும்புகின்ற எண்ணம் படைத்தவனல்ல நான். தமிழ்நாட்டினுடைய அரசியல் வரலாற்றைப் பார்த்தால் — வேறு சில மாநிலங்களில் வேறு விதமாக இருக்கலாம் — ஆனால் தமிழ்நாட்டினுடைய அரசியல் வரலாற்றைப் பார்த்தால் தந்தை பெரியார் அவர்களும் மூதறிஞர் ராஜாஜி அவர்களும் எந்த அளவுக்கு கருத்து மாறுபாடு கொண்டவர்கள் ; எந்த அளவுக்கு கருத்துக்களின் அடிப்படையில் ஒருவரையொருவர் எழுத்துமூலம், பேச்சின் மூலம் தாக்கிக் கொண்டவர்கள் என்பதை எல்லாம் நாடு அறியும் ; இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். ஆனால் அந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மறைந்த நேரத்தில் கலகலவென்று கண்ணீர் வடித்து, ராஜாஜி அவர்கள் உடல் எரியூட்டப்படுகிற நேரத்திலே தேம்பித்தேம்பி அழுதவர் தந்தை பெரியாரவர்கள் ஆவார்கள். எத்தனையோ அரசியல் மாறுபாடுகள், சமுதாய மாறுபாடுகள், வகுப்புவாத உணர்வுகள் என்றெல்லாம் பேசப்பட்ட சூழ்நிலைகள், அதற்கு அப்பாலும்கூட அந்த அரசியல் பண்பாடு தமிழகத்திலே தொன்றுதொட்டு கட்டிக் காக்கப்பட்டு வருகிறது. அதைப்போலவே பெரும் தலைவர் காமராசர் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் அரசியலிலே உடன்பாடு பல நேரங்களிலே இல்லை. கருத்து வேறுபாடு உண்டு. ஆனால் அண்ணா அவர்கள் மறைந்த நேரத்தில் பெரும் தலைவர் காமராசர் அவர்கள் எந்த அளவுக்குத் துடித்தார், தவித்தார் என்பதை நாடு அறியும்.

அதைப்போலவே பெரும் தலைவர் காமராசர் அவர்களுக்கும் எனக்கும் கூட எவ்வளவோ மோதல்கள் உண்டு. அவரோடு மோதியதை நான் பெருமையாகக் கருதுகிறேன், அனைத்திந்தியப் பெருந்தலைவர்களிலே அவர் ஒருவர் என்ற காரணத்தாலே. அப்படிப்பட்ட பெரும் தலைவரவர்கள் மறைந்தபோது முதன் முதலாக எனக்கு டெலிபோனிலே செய்தி சொல்லப்பட்டது. அப்போது டெலிபோனிலேயே கதறி அழுதவன் நான். முதலில் அவருடைய வீட்டுக்குச் சென்று, அவர் உடல் மீது விழுந்து அழுதவனும் நான்தான். அதுமாத்திரமல்ல அவருடைய சவ அடக்கம் எப்படி நடைபெற வேண்டும், அது அரசாங்க ரீதியில் நடைபெற வேண்டுமென்பதற்காக, அந்த இரவிலே கிண்டி ராஜ்பவனிலே தங்கியிருந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ததை மேலவையிலே மறைந்த ராஜாராம் நாயுடு

அவர்களே பாராட்டிப் பேசினார்கள். பெரும் தலைவர் காமராஜர் அவர்களுடைய சகோதரன்கூட இந்த அளவுக்குச் செய்திருக்கமாட்டார்; முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் அந்த அளவுக்கு ஈமக் கடன்களை ஆற்றினார் என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

அதைப்போலவே மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் என்னுடைய அருமை நண்பர், என்னுடைய 40 ஆண்டுக்கால நண்பர்— எனக்கும் அவருக்கும் ஆயிரம் கருத்து மாறுபாடுகள் இருக்கலாம், அவரும் நானும் பிரியக் காரணமாக இருந்தவர்கள் எல்லாம்கூட அவர் பக்கம் போய் சேர்ந்திருக்கலாம் — ஆனால் நான் இரயிலிலே இருந்து இறங்குகிறேன். குமாரபாளையத்தில் இருந்து வருகிறேன், இரயிலடியில் ஒரு செய்தி சொல்லப்பட்டதும், கதறி அழுதுகொண்டு ராமாவரம் தோட்டத்துக்குச் சென்றவன் நான். அதுமாத்திரமல்ல. டி.வி. படத்திலே அவருடைய இறுதி யாத்திரை நடைபெறும்போது அதைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்து இருந்து, இறுதியாக அவருடைய உடல் புதைக்கப்படும்போது கதறிக் கதறி அழுது சோர்ந்து விழுந்தவன் நான்.

[முற்பகல் 10-10]

எனவே, தமிழக அரசியலில் அன்றுதொட்டு இன்றுவரை பகைவர்களாக, அரசியல் கருத்து மாறுபாடு உள்ளவர்களாக இருந்தவர்கள், எந்த அளவிற்கு நட்புரிமையோடு, அன்போடு பழகியிருக்கிறார்கள் என்பதையும், அரசியலிலே வெற்றி பெறுவதற்காக ஒருவர் மறைய வேண்டும் அல்லது கொல்லப்பட வேண்டுமென்று எண்ணுகிற அந்தப் பண்பாடு தமிழகத்திலே இல்லை என்பதையும் அனைவரும் அறிவார்கள்.

என்னைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிற குற்றச்சாட்டு சாதாரணமானதல்ல. நம்முடைய அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம்கூட இதைப்பற்றிப் பேசலாமா என்றார்கள். என்றாலும், ஒரு முதலமைச்சரைப்பற்றி எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிற செய்தி. ஏதோ ஒன்றிரண்டு பத்திரிகைகளிலே வந்த செய்தி அல்ல, ஆங்கிலப் பத்திரிகைகள் அனைத்திலும் வந்திருக்கிறது. இந்தியா முழுவதும் உள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. நான் எதிர்க்கட்சியினுடைய தலைவர் சகோதரி செல்வி ஜெயலலிதாவுக்கு உணவிலே விஷம் கலந்து கொடுத்து அவரைக் கொல்ல ஆணையிட்டிருக்கிறேன் என்றும் அதைப் போலவே அரசாங்க அதிகாரியும் அவர்களுடைய குடும்ப நண்பருமான நடராஜன், அவருடைய துணைவியார் சசிகலா, இங்கு நான் படிக்கும்பொழுது பத்தகத்தை இழந்ததாகச் சொல்லப்படுகிற செங்கோட்டையன் — நான் இப்பொழுதுகூடச் சொல்கிறேன், திருத்திக்கொள்ளத்



தயாராக இருக்கிறேன், எனக்கு எல்லா உறுப்பினர்களுடைய பெயரும் சரியாகத் தெரியாது. ஒருவர் இழந்தார் என்று சொன்ன பொழுது என்னிடத்திலே நிருபர்கள் சொன்னார்கள், செங்கோட்டையன் என்று சொன்னார்கள். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். அதுவே கூட செங்கோட்டையன்தானா என்று எனக்கு நிச்சயமாகத் தெரியாது. அந்த அளவில் அவரையும் கொல்லுவதற்காக வாகனங்களை விட்டு மோதி அவரையும் கொல்வதற்குக் கருணாநிதி ஆணையிட்டிருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நான் கேட்கிறேன், என்னிடத்திலே நீங்கள் எத்தனையோ குறைகள் காணலாம், குற்றங்கள் காணலாம். ஆனால் இப்படிப்பட்ட ஒரு கொலைகார நெஞ்சம் எனக்கு இருக்கிறது என்று இந்த அவையிலே இருக்கின்ற யாராவது கருதுவீர்களேயானால் அதைவிட வேதனை எனக்கு வேறொன்றும் இருக்க முடியாது. நான் யார் மீதும் ஆணையிட்டு, இப்படியெல்லாம் நான் செய்யக் கூடியவன் அல்ல என்று கூற முடியும் என்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

அவர்கள் இப்படி எத்தனையோ செய்திகளைச் சொல்லி இருக்கிறார்கள். மறைந்த நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மோரிலே விஷம் கலந்து கொடுத்து ஜானகி அம்மையார்தான் அவர்களைக் கொன்றார்கள் என்றுகூட எதிர்க்கட்சியினுடைய தலைவர் சகோதரி ஜெயலலிதா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்போலத்தான் இதையும் நான் எடுத்துக் கொள்கிறேனே அல்லாமல் வேறல்ல.

யாரையும் கொன்றுவிட்டு தீர்த்துக்கட்டிவிட்டு அரசியல் நடத்த வேண்டுமென்ற எண்ணம் எனக்கோ, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ, இன்னும் சொல்லப்போனால் குறிப்பாகத் தமிழ்நாட்டிலே பண்போடு அரசியல் கட்சிகள் நடத்துகின்ற யாருக்கும் நிச்சயமாக இருக்காது என்ற அளவில் இந்தக் கூற்றினை நான் வன்மையாக மறுக்கிறேன்.

*திரு. ஆர். அண்ணாநம்பி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வரவர்களே இங்கே குறிப்பிடுகிற பொழுதும், அதேபோல மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் குறிப்பிடுகிறபொழுதும், எதிர்க்கட்சித் தலைவரவர்கள் முதல்வரவர்களின் தூண்டுதலின்பேரில் என்று ஆஸ்பத்திரியிலே சொல்லப்பட்ட கருத்து. அதேபோல பல பேரைக் கொலை செய்வதற்காக முதலமைச்சர் முயன்று கொண்டிருக்கிறார் என்று அவர்கள் சொன்னதாகவும் சொன்னார்கள். அதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். காரணம், அத்தகைய வார்த்தையை அவர் சொல்லவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்வதோடு,

(திரு. ஆர். அண்ணாநம்பி) [1989 ஏப்ரல் 5

நம்முடைய முதலமைச்சரவர்கள் தந்தை பெரியார் அவர்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும், மூதறிஞர் இராஜாஜி அவர்களையெல்லாம் சொன்னார்கள். நாங்களும் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் வழிநின்று, மாண்புமிகு முதல்வரவர்களுடைய நாற்பதாண்டுக்கால நண்பரான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய வழி நின்று, இங்கே 11 ஆண்டுக் காலம் ஆட்சி செய்தவர்கள்.

கடந்த 25-ஆம் தேதி நடைபெற்ற சம்பவம் * *

என்பதை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேச வேண்டிய கருத்துக்கு அப்பாற்பட்டு, ஏற்கெனவே இந்த அவையில் இனி வாதிப்பதற்கு இல்லை என்று முடிவு செய்யப்பட்ட பிரச்சினையை இதில் இணைத்துப் பேசுவது என்பது இந்த அவையினுடைய உரிமையை மீறுகின்ற ஒரு காரியமாகும்.

மற்றொன்று, இன்று காலையிலே, நேற்று மாலையிலேகூட பத்திரிகையிலே வந்த அந்த அபாண்டமான செய்தி இதுவரையில் மறுக்கப்பட்டு பத்திரிகைகளுக்கு அனுப்பப்படாத ஒரு நிலையிலேதான் திரு. லத்தீப் அவர்கள் இந்த அவையிலே இந்தப் பிரச்சினையை எழுப்பி, முதலமைச்சரவர்கள் உரிய முறையில் விளக்கம் தந்திருக்கிறார்கள்.

எனவே, அப்படியெல்லாம், அண்ணா பெயரைச் சொல்லி, எம்.ஜி.ஆர்.பெயரைச் சொல்லி கட்சியை நடத்துகிற அவர்கள் அப்படிப்பட்ட முறையில் எதுவும் தெரிவிக்கவில்லை அல்லது பேசவில்லை என்று, இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற கருத்தை நாட்டுமக்கள் அறிந்துகொள்ளத்தக்க வகையில், பத்திரிகையிலே வெளி வந்திருக்கின்ற செய்திகளை மறுத்து, யாரிடமிருந்து அந்தச் செய்தி — முதல் செய்தி வந்ததோ அவர்களே அறிக்கை கொடுப்பதன் மூலமாகத்தான் மக்கள் உண்மைகளை உணர்வார்கள் என்பதையும் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகையிலே கொடுத்ததில் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சருடைய

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1989 ஏப்ரல் 5] (திரு. ஆர். அண்ணாநம்பி)

தூண்டுதலின் பேரில் என்னைக் கொலை செய்ய முயற்சிக்கிறார்கள் என்று சொல்லவில்லை. இது போன்ற எந்தச் செய்தியும் அத்தகைய பத்திரிகைகளிலே வரவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மீது, லத்தீப் அவர்களால் சொல்லப்பட்ட புகார்கள் அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளில் வந்ததை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து படித்துப் பார்க்க வேண்டும். பெரிய தலைப்பிட்டு, ஏதோ நேற்று இரவோ, அல்லது நேற்று முன் நாளோ திடீரென்று இப்படி ஒரு அக்கிரமம் இந்த நாட்டிலே நடைபெற்று விட்டதைப் போல ஒரு பரபரப்பூட்டுகிற செய்தி வந்திருக்கிறது. பரபரப்பூட்டாமல் ஏதோ ஓரத்திலே வருகிற செய்தியாக அது வரவில்லை. எனவே அந்தப் பத்திரிகைச் செய்திகள், யார் சொன்னதாக வெளி வந்திருக்கிறதோ அவர்கள் மூலமாக அவைகள் மறுக்கப்படுவதன் மூலமாகத்தான் பத்திரிகைகள் தவறாக வெளியிட்டு இருந்தால், அது நாட்டுக்குத் தெரியும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே' சட்டமன்ற உறுப்பினர்களுக்கோ, அல்லது இந்த நாட்டிலுள்ள ஒரு சாதாரண பிரஜைக்கோ கூட, தனக்கு ஆபத்து வருகிறது என்று தெரிந்தால் அந்த ஆபத்தை முன் கூட்டிச் சொல்ல, எல்லாவிதமான உரிமையும் உண்டு. அந்த அடிப்படையிலே அவரைச் சுற்றி நடந்து வருகிற சம்பவங்கள், அதற்கு முன்னாலே அவர் மீது போடப்பட்ட வழக்குகள், அல்லது போட முயற்சிக்கப்பட்ட வழக்குகள், அதையொட்டி, சட்டமன்றத்திலே நடந்த வன்முறைகள், வெளியிலே நடந்த, நடக்கிற நிகழ்ச்சிகள் எல்லாம், தன் உயிருக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையை, தன்னைக் கொலை செய்கிற முயற்சிகள் நடக்கின்றன என்பதை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைச் சொல்ல அவருக்கு எல்லாவிதமான உரிமையும் உண்டு.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு என்பதை இந்தச் சட்டமன்றம் மிக நன்றாக அறியும். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொதுவாகப் பாதுகாக்கின்ற ஒரு கடமையும் அரசுக்கு உண்டு. சட்டமன்றத் தலைவருக்கும் அந்தக் கடமை உண்டு. சட்டமன்றத்திலே உள்ள உறுப்பினர்களோ, அல்லது ஆளும் கட்சித் தலைவரோ, அல்லது முதலமைச்சரோ, யாரோ தங்களைக் கொலை செய்ய முயற்சிக்கிறார்கள், தூண்டுகிறார்கள் என்று சொல்வது சட்ட

(பேராசிரியர் க. அன்பழகன்) [1989 ஏப்ரல் 5

விரோதமான ஒரு காரியம். அப்படி இருக்குமானால் அதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமே தவிர, அப்படி ஏதேனும் இருக்குமானால், தகுந்த புகார் கொடுத்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, பொது மக்கள் முன்னால் ஏதோ விஷம் கொடுப்பதற்கு முயற்சிக்கிறார்கள். அவர்,—களுடைய உணவிலே கலந்து என்றும் பிரசாதத்திலே கலந்து என்றும்—பிரசாதத்திற்கும் கலைஞர் கருணாநிதிக்கும் மிக நெருக்கமான சம்பந்தம் உண்டு அல்லவா!—சொல்வது பொது மக்கள் ஒரு தவறான எண்ணம் கொள்வதற்கு ஒரு மிகப் பெரிய விளம்பரமாகக் கூடிய ஒருசெய்தி தரப்பட்டிருக்கிற காரணத்தால் தான், அதைத் திட்டவட்டமாக மறுத்துச் சொல்ல வேண்டிய ஒரு கடமை அரசுக்கு ஏற்பட்டு, இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவருக்கு அல்லது நான் ஏற்கெனவே சொன்னதைப் போல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, ஒரு சாதாரண பிரஜைக்குக் கூட தனக்கு ஏற்படுகிற அந்த உணர்வைச் சொல்வதற்கு உரிமை உண்டு. இது எப்படி சட்ட விரோதமாகும்? அவர்களுக்கு இது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டு இருக்கிறது. அதற்கான அடிப்படைக் காரணங்களும் உண்டு. செயல்முறைகள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் சொல்கிறார்கள். எனவே இது சட்டவிரோதம் அல்ல. அவர்களுக்கு இருக்கிற தார்மீகமான உரிமையாகும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, நான் தமிழ்ப் பத்திரிகையிலே வந்ததைப் படித்துக் காட்டுகிறேன். மக்கள் குரலிலே வந்திருக்கிறது. "என்னோடு சேர்ந்த எனது குடும்ப நண்பர் நடராசன், அவர் மனைவி சசிகலா, அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ., செங்கோட்டையன் ஆகியோரைக் கொல்வதற்கு முதல்வர் கருணாநிதி சதித் திட்டம் தீட்டியுள்ளார் என்று ஜெயலலிதா தெரிவித்தார். கருணாநிதிக்கு மிக நெருக்கமான ஒருவர், இப்போது அவரோடு இருப்பவர் இந்தத் தகவலை என்னிடம் தெரிவித்தார், அவர் பெயரை நான் சொல்ல முடியாது. சொன்னால், அவரைத் தீர்த்துக்கட்டி விடுவார் என்று ஜெயலலிதா சொன்னார்". அந்த அளவிற்குச் செய்தி வந்திருக்கிறது. இதை நான் மறுக்கக் கடமைப்பட்டவனா இல்லையா என்பது சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்று, இது பற்றிய எல்லா விளக்கங்களையும், நம்முடைய நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நான் முதலிலே விளக்கம் அளித்துவிட்ட காரணத்தால், மேலும் விளக்கத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.



1989 ஏப்ரல் 5]

திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுக்கு, தன் மீது சொல்லப்படுகிற குற்றச்சாட்டை மறுக்க உரிமையுண்டு. அவர்கள் மறுத்தது இங்கே உள்ள அவைக் குறிப்பிலோ அல்லது பத்திரிகையிலோ வரட்டும். அதே போல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, அவரைப் பற்றி கருத்துக்களைச் சொல்வதற்கு அவர்களுக்கும் உரிமையுண்டு. அந்த உரிமையிலே அவர்கள் கூறி இருக்கிறார்கள். அது வந்ததிலே தவறு இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, இது போன்ற அவதூறுகளைச் சொல்லும் போது, இப்படி வேண்டுமென்றே திட்டமிட்டு அவதூறு சொல்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கின்ற உரிமையும் இந்த அரசுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி.)

[முற்பகல் 10-20]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: துணைத் தலைவர் அவர்களே, ஒரே கட்சியில் ஏ.டி.எம்.கே.யின் உப தலைவர் ஒத்துக்கொள்கிறார்கள். இதற்கு முன்னால் அவர் இல்லாத போது ஒருவர் கட்சியில் மறுக்கிறார். இதில்எது உண்மை எனத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுதான் உண்மை. அவரைப் பற்றி, அவருக்கு இருக்கிற பய உணர்வைப் பற்றி அவர் சொல்லியிருக்கிறார். அவருக்கு அதைச் சொல்ல உரிமையுண்டு என்றுதான் நான் சொன்னேன். அதற்கு அரசு முடிந்தால் அப்படி இருக்கிற சம்பவங்களை, வன்முறை நிகழ்ச்சிகளை ஆராய்ந்து அல்லது அவருடைய உயிருக்குப் பாதுகாப்பு கொடுக்கக் கூடிய அந்த நிலையை எடுக்க வேண்டுமே தவிர, சொன்னதற்கு அவர் மேல் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்வது தவறான ஒரு முன் மாதிரியாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒரு முதலமைச்சரே எதிர்க்கட்சித் தலைவரைக் கொல்ல ஆணையிட்டிருக்கிறார் என்று சொல்வதை மனம் உள்ளவர்கள் யாராவது ஏற்றுக்கொள்கிறீர்களா? என்னைப் புரிந்து கொண்டிருக்கிற யாராவது ஏற்றுக் கொள்கிறீர்களா? தமிழ் உணர்வோடு உங்களை எல்லாம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட ஒரு வன்னெஞ்சம் எனக்கு என்றைக்காவது ஏற்பட முடியுமா என்பதை அண்ணா தி. மு. க. நண்பர்கள் இங்கே பேசுவதற்கு முடியாவிட்டாலும் உள

மாரச் சிந்தித்துப் பார்த்தால் அதுவே போதும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இப்படி அடிக்கடி சொல்வது வழக்கம், நான் முதலிலே சொன்னேன். ஜானகி அம்மையாரே எம். ஜி. ஆரைக் கொன்று விட்டார், மோரில் விஷம் கலந்து என்று சொன்னவர் தானே அவர். அதை எல்லாம் ஏற்றுக் கொண்டு அவரோடு இருந்தவர்களும் உண்டு. எனவே அதை நான் பெரியதாக ஏற்றுக்கொள்ளவில்லை. என்றாலும்கூட, மீண்டும் மீண்டும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதை வற்புறுத்திச் சொல்கின்ற காரணத்தால் ஒரு முதலமைச்சர் மீது இப்படிப்பட்ட ஒரு களங்கம், ஒரு அவதூறு, ஒரு பயங்கரமான குற்றச்சாட்டு வந்த பிறகு, அதைப்பற்றி நடவடிக்கை எடுக்காமல் நிச்சயமாக இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

#### கோவை செல்வபுரம் பகுதியில் தி.மு.க. இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் கே. ரமணி, யூ. கே. வெள்ளிங்கிரி, எம். அப்துல் லத்தீப் ஆகியோர் ''கோவை மாநகரம், செல்வபுரம் ஹவுசிங் யூனிட் பகுதியில் திராவிடக் கழகப் பொதுக் கூட்டம் 3-4-1989 அன்று நடைபெற்று, அக் கூட்டத்தில் கலந்து கொண்டு திரும்பிய திராவிட முன்னேற்றக் கழக இளைஞர்களில் திரு. ஹக்கீம் மற்ற நண்பர்களுடன் வந்த போது, பேரூர் செல்வபுரம் மெயின் ரோடில் ஆர். எஸ். எஸ்.-ஐச் சேர்ந்தவர்களால் தாக்கப்பட்டு உள்ளது குறித்தும் திரு. ஹக்கீம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு.)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : இப்படி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஆபாசத்திற்கு மிஞ்சியது இராமாயணமா அல்லது மகாபாரதமா என்கின்ற நிலையிலே பட்டிமன்றத்திலே உருவானது என்பது குறித்துப் பேசுவதற்கு என்னை முதலில் பேசவிடுங்கள்.



(பார்வையாளர்கள் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.)

### 2. தகவல் கோரல்—(தொடர்ச்சி).

#### (ஈ) பார்வையாளர்கள் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டது குறித்து.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மேலேயிருந்து துண்டு நோட்டீஸ்கள் வீசப்பட்டிருக்கின்றன. வீசப்பட்டுள்ளதில் என்ன உள்ளது என்பதைப் படித்து, இந்த அவைக்குச் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : படித்துக் காண்பிக்கிறேன். தமிழக அரசை எதிர்த்து வீசப்பட்ட நோட்டீஸ் தான் அது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தாள்கள் வீசியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU OSCAR C. NIGLI : Hon. Deputy Speaker, I think if you see the writings that have been thrown, it is high time now that greater amount of security is put for the Chief Minister because we see quite often such things happening. Even recently in Andhra Pradesh, a group of members of the public came and attacked the Assembly. I think it is high time that we think in terms of providing better protection for the Chief Minister. I would request the Government to think in terms of providing security for the Chief Minister.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முக்கியமாக இந்தப் பேரவை முதலமைச்சர் அவர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் தகுந்த பாதுகாப்புக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : அந்தத் தரப்பிலிருந்துதான் வீசப்பட்டிருக்கிறது. அந்தப் பக்கத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அமைச்சர் பெருமக்கள் இருக்கிறார்கள். இந்தப் பக்கம் இல்லாது அந்தப் பக்கத்தில் வீசப்பட்டதற்குப் பொருள் உண்டு. நோட்டீசுக்குப் பதிலாக வேறு ஏதாவது வீசப்படக்கூடிய சூழ்நிலை இங்கே இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட வன்முறை இந்த நாட்டிலே வளர்க்கப்படுகிறது. ஆகவே பாதுகாப்புத் தேவை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

### கோவை செல்வபுரம் பகுதியில் தி.மு.க. இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. கே. ரமணி : அவையில் இருக்கின்ற முதலமைச்சர் அவர்களுக்கும், மற்றுமுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு, தீவிரமாக உடனடி ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று நான் முதலில் வேண்டுகோளாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த கோவை மாநகரத்தில் வசிக்கின்ற ஹக்கீம் என்கின்ற ஒரு முஸ்லீம் இளைஞர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இளைஞர் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர். கோவை மாநகரம் செல்வபுரம் ஹவுசிங் யூனிட்டில், அந்த பிரதேசத்தில் நடைபெற்ற 3 ஆம் தேதி இரவு நடைபெற்ற— பொதுக்கூட்டத்தில் எல்லோரும் போயிருந்து நடந்த அந்தப் பொதுக் கூட்டம் முடிந்து, அந்தப் பொதுக் கூட்டத்திலிருந்து மக்கள் திரும்பி வருகின்ற நேரத்தில் அந்தப் பகுதியிலே செல்வபுரம் வார்டு தாண்டி, மேற்கொண்டு ஜனங்கள் இருக்கும்படியான இடத்திற்கு வருவதற்கான இடையில் இருக்கும் படியான ஒரு இடைவெளியில் கொஞ்ச தூரத்திற்கு எந்தக் குடித்தனமும் இல்லாத இடம். அந்த இடத்திற்குப் பக்கத்திலே ஒரு பெரிய குளம் இருக்கிறது. அதுதான் செல்வ சிந்தாமணிக் குளம் என்று சொல்லக்கூடிய குளம். அந்தக் குளத்திற்கு நேர் எதிர் சைடிலே ஒரு கோவிலும் இருக்கிறது. அந்தக் கோவில் பக்கத்திலே ஒரு பெரிய அரச மரம் உள்ளது. அதனுடைய நிழல் இருப்பதனால் வெளிச்சம் தெரியாத இருட்டு மாதிரியான அந்த இடத்தில்தான் 40, 50 பேர்களுக்கு குறையாத கூட்டம்—எனக்கு வந்திருக்கிற செய்தி—40, 50 பேர்களுக்கு குறையாத கூட்டம் அது. அங்கே ஆர். எஸ். எஸ். ஆட்களைச் சேர்ந்தவர்கள் சிலரை விரட்டிக் கொண்டு வந்து, வகுப்பு வெறியினைக் கிளப்புவதற்காக முயற்சித்தார்கள்.

ஏற்கெனவே கோவை நகரத்திலே இதே மாதிரி தாக்குதல் நடைபெற்றுள்ளது. வகுப்பு வெறியை கிளப்புவதற்காக தூண்ட திட்டம் இட்டு அந்த இடத்திலே (குறுக்கீடு) வகுப்பு வாதத்தைக் கிளப்பக் கூடாது என்பதற்காகத்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே பேசிக் கொண்டிருக்கும்போது எப்படி பாயிண்ட் ஆப் ஆர்டர் வரும்.

ஆகவே, இந்த மாதிரி வகுப்புக் கலவரங்களோ அல்லது அதற்கான தூண்டுதல்களோ சாதாரணமாக நடைபெறாது அமைதியாக இருந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு நகரம் கோவை. ஆனால் இப்படி நடத்தப்பட்ட அந்தக் கலவரங்களில் பலபேர்



தாக்கப்பட்டு அவர்கள் காயமுற்றவர்களாக மருத்துவமனையில் இருக்கிறார்கள். ஹக்கீம் என்ற 18 வயதான அந்த முஸ்லீம் இளைஞர்—அவர் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர். அந்தக் குழுவைச் சேர்ந்தவர்—அவர் அடிபட்டு ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டு அவர் அங்கே உயிர் துறந்தார். இது 3 ஆம் தேதி இரவு நடைபெற்றிருக்கிறது. தொடர்ந்து அங்கே போலீஸ் காவல் மற்ற நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தலைவர் அவர்களே நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம் ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்த படுகொலையைப் பற்றி இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து விரிவாக எப்படி வகுப்புக் கலவரங்கள் தூண்டப்படுகின்றன என்று பேசப்பட்டது.

சகோதரர்களைப் போன்று வாழுகின்ற முஸ்லீம் மக்களும், இந்துக்களும் எந்தவித மத இன வித்தியாசம் இல்லாமல் ஒன்றாக ஒற்றுமையுடன் வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற மக்கள் மத்தியிலே திட்டமிட்டு கலவரத்தை தூண்டுவது என்கிற அந்த முறையிலே நடைபெற்ற சம்பவம் பற்றி இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆர். எஸ். எஸ்.-உடைய இப்படிப்பட்ட கொலை பாதக நடவடிக்கைக்கும், கலவரங்களைத் தூண்டுவதற்கும் ஒரு காலும் இந்த அரசு அனுமதிக்காது அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்று இதே மன்றத்திலே 2, 3 நாட்களுக்கு முன்னாலேதான் வாக்குறுதி அளித்தார்கள். உண்மையாகவே அது நமக்கு ஒரு மனத்திருப்தியை ஏற்படுத்தியது. அது முடிந்த 2 ஆவது நாளைக்கு, அப்படிச் சொன்னதற்காகவே செய்தார்களோ என்னவோ தெரியவில்லை, இப்படி செல்வபுரம் ஹவுசிங் யூனிட்டி அருகில் நடு இரவிலே நடைபெற்றிருக்கிறது.

ஆகவே, இப்பேர்ப்பட்ட வன்முறைகளைத் தூண்டக்கூடிய நடவடிக்கைகளைக் குறைக்க வேண்டுமானால், இந்த வன்முறைகளுக்கு எதிராக தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதோடு மட்டுமல்லாமல் ஒரு குறிப்பிட்ட ஜாதியை சேர்ந்தவர்கள் சில பேரை தண்டிப்பது மட்டுமல்லாமல், இதற்கு வேண்டிய ஒரு தொடர்ச்சியான கவனிப்புடன் பொது ஜனங்களிடையே உஷார் தன்மையும் உருவாக்கப்படவேண்டும். அந்த முறையிலே இது முடிவு கட்டப்பட வேண்டும். அப்படி இல்லாவிட்டால் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற ஒரு அமைதி, எந்தவிதத்திலேயும் இந்து முஸ்லீம்களிடையே கலவரங்கள் இல்லாமல் இருக்கும்படியான ஒரு அமைதிச் சூழ்நிலையை கெடுக்கக்கூடிய ஒரு போக்கு வளரும். அதன் பேரில் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக நாம் விரிவாக விவாதிக்க வேண்டியிருக்கிறது. அதற்காக இந்த அவையினுடைய இன்றைய இதர அலுவல் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

( முற்பகல் 10-30 )

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாழ வேண்டிய ஒரு இளைஞன், 21 வயது கூட நிறைவு பெறாத அந்த இளைஞன் ஒரு குற்றமும் இலலாமல் தெரு வீதியிலே மிக பயங்கரமான முறையில அடித்துக் கொல்லப்பட்டிருக்கின்றான். எனவே அவன் எந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவன் என்பது முக்கியம் அல்ல. அவன் முஸ்லீம் சமுதாயத்தைச் சார்ந்த, ஹக்கீம் என்ற பெயருடைய ஒரு இளைஞன். எனக்குக் கூட மிகத் தொடர்புடைய ஒரு குடும்பத்தைச் சார்ந்தவன். அவனுடைய தந்தை, சகோதரர்கள் எல்லாம் கூட எனக்குத் தெரியும். சாதாரணமாக மிக அமைதியாக இருக்கக்கூடிய அந்தப் பையன், அந்த இளைஞன் இரவு நேரத்திலே வருகிறான், தனியாக வருகிறான் என்ற ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு, பலர் சேர்ந்து கொண்டு அவனை அடித்துக் கொல்வது என்பது, இந்த நாட்டில் இப்பேர்ப்பட்ட கொடுமைகள் நடைபெறுவதற்கு சிலருக்கு வாய்ப்பும், வசதியும் கிடைக்கிறது என்று சொன்னால் அது யாரால் கிடைக்கிறது என்பதை நாம் விரிவாக விவாதம் செய்து இதற்கு ஒரு முடிவு காண வேண்டும். இல்லையென்றால் எது எப்படியும் நடக்கலாம், நாம் நினைத்தால் எதையும் சாதித்து விடலாம் என்று சிலருக்கு எண்ணம் இருப்பதைப்போல், அந்த எண்ணம் அவர்கள் மீண்டும் மீண்டும் பெறுவதற்கு நாம் வாய்ப்பு ஏற்படுத்தித் தந்துவிடுவோம்.

மாண்புமிகு திரு ரமணி அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தெரிவித்த கருத்துக்கு எதிரொலியாக நீங்கள் அப்படிச் சொல்கிறீர்களா நாங்கள் எப்படி நடந்து கொள்கிறோம் பார் என்று கேட்பதைப் போல் சில காரியங்கள் இப்பொழுது நடந்து வருகின்றன. எனவே, இதைக் குறித்து—மன்னிக்க வேண்டும்— எனக்கு தனிப்பட்ட முறையில் எந்தக் கட்சியின் மீதோ அல்லது நபரின் மீதோ காழ்ப்புணர்ச்சி கிடையாது. அவரவர்கள் அவரவர்களுடைய உரிமைப்படி செயல்படட்டும். ஆனால் இந்து முன்னணியினுடைய மாநில பொதுச் செயலாளர், இராம கோபாலன் என்ற பெயருடைய அவர்கள் மிக ஆட்சேபகரமான ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், சட்டம் ஒழுங்கு இவைகளை நிர்வகிக்கக் கூடிய முதலமைச்சர் அவர்களையே, இராம கோபாலன் அவர்கள் இப்பேர்ப்பட்ட கருத்துக்களை நீங்கள் மேற்கொண்டு வெளியிடுவீர்களானால் நடப்பதே வேறுவிதமாக இருக்கும் என்று சொல்லக் கூடிய அளவுக்கு, மரியாதைக்குரிய சகோதரர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையிலே இந்தத் தமிழகம் முழுவதும் சில பேர் சில சூழ்நிலையை உருவாக்க முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக



திராவிடர் முன்னேற்றக் கழகத்தினுடைய ஒரு கூட்டம். தோழர் இராமகிருஷ்ணன் அவர்கள் பேசிய அந்தக் கூட்டம், செல்வபுரம் என்னும் பகுதியிலே நடைபெற்றது. 3-ந்தேதி இரவு. அந்தக் கூட்டத்தில், இந்த இளைஞன் கலந்து கொண்டானா இல்லையா என்ற விவரம் எனக்குத் தெரியாது. ஆனால் அந்த இளைஞன் அந்தப் பகுதியிலே தனியாக வரும்போது பல பேர் சேர்ந்துக் கொண்டு அப்படித் தாக்கி வாழ வேண்டிய இளைஞனை கொன்று இருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த நாட்டிலே இப்பேர்ப்பட்டவர்களால் யாருக்கு என்ன ஆபத்து ஏற்படாது என்பதை என்னைப் போன்றவர்கள் சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். பொதுவாக நாங்கள் சொல்வது எண்ணத்தை எண்ணிக்கை வெற்றி கொண்டதாக உலக வரலாற்றிலேயே எங்கேயும் சான்றுகள் இல்லை. எண்ணிக்கையால் எண்ணத்தை வெற்றிக் கொண்டு விடலாம் என்று சொன்னால் இந்த நாட்டிலே மகாபாரதத்தில் வருகிற குருஷேத்திர யுத்தம் அறிவிக்கின்ற தத்துவமே வேறுவிதமாக இருந்திருக்கும். அந்த யுத்தத்திலேயே சகல தளவாடங்களையும், ஆயுதங்களையும் கொண்டு தன்னுடைய ஆயுதங்களை மட்டுமல்ல கிருஷ்ண பரமாத்மாவினுடைய அத்தனை ஆயுதங்களையும் தான் பெற்றுக்கொண்டு, கிருஷ்ண பரமாத்மா ஆயுதமே எடுக்கக் கூடாது என்ற வாக்குறுதியையும் பெற்றுக்கொண்டு யுத்த களத்திலே நிராயுதபாணியாக, அர்ஜுனனுக்கு பார்த்தசாரதியாக மட்டும் வரக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி மிகப் பெரிய மேதைகளை, வீராதி வீரர்களை எல்லாம் கொண்டிருந்த துரியோதனன், 100 சகோதரர்களைக் கொண்ட துரியோதனன் தோற்றான். 5 சகோதரர்களைக் கொண்ட பாண்டவர்கள் தான் வென்றார்கள். எனவே 5 வென்றது, 100 தோற்றது. எண்ணத்தை எண்ணிக்கை எப்போதுமே வென்றதில்லை. அதுதான் துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் என்பதை கிருஷ்ண பரமாத்மா கீதையிலே மிகத் தெளிவாகச் சொல்கிறார்கள். எந்த மார்க்கத்தை - நான் இஸ்லாம் மார்க்கத்தை காப்பாற்றுகிறேன் என்று சொன்னால் அந்த இஸ்லாம் மார்க்கத்தினுடைய மூல தத்துவத்தை கடைப்பிடித்தால் தான் காப்பாற்ற முடியுமே தவிர நான் கொலை காரனாக இருந்து கொண்டு அதர்மத்தை கட்டவிழ்த்துவிட்டு அநியாயத்தைப் பேணி நடந்து கொண்டால், நான் தான் இஸ்லாத்திற்குத் துரோகம் செய்கிறேனே தவிர வேறு நபர்கள் அல்ல. எனவே, இன்றைக்கு இந்து மார்க்கம் இந்த நாட்டிலே நிலை பெறவேண்டுமென்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. இது இந்து நாடு என்று யாராவது சொல்வார்களானால் அதைச் சொல்லிக்கொள்ளட்டும். அதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் நாங்களும் இங்கே பிறந்தவர்கள். நாங்களும் இந்த நாட்டை உருவாக்கியவர்கள். இந்த நாட்டை ஆண்டவர்கள். நாங்களும் இங்கே வாழக்கூடிய உரிமை பெற்றவர்கள். இந்த நாட்டுப் பிரஜைகள் என்ற முறையிலே எங்களுக்கும் இந்த நாட்டிலே பங்கு உண்டு. உரிமை

உண்டு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தான் நாங்கள் கேட்கிறோமே தவிர, இந்து மதத்தை இப்படி நடைமுறைப் படுத்துவது—நானும் இந்து மதத்தை ஓரளவிற்குப் படித்தவன் தான். இன்னும் சொல்லப் போனால், இஸ்லாத்தை விட அதிக மாக இந்துமதத்தைத் தான் அறிந்தவனாக இருக்கிறேன். நான் கேட்கிறேன் கொலை செய்வது, அப்பாவிகளை அடித்துக் கொல்வது தான் இந்து ராஷ்டிரத்தை ஏற்படுத்துவதற்கு வழி என்று சொன்னால், ஆதி சங்கராச்சாரியாருடைய ஆத்மா இன்றைக்கு எழுந்து கேட்கும். அவர்கள் தெளிவாகச் சொல் கிறார்கள். 'த்ருதி சமா தமனுஷ்டே சௌச்சமிந்திரீய நிக்ரஹ, தீர்வித்யா சத்யம் க்ரோதோஹ தசகம தர்மலட்சணமு' என்று ஆதிசங்கரர் நமக்குச் சொல்கிறாரே, அந்த சத்யம், அந்த அமைதி, மற்றவர்களை மன்னித்தல், மற்றவர்களை ஏற்றுக் கொள்ளுதல், உண்மை நிலையை ஏற்றுக்கொள்ளுதல், பொய் சொல்லாமல் இருப்பது, ஐம்புலன்களையும் கட்டிக் காத்து ஆள்வது—இதுதான் தர்மத்தினுடைய பத்து இலட்சணங்கள் என்று சொல்கிறார்கள்.

இன்றைக்குச் சொல்கிற நம்முடைய திரு. இராமகோபாலன் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த நாட்டினுடைய ஆத்மா, அமைதி, ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி என்று, சாந்தியை நினைவுகூர்ந்து, சாந்தி தான் பகவானுடைய மூலம், பகவா னுடைய ரூபம் என்று ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி என்று சொன் னது மட்டுமல்ல ; அதுவும் நம்முடைய நாட்டைப் பொறுத்த வரை சிவம் என்பவன் அன்பு, அன்புதான் சிவம், அன்பு தான் கடவுள் என்ற முறையிலே ஏற்றுக்கொண்டு செயல்பட்ட மாமேதைகள் வாழ்ந்த நாட்டிலே, மகத்தான தத்துவங்களை உலகத்திற்குத் தந்த நாட்டிலே, ஒரு சிறுபான்மை மக்கள், வாழக் கூடாது என்ற அடிப்படையிலே ஒரு இயக்கம் செயல் படுமேயானால், வன்முறையைத் தூண்டுமேயானால், இத்தகைய வாழவேண்டிய இளைஞர்களைக் கொல்வார்கள் என்று சொன்னால் நான் கேட்கிறேன், சட்டம் தான் உயர்வு, தர்மம் தான் உயர்வு ; அந்த தர்மத்தை எதிர்க்கக்கூடிய சக்தி எதுவாக இருந்தாலும் அதை நாம் நசுக்க வேண்டும், எதிர்க்க வேண்டும், அதனுடைய விளைவுகள் எதுவாக இருந்தாலும் 'துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம்' செய்யக்கூடிய முறையிலே கீதையை ஏற்றுக்கொள்கின்ற ஒவ்வொருவரும் குருக்ஷேத்திரத்தைச் சந்திப்பதற்குத் தயார், அந்தக் குருக்ஷேத்திரத்தை, தர்மத்தை நிலைநாட்டுவதற்கு கிருஷ்ண பரமாத்மா நமக்கு உணர்த்தி யிருக்கிறார்கள். யதாயதாஹி தர்மஸ்ய விதாநிர்பவதி பாரத அப்யுத்தானம் தர்மஸ்யததாத்மானம் சுருஜாம்யஹம் என்கின்ற அந்தக் கிருஷ்ண பரமாத்மாவினுடைய எச்சரிக்கையை மட்டும் இங்கே நான் சொல்லிவிட்டு, தயவுசெய்து இந்தப்பிரச்சினையைப் பற்றி மேற்கொண்டும் விவாதிக்க வேண்டும், முழுமையாக



விவாதிக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சபையினுடைய நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டும் என்று கூறி அமர் கிறேன்.

*திரு. கோ. பூவராகன் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார். (குறுக்கீடு).

திரு. ஓம். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சார், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை விவாதித்துவிட்டு அதற்குப் பிறகு பாயின்ட் ஆப் ஆர்டருக்கு அனுமதி கொடுக்கலாம். (குறுக்கீடு) ஏனென்றால் விவாதத்திற்கு மேலும், மேலும் போகும். நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். திரு. லத்தீப்புக்கும், நமக்கும், பாயின்ட் ஆப் ஆர்டருக்கும் சம்பந்த மில்லை. (குறுக்கீடு). திரு. லத்தீப் என்ன பண்ணினார் என் றால், அவர் சங்கராச்சாரியாருடைய கருத்துக்களைச் சொல்லும் போது, இங்கே காட்டிக் காட்டிச் சொல்கிறார். ஏதோ நான் தான் கொலை.. (சிரிப்பு) (குறுக்கீடு) கொலை நடந்தது எல்லோரும் வருந்தத்தக்கதுதான். நான் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானமானது, வன்முறையைத் தூண்டக்கூடிய பட்டிமன்றம் நடந்திருக்கிறது. பட்டிமன்றம் பற்றி முதலமைச் சர் அவர்களுக்குத் தெரியும், எவ்வளவு தூரத்திற்குக் கொண்டு போய் விடும், எவ்வளவு தூரம் போகும் என்பதைப் பற்றி. இராமாயணத்தையும் மகாபாரதத்தையும்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது பேசிக் கொள்ளலாம். (குறுக்கீடு) உங்களுடைய தீர்மானம் வரும்போது பேசலாம், அமருங்கள். அடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு)

(முற்பகல் 10-40)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவையில் நடைபெற்ற ஒரு வன்முறை நிகழ்ச்சி குறித்து மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சியி னுடைய தலைவர் திரு. ரமணி அவர்களும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய தலைவர் திரு. லத்தீப் அவர்களும் கருத்துக்களை எடுத்துக்கூறி இருக்கின்றார்கள். இருவருடைய கருத்துக்களும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது தமிழ கத்தில் மத, பேத உணர்வுகளின் காரணமாக, வன்முறைகள், வெறியாட்டங்கள் நடைபெறக் கூடாது என்பதை வலியுறுத்து கின்ற வகையிலே தான் அமைந்துள்ளன. இதே மன்றத்திலே திரு. ரமணி அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியதைப் போல, திரு. லத்தீப் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல 2, 3 நாட்களுக்கு முன்புதான் மத வாதத்தின் பெயரால் வன்முறை

களைத் தமிழகத்திலே கட்டவிழ்த்து விட ஒரு சிலர் மேற்கொண்டிருக்கின்ற முயற்சிகளைக் கண்டித்து ஆர்.எஸ்.எஸ். போன்ற இயக்கங்களுக்கு தமிழ்நாட்டிலே இடம் இருக்கக் கூடாது, அவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்ற எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது. அதற்குப்பிறகும் கூட கோவையில் நடைபெற்றிருக்கின்ற இந்த நிகழ்ச்சி நம்முடைய உள்ளத்தையெல்லாம் நோகச் செய்யக் கூடியது, வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று ஆகும்.

எனக்குத் தரப்பட்டுள்ள அதிகாரிகளுடைய செய்தியின்படி 3-4-1989 அன்று இரவு 8 மணி முதல் 10¾ மணி வரையில் கோவை நகர்ப்புற மாவட்டம் பேரூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட செல்வபுரம் தெற்கு அண்ணா திடலில் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் சரவணன் என்ற நண்பருடைய தலைமையில் நடைபெற்றிருக்கிறது. அந்தப் பொதுக் கூட்டத்தில் கோவை கு. ராமகிருஷ்ணன், ஆறுமுகம் ஆகியோர் பேசியிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி உறுப்பினர் சுலைமானும் பங்கு கொண்டார் என்று செய்தி அறிவிக்கிறது. அந்தக் கூட்டத்திற்கு காவல் துறையைச் சேர்ந்த ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர்; ஒரு தலைமை காவலர், 30 காவலர்கள் பாதுகாப்புப் பணியிலே நியமிக்கப்பட்டு இருந்தார்கள். கூட்டம் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இரவு 10¾ மணி அளவில் முடிந்தது. கூட்டம் முடிந்து சுலைமான், அக்கீம், காஜா என்கிற ராஜா ஆகியோர் கோவை நகரத்தில் உள்ள வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார்கள். கோவை—பேரூர் சாலையிலே செல்வபுரம் கருப்பசாமி கோவில் அருகே அவர்கள் வந்து கொண்டிருந்தபோது இரவு சுமார் 11 மணி அளவிலே கோவை நகர இந்து முன்னணி அமைப்பாளர் கோவை சாயிபாபா காலனியிலே தினசரி மார்க்கெட்டில் காய்கறி வியாபாரம் செய்பவரான இராம நாராயணன், கோவை மேற்குப் பகுதியின் இந்து முன்னணி அமைப்பாளர் வீர கணேஷ்; கோவை மாவட்ட இந்து முன்னணிச் செயலாளரும் தியாகி குமரன் மார்க்கெட்டில் காய்கறி கமிஷன் மண்டி வைத்து இருப்பவருமான மூகாம்பிகை மணி; கோவை மாவட்ட இந்து முன்னணிப் பொருளாளர் பரமசிவம் மற்றும் கோவை தெற்கு வட்டார இந்து முன்னணி பிரச்சாரக் குழுத் தலைவர் சம்பத் ஆகியோர், பக்கத்திலுள்ள குளத்துப் பக்கம் மறைந்திருந்து சுலைமானையும், காஜா என்கின்ற ராஜாவையும், அக்கீமையும் வழிமறித்துள்ளார்கள் என்றும் இராமநாராயணன் கையில் கத்தியும், வீர கணேஷ் கையில் அரிவாளும் வைத்து இருந்தார்கள் என்றும் மூகாம்பிகை மணி என்பவர் 'குத்திக் கொல்லுங்கடா' என்று சொல்லிக்கொண்டே மேற்படி சுலைமானுடன் இருந்த அக்கீமை மூகாம்பிகை மணியும் பரமசிவமும் பிடித்துக் கொண்டதாகவும் இராமநாராயணன் தன் கையில் வைத்து இருந்த கத்தியால் ஓங்கி அக்கீமின் உடலில் பலயிடங்



களில் குத்தியுள்ளார் என்றும் மேலே சொன்ன வீர கணேஷ் அப்போது அங்கே வந்த கணேசன் என்பவரை தன் கையில் உள்ள அரிவாளால் வெட்டியுள்ளார் என்றும் காஜா என்கின்ற ராஜா என்பவரை இராமநாராயணன் கத்தியால் குத்தியுள்ளார் என்றும் பிறகு எதிரி சம்பத் 'ஓம் காளி, ஜெய் காளி' என்று சொல்லிக் கொண்டே காஜா என்கின்ற ராஜாவையும், சுலைமானையும் கல்லால் அடித்தார் என்றும் அதன்பிறகு எதிரிகள் சம்பவம் நடந்த இடத்தை விட்டு ஓடிவிட்டார்கள் என்றும் போலீஸ் தரப்பில் தகவல் தரப்பட்டுள்ளது. குத்தப்பட்டுள்ள அக்கீம் சம்பவம் நடந்த இடத்திலேயே மாண்டு போனார். சுலைமான் கொடுத்த புகாரின் பேரில் பி.1 காவல்நிலைய குற்ற எண் 410/89 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 147, 148, 336, 307 மற்றும் 302 பிரிவில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. காயம் பட்ட காஜா என்கின்ற ராஜாவும் கணேஷும் மருத்துவ சிகிச்சைக்காக கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலே உள்ளிருப்பு நோயாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இருவரின் உயிருக்கும் ஆபத்து இல்லை என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள். அந்தப் பகுதி முழுவதும் காவல் துறையால் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கிலே கண்ட எதிரிகள் மூகாம்பிகை மணி, பரமசிவம், சம்பத் ஆகியோர் 4—4—89 அன்று, பகல் 12½ மணி அளவில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தடுப்பு நடவடிக்கைக்காக மேலும் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். நகரின் எல்லாப் பகுதிகளிலும் தக்க பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது பதட்டநிலை எதுவும் இல்லை. இனியும் பதட்ட நிலை ஏற்படாமல், கோவையிலே மாத்திரமல்ல, தமிழகம் முழுவதும் இதுபோன்ற மத பேத சண்டைகள் எழாமல் காப்பாற்றுகின்ற அந்தப் பொறுப்பு, தமிழ்நாட்டிலே அமைதியைக் கட்டிக் காக்க வேண்டும் என்கின்ற எண்ணம் உள்ள அனைவருக்கும் தேவை என்பதையும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக நான் வேண்டுகோளாக விடுத்து, இதுபோன்ற வன்முறைச் சம்பவங்களில் தக்க நடவடிக்கை, உரிய நடவடிக்கை, தயவு தாட்சண்யமின்றி எடுக்கப்படும் என்பதையும் எடுத்துக் கூறி, எனவே இதனை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதை, தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து— தொடர்ச்சி.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரே ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். ஒரு நாளில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்தான் எடுத்துக்கொள்ளப்படும் என்று நீங்கள் சொன்னதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அவர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், இவருடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் எடுத்து இருக்கிறீர்கள். மூன்றாவதாக என்னுடையது மட்டும் எடுத்துக்கொள்வது வழக்கத்திற்கு உள்ளாகாதா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ரமணி மற்றும் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இருவருமே ஒரே பொருள் குறித்துத்தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். தனித் தனியாகக் கொடுக்கவில்லை. ஒரே சம்பவத்தைப் பொறுத்துத்தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் கண்ட நிகழ்ச்சி நடந்ததற்கு என்ன காரணம் என்பதைக் குறித்துத்தான் நானும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அவர்கள் விவரம் பூராவும் கொடுத்து விட்டார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமும் கொடுத்து விட்டார்கள். இப்போது நான் எதைச் சொல்வது ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படும் நேரத்திலே உங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம். மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கம் போதுமானது. உங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது பேசிக்கொள்ளலாம்.

## 4. உரிமைப் பிரச்சினை

### 'தினகரன்' நாளிதழ் மீது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் 'தினகரன்' நாளிதழ் மீது ஓர் உரிமை மீறல் பிரச்சினை குறித்த அறிவிப்பைக் கொடுத்து இருக்கிறார்கள். அது எவ்வாறு உரிமை மீறிய பிரச்சினை



யாகும் என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, 29–3–1989 அன்று சட்டமன்றத்தில் நடந்த விவாதங்களில், பேரவைத் தலைவர் அவர்களால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட செய்தியை வேறு பத்திரிகைகளில் வெளியிடாதபோது, ''தினகரன்'' வெளியிட்டது நான் இங்கே உங்களிடம் உரிமை மீறல் பிரச்சினை கொடுத்து இருந்தேன். அது இன்று அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. அது சம்பந்தமான காரணங்களை நீங்கள் சொன்னதுபோலவே, விளக்குவதற்கு இங்கே எனக்கு அனுமதி கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவையில் பேசப்படுவதை, தவறாக, ரிப்போர்ட் செய்வதோ, திருத்தி வெளியிடுவதோ கூடாது என்பது விதி. Misreporting or misrepresenting the speech of a Member விதி மீறல் குற்றத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் என்பதனை இங்கே இருக்கின்ற அனைவரும் அறிவோம். அது மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. I quote, ''Parliamentary Privileges and the Press'' மீண்டும் தலைப்பைச் சொல்கிறேன். ''Parliamentary Privileges and the Press'' இதை வெளியிட்டவர்கள், Indian Law Institute and Press Council of India. இதிலே ''Misreporting and misrepresenting the speech of a Member of the House and incorrect or misleading publication, by a newspaper, of a speech of a Member in the House amounts to a breach of Legislative privilege. This is now a very well-established privilege.'' என்று இருக்கிறது. இது 80-வது பக்கத்திலே, ''Parliamentary Privileges and the Press'' என்ற புத்தகத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு நேர்மாறாக, இங்கே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதனை, தினமணி, எக்ஸ்பிரஸ், ஹிந்து போன்ற பத்திரிகைகள் வெளியிட்டதற்கும், தினத்தந்தி பேப்பர் வெளியிட்டதற்கும், நமது அருமைக்குரிய அமைச்சர் பெருமகன் திரு. கே. பி. கந்தசாமி அவர்களை நிறுவனராகக் கொண்ட 'தினகரன்' வெளியிட்டதற்கும் உள்ள வேறுபாட்டை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

*(முற்பகல் 10-50)*

முதலிலே திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே ஒரு தன்னிலை விளக்கம் கொடுத்தார்கள். அதற்கு உடனே திருமதி பொன்னம்மாள் சொன்னது என்னவென்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அத்தனை மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் பொறுப்பில் உள்ளவர்கள். நேற்று சட்டசபையில் அவர்கள் சொன்ன பதிலைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். நடந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். பெண்களுக்குப் பாதுகாப்பு வேண்டாமா ? என்று சொன்னார்கள்.

திரு. திருநாவுக்கரசு அடுத்து சொன்னது இங்கே வருகிறது. அடுத்து பொன்னம்மாள் அவர்கள் சொன்னது, இங்கே நடைபெற்ற சம்பவத்தைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன் என்பதாகும். அதிர்ச்சி அடைந்தேன் என்பதோடு அன்பிற்குரிய அமைச்சர் அவர்கள் சொன்னதை அவர்கள் மறுத்தும் பேசினார்கள். மறுத்துப் பேசியதற்குப் பின்னால் எப்படியெல்லாம், சொல்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். என் கண்ணால் அந்த சம்பவத்தைப் பார்த்தேனே ! என் கண் பார்த்தது பொய்யா என்று திருமதி ரமணி நல்லதம்பி உட்பட— அவர்கள் பெண் உறுப்பினர்—சொல்கிறார்கள்.

அதற்கு முந்தைய நாள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதற்கும் மறுநாள் நமது அருமைக்குரிய அமைச்சர் துரைமுருகன் பேசியதற்கும்—ஆனாலும் இதே கருத்தை தினகரன் எப்படி வெளியிட்டிருக்கிறது என்றால் திருமதி பொன்னம்மாள் (காங்கிரஸ்) அமைச்சர் சொல்வதை நாங்களும் நம்புகிறோம். நான் அதிர்ச்சி அடைந்தேன் என்று திருமதி பொன்னம்மாள் சொன்னதை இங்கே திருமதி பொன்னம்மாள் சொன்னதாக இப்படி வெளியிட்டிருப்பது Mis-rep›r ing, Mis-represen ing and misleading அமைச்சர் சொன்னதை நாங்களும் நம்புகிறோம். அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தோம் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

அடுத்து ஒரு செய்தியைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் அதிகமாக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை ; சுருக்கமாகச் சொல்கிறேன். அடுத்தபடியாக கல்வி அமைச்சர் அவர்கள் இருக்கும் இடத்தை அடிப்படையாக வைத்து, எதிர்க்கட்சித் தலைவரும் மூப்பனாரும் அருகாமையிலே இருப்பதை வைத்துக் கொண்டு, எதிர் எதிரே இருப்பதை வைத்துக்கொண்டு, ஒன்றைப் பேசினார்கள். அவர்களுடைய பேச்சின் மூலமாக இருப்பது எது என்றால் இருப்பிடத்தினுடைய அண்மைத் தன்மை, சமீபத் தன்மை. எனவே இடத்தில் நெருங்கிய தூரமே உண்மைக்கு ஊன்றுகோல் ஆகுமானால் நான் இருக்கின்ற இடமும் அருகாமையிலே தான் இருந்தது என்பதற்காக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திருநாவுக்கரசு, பொன்னம்மாள் ஆகியோர் அவையில் கூறியதை நான் திருப்பிக் கூறினேன். ஆகவே, இருக்கின்ற இடத்தின் அண்மைத் தன்மையை வைத்து உண்மைக்கு ஊன்றுகோல் தேடுவதாக நான் கருதுகிற காரணத்தாலே அதே அண்மைத் தன்மை எனக்கும் இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்களும் திருமதி பொன்னம்மாள் அவர்களும் சொன்னதை நான் இங்கே சொன்னேன்.

[illegible] * * * *

[illegible] அவைக் குறிப்பிலிருந்து [illegible]

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன [illegible]





நீக்கப்பட்டன என்று இங்கே அவைத்தலைவர் அறிவித்ததை நீங்கள் அறிவீர்கள். * * * * *

நான் சற்று ஆவேசப்பட்டு பேசிக்கொண்டிருந்தேன் என்பதை எல்லா பத்திரிகைகளும் வெளியிட்டிருக்கின்றன. காரணம் என்னவென்றால் நான் இந்தப் பத்திரிகையைப் பற்றிச் சொல்லுகின்றபோது நான் எந்தப் பத்திரிகைக்கும் விரோதி இல்லை எந்தப் பத்திரிகையையும் குறிப்பாகத் தாக்கவேண்டுமென்று எனக்கு நோக்கம் இல்லை. ஏனென்றால் ஒவ்வொரு பத்திரிகையும் ஒருகாலத்திலே ஒருவரைப் பாராட்டிக்கூட எழுதியிருப்பார்கள் ; செய்திகளைக்கூடப் போட்டிருப்பார்கள்.

நான் ஒன்றும் தீயது என்று சொல்லவில்லை ; தீயத் தன்மையைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். * * *

நான் சற்று ஆவேசப்பட்டு கூறியிருந்தது என்னவென்றால் இங்கே இராமாயணம் எல்லாம் பேசப்பட்ட காரணத்தாலே சொல்கிறேன். காட்டிலே தம்பியோடு போய்க்கொண்டிருந்த இராமன் தண்ணீர் குடிக்க வேண்டுமென்று குளக்கரையிலே அம்பை குத்தி ஊன்றி வைத்துவிட்டு, தண்ணீர் குடித்துவிட்டு மீண்டும் அம்பை எடுக்கின்ற போது இரத்தம் சொட்டச் சொட்ட ஒரு தவளை இருந்ததைப் பார்த்து என் அம்பு உன்னைத் தொடுகிற நேரத்திலே, குத்துகிற நேரத்திலே நீ சத்தமிட்டிருக்கலாமே என்று சொல்லுகின்ற போது, மற்றவர்கள் எனக்குத் துன்பம் இழைத்தால் இராமா! நீ காப்பாற்றுவாய் என்று உன்னிடம் முறையிடலாம். ஆனால் உன்னுடைய அம்பே குத்தும்போது நான் என்ன செய்வது என்று திகைத்துப்போய் இருந்தேன் என்று சொன்னதைப்போலே மற்றவர்கள் என்னைக் குறை சொல்கிற நேரத்திலேயும் எனக்குத் துன்பம் இழைக்கின்றபோதும் பாதுகாப்பும் ஆறுதல் வார்த்தையும் தரவேண்டிய நிலையில் இருக்கிற முதலமைச்சர் இப்படிச் சொல்லிவிட்ட காரணத்தாலே நான் சற்று உணர்ச்சி வசப்பட்டவனாக இருந்தேன் என்பது உங்களுக்குத் தெரியும்.

அதற்குப் பிறகு ஒன்றுக்கொன்று சமாதானங்கள் பேசப்பட்டன என்பதை நீங்கள் அறிவீர்கள். இவைகள் எல்லாம் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்பட்டதற்குப் பின்னால்கூட தினகரன் பத்திரிகை அதை வெளியிடுகிறது. இங்கே நான் எல்லாப் பத்திரிகைகளையும் கையிலே வைத்து இருப்பதற்குக் காரணம் மற்ற பத்திரிகைகள் வெளியிடாததை எல்லாம் அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள். அவர்கள் ஒரு வார்த்தை சொல்லக்கூடும். இங்கே சில நிருபர்களைப் பார்த்து அவைத் தலைவர் அவர்கள் தமது அறையிலே இவைகள் எல்லாம் வேண்டாம் என்று சொன்னார்கள். அதற்கிடையில் பத்திரிகைகளுக்குச்

---

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செய்தி போய்விட்டது என்று சொன்னர்கள். முதலிலே மாலைப் பத்திரிகைளிலே அல்லவா வரக்கூடாத செய்திகள் எல்லாம் வந்திருக்க வேண்டும். மாலை தாண்டி, இரவு தாண்டி, காலையிலே வருகிற தினகரன் பத்திரிகையிலே இந்தச் செய்தி மூன்று காலத் தலைப்பிட்டு என்னுடைய பெயரையும் சொல்லி வெளி வருகிறது. அங்கே முதலிலே தலைப்பிலே என்னுடைய பெயர் வருகிறது—இவைகளைப் படிப்பதிலே தவறு இல்லை. ஒருவேளை அதில் ஏதாவது ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டும் வரவேண்டாம் என்று நீங்கள் விரும்பினால் அதை நீங்கள் நீக்கிவிடலாம். வாதத்திற்காக அவைகளை நான் இங்கே வைக்கிறேன்.

இதிலே என்ன செய்தியை அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்றால்—கேள்விக் குறி போட்டு ஒரு செய்தியை வெளியிட்ட காரணத்தாலே அந்தச் செய்தியினுடைய அழுத்தத்தைக் குறைத்துவிடாது. தலைப்பிலே என்னுடைய பெயர் வந்துள்ளது. அந்தச் செய்தியினுடைய இரண்டாவது வரியிலே மீண்டும் என்னுடைய பெயர் வந்துள்ளது. மீண்டும் உள்ளே உள்ள தலைப்பில் என்னுடைய பெயர் வந்துள்ளது. மீண்டும் அடுத்த பத்தியில் என்னுடைய பெயர் வந்துள்ளது. இப்படி என்னுடைய பெயர் மீண்டும், மீண்டும் வரவேண்டும் என்று சொல்கிற அளவிற்கு அவர்கள்—உங்கள் அனுமதியோடு இந்தப்பத்திரிகையை நான் படிக்கிறேன். இப்படி ஒரு தலைப்புப் போட்டு * * * என்று வந்திருக்கிறது. இதை எல்லாம் நான் இங்கே சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை என்று கருதுகிறேன். சிலவற்றை நீங்கள் நீக்குவீர்கள் என்று எனக்குத் தெரியும். நானே அவற்றை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் சம்மதமும் அதற்கு இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் "ஜெயலலிதா அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த 8, 10 பேர் சூழ்ந்துகொண்டு ஒருபுறம், மறுபுறம் திரு. மூப்பனார் இருந்தார் என்றும் அதில் யார் என்ன செய்தார்கள் என்பதைச் சொல்ல முடியாது." என்று வந்திருக்கிறது. இது நியாயம்தானா? ஒரு பெண்மணி எதிர்க் கட்சித்தலைவராக இருக்கிறார். ** **

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே வந்திருக்கின்ற செய்திகளில் இந்த அவையிலே எவை, எவை நீக்கப்பட்டனவோ அவை இடம் பெற்றிருக்கின்றன என்று மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் சுட்டிக்காட்டுவதில் மறுப்பு

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



இல்லை. எவை எவை வந்திருக்கின்றன என்பதைப் பொறுத்த வரையில் அவைத் தலைவர் அவர்களுடைய சட்டசபைக் குறிப்பிலே நீக்கப்பட்ட பகுதிகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தால், இவைகளை ஒப்பிட்டுப் பார்த்து முடிவு செய்து கொள்ளலாம். ஆனால் உரிமைக் குழுவிற்கு இதை விட வேண்டும் என்று கேட்கிற வாதத்தில் இடையிலே இடம் பெறுகிற செய்திகள் மூலமாக, இந்த அவையிலே ஏற்கெனவே நீக்கப்பட்ட செய்திகள், தொடர்பான கருத்துக்கள் மறுபடியும் இந்த அவையிலே இடம் பெற்றுவிடக்கூடிய ஒரு குறை ஏற்படுகிறது.

அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களே அறிந்து இடையிலே குறிப்பிடுகிறார், நீக்க வேண்டுமென்று. அவர்களுடைய நல்லெண்ணத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் எடுத்துச் சொல்கிற முறையிலே ஏற்படுகிற இடர்ப்பாட்டை நான் நினைவூட்டுகிறேன். எனவே உரிமைப் பிரச்சினையாக எடுத்து வைத்து அது ஆராயப்பட வேண்டும் என்ற கருத்தளவில் சொல்லப்பட்டதுதான் ஏற்புடையது என்பதைத் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கெனவே இதுகுறித்து நீக்கப்பட்ட சங்கதிகளை மாண்புமிகு உறுப்பினர் படித்துக் காட்டினார்கள். அவற்றை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கவேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். தேவையில்லாமல் அந்த வார்த்தைகள் வர வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனால் வந்து விட்டதே, என்ன செய்யப் போகிறீர்கள்? அதுதானே உரிமை மீறல் பிரச்சினையாக வருகிறது. அது வரவேண்டாம் என்பதுதான் நோக்கமாக இருந்தது. ஆனால் வந்து விட்டது. வந்து விட்டதன் காரணத்தாலேதான் நான் இங்கே சொல்லி, இது 'ப்ரீச் ஆப் ப்ரிவிலேஜ்' என்பது மட்டுமல்ல ; அந்த 'சீரியஸ்னஸ்' எந்த அளவிற்கு இருக்கிறது. இன்னின்ன காரணங்களால் இதனை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்பதற்கான வாதங்களைத்தான் நான் வைத்துக் கொண்டு இருக்கிறேன்.

உதாரணமாக எடுத்துக்கொண்டால், Parliamentary Privileges and the Press, in Paragraph 89, In the Search Light case the Supreme Court held that the Publication by a Newspaper of a portion of a Member's speech in the House which the Hon. Speaker has ordered to be expunged, amounts to the breath of privilege of the House, for which the House can take action against the offending party. இது ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருக்கிற தீர்ப்புகள் The effect in law of the order of the Speaker to expunge a portion of the speech of a Member may be as if that portion had not been spoken

(முற்பகல் 11–00)

என்று இருக்கிறது. இது இத்தனை அளவுக்கு ஆழமாக இந்தப் புத்தகத்தில் வந்திருக்கிறது என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான் நான் சொன்னேன். இதில் உரிமை மீறல் இருக்கிறது என்பதோடு அதனுடைய ஆழமும், அதனுடைய அழுத்தமும் தெளிவாக இருக்கிறது என்று சொன்னால், நீங்கள் அதைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. எப்படி St. Francis of Assissi அவர்கள் இருந்தார்களோ அப்படி இருக்கவேண்டும்.

ஒரு காலத்திலே அவரைப்பற்றி அவருடைய தோழர்கள் புகழ்ந்து சொன்னால், சற்று நேரம் அமர்ந்து கொண்டு இருந்து, 'செய்த தவறுகளையும், குறைகளையும் நீங்கள் சொல்லுங்கள். அப்போதுதான் நான் நிதானம் அடைவேன்' என்று சொல்வாராம். அதேபோல இங்கே எந்த ஒரு பத்திரிகையைப் பற்றி சொன்னோம் என்றாலும் அவர்கள் ஒரு காலத்திலேயும் சரி, பலப்பல காலங்களிலேயும் சரி, எந்த வகையிலேயும் நல்லனவற்றை எடுத்துரைத்து இருக்கிறார்கள் என்பதையும் நினைத்துப் பார்ப்பவன் நான்.

எனவே இந்தக் குறை எந்த அளவுக்கு மக்கள் மத்தியிலே ஒரு கறையை ஏற்படுத்திவிடும், என்னைப் போன்றவர்களுக்கு பாதகத்தை ஏற்படுத்திவிடும், எங்கள் தலைவர் மூப்பனார் அவர்களுக்குப் பாதகத்தைப் ஏற்படுத்திவிடும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குப் பாதகத்தை ஏற்படுத்திவிடும், ஜனநாயகத்திற்கு பாதகத்தை ஏற்படுத்திவிடும் என்பதற்காகத் தான் ஒரு ஆழமான செய்தியினைச் சொல்ல விரும்புகிறேன்.

Breach of privilege என்பதை நான் சொல்வதற்கு உரிமை பெற்றவனாக இல்லை. என்றாலும் ரகசியமாக நடந்து கொண்டிருந்த ஒரு பாராளுமன்றக் கூட்டத்தினுடைய செய்தியினை வெளியிட்ட காரணத்திற்காக, அந்தச் செய்தியை கொடுத்தது யார் என்று கண்டுபிடித்து அவர் அங்கே உறுப்பினராக இருந்த காரணத்தினாலே, உறுப்பினர் பதவியிலே இருந்து அவர் நீக்கப்பட்டார். ஆனால் நான் சொல்லக் கூடிய பத்திரிகை நிறுவனர் இங்கே அமைச்சர் பெருமகனாக இருக்கிறார். இருந்து கொண்டு இருக்கிறார். இந்த சூழ்நிலையில் என்ன தண்டனை என்று சொல்கின்ற உரிமை எனக்கு இல்லை. நான் அந்த தண்டனையைக் கொடுக்க வேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால் உரிமை மீறல் என்பது நிச்சயமாக நடைபெற்றிருக்கிறது என்பதோடு அது தினகரன் பத்திரிகையில் முதல் உரிமை மீறல் அல்ல, 'ஹேபிட்சுவல் அஃபண்டர்' என்பது போல ஏற்கெனவே உரிமை மீறல் நடந்திருக்கிறது என்பதனை இந்தப் புத்தகத்தினுடைய 35 வது தொகுப்பும் வெளியிடுகிறது. ஆதலாலே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது குறித்து தினகரன் ஆசிரியர் அவர்களிடம் விளக்கம் பெற்று, அதன் பின்னர் என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

திரு. இரா. மோகன் : ** **

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்து அது எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதிக்க வேண்டும் என்பதுதான் மரபு. ஒரு உரிமைப் பிரச்சினை குறித்து விவாதிக்கப்படுகின்ற நேரத்திலே 'நான் கொடுத்த உரிமைப் பிரச்சினை என்னவாயிற்று ?' என்று கேட்டார்கள். அதிலே விளையாடுவது நல்லதில்லை. எனவே திரு. இரா.மோகன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை அவைக் குறிப்பிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர் இரா. மோகன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

## 5. கவன ஈர்ப்பு.

கோவை வசந்தா மில், ஜனார்த்தனா மில் மற்றும் திருப்பூர் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர் கே. ரமணி அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவருக்குப் பதிலாக திருவாளர் சி. கோவிந்தசாமி அவர்கள் அதை செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் உட

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

னடி நிவாரணமாக ரூ. 250 வீதம் கொடுக்க 1–3–1989 அரசு உத்தரவில் கோவை வசந்தாமில், ஜனார்த்தனாமில், திருப்பூரில் உள்ள தமிழ்நாடு ஸ்பின்னிங் மில் தொழிலாளர்கள் சேர்க்கப் படாமல் விடுபட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

## அறிக்கை

1983 ஆம் ஆண்டு திருப்பூர் ராமலிங்க சூடாம்பிகை மில்ஸ் லிமிடெட் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 500 வீதம் நிதி உதவி வழங்கப்பட்டது.

1984 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிட்டுள்ள மூடப்பட்ட ஆலைகளின் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவா ரண நிதியிலிருந்து தலா ரூ. 200 வீதம் வழங்கப்பட்டது :

1. பத்மா மில்ஸ், கோயம்புத்தூர்—110 பேர்.

2. தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், திருப்பூர்—250 பேர்.

3. ஜனார்த்தனா மில்ஸ், கோயம்புத்தூர்—659 பேர்.

1985 ஆம் ஆண்டு கீழ்க்காணும் ஆலைகளின் தொழி லாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 200 வீதம் வழங்கப்பட்டது :

1. ஸ்ரீஹரி மில்ஸ், கோயம்புத்தூர்—657 பேர்.

2. இந்தியா போர்ஜ் ஆண்டு டிராப் ஸ்டாம்பிங் எக்குப் மெண்ட்ஸ், சென்னை—498 பேர்.

3. வசந்தா மில்ஸ், கோயம்புத்தூர்—1,351 பேர்.



இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர்—400 பேர்

மினி சிமெண்ட் பேக்டரி, மதுவத்தூர், திருச்சி மாவட் டம்—72 பேர்.

இதன்பின் மூடப்பட்ட துணி ஆலைகள் மற்றும் பொறி யியல் நிறுவனங்களைச்சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் தொழிற் சங்கங்களிடமிருந்து முதலமைச்சர் பொது நிவாரண நிதியி லிருந்து நிதிஉதவி கோரி பல விண்ணப்பங்கள் வந்தன. தனித் தனியான இந்த விண்ணப்பங்களை ஆய்ந்தபோது இதற்கு முந்திய அரசு கீழ்க்கண்டவாறு முடிவு எடுத்தது :

''மூடுதலின் காரணத்தினாலோ அல்லது கதவடைப்பு செய்த காரணத்தினாலோ இயங்காமல் இருக்கும் தனியார் நிறு வனங்களின் சுமையை அரசு ஏற்கத் தேவையில்லை. இதற்காக அரசு எந்த பொறுப்பும் எடுக்க வேண்டியது இல்லை. மேலும் இம்மாதிரியான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக முதலமைச்சர் பொது நிவாரணநிதி ஏற்படுத்தப் படவில்லை ''.

'' முதலமைச்சர் நிவாரண நிதியை எந்தெந்த இனங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதற்கு வழி முறை வகுக்கப்பட்டிருக்கிறது. ஆலைகள் மூடப்படுவதால் பாதிக் கப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் அளிக்க விதிமுறைகளில் இடம் இல்லை. முன்பு சில ஆலைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனி நேர்வாக கருதி நிவா ரணம் அளிக்கப்பட்டதை அடிப்படையாகவும், எடுத்துக் காட் டாகவும் வைத்துக் கொண்டு இப்பொழுது தமிழ்நாட்டில் அரசுக்கு எவ்வித தொடர்பும் இல்லாமல் மூடப்பட்டு கிடக்கும் நிறு வனங்களில் பாதிக்கப்பட்டுள்ள ஊழியர் அனைவருக்கும் முத லமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தொகை அளிக்க வேண்டும். என்ற கோரிக்கைகள் அடிக்கடி தொடர்ந்து வந்த வண்ணம் இருக்கின்றன. இப்படி கொடுத்துக் கொண்டே போனால் முத லமைச்சர் நிவாரண நிதி முழுவதும் கரைந்துவிடும். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பது நலம் பயக்கும்.'' '' இனி இப்படி வரும் கோரிக்கைகளை முதற் கட்டத்திலேயே நிராகரித்து விட லாம் ''.

இக்காரணங்களால் மூடப்பட்ட பல துணி ஆலைகள் மற்றும் தொழில் நிறுவனத் தொழிலாளர்களுக்கு 1986-ஆம் ஆண்டுக்குப் பிறகு நிதி உதவி வழங்கப்படவில்லை. மூடிய துணி ஆலைகளையும் தொழில் நிறுவனங்களையும் மீண்டும் திறந்து இயக்க நடவடிக்கை எடுக்கும் என்ற கொள்கையை இவ்வரசு

அறிவித்துள்ளது. இம்மாதிரியான தனிப்பட்ட நிறுவனங்களின் பிரச்சினைகளை தீவிரமாக பரிசீலித்து வருகிறது. அதே சமயம் மூடப்பட்ட துணி ஆலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்றும் இவ்வரசு உணர்ந்தது. அதன்படி பாதிக்கப்பட்ட சுமார் 12,000 தொழிலாளர்கள் பயன் அடையுமாறு ஒவ்வொரு தொழிலாளிக்கும் தலா ரூ. 250 வீதம் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியிலிருந்து ரூ. 30 இலட்சம் வரை வழங்க அரசு உத்திர விட்டுள்ளது.

8. இவ்வாறு நிதி உதவி வழங்கும் பொருட்டு மூடப்பட்ட துணி ஆலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பட்டியலை ஆய்ந்து இதுவரை ஒருமுறைகூட நிதி உதவி பெறாத தொழிலாளர்களுக்கு மட்டும் நிதி உதவி வழங்கலாம் என அரசு முடிவு செய்தது. கோயம்புத்தூர் வசந்தா மில்ஸ் மற்றும் ஜனார்த்தனா மில்ஸ் மற்றும் திருப்பூர் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் ஆகிய ஆலைகளின் தொழிலாளர்களுக்கு முன்பே நிதி உதவி வழங்கிவிட்டபடியால், தற்போது நிதிஉதவி வழங்க அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. சம்பந்தப்பட்ட இந்த 3 மில்களும் நீண்ட நாட்களாக மூடிக்கிடக்கின்ற காரணத்தினாலே உதவித் தொகை வழங்கி 4, 5 ஆண்டுகளுக்கு மேலாகியிருக்கின்ற காரணத்தினால் இந்தத் தொழிலாளர்கள் மிகவும் கடுமையான பட்டினியில் இருக்கின்றார்கள். அந்தக் காரணத்தினாலே அரசு மீண்டும் அதைப் பரிசீலித்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வழங்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்க முடியாத நிலை இருக்கிறது. எந்த உதவியும் பெறாத நிலையிலே உள்ள தொழிலாளர்களுக்குத்தான் முதலமைச்சரின் ஆணையின்படி இந்த நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே பிரத்தியேகமான முக்கியமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்கள் ஏதாவது இருந்தாலொழிய. இந்த நிலையில் அரசு. அந்த 3 மில்களின் தொழிலாளர்களுக்கும் உதவித் தொகை வழங்குவதற்கான காரணம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**6. அவையில் நடைபெற்ற முன்னைய நிகழ்ச்சிகள் குறித்த பிரச்சினை 1989 ஏப்ரல் 5]**

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் தொடர்ந்து இந்த மன்றத்தில் வலியுறுத்தி வருகிற பிரச்சினையை இன்றைக்கும் எழுப்பி, சட்டமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் நடைபெற்ற வன்முறைகளைக் கண்டிப்பது, அதற்கு பொறுப்பேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ராஜிநாமா செய்ய வேண்டும் என்கிற (குறுக்கீடுகள்) இப்படி சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஓர் உறுப்பினர் உத்திரவிடலாமா ? அவரே தீர்ப்பு சொல்லலாமா ? ஆக, நாங்கள், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் வலியுறுத்தப்படுகிற அந்தக் கருத்தை—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ராஜிநாமா செய்ய வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி நாங்கள் அ.தி.மு.க. சார்பில் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அன்றாடம் ஒரே பிரச்சினையைச் சொல்லி, மீண்டும் மீண்டும் அதையே எழுப்பி மக்கள் பிரச்சினைகளைப் பற்றி பேச நேரமில்லாமல் செய்கிறார்கள் என்று இன்று காலையிலேயே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இந்த சட்டமன்றத்தில் திரும்பத் திரும்ப நேரம் எடுத்துக் கொண்டு. சட்டமன்ற நடைமுறையை ஒழுங்காக நடைபெற அனுமதிக்க விருப்பம் இல்லாத நிலையில், வெளிநடப்பு செய்வதாகச் சொல்லி, வெளிநடப்புச் செய்து உடனடியாக உள்ளே வருகிற ஒரு முறையை நாடகமாகச் செய்வது வருந்தத்தக்க ஒன்றாகும். இது இன்று காலையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இரண்டு நிமிடம் அளவில் எடுத்துச் சொன்ன வேண்டுகோளுக்கு நேர் மாறாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. இப்படி இன்னொரு முறை அவர்கள் வெளியேற இந்த முறையை கடைப்பிடிப்பார்களேயானால் அவையிலிருந்து அவர்களை நீக்கி வைக்கிற அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிட நிச்சயமாக இந்த அவை முன்வரும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தங்களுடைய கொள்கைகளுக்காக அல்லது அந்த இயக்கங்,

களுடைய முடிவுகளுக்கு ஏற்ப, சட்டமன்றத்திற்குள்ளே செயல்
படுவதை தவறு என்று கூற முடியாது. அ. தி. மு. க. இந்த
கருத்தை வலியுறுத்துகிறது. மக்கள் பிரச்சினையிலே நாங்கள்
கவனம் செலுத்த வேண்டும், சட்டமன்ற பொது விவாதத்திலே
கலந்துகொள்ள வேண்டும் என்கிற நியாயமான உணர்வின்
அடிப்படையில், மக்களுக்கு தொண்டு செய்கிற அந்த உணர்வில்
தான் நாங்கள் வேக வேகமாக பிரச்சினையை எங்கள் கொள்
கையை, கோரிக்கையை சொல்லி வெளிநடப்புச்செய்துவிட்டு ஒரு
நிமிடத்திற்குள் மீண்டும் பொது விவாதத்தில் கலந்துகொள்ள
உள்ளே வந்திருக்கிறோம். இது எப்படித் தவறாகும்? இதற்கு
எப்படிச் சட்டமன்றத்திலிருந்து வெளியேற்றப் போகிறீர்கள்?
தினமும் வெளியேற்றுவதுதான் உங்கள் நோக்கம் என்றால்
வெளியேற்றிக் கொண்டிருங்கள். எங்களுக்கு ஆட்சேபணை
ஒன்றுமில்லை.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிகள் பிரச்சினையை எழுப்பி
அதற்காக வெளிநடப்புச் செய்வது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று
என்பதை எதிர்க் கட்சித் துணைத் தலைவர் சொன்னார்.
அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒவ்வொரு
நாளும் இது எந்த விதிமுறையின்கீழ் எழுப்பப்படுகிறது, தாங்
கள் அனுமதிக்கிறீர்கள் என்பதை நான் அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினையை
ஒரு முறை இந்தச் சட்டமன்றத்தில் எழுப்பிவிட்டு அந்தப்
பிரச்சினையில் ஏற்படுகின்ற மாறுபாட்டுக்காக தங்களுடைய
கண்டனத்தைத் தெரிவிக்க வெளிநடப்புச் செய்வது என்பது
ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றுதான். ஆனால் தினந்தோறும்
அதே பிரச்சினையைச் சொல்லி, அதற்காக வெளிநடப்புச்
செய்வதற்கு இது ஒன்றும் நாடக மன்றமல்ல, இது சட்ட
மன்றம். தினந்தோறும் ஒரே பிரச்சினையை எழுப்பி விவா
தம் நடத்துவதற்கு உரிமையுள்ள பிரச்சினை அல்ல இது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பாராளுமன்றத்
திலும், சட்டமன்றத்திலும், கடைப்பிடிக்கப்படுகிற ஒன்றுதான்
இது. ஒரே பொருள் குறித்து திரும்பத் திரும்ப வெளிநடப்புச்
செய்வது என்பது அவையில் அனுமதிக்கப்பட்ட ஒன்றுதான்.
நாங்கள் செய்வது ஒன்றும் புதிது அல்ல.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினையைத்
தொடர்ந்து வலியுறுத்த, ஒவ்வொரு கால சட்டத்
திலும் தங்களுடைய கருத்தை வலியுறுத்துவது என்பது,



அரசை எதிர்ப்பது என்பது முறை. ஆனால் ஒரு பிரச்சினை
முடிந்ததற்குப் பிறகு ஏற்கெனவே முடிந்துபோன பிரச்
சினையைத் தினந்தோறும் வலியுறுத்துவது என்பதும், அதற்
காக வெளிநடப்புச் செய்வது என்பதும் பாராளுமன்ற
முறையில் இடம் பெற்றதல்ல. ஒரு பிரச்சினை நிலைமை
யால் வேறு வடிவம் எடுக்கும். வெவ்வேறு வடிவம் எடுக்கும்.
அந்த வெவ்வேறு நிலைகளிலும் தங்களுடைய எதிர்ப்பைக்
காட்டுவதற்காக எதிர்க் கட்சியினரோ அல்லது மற்றவர்களோ
அந்த முறையைக் கையாள்வது என்பது நாட்டிலுள்ள
எல்லாச் சட்டமன்றங்களிலும் நடைபெறும் ஒன்றுதான்.

(முற்பகல் 11-10)

ஒரே பிரச்சினை, ஒரே கருத்து, ஒரே நாளில் நடை
பெற்ற ஒன்று. ஏற்கெனவே விவாதிக்கப்பட்ட ஒன்று.
அதையே திரும்பத் திரும்பச் சொல்லி, அதற்காக தினமும்
வெளிநடப்பு என்பது சட்டமன்றத்தினுடைய பெருமையை
உயர்த்தப்பயன்படவில்லை என்பதோடு, அந்தக் கோரிக்கையை
வைப்பவர்களின் பெருமையையும் உயர்த்தாது என்பதை
நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: துணைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் ஒரு கருத்தைச்
சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் இங்கே தெரிந்து
கொள்ள விரும்புவது, ஒரு சம்பவம் நடைபெற்றது.
அந்தச் சம்பவம் பற்றி நான் விவாதிக்க விரும்பவில்லை.
ஆனால் அந்தச் சம்பவத்தில் நடைபெற்றிருக்கிற சில அநி
யாயங்களுக்கு இதுவரையில் ஏதாவது தீர்வு காணப்பட்டிருக்
கிறதா என்றால் இல்லை. இதுவரையில் தீர்வு காணப்பட
வில்லை என்பதற்காகத்தான் போராடிக் கொண்டிருக்
கிறோமே தவிர வேறல்ல. இதுதான் முடிவு, இதுதான்
நியாயம் என்று சொல்லிவிட்டால், நியாயம் எதுவாக இருந்
தாலும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.
(குறுக்கீடு) தலைவரவர்களே, நான் பணிவோடு வேண்டிக்
கொள்வது, இந்தச் சபையினுடைய நேரத்தைப் பேணிக்
காக்க வேண்டுமென்று இங்கே பேசப்படுகிற பெருமை
யெல்லாம் எனக்குத் தெரிகிறது.

யார் யார் என்னென்ன நேரத்திலே என்னென்ன செய்
தார்கள் என்பதற்கெல்லாம் வரலாறு இருக்கிறது, புத்த
கங்கள் இருக்கின்றன. ஆனால் நேரம், இடம் மாறும்போது
எல்லோருக்கும் நேரமும் மாறுகிறது. காலமும் மாறுகிறது.
ஆனால் இப்போது நேரத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க
வேண்டிய அவசியமில்லை. நான் கேட்பது, 25 ஆம் தேதி
நடைபெற்ற அநியாயத்திற்கு நீங்கள் என்ன முடிவெடுத்

தீர்கள்? அந்த முடிவு வரவேண்டுமென்பதற்காகத்தான் வாதாடிக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக ஒரு முடிவு ஏற்பட்டு, இதுதான் நியாயம் என்று சொல்லுங்கள். அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். நாங்கள் இதை வலியுறுத்துவதற்கு, இதுதான் காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ** (குறுக்கீடு) அதைச் சொன்னதால்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) அது மாதிரிதான் இங்கே. வேறு எதுவும் நடக்கவில்லை. (குறுக்கீடு).

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** ஓரளவுக்கு நியாயமாக நடங்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** நியாயமாகத்தான் நடக்கிறோம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் சொல்வதற்காக நான் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு தலைவரவர்களே, என்னுடைய பேச்சிலே ஏதாவது ஏற்கெனவே நடைபெற்றவை பற்றிக் குறிப்பிட்டு வருகின்ற வார்த்தைகள் வருமானால் தாங்கள் உடனடியாக எடுத்துவிடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

சொல்லப்பட்ட வாதத்திற்குச் சுருக்கமாக விளக்கம் சொல்வதற்காக இதை நான் சொன்னேன். அதற்காக ஒரு தண்டனை என்ற முறையில் சிலரை அவையிலிருந்து நீக்க வேண்டுமென்று எண்ணியதுகூட கைவிடப்பட்டது. எல்லாவற்றையும்விட நடைபெற்ற பிரச்சினை குறித்து இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன. நீங்கள் சொல்கிற குற்றச்சாட்டை அடியோடு மறுக்கிற கருத்தை, எங்கள் சார்பிலே, இந்த அவையில் நானே சொல்லியிருக்கிறேன். ஆகவே பழியாகச் சொல்லப்படுகிறதா, வேண்டுமென்றே சொல்லப்படுகிறதா என்பது கேள்விக்குறி. ஒருவேளை அதில் கருத்து வேறுபாடு இருக்கலாம். அந்த நிலையில் சபாநாயகர் அவர்களிடத்தில் வேண்டுமானால் தனிப்பட்ட முறையில் தங்களுடைய நியாயமான குறைகளை யார் வேண்டுமானாலும் வைத்து, பிசினஸ் அட்வைசரி கமிட்டி என்று சொல்லப்படும் இந்தச் சபையினுடைய நடைமுறையை ஒழுங்குபடுத்தும் அவைக் குழுவில் எடுத்துச் சொல்லலாம் என்று தெரிவிக்கப்பட்ட பின்னர், இந்த அவையில் மறுபடியும் எழுப்புவது நியாயமல்ல என்று அன்றே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே அதை அடிப்படையாக வைத்து, எழுப்புகிற

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



காரணத்தாலே தான் மாறுபாடே தவிர, சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமையைக் குறைக்க நாங்கள் விரும்பவில்லை. அது எங்கள் நோக்கமல்ல.

**திரு. குமரி அனந்தன் :** துணை சபாநாயகர் அவர்களே, இன்று அவர்கள் சுமுகமாகவே போய்விட்டு வந்து விட்டார்கள். எல்லாமே அமைதியாக இருந்தது. ஒரு நிமிட நேரம் தான் ஆயிற்று. அதன் பிறகு ஒவ்வொருவரையும் அனுமதித்ததன்பேரில் தான் இவ்வளவு நேரமாகியது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## 7. விதி 109-இன் கீழ் உறுப்பினர் தன்னிலை விளக்கம்.

சென்னையில் வீட்டு வசதி வாரிய மனை ஒதுக்கீடு, அடுக்குமாடிக் கட்டட அனுமதி ஆகியவற்றில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை,

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டமன்ற விதி 109-ன் கீழ் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க எனக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொண்டு, அந்த விதி 109-ன் கீழே நேற்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சட்டமன்றத்திலே என்மீது......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தன்னிலை விளக்கம் தர வேண்டுமென்றால், என்னிடம் எழுதிக் கேட்டு, அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தன்னிலை விளக்கத்திற்கு எழுதித் தரவேண்டுமென்று எந்த விதியிலும் இல்லை. அறிக்கை என்றால்தான் எழுதிக் கொடுக்க வேண்டும். நான் எந்த அறிக்கையையும் படிக்கவில்லை. எனவே விதிப்படிதான் நான் செய்கிறேன்.

விதி 109-ன்படி தன்னிலை விளக்கம் கொடுக்க எனக்கு உரிமை உண்டு. நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே சட்டமன்றத்தின் எதிர்க்கட்சி சார்பில் பணியாற்றிய பிரதான எதிர்க்கட்சித் தலைவர் சட்டமன்றத்திற்குள்ளே வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதற்குப் பின்னால் எதிர்க்கட்சியின் கடமையை அதன் துணைத் தலைவர் என்ற முறையில் இங்கே நான் ஆற்றிக் கொண்டிருக்கிறேன்.

1989 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கம் என்று சொல்லி விதி 109-ஐக் காட்டுகிறார். ஆனால் அது 110-ல் வருகிறது " A member may, with the permission of the Speaker make a personal explanation although there is no question before the House, but in this case, no debatable matter may be brought forward and no debate shall arise " அதிலே அவர் பேசுவதற்கு இடமே இல்லை, ஸ்கோப்பே இல்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர் விதி 110-ஐப் படிக்கிறார்கள். பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருள் குறித்து ஒரு அமைச்சர் அளிக்கிற அறிக்கை அது. நான் சொல்வது விதி 109. (குறுக்கீடுகள்) நான் பேரவைத் துணைத் தலைவரின் அனுமதியின்பேரில் தான் படிக்கிறேன். ''உறுப்பினர் ஒருவர் தன்னிலை விளக்கம் ஒன்றினைப் பேரவை முன் பிரச்சினை எதுவும் இல்லையென்றாலும் அளிக்கலாம்'' என்றிருக்கிறது. விதி 109-ன் கீழ்தான் நான் தன்னிலை விளக்கத்தைத்தர முன் வந்துள்ளேன்.

சட்டமன்றத்திலே எதிர்க்கட்சியினுடைய குரல்வளையை நெரிக்கிற விதத்திலே, நான் இந்த அரசினுடைய தவறுகளை, நடைமுறைகளைச் சுட்டிக் காட்டுகிறேன் என்ற முறையிலே என்னைப் பயமுறுத்தும் நோக்கத்தோடும், அச்சுறுத்தும் நோக்கத்தோடும் அவசர அவசரமாக நான் நேற்று வெளிநடப்புச் செய்த உடனே, இன்றைக்கு எப்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோப்புகளைத் தூக்கி மேஜையில் வைத்தார்களோ— அதைப் போல் நேற்றைய தினமும் ஒரு கடிதத்தை உங்களிடம் தந்ததையும் அதைத் திரும்பவும் வாங்கிக் கொண்டதையும், அதற்குப் பிறகு அனைத்திந்திய அண்ணா தி.மு.க. சார்பில் நாங்கள் வெளிநடப்பு செய்தபோது, அவசர அவசரமாக, சட்டமன்றத்தினுடைய கடந்த 50 ஆண்டுக் கால வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு விதி 110-ன் கீழ் ஒரு அறிக்கையைப் படித்தார். இதற்கு முன்பெல்லாம் அரசாங்கத்தினுடைய சார்பில் அவசர பொது அறிவிப்புகள் அல்லது அரசு அறிவிப்புகளை அறிவிப்பதுதான் சட்டமன்ற முறையாக, மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் அதிலே ஒரு குற்றச்சாட்டை ஒரு அமைச்சர்மீது படிக்கிற வகையில் — கடந்த 50 ஆண்டுக் காலமாகச் சட்டமன்ற வரலாற்றிலேயே இல்லாத ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக வேகமாக —என்மீது இருக்கிற ஆத்திரத்தில் — என்னைப் பழி வாங்க வேண்டும் என்ற உணர்வில் செய்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உரையாற்றும்போது, உள் நோக்கம் கற்பிக்கக் கூடாது. நான் பொது நன்மைக்காக என்கிற தலைப்பில் சில விவரங்களை





இந்த அவைக்குத் தந்தேன். அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்க இருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இதிலே பழி வாங்குவது போன்ற உள்நோக்கம் எதுவுமில்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது. ஆனால் இந்த மன்றத்தில் குற்றச்சாட்டுகளை, மற்ற உறுப்பினர்கள் இந்த மன்றத்தில் இல்லாதபோது— தான் விரும்புகிறபடி, விரும்புகிற வகையில்—சட்டமன்ற முறைகளுக்குப் புறம்பாக— மரபுகளுக்கு மாறாக வாசிப்பது என்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 110-வது விதியைப் பயன்படுத்திச் செய்ததை நான் முதலிலே கண்டிக்கிறேன்.

சட்டமன்றத்திலே இதற்கு எந்தவிதமான முன்னுதாரணமும் இடையாது. அப்படி நாங்கள் 11 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்தபோது, இந்த 110-வது விதியைப் பயன்படுத்தி அப்போதிருந்த அமைச்சர்களோ, முதலமைச்சர் அவர்களோ— இப்போது முதலமைச்சர் அவர்கள் படிப்பதைப் போல் படித்திருந்தால்—11 ஆண்டுகளும் அதையேதான் படித்துக் கொண்டிருந்திருப்போம். ஆனால் அந்த வேலையை நாங்கள் செய்யவில்லை. அப்படியெல்லாம் கண்ணியம் மிக்க புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்த விதியைப் பயன்படுத்தி எந்தவிதமான குற்றச்சாட்டு களையும் முன்னாள் அமைச்சர்கள் எவர் மீதும் இங்கே படிக்கவோ—வாசிக்கவோ முன்வரவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் நீங்கள் செய்கிறீர்கள். செய்யுங்கள். அதைப் பற்றிப் பரவாயில்லை. ஆனால, அந்த அறிக்கையின் வாயிலாகப் பல தவறான தகவல்களை அளித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தெரிவித்து அதன் மூலம் என் மீது களங்கம் ஏற்படுத்த, என் மீது கெட்ட பெயர் ஏற்படுத்த, பழி சுமத்த முயன்றிருக்கிறார். அது பத்திரிகைகளிலே செய்தியாக வந்திருக்கிறது. நான் போன பிறகு, அதைச் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள அமைச்சருடைய பெயரைச் சொல்ல வில்லை என்று சொல்லிவிட்டு அந்தக் கருத்தைச் சொல்லி யிருக்கிறார். அந்தக் காலத்திலே நான்தான் அமைச்சராக இருந்திருக்கிறேன். அவருடைய முரசொலி பத்திரிகையிலே " அ.தி.மு.க. அமைச்சர் அடித்த கோடி கோடி கொள்ளை சென்னை அடுக்குமாடி கட்டிட ஊழல் " என்று போட் " எம்.ஜி.ஆர். மறைந்த உடனே ஊழல் " என்று போட்டிருக் கிறார்கள். அதுபோல தினகரன் பத்திரிகையிலே, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரவர்கள் சொன்னதைப் போல, அதிலே தினகரனுக்கு தனி உரிமை இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்—பல விவரங்கள் சபையிலே இருந்து நீக்கப் பட்டதெல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. சபையிலே,

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 ஏப்ரல் 5

(முற்பகல் 11.20)

"முதலமைச்சர் தகவல், திருநாவுக்கரசு 13 கோடி ஊழல்", முதலமைச்சர் கூட அப்படிச் சொல்லவில்லை. அதிலே 13 கோடி அளவுக்கு விலையைக் குறித்து, ஒரு கிரவுண்ட் $4\frac{1}{2}$ லட்சம், 5 லட்சம் என்று விலை போட்டு, இன்றைக்கு இருக்கிற கிரவுண்டின் விலையைப் பெருக்கி 13 கோடிக்கான முறைகேடு நடந்து இருக்கிறது என்று சொன்னார். அதையும் மீறி, அவருக்கு அரசை விட அரசருக்கு நன்றியோடு இருக்கிற வகையிலே, முதலமைச்சருக்கு நன்றி காட்டும் விதத்திலே "திருநாவுக்கரசு 13 கோடி ஊழல்" என்று தலைப்பிட்டு தினகரன் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. முதலிலே நான் வன்மையாக அந்தக் குற்றச்சாட்டுக்களை மறுக்கிறேன்.

ஒரே ஆண்டிலே 170 ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன வாதம். ஏறக்குறைய $1\frac{1}{4}$ ஆண்டிலே உதாரணத்திற்காகச் சொல்கிறேன், எப்படி அரசு நடக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். சென்ற ஆண்டு, அதாவது கவர்னர் ஆட்சியிலே 1—3—1988-லிருந்து 10—1—1989-க்குள், அதாவது 10 மாதங்களுக்குள் போட்ட ஆணைகள் 180 தேதிவாரியாக சென்னால், ஒரே நாளிலே 10 கோப்புகள், 20 கோப்புகள், 30 கோப்புகள் என்று சொன்னார்கள். உண்மையிலேயே நான் வேதனைப்படுகிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏன் இப்படி உணர்ச்சி வசப்படுகிறார்கள், ஆத்திரப்படுகிறார்கள், பழி வாங்கத் துடிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. 7 ஆண்டுக் காலம் முதலமைச்சராக இருந்த, இன்றைக்கு இருக்கக்கூடிய அவருக்குத் தெரியாததில்லை. அன்றன்றைக்கு முக்கியமான கோப்புகளில் கையெழுத்திடுகிறோம். பின்னாலே வீட்டிலே, அலுவலகத்திலே இருக்கிற கோப்புகளை எல்லாம் ஒரு நாள் இருந்து நீங்களே நினைத்துப் பார்த்தால், அல்லது இங்கே படித்துப் பார்த்தால் உங்களுக்குத் தெரியும் அந்தக் கோப்புகளைப் பற்றி எல்லாம். ஒரே நாளிலே 20, 30 அல்ல நூற்றுக்கணக்கான கோப்புகள் கூட கையெழுத்திடும் அமைச்சர்கள உண்டு. அமைச்சர்கள் வெளியூர்களுக்கு சுற்றுப் பயணம் போகிறார்கள். அவர்கள் திரும்ப வந்து ஒரே நாளில் 100, 200 கோப்புகளிலே கையெழுத்துப் போடுகிறார்கள். இன்றைய முதலமைச்சர் அவர்களும் அதைப்போல கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள்; பழைய முதலமைச்சரும் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள்; எல்லா அமைச்சர்களும் போட்டிருக்கிறார்கள். ஒரே நாளிலே 20 கோப்புகளிலே கையெழுத்துப் போடுவது தவறல்ல. ஆகவே இதை நான் தவறு என்று சொல்லவில்லை. சொன்னதற்காகச் சொல்கிறேன். 26-ம் தேதியில் 9, அடுத்து 15-ம் தேதி 9, 24-ல் 10, 29-ல் 12, ஒரு மாதத்தில் 6ல் 11, 12-ல் 18, 20-ல் 20—இப்படி கோப்புகள் டிசம்பர் மாதத்தில் சொல்கிறேன்—இது சம்பந்தமான கோப்புகள்



1989 ஏப்ரல் 5] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

கையெழுத்திடப்பட்டுள்ளன. ஆக அமைச்சராக இருக்கிற கடைசி நாளில் கூட கையெழுத்துப் போடலாமா என்று கேட்டார்கள். கவர்னர் ஆட்சியிலே கூட 21-ம் தேதி தேர்தல், 20-ம் தேதி 20 கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். அதையெல்லாம் நான் தவறு என்று சொல்லமாட்டேன். அதிகாரிகள் இருக்கும்போது அதைப் போடலாம்; கவர்னர் போடலாம்; அதில் தவறில்லை. நானும் அமைச்சராக இருந்தபோது, நான் கையெழுத்திட எனக்கு முழு உரிமை உண்டு. அந்த அடிப்படையிலேதான் போட்டிருக்கிறேன்.

இன்னொன்று, வேண்டுமென்றே மாண்புமிகு முதலமைச்சரவர்களே, எம்.ஜி.ஆர். இருந்தபோது கோப்பிலே கையெழுத்துப் போட்டு 20 லட்சம் ஊழல் செய்தார், லஞ்சம் வாங்கினார் என்று, முதலமைச்சரவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது பேசிப் பத்திரிக்கையிலே செய்தி வந்தது. இன்றைக்கு எனக்கு ஒரு மகிழ்ச்சி. நேற்று என் மீது குற்றம் சொன்னபோது, அதற்கு முன்னாலே சொன்ன குற்றச்சாட்டையே திரும்பக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்குச் சொல்கிறபோது, இன்றல்ல, நான்கு நாள் கழித்து, 5 நாள் கழித்து, 6 நாள் கழித்து, 4-வது நாள், 5-வது நாள், 6-வது நாள் ஒரு கோப்பு என்று போட்டிருக்கிறார்கள்—நான் நினைக்கிறேன், பேரறிஞர் அண்ணா அவர்கள் இறந்த உடனே அப்படியே இந்த அரசு ஸ்தம்பித்துப் போய், அடுத்த நாள், அதற்கடுத்த நாள் கோப்புகளிலே கையெழுத்துப் போடாமல் தூங்கிக் கொண்டிருக்கவில்லை. அன்றைக்கு இருந்த முதலமைச்சரவர்கள் இறந்து கிடக்கும்போது தான், முதலமைச்சர் பதவிப் பிரமாணம் நடைபெற்றது; அது ஜனநாயகக் கடமைகளிலே ஒன்று. ஜனநாயகக் கட்சியின் தலைவரின் பூத உடல் கிடக்கும் போது பதவி ஏற்பு நடைபெற்றது. ஏனென்றால் அரசியல் சட்டப்படி வெற்றிடம் இருக்க முடியாது. அதற்கு அடுத்த நாள் கையெழுத்து, நூற்றுக்கணக்கான கையெழுத்து, அதற்கு அடுத்து ஒரு வாரத்தில் நீங்களே போடுகிறீர்கள். அதிலும் நீங்கள் சொல்கிற குற்றச்சாட்டுக்கு மெருகூட்ட—உங்கள் பாணியிலே கலை நோக்கோடு நீங்கள் செய்கிறீர்கள்—கலைஞர் அவர்களைத் தவிர. அதிலே வேறு எதார்த்தம் இல்லை என்பது—உங்கள் மனச்சாட்சி அடிப்படையிலே தமிழ் நெஞ்சம், தமிழ் மனச்சாட்சி உண்மையிலேயே உங்களுக்கு இருக்கிறது என்று சொன்னால், உங்களுக்கு நிச்சயமாகத் தெரியும், அதிலே தவறு இல்லை. வேண்டுமென்றே, உங்களுடைய குற்றச்சாட்டுக்கு மெருகிடுவதற்காக இதையெல்லாம் சொல்லி இருக்கிறீர்கள்.

அதற்கு அடுத்து, வீட்டு வசதி வாரியத்திலே ஏறக்குறைய 302 கிரவுண்டுகள் பொது ஒதுக்கீட்டிலே ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பது குற்றச்சாட்டு. 240பேருக்கு ஒதுக்கி இருக்கிறேன்

என்று சொல்கிறீர்கள். 240 பேர்களுக்கு ஒதுக்கியிருக்கிறீர்கள் என்றால் அதிலே கருப்புசாமி பாண்டியன், இதுபோல ஒன்றிரண்டு பேரைச் சொன்னீர்கள். கட்சிக்காரர்கள், வேண்டியவர்களுக்குப் போட்டிருக்கிறீர்கள் என்பதுதான் அதனுடைய உள்நோக்கம். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நீங்கள் முதலமைச்சராக இருந்தபொழுது—அதில் இன்னொன்றும் சொல்கிறேன்—மிக நயத்தோடு, விநயத்தோடு, நான் சொன்னதைப் போல கலை நயத்தோடு குற்றச்சாட்டுக்களைச் சொல்லி நிரூபிப்பதற்காக Posh Area விலே போட்டிருக்கிறீர்கள், அண்ணா நகர், பெசண்ட் நகர் போன்ற Posh Area விலே போட்டிருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள். அந்தத் திட்டமே அங்கே தான் இருக்கிறது, அண்ணா நகரிலே, பெசண்ட் நகரிலே, கே. கே. நகரிலேதான் இந்தத் திட்டம் இருக்கிறது. நீங்கள்தான் கொண்டு வந்தீர்கள், அந்த Posh Area விலே கொண்டு வந்தீர்கள். அன்றைக்கு நான் நீங்கள் சொல்வதைப் போல கணக்குச் சொன்னால், அரசாங்கத்தினுடைய விலை என்ன தெரியுமா, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே 7,000 ரூபாய் ஒரு கிரவுண்டுக்கு, அதற்குப் பின்னாலே ஆண்டுதோறும் 9,000 ரூபாய், 10,000 ரூபாய், 12,000 ரூபாய் என்று ஆகும்பொழுது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பின்னாலே ஹவுசிங் போர்டுதான் விலையை நிர்ணயம் செய்கிறது, 80,000 ரூபாயாக. அதிலே வணிகத்திற்காக என்று சொன்னால், அந்தப் பர்ப்பசுக்காக என்று சொன்னால், அதற்கு 1,25,000 ரூபாய். இந்த ஆண்டு 92,000 ரூபாய் என்று உயர்த்தி இருக்கிறீர்கள். ஒவ்வொரு ஆண்டும் 10 சதவிகிதம், 12 சதவிகிதம் ஹவுசிங் போர்டு விலையைக் கூட்டி நிர்ணயம் செய்கிறது. எனவே, 7,000 ரூபாய் என்று ஒரு கிரவுண்டுக்கு இருந்த பொழுது, நீங்கள் சொல்கின்றபடி கணக்குப் பார்த்தால் இன்றைக்கு ஒரு இலட்சம், 80,000 ரூபாய் கவர்ன்மெண்ட் ரேட். ஒப்பன் மார்க்கெட்டிலே இருப்பதைக் கணக்குப் போட்டு, 13 கோடி ஊழல் என்று சொல்கிறீர்கள். அந்த ரேட்டிலே சொன்னால் நீங்கள் போட்டிருப்பது, அண்ணா நகரிலே இருக்கிற அத்தனை வீடுகளும், பெசண்ட் நகரிலே இருக்கிற அத்தனை வீடுகளும் இதுபோல பொது ஒதுக்கீட்டிலே போடுவதற்காகத்தான் .கொண்டு வரப்பட்டன. சேட்டிடம் சென்று வட்டிக்கு வாங்கி யாராவது தனியார் வாங்கிக் கொள்வார்கள்.

ஹவுசிங் போர்டு எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் இப்படிப்பட்ட இடத்தை எடுத்து ஆர்ஜிதம் செய்து கிரவுண்ட் ஒன்றுக்கு எவ்வளவு என்று பிரித்துக் கொடுப்பதற்காகத்தான் கொண்டு வரப்பட்டது. ஆகவே, குறைந்த விலை நிர்ணயித்துக் கொடுக்கப்பட்டது. அதைத்தான் நீங்கள் 7,000 ரூபாய், 8,000 ரூபாய், 14,000 ரூபாய் என்று இங்கே கொடுத்தீர்கள். அதற்கு ஒப்பன் மார்க்கெட்டிலே இன்றைக்குக் கணக்குப் போட்டால் எவ்வளவு வரும் தெரியுமா?





13,000கோடி வரும் நீங்கள் 13 கோடி என்று சொன்னீர்கள். நான் கேட்கிறேன். அண்ணா நகர், பெசண்ட் நகர், கே. கே. நகர் ஆகிய இடங்களில் இதைப் போல தனியார் வீடுகளையெல்லாம் எடுத்து 7,000 ரூபாய்க்கு நீங்கள் போட்டீர்களே, அன்றைக்கிருந்த ஒப்பன் மார்க்கெட்டிலே அது 2 இலட்சம் ரூபாய் இருக்கும். இன்றைக்கு 5 இலட்சம் இருக்கும், 4 இலட்சம் இருக்கும் என்று கணக்குப் போட்டார்கள். அன்றைக்குக் கணக்குப் பார்த்தால் 13,000 கோடி ரூபாய் அரசுக்குச் சொந்தமானது அந்த அளவிற்கு அதிலே ஊழல் நடந்திருக்கிறது, முறைகேடு நடந்திருக்கிறது. அன்றைய அரசுக்கு, அமைச்சருக்கு, அந்தத் துறையிலே இருந்த அமைச்சருக்கோ அல்லது முதலமைச்சருக்கோ 13 கோடி ரூபாய் போனது என்று நானும் சொல்லலாம். ஆனால் நான் அப்படிச் சொல்லவில்லை. ஏனென்றால் அன்றைக்கிருந்த அரசாங்கத்தினுடைய விலையைத்தான் நீங்கள் போட்டிருக்கிறீர்கள்.

அதுபோலத்தான் அன்றைக்கு ஹவுசிங் போர்டு என்ன விலையை நிர்ணயித்ததோ அதையேதான் நாங்களும் போட்டோம். இன்னும் நான் சொல்வேன். மனச்சாட்சியுள்ள பல அதிகாரிகளுக்குத் தெரியும். படித்துப் பார்த்தால் தெரியும் அந்தக் கோப்புகளிலே. கட்சிக்காரர்கள் சிலபேர் இடம் பெற்றிருக்கலாம். நீங்கள் போடவில்லையா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இன்றைக்கிருக்கின்ற அமைச்சர்கள், அவர்களுடைய உறவினர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள் என்று இந்த அளவிலேதான் அண்ணா நகரிலே, கே. கே. நகரிலே அத்தனை வீடுகளும் அன்றைக்கு ஒதுக்கப்பட்டன; இடங்களும் ஒதுக்கப்பட்டன. எனவே, நாங்களும் ஒன்றிரண்டு பேர்கள் கட்சிக் காரர்களுக்குப் போட்டிருக்கலாம். சில பேருக்குப் போட்டிருக்கலாம். ஆனால் அரசுத் துறை அதிகாரிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்கள் ஒப்பன் மார்க்கெட்டிலே வாங்க முடியாத காரணத்தினாலே, வெளியே அதிக விலை கொடுத்து வாங்க முடியாது என்ற காரணத்தினாலே தான் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அதுவும் சென்ற ஆண்டு ஹவுசிங் ஆண்டாக உலகம் பூராவும், இண்டர்நேஷனலாகக் கொண்டாடப்பட்டது. அந்த அடிப்படையிலே வீடுகள் அதிகமாகக் கட்டப்பட்டன. அடுக்கு மாடிகளும் கட்டப்பட்டன. இடங்களையும் நாங்கள் பிரித்துக் கொடுத்தோம். அப்படிக் கொடுக்கிற பொழுது பெரும்பான்மை அதிகாரிகளுக்குத்தான் போட்டிருக்கிறேன். அதிகாரிகளிடத்திலே, ஐ. ஏ. எஸ். அதிகாரிகளிடத்திலே, ஐ.பி.எஸ். அதிகாரிகளிடத்திலே, ரெவின்யூ அதிகாரிகளிடத்திலே 5 இலட்சம் இலஞ்சம் வாங்கிக் கொண்டு கொடுத்தேன் என்று சொல்கிறீர்களா? ஏன், நீங்கள் மனச்சாட்சியோடுதான் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லுகிறீர்களா? ஆகவே, இந்த 240 இடத்தை ரத்துச் செய்வோம் என்று சொல்கிறீர்கள், அதைப்பற்றி நாங்கள்

கவலைப்படவில்லை. இதுபோல, அரியானாவிலே திரு தேவிலால் சீப் மினிஸ்டராக வந்ததற்குப் பின்னாலே, கொண்டு வந்தார், அதற்கு முன்னாலேயிருந்த அரசாங்கம் 500 பிளாட் போட்டது. அவர் வந்து ரத்து செய்தார். அவர்களெல்லாம் ஹைகோர்ட்டுக்குப் போனார்கள். அரசாங்கம் நிர்ணயித்த விலையைக் கொடுத்து, அவர்கள் முறைப்படி கட்டித்தான் பெற்றிருக்கிறார்கள். அது தவறு என்று சொல்லி, திருப்பிக் கொடுங்கள் என்று ஹைகோர்ட் உத்தரவு போட்டிருக்கிறது. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை.

இன்னொரு குற்றச்சாட்டாக நீங்கள் சொல்வது, பொதுவாக இரண்டரை கிரவுண்டை போடலாம். நீங்கள் ஏழரை கிரவுண்டைப் போட்டிருக்கிறீர்கள் என்று சொன்னீர்கள். நீங்களே சொல்கிறீர்கள், 302 கிரவுண்டை 240 பிளாட்டாக என்று, சராசரியாகப் பாருங்கள், ஒன்றேகால் கிரவுண்ட் வரும் ஒவ்வொன்றும். இன்னும் சொல்லப் போனால், கால், அரைக்கால், ஆயிரம், எழு நூறு என்று சொல்லி ( artisan plot ) நீங்கள் போட்டிருக்கிற 240 பேரிலே நூற்றுக்கு மேலே அப்படித்தான் இருக்கும். இது ஒன்று. ஏழரை கிரவுண்ட், ஏழரை கிரவுண்ட் என்று போட்டது மருத்துவமனைக்கு. அது மருத்துவமனை கட்டுவதற்காக வாங்கப்பட்டது. அதுவும் நான் உங்களுக்கு இன்னும் அழுத்தமாகச் சொல்கிறேன், அதுகூட சாதாரண ரேட்டிலே போடப்படவில்லை, சாதாரணமாக வீடு கட்டுவதற்கு 80,000 ரூபாய் என்றால், திரு தம்பிதுரைக்குக் கொடுக்கப்பட்டது 1,25,000 ரூபாய்க்கு. கமர்ஷியல் ரேட்டிலே போட்டு, ஹாஸ்பிடல் கட்ட வேண்டும் என்பதற்காக, 'காம்ப்ளெக்ஸ் போடுகிறேன், பொது மக்களுக்குச் செய்கிறேன்' என்று கேட்ட காரணத்தினாலே அவர்களுக்கு வழங்கப்பட்டது. எனவே, அது ஒன்று. இன்னொரு டாக்டருக்கு ஒன்று.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குறுக்கிட விரும்பவில்லை. கடைசியாக விளக்கமாகப் பதில் அளிக்கவிருக்கிறேன். குறுக்கிட விரும்பவில்லை. இருந்தாலும் ஒரு விளக்கம். பிரச்சினையே, ஹவுசிங்கிற்காக உள்ள இடங்களை ஒதுக்கியிருந்தால் பரவாயில்லை. சமூக நலக் கூடம், பூங்கா என்று இருந்த இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. திரு தம்பிதுரைக்கு ஒதுக்கப்பட்ட இடம்கூட கடைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடம் அவருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுதான் குற்றச்சாட்டு.

(முற்பகல் 11-30)

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) நேற்று முதலமைச்சர் அவர்கள் 6 பக்கம் படித்திருக்கிறார்கள். (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்கிறேன். நான் பிரச்சினை எதையும் எழுப்ப விரும்பவில்லை. என்னுடைய உரிமையைக் காப்பாற்றும் விதத்திலே, ஜனநாயக ரீதியாக செயல்படுவதற்கு



என்னை, தயவுசெய்து, விடுங்கள். எவ்வளவு குற்றச்சாட்டுக்களை வேண்டுமானாலும் சொல்லுங்கள். அதற்கு மறுப்பு சொல்ல அதைப்பற்றி இந்தச் சட்டமன்றத்திலே பேச அனுமதி தாருங்கள். (குறுக்கீடு). தயவுசெய்து இந்த மாதிரி ஒரு சீனியர் மெம்பர் குறுக்கிட்டால் என்ன அர்த்தம்? Please co-operate with me. நீங்களும் நானும் எதிர்க்கட்சிதான். (குறுக்கீடு). நான் ஒரு விளக்கத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அப்படி இருக்கும்போது, தயவு செய்து குறுக்கிட வேண்டாம். நான் முடித்தவுடனே பேசுங்கள். நான் பேசிக்கொண்டிருக்கும் போது, நீங்கள் இந்த மாதிரி குறுக்கிட்டுப் பேசிக் கொண்டிருந்தால், எதிர்க்கட்சிகளுக்குள்ளே என்ன ஒற்றுமை இருக்கிறது? நீங்களும் ஒரு எதிர்க்கட்சி. நானும் ஒரு எதிர்க்கட்சி, எனவே, தயவு செய்து கோஆப்பரேட் பண்ணுங்கள்.

எனவே, முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதை ஒதுக்கியதிலே தவறில்லை. ஒதுக்கலாம், அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்று ஒத்துக்கொண்டார்கள். ஆனால், ''பூங்கா, பள்ளிக்கு என்று ஒதுக்கப்பட்ட இடங்களை எப்படி ஒதுக்கலாம், அதற்காக ஒதுக்கிய இடங்களை எப்படி நீங்கள் ஒதுக்கலாம் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு'' என்று சொல்கிறார்கள். நான் அதற்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதைப்போன்று இப்போதுதான் நடந்துள்ளதா ? இதற்கு முன்னாலே நடக்கவில்லையா ? நான் கேட்கலாம். இன்றைக்குக் கூட அமைச்சராக இருக்கிற சிலருக்கு சில ஹவுசிங் காம்ப்ளக்ஸ்கள் இருக்கின்றன : ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்கள் இருக்கின்றன. நான் நாகரீகம் கருதி பெயரைச் சொல்லாமல் விட்டுவிடுகிறேன். (குறுக்கீடு). பெயரைச் சொல்லவில்லை. ஆனால், இதெல்லாம் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள்தான். அன்றைக்கு மாற்றித் தரப்பட்டு இருக்கின்றன. இது நாங்கள் நில ஆர்ஜிதம் பண்ணி எடுத்தது அல்ல. 20 ஆண்டுகளுக்கு முன்னாலே, தி.மு.க. ஆட்சியிலேதான் அந்த இடங்கள் எல்லாம் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, ஒதுக்கப்பட்டது. அப்படி ஒதுக்கப்படுகிற போது, 4, கிரவுண்ட், 2 கிரவுண்ட் என்று சொல்லி, ஆங்காங்கே பார்க் என்றும், பள்ளி என்றும் சொல்லி ஒதுக்கப்பட்டது. ஆனால், அவைகள் எல்லாம் இந்த 20 ஆண்டுகளிலே பார்க்கிற்காக ஒதுக்கப்பட்ட இடங்களை கார்ப்பரேசன் டேக் ஓவர் செய்யவில்லை. பள்ளிக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை, பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்காக வழங்கப்பட்ட இடங்களை எடுக்கவில்லை. ஆகவே, பார்க்கிற்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தை, கார்ப்பரேசனிடத்திலேயிருந்து நாங்கள் எடுக்கவில்லை. கல்வித்துறைக்குக் கொடுக்கப்பட்டதை. நாங்கள் எடுத்துக் கொள்ளவில்லை. அந்த இடங்கள் எல்லாம் 20 ஆண்டுக் காலமாக, வெற்றிடமாகக்கிடந்து பக்கத்திலே வீடுகள் இருக்கும், அதற்குப் பக்கத்திலே 4 கிரவுண்ட்

ஒதுக்கியிருப்பார்கள் பார்க் என்று போட்டு. கார்ப்பரேசன், பார்க் வேண்டாம், பக்கத்திலே பெரிய பார்க் இருக்கிறது என்று சொல்லி, எடுக்காமல் இருப்பார்கள். அந்த 4 கிரவுண்டிலே என்ன என்ன நடந்தது? சமுதாயத்திற்கு விரோதமான, சட்டத்திற்குப் புறம்பான கள்ளச்சாராயம் விற்பது, அங்கே மலஜலம் கழிப்பது போன்ற தவறான காரியங்களுக்கு அந்தச் சிறு சிறு இடங்கள் பயன்பட்டன. இதையெல்லாம் பக்கத்திலே இருக்கிற வீட்டுக்காரர்கள்—கூட நீங்கள் சொன்னீர்களே, அதைப் போல பொது மக்கள் எல்லாம்-ரெப்ரசன்டேசன் கொடுத்தார்கள். அதையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு, ஹவுசிங் போர்டு என்ஜினியர்கள் பரிந்துரை செய்து அனுப்புகிறார்கள். வாய் மூலமாக அமைச்சரிடத்திலேயிருந்து உத்தரவு போட்டார்கள் என்று சொல்கிறார்கள். வாய் மூலமாக ஏதாவது இடம் இருந்தால் அனுப்புங்கள் என்று சொல்வது மாபெரும் ஜனநாயகக் குற்றமா என்பதை முதலமைச்சர் அவர்கள்தான் சொல்ல வேண்டும். நீங்கள் அப்படிச் சொல்வதில்லையா? அதிகாரிகளுக்கு எல்லாமே எழுத்து மூலமாகத் தான் கொடுக்கிறீர்களா? அப்படியென்றால், தொலைபேசியே தேவையில்லையே. முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர்களுக்கும், மற்றவர்களுக்கும் தொலைபேசி எதற்கு? எனவே, தொலைபேசியிலே தகவல் சொல்லி, ஏதாவது இடம் இருந்தால் அனுப்புங்கள் என்று கேட்பதிலே தவறில்லை. ஏன் என்றால், ஆயிரக்கணக்கான பெட்டிசன்கள் வருகின்றன இடம் கொடுங்கள் என்று சொல்லி. அதை வைத்து, இடம் இருந்தால் அனுப்புங்கள், போடுங்கள் என்று சொல்கிறோம். அதிகாரிகள் அனுப்புகிறார்கள். அந்த இடத்தை அவர்களுக்கு கொடுத்திருக்கிறோம். அதுவும் எத்தனை? நீங்களே படித்தீர்கள் 4 கிரவுண்ட், 2 கிரவுண்ட் என்று சொல்லியிருக்கிறீர்கள். இப்படித் தவறாகப் பயன்படுத்தப்பட்ட மலஜலம் கழிப்பதற்கு, கள்ளச்சாராயம் விற்கப்படுவதற்கு, இன்னும் பலவிதமான பிராத்தல் போன்ற ஒழுங்கீனங்கள் நடந்த இடங்களை அந்தந்தத் துறைகளுக்கு ஒதுக்கப்படாமல் இருக்கிற இடங்களை, சில நேரங்களில் அதை ஏலத்திற்கு விட்டும் அதை கமர்சியல் ரேட்டுக்கு எடுக்காமல் இருக்கிற இடங்களை, அரசு நிர்ணயித்த அந்த விலைக்கு மாற்றிக் கொடுத்திருக்கிறோம். இதிலே என்ன மாபெரும் ஊழல் நடந்துவிட்டது, இதிலே நான் மட்டும்தானா? எனக்கு முன்னாலே இருந்த அமைச்சர்களும், அதற்கு முன்னால் இருந்த உங்களுடைய அமைச்சருடைய காலத்திலேயும் இது போன்ற பிரச்சினைகள் இல்லையா? நீங்களே சொன்னீர்கள் பல குற்றச்சாட்டுக்களை. அப்படிப்பட்ட பிரச்சினை, வருகிறபோது—ஒரு அமைச்சருடைய மகனுக்கு எல்லாம் போடப்படுகிற பிரச்சினை வருகிறபோது, திரு. நல்லுசாமி அமைச்சர் இருந்தபோது—இது அமைச்சருக்கு உள்ள பிரத்தியேக உரிமை, யாருக்கு வேண்டுமானாலும் போடலாம். அதை இங்கே எழுப்பக்கூடாது என்று சொல்லி, சபாநாயகர் தீர்ப்புச் சொல்லி, அன்றைக்கு சபைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டு, அந்தப்



பிரச்சினை முடிக்கப்பட்டது. தி.மு.க. உறுப்பினர் திரு. ரகுமான் கான் தான் எழுப்பினார் என்று நான் நினைக்கிறேன். எனவே, இவைகள் எல்லாம் கடந்த காலத்திலே இந்தச் சட்டமன்றத்திலே நடந்திருக்கிற முறைகள். இது ஒன்று. ஆக நான் சொல்ல விரும்புவது இப்படி எந்தவிதமான ஒழுங்கீனங்களோ, தவறுகளோ, இடங்களை, மனைகளை ஒதுக்கியதிலே நடைபெறவில்லை என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். நீங்கள் சொன்னீர்கள் 80 ஆயிரத்திற்குக் கொடுத்திருக்கிறேன், 1 இலட்சத்திற்கு கொடுத்திருக்கிறேன் என்று. அதை நான் கொடுக்கவில்லை. ஹவுசிங் போர்டு பிக்ஸ் பண்ணிய ரேட்டிலே, கவர்ன்மென்ட் பிக்ஸ் பண்ணிய ரேட்டிலே, வருடா வருடம் பிக்ஸ் பண்ணிய ரேட்டிலே கொடுத்திருக்கிறோம். இதை நீங்கள் ஓப்பன் மார்க்கெட் ரேட்டிலே பெருக்கி, நான்காலே பெருக்கி, ஐந்தாலே பெருக்கி, 13 கோடி, 14 கோடி என்று கணக்குப்போட்டு அமைச்சர் ஊழல் செய்திருக்கிறார் என்று சொல்வது, அதுவும் உங்கள் பத்திரிகை முரசொலியில் சொல்வது, தினகரன் பத்திரிகையில் சொல்வது, அதை நீங்களே போட்டு அழகு பார்ப்பது, அமைச்சருக்கு அழகுதானா என்பதை முதலமைச்சருடைய கவனத்திற்கு விட்டுவிடுகிறேன்.

இன்னொரு பிரச்சினை. எம்.எம்.டி.ஏ. இந்த எம்.எம்.டி.ஏ.வைப் பொறுத்தவரையில், எம்.எம்.டி.ஏ. வருவதற்கு முன்னாலே Town and Country Planning Act) இருந்தது. நான் உங்களுக்குச் சொல்வேன். முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பாருங்கள் எம்.எம்.டி.ஏ. கூட அதை ஆட்சேபித்து இருக்கிறது என்று. நீங்கள் அழகாகக் குற்றச்சாட்டுக்களைச் சொல்ல பல்லாண்டுகளாகப் பழகியிருக்கிறீர்கள். எனக்கு அந்த அளவிற்கு அனுபவம் இல்லை. என்ன சொல்கிறீர்கள்? எம்.எம்.டி.ஏ. மறுத்ததற்குப் பின்னாலேதான், அப்பீலே கவர்ன்மென்டுக்கு வரும். எம்.எம்.டி.ஏ. ரைட்சுக்கு உட்பட்டிருந்தால், அவர்களே கொடுத்துவிடுவார்கள். கவர்ன்மென்டுக்கு அப்பீல் எதற்காக வருகிறது? ஆகவே, எம்.எம்.டி.ஏ. ஆட்சேபணை செய்ததற்குப் பின்னாலேதான், அமைச்சருக்கு, அரசுக்கு அதிகாரம் இருக்கிற காரணத்தினாலேதான், அரசுக்கு அப்பீல் வருகிறது. அந்த அப்பீலைப் பரிசீலனை செய்கிறோம். சில கோப்புகளிலே அதிகாரிகளே பரிந்துரை செய்திருக்கிறார்கள். 174-லும் அதிகாரிகளுடைய பரிந்துரை வரவில்லை என்று சொல்ல முடியாது. பலவற்றிலே அதிகாரிகள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். சிலவற்றிலே எதிர்ப்பும் தெரிவித்திருப்பார்கள், வேண்டாம் என்று சொல்லியிருப்பார்கள். ஆனால், அதற்கு விலக்கு கொடுக்கும் அதிகாரம் ஒரு அமைச்சருக்கு உண்டு. அதிகாரி சொல்வதைத்தான் செக்ரட்டரி எழுதுவதைத்தான் அப்படியே ஏற்றுக்கொண்டு ஒரு அமைச்சர் கையெழுத்து போட வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஒரு அமைச்சர் தேவையில்லை, அமைச்சரவையே தேவையில்லை. நம்முடைய கருத்துக்களை எழுதுவதில் நமக்கு உரிமை

இருக்கிறது. முடிவு எடுக்கப்பட்டு, அந்த வகையில் தான் உத்தரவு இடப்பட்டிருக்கிறது. என்ன ஜி.ஓ. போட்டாலும், ஜி.ஓ.வில் தான் லஞ்சம், ஊழல், பணம் என்று சொன்னால் நீங்களும் ஜி.ஓ. போடுகிறீர்கள். இன்னும் இருக்கப் போகிற காலங்களிலும் போடப் போகிறீர்கள். ஒவ்வொரு ஜி.ஓ.வையும் எடுத்துக்கொண்டு,அதை எல்லாம் லஞ்சம் வாங்கிக்கொண்டு தான் போட்டிருக்கிறார்கள், பணம் வாங்கிக்கொண்டு தான் போட்டிருக்கிறார்கள் என்று நாங்கள் சொன்னால் அனுமதிப்பீர்களா ? இது நியாயம்தானா ? இப்போதுகூட நான் சொல்வேன். இது முழுவதும் இந்த ஓராண்டிலே வந்த ஜி.ஓ. காப்பிகள் தான். ஒவ்வொரு துறையின் சார்பிலும் இப்படித்தான் போடப்படுகின்றன. எனவே, அப்படிப் போடப்பட்டதற்கு எல்லாம் அதிலே ஒரு '' மோடிவ் '' கற்பித்து, அதில் லஞ்சம், லாவண்யம் என்று சொல்வதே தவறு. அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன், மறுக்கிறேன், ஆட்சேபிக்கிறேன். சரி, இப்படிக் கட்டுகிறார்கள். அது நியாயம் தானா? சட்டத்திற்குப்புறம்பாக, விதிக்குப் புறம்பாகக் கட்டலாமா ? அப்படிக் கட்டினால், அனுமதி கொடுக்கலாமா என்று கேட்டால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, உங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அந்தக் கட்சிக்குக் கட்டியிருக்கிறீர்களே ஒரு கட்டிடம், அறிவாலயம், அதைச் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் கட்டியிருக்கிறீர்களா ? அதைத் தயவு செய்து விளக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : நான் ஒன்றும் குற்றச்சாட்டு சொல்லவில்லை. அண்ணா அறிவாலயம் பற்றி இப்போது ஹைக்கோர்ட்டில் வழக்கு இருக்கிற காரணத்தால் அதைப் பற்றிப் பேசக் கூடாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா அறிவாலயம் அன்றைக்குச் சட்டத்திற்குப் புறம்பாக, விதிகளுக்குப் புறம்பாகக் கட்டப்பட்டது. அனுமதி இல்லாமலேயே அது கட்டி முடிக்கப்பட்டு விட்டது. எத்தனையோவற்றிற்குக் கொடுத்திருக்கிறார்களே, இதற்கும் கொடுத்திருக்கலாமே என்று நீங்கள் கேட்கலாம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் சபாநாயகர் புலவர் கோவிந்தன் என்று நினைக்கிறேன். இந்தச் சட்டமன்றத்திலே சொன்னார். இது ஒன்றும் புதிது அல்ல. பல பேருக்கும் கொடுக்கிறோம். இதற்கும் தாருங்கள் என்று இந்த மன்றத்திலே அவர் கேட்டார், ஆனால் என்ன நடந்தது என்றால் கட்டி முடித்துவிட்டு, அரசுக்கு அப்பீல் செய்திருந்தீர்கள், முதலமைச்சர் உத்தரவு போட்டிருந்தார். கட்டி முடித்திருந்தால், அந்தக் கோப்பு முதலமைச்சருக்கு அனுப்பப்பட வேண்டுமென்பது அந்த உத்தரவு. அந்த உத்தரவின்படி நான் அந்தக் கோப்பை நிராகரிக்கக் கூட அல்ல, அந்தக் கோப்பைப் பார்த்தால் தெரியும். அதில் மறுத்து எழுதவில்லை. கொடுக்க



வேண்டாம் என்று எழுதவில்லை. அது கட்சியினுடைய கட்டிடம் என்ற காரணத்தினாலே அந்தக் கோப்பை முதலமைச்சருடைய ஆணைப்படி நான் முதலமைச்சருக்கு சுற்றனுப்பி வைத்தேன். இன்றைக்கு அதற்குப் பிறகு கவர்னருடைய ஆட்சியிலே காங்கிரஸ் பவனம். அது மட்டுமல்ல, அண்ணா அறிவாலயம். இன்னும் பல கட்டிடங்களுக்கு, 4, 5 கட்டிடங்களுக்கு கவர்னருடைய ஆட்சியிலே போட்டிருக்கிறார்கள். நான் தவறு என்று சொல்லவில்லை. போடலாம். அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்டிடம். இது உங்களுடைய முதலமைச்சருடைய சொந்தக் கட்டிடம் என்று நான் சொல்லவில்லை. தி.மு.க.-வினுடைய சொந்தக் கட்டிடம் என்று நான் சொல்லவில்லை. தி.மு. கழக கட்சிக்காக நீங்கள் பயன்படுத்துகின்ற கட்டிடம். பொது நோக்குக்காகக் கட்டியிருக்கிறீர்கள். இப்படித்தான் அண்ணா நகரிலும், நாங்களும் மற்றவர்களும் கொடுத்திருக்கிறோம். அதிலே நான் கைந்து மருத்துவ மனைகள் இருக்கின்றன. அதையெல்லாம் வரிசையாக நீங்கள் பார்த்தால் தெரியும். அதையெல்லாம் எதற்காகக் கட்டுகிறார்கள்? ஒரு கிரவுண்டில் தனியாகக் கட்டினால் கிரவுண்டிற்கு மட்டும் ரூ. 5, 6 இலட்சமாகும். அதிலே வீடு கட்டுவதற்கு இன்னும், ரூபாய் 2, 3 இலட்சங்கள் ஆகும். அந்த இரண்டு கிரவுண்டை டெவலப் பண்ணி, காம்ப்ளக்ஸ் கட்டும்போது, அதிலே 10 வீடுகள் கட்டுவார்கள். ஒரு வீடு என்பது ரூ. 1 இலட்சத்திற்கு, அல்லது ரூ. 2 இலட்சத்திற்கு முடியும். அதற்காகத்தானே இந்தத் திட்டமே இருக்கிறது. சென்னையிலே மட்டும் தான் அடுக்கு மாடி கட்டுகிறார்களா ? பெங்களூரில் இல்லையா ? கல்கத்தாவில் இல்லையா ? டில்லியில் இல்லையா ? பம்பாயில் இல்லையா ? அங்கேயெல்லாம் இந்த விதிகளைப் பயன்படுத்தித்தான் அடுக்கு மாடி கட்டுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் அதை வரவேற்கிறார்கள். இட நெருக்கடியைக் குறைக்க, மக்கட் தொகைக்கேற்ப அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கத்தானே அடுக்கு மாடி கட்டுகிறார்கள். வணிகப் பெருக்கத்திற்கு ஏற்ப அவர்களுக்கு வணிக அலுவலகங்கள் கட்டித் தர மற்ற நகரங்களிலே எல்லாம் அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து அடுக்கு மாளிகைகளைக் கட்டித் தருகிறார்கள். பம்பாயைப் போய்ப் பார்த்தால் தெரியும். முதலமைச்சருக்குத் தெரியாதது அல்ல. அப்படி அங்கேயும் அனுமதிக்கப்பட்டது. இதிலே எந்தத் தவறும் நடைபெறவில்லை. இன்றைக்கு இருக்கின்ற ஆயிரம் விளக்குத் தொகுதியில் முன்னாலே இருந்த முரசொலிக் கட்டிடம். அதை மாண்புமிகு முதலமைச்சர் இருக்கிறபோது தான் 1974-லே கிரவுண்ட் ப்ளஸ் 4, அதாவது 5 மாடியிருக்கிறது. அதிலே ஒரு விதியும் அனுசரிக்கப்படவில்லை. நீங்கள் கட்டிக்கொண்டு அனுமதி பெற்றுக்கொள்ளவில்லையா ? முரசொலி மாற்றப்பட்டதற்குப் பின்னர், ரூ. 2 இலட்சம் கேஷாகக் கொடுத்து, மாதம் வாடகை வந்து, அதை வாங்கிக்கொண்டிருக்

கிறார்களே, அது யாருக்காவது போகட்டும், எனக்குக் கவலையில்லை. அதற்குத் தரவில்லையா ? அது அனுமதிக்கப் படவில்லையா ? சொந்தத்தில் நீங்கள் அனுபவித்துக் கொள்ள வில்லையா? இதெல்லாம் நடக்கவில்லையா ? அதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே புதியதாக ஏதோ பிரம்மாஸ்திரத்தை உபயோகப்படுத்தி, அப்படியே என்னை சாய்த்து விடுவதைப் போல் முதலமைச்சரவர்கள், தினம் தினம் கோப்புகளை மேஜைமீது தூக்கி வைப்பதும், எம்.எம்.டீ.ஏ., எம்.எம்.டீ.ஏ., என்று என்னைப் பயமுறுத்துவதும், அதனால் என்னுடைய குரல்வளையை நெறித்துவிடமுடியாது. தொடர்ந்து என்னுடைய ஜனநாயகக் கடமைகளைச் செய்வேன். நீங்கள் என்ன பயமுறுத்தினாலும் சரி, என்ன வழக்குப்போட்டா லும் சரி, என்னுடைய கடமைகளை நிறைவேற்றுவேன். உங்கள் மேல் இல்லாத வழக்குகளா ? சர்க்காரியா கமிஷன் இல்லயைா? சதாசிவம் கமிஷன் இல்லையா ? இன்னும் எத்தனையோ கமிஷன்கள். இதிலே எல்லாம் நீதிபதிகள் குற்றம் சொல்லி யிருக்கிறார்கள். அவற்றைக் காண்பிக்கவா ? இவை முழுவதும் குற்றச்சாட்டுகள்தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : குற்றவாளிக் கூண்டில் தி.மு.க., தி.மு.க. ஆட்சியில் அலங்கோலங்கள், அவற்றைக் காண்பிக்கவா ? ஒவ்வொன்றாக. தனியாக சட்டமே இயற்ற வில்லையா ? பிரத்யேகமாக ஆரம்பிக்கவில்லையா ? குளோப் தியேட்டர். இவற்றைச் சொல்ல முடியாதா ? எத்தனை பிரச்சினைகள் இதுபோன்று. தனி சுயநலனுக்காக தனித்தனிச் சட்டங்களை இயற்றியே, சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்த வில்லையா உங்களுடைய ஆட்சிக் காலத்தில் ? ஆக முதலமைச்ச ராக இருக்கிறீர்கள் என்கின்ற காரணத்தினாலே யாரை வேண்டு மானாலும் எது வேண்டுமானாலும் பேசி, பழி வாங்கலாம், அவமானப்படுத்தாலம், என்று என்ன குற்றச்சாட்டுக்கள். வேண்டுமானாலும் சொல்லி பழி வாங்கலாமென்று முயற்சிப்பது நியாயம் தானா? மனசாட்சியைப் பற்றிப் பேசுகிறீர்கள். இது மனசாட்சியோடு செயல்படுகின்ற காரியம்தானா ?

(முற்பகல் 11-40)

நாளைக்கு உங்கள் மாதிரியே வந்து படிக்க முடியாதா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைத்திருக்கிறார் களே இந்த அரசு, போனதற்குப் பின்னால் தினம் தினம் இது போன்று சொல்ல முடியாதா ? அப்போது நாங்கள் வரு கிறோம் அல்லது வேறு யாரோ வருகிறார்கள். வருகிற ஆட்சி இது போன்ற அமைச்சர்களின் மீது ஊழலைக் கொண்டு



வந்து படிக்க முடியாதா ? தினம் தினம் நீங்கள் போட்டிருக்கிற ஜி.ஓ.-க்களுக்கு எல்லாம் உள் நோக்கம் கற்பிக்க முடியாதா? இது நியாயம் தானா ? தர்மம் தானா ? எதிர்க்கட்சியை முறையோடு சட்டமன்றத்திலே செயல்பட விடுகிற முறை இது தானா என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டு, என்மேலே சொன்ன அத்தனை குற்றச்சாட்டுகளையும் நான் அடியோடு மறுக்கிறேன். இதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயிருந்து நடந்து வந்திருக்கின்றன. நான் இதிலே எந்தச் சட்டத்தையும் புதியதாக இயற்றவில்லை. எந்த உரிமையையும், அதிகாரத்தையும் நான் புதியதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஹவுசிங் போர்டிலே இருக்கிற விதிமுறை களைப் பின்பற்றி, இந்த மாநிலத்திலே மட்டும் இல்லை, எம். எம்.டி.ஏ. எந்தெந்த மாநிலங்களிலேயெல்லாம் இருக்கிறதோ அங்கேயெல்லாம் என்னென்ன விதிமுறைகள் பின்பற்றப்படு கின்றனவோ அவைகளைத்தான் நானும் இங்கே பின்பற்றியிருக் கிறேன். இதிலே 2, 3 கட்சிக்காரர்களுக்குக் கொடுப்பதோ அல்லது விதியைத் தளர்த்துவதோ என்ன பிரச்சினைகள் வருகிறதோ வந்திருக்கலாம். சில ஆயிரம் பேர்கள் முயற் சிக்கிறார்கள், அதிலே போடுகிறோம். ஒருவர், இருவர் என்று கொடுத்த முறையிலே தவறு இருக்கலாம். உங்கள் காலத்திலே எத்தனை பேர்களுக்குத் தந்திருக்கிறீர்கள், ஒன்றா, இரண்டா ? மூன்று நான்கு வீடுகள் வாங்கியிருக் கிறார்கள். அமைச்சர்களே வாங்கியிருக்கிறார்கள். இப்படி எல்லாம் நடந்திருக்கிறது என்று அதை எல்லாம் எடுத்துச் சொல்லி இதிலே நான் எந்தவித தவறும் செய்யவில்லை, எந்தவித முறைகேடும் செய்யவில்லை. எனவே இது போன்ற பயமுறுத்தல், அச்சுறுத்தல் போன்ற பணிகளிலே ஈடுபட வேண்டாம். எங்களை அச்சுறுத்த முடியாது, பயமுறுத்த முடியாது, எங்களுடைய பணிகளை எதிர்க்கட்சி என்ற முறை யிலே நாங்கள் தொடர்ந்து செய்வோம் என்பதை உங்களுக் குச் சொல்லி, நீங்கள் செய்த இந்த நடைமுறை தவறு. தவறான முன் உதாரணத்தைக் காட்டுகிறீர்கள். இதையே சட்டமன்றத்திலே முன்மாதிரியாக வைத்துக் கொண்டு யாரும் எந்த அமைச்சர் மேலேயும் படிக்கலாம், முதலமைச்சர் மேலே யும் படிக்கலாம். நீங்கள் ஜி.ஓ.-வே போடாமல் ஆட்சி செய் யப்போவதில்லை. இப்போது நீங்கள் அந்த அதிகாரத்தை ரத்து செய்யுங்களேன் பார்ப்போம். எம்.எம்.டி.ஏ.-வே எடுக்க வேண்டும், அரசுக்குத் தரக்கூடாது என்று. சென்னை யிலே அடுக்கு மாளிகைகளே கட்ட மாட்டோம் என்று ஜி.ஓ. போடுங்கள். நிறைவேற்றுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் திரும்பத் திரும்பச் சொன்னதையே சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். கால நேரத்தையும் அனுசரிக்க வேண்டும். பேரவையினுடை நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக, குந்தகம் இல்லாமல் நடைபெற

வேண்டும். ரிபீட்டட் லேங்க்வேஜ், சொன்னதையே சொல்லு கிறீர்கள். சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நீங்கள் மேலே உட்கார்ந் திருக்கிற காரணத்தினாலே எது வேண்டுமானாலும் சொல்ல லாம். சொல்லாததைத் தான் சொல்கிறேன்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரும்பத் திரும்பச் சொல்லுகிறீர்கள். அதை எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நீங்கள் உங்கள் கடமையைச் சொல்லுங்கள். என்னுடைய கடமையை நானும் செய்கிறேன். அந்த அதிகாரத்தை நீங்கள் எடுக்கப்போகிறீர்களா ? மல்டி ஸ்டோரியட் பில்டிங்கே இல்லாமல் இருக்கப் போகிறதா? பத்து மாடி இல்லை 3 மாடி, 4 மாடி என்று தனித்தனியாகப் பிரித்துப் பார்த்தால் தெரியும். அந்த அதிகாரத்தை நீங்கள் எடுத்து விடப் போகிறீர்களா, எடுங்கள் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அது போல ஃபிளாட்ஸ். அலாட்மெண்ட் என்று இருப் பதை எங்கள் ஆட்சிக் காலத்திலே யாருக்கும் போடமாட்டோம் என்று சொல்லப் போகிறீர்களா என்ன ? நீங்கள் செய்யாததை நாங்கள் செய்தோம் என்று சொல்லிக்கொள்ளலாம். அதிலே எல்லாம் சீர்திருத்தம் வேண்டுமானாலும் செய்யுங்கள். எதை எடுத்தாலும் முதலமைச்சர் அவர்கள் ஒரு கணக்கை ஃபாலோ பண்ணுகிறார்கள். மார்க்கெட் ரேட் என்ன ? கொடுத்த ரேட் என்ன, இரண்டையும் பெருக்க வேண்டியது, அந்தத் தொகை யிலே 50 கோடி, 100 கோடி, 200 கோடி 13 கோடி ஊழல் என்று சொல்ல வேண்டியது. பத்திரிகையிலே அந்தக் குறிப்பு வரவேண்டியது. அதனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்து விடலாம் என்று கணக்குப் போட்டு செய் கிறீர்கள். இந்தியாவிலே மக்கள் யாரும் முட்டாள்கள் இல்லை. அதைப் படிக்கிற போது, முதலமைச்சர் சொல்வதை ஊன்றிப் படிக்கிறார்கள். முதலமைச்சர் இப்படித் தவறான விதத்திலே தவறான முறையிலே நாட்டு மக்களுக்கு நன்மையைச் செய்வ தற்குப் பதிலாக குறைகளைச் சொல்லிக் கொண்டு நேரத்தை வீணடிக்கிறார்களே என்ற உணர்வுதான் மக்களுக்கு ஏற்பட் டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே முதலமைச்சர் அவர் களுக்குச் சுட்டிக்காட்டி என்மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டு களை மறுத்து அமர்கிறேன். வணக்கம். (அ.தி.மு.க. உறுப்பி னர்கள் மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கம் என்ற பெய ராலே ஒரு நீண்ட உரையை எதிர்க்கட்சியினுடைய துணைத்



தலைவர் நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இங்கே ஆற்றியிருக் கிறார்கள். அந்த விளக்க உரையில் அவர் அடிக்கடி பயன் படுத்திய சொல், அவரைப் பயமுறுத்துகிறேன், பழி வாங்க எண்ணுகிறேன், மிரட்டுகிறேன் என்பதாகும். பிறகு தினம் தினம் பைல்களைக் கொண்டு வந்து இங்கே வைக்கிறேன் என் றெல்லாம் அவர் சொன்னார். இன்றுதான் முதன்முதலாக பைல்களை இங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறேன் அல்லாமல் வேறு எந்த நாளிலும் பைல்களைக் இங்கே கொண்டு வந்து வைக் கவில்லை. (குறுக்கீடு). நீங்கள் சொல்லுகிறீர்கள். நாங்கள் ஏன் இப்படி நடக்கிறோம் என்பதைச் சொல்லியிருக்கி றீர்கள். நான் அதை வெளியிலே சொல்லியிருக்கிறேனா. நாம் இரண்டு பேரும் தனியாகப் பேசும் போது பேசுவது தானே தவிர வேறு அல்ல. (சிரிப்பு.)

இந்த அவையில் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்கிற வகையில் சில குறைபாடுகளை நான் நேற்றையதினம் எடுத்து வைத்தேன். அதில் திட்டவட்டமாக இன்று தன்னிலை விளக்கம் அளிக்க முடியும், அந்த வாய்ப்பு இந்த அவையிலே அவருக்குக் கிடைக்கும் என்றாலும் கூட, நேற்று மாலையிலேயே பத்திரிகைகளில் அவர் இதற்கான ஒரு மறுப்பை வெளியிட்டு அதிலே அவர் குறிப்பிட்டிருக்கிறார், ஏதோ டாமின் என்பதில் (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, நான் உங்களைப் போல உடும்புப்பிடியாக எதையும் பிடித்துக் கொண்டு குற்றச்சாட்டு சொல்ல விரும்பவில்லை. எங்களுக்குத் தரப்பட்ட தகவல். அதாவது அண்ணா தி.மு.க. ஆட்சியிலே டாமினுக்கு ஏகபோகமாக ஒதுக்கி வைத்திருந்தது அதற்குப் பின்னாலே நீக்கப்பட்டு பரவலாக தனியாருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே நான் நேற்று வெரிஃபை பண்ணுகின்ற போது, அந்த ஜி. ஓ. நீங்கள் வருவதற்கு முன்னாலே 12-வது மாதம் போடப்பட்டதாக நான் அறிகிறேன். யார் செய்திருந்தாலும் அது தவறு தான். நீங்கள் செய்யவில்லை. ஜி.ஓ. பார்த்ததற்குப் பிறகு தான் தெரிகிறது. நீங்கள் வருவதற்கு. முன்னாலே போடப்பட்டது. என்னிடத்திலே தரப்பட்ட அந்த விவரத்தை வைத்து நான் சொன்னேன். அந்த ஜி.ஓ. 12 வது மாதம் போடப்பட்டு இருக்கிறது. இருந்தாலும் அது தவறு. டாமினுக்கு ஏகபோகம் பண்ணியதை தனியாருக்குக் கொடுத்தது தவறு. அதை நான் திருத்திக்கொள்கிறேன். அதற்காக நான் வெட்கப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, அவர் சொன்னதைப் பத்திரிகைகள் பெரிய அளவிலே போட்டு, இன்று காலையிலே தினமணிப் பத்திரிகை கூட ரொம்ப

அக்கறையோடு அதை வெளியிட்டு டாமின், அரசுடைமையாக இருந்ததை, தேசியமயமாக இருந்ததை தனியுடைமையாக ஆக்கி அதிலே கருணாநிதி ஊழல் செய்துவிட்டார் என்று நமது திரு. திருநாவுக்கரசு அவர்கள் கூறியதாக வெளியிட்டிருக்கிறது. அதிலே 10 கோடி ரூபாய் பணம் பெற்றதாகக் கேள்விப்படுகிறேன் என்று அவர் சொன்னதாக. ஆனால் அந்த டாமீனைப் பற்றி அவர் பிறகு விசாரித்ததைப் போலவே—அவர் இப்போது இல்லை என்று மறுக்கிறார், நன்றி—நானும் இந்த டாமீன் விவகாரம் என்ன என்று விசாரித்தபோது கவர்னர் ஆட்சிக் காலத்திலே 24—11—1988 அன்று கவர்னர் தலைமையிலே நடந்த எக்ஸிகியூட்டிவ் கமிட்டி நிர்வாகக் கூட்டத்தில் கருப்பு மற்றும் சாம்பல் நிறப் பாறைகளை வெட்டி எடுக்கிற உரிமம் வழங்குவது பற்றிய விதிமுறைகளைத் திருத்துவதைப் பற்றி விவாதித்து, தமிழ்நாட்டில் கனிமங்களை மெருகூட்டும் தனியார் தொழிற்சாலைகளுக்கு, கருப்பு மற்றும் சாம்பல் நிறப்பாறைகளை வெட்டி எடுக்கும் உரிமை வழங்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டு அதற்கேற்ப விதிகளைத் திருத்தவும் அமல்படுத்தவும் முடிவு எடுக்கப்பட்டது. அதற்கான ஆணை 9—12—1988-ல் வெளியிடப்பட்டது. அப்போது நாங்கள் ஆட்சிக்கு வரவில்லை. அதற்குப் பிறகு, ஆட்சிக்கு வந்த பிறகு கூட, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இந்த உரிமை யாருக்கும் தனிப்பட்டவர்களுக்கு தரப்படவில்லை. அப்போது போடப்பட்ட அந்தக் கமிட்டியிலே சேர்மனாக கவர்னர் திரு. அலெக்ஸாண்டர் அவர்களும், உறுப்பினராக திரு.ஜி.வி. ராமகிருஷ்ணா, அட்வைசர்-டு-கவர்னர் அவர்களும், இன்னொரு உறுப்பினராக திரு. பத்மநாபன், அட்வைசர்-டு-கவர்னர் அவர்களும், மெம்பர் செக்ரட்டரியாக, சீஃப் செக்ரட்டரி திரு.எம்.எம். ராஜேந்திரன் அவர்களும் இப்படிப்பட்ட முடிவுகளை அன்றைக்கு எடுத்திருக்கிறார்களே அல்லாமல் இது கழக ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்ட முடிவு அல்ல. தனிப்பட்ட யாருக்கும் தரப்படவும் இல்லை. எனவே நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்களே, அதைத் திருத்திக் கொண்டு அதை மறுத்துவிட்ட காரணத்தினால் அதைப்பற்றி நான் மேலும் பேச விரும்பவில்லை. ஒன்றை அவர்கள் இங்கே சொன்னார்கள். அண்ணா அறிவாலயத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் மைதானத்திலே காமராஜர் நினைவு மண்டபத்தைப் பற்றிக்குறிப்பிட்டார்கள். எனக்கு இருக்கின்ற ஆதங்கம் எல்லாம் அண்ணா அறிவாலயம் என்பதும் காமராஜர் நினைவாலயம் என்பதும், அந்த இரண்டு கட்சிகளைச் சேர்ந்தவர்களால் எந்த அளவிற்கு அன்போடு, பாசத்தோடு பாராட்டப்பட்டு உருவாக்கப்படுகிற நிலையங்கள் என்பதை நாம் யாரும் மறந்துவிடக் கூடாது. எங்களுக்கு எப்படி அண்ணா அறிவாலயம் முக்கியமானதோ அதைப் போலவே காங்கிரஸ் கட்சியினுடைய நண்பர்களுக்கும் அதனுடைய தலைவர்களுக்கும் காமராஜர் நினைவாலயம் முக்கியமானது. நான் குறிப்பிடுவது அவர் மறைந்த நேரத்திலே கிண்டியிலே கட்டப்பட்ட நினைவாலயத்தை அல்ல. தேனாம்பேட்டையிலே உள்ள காங்கிரஸ்



மைதானத்தில் காமராஜருடைய பெயரால் நினைவாலயம் ஒன்று எழுப்ப முயற்சித்து அதற்கான வேலைகள் எல்லாம், எம்.எம்.டி.ஏ. வினுடைய அனுமதியை எதிர்பார்த்து நடக்கத் தலைப்பட்டன.

(முற்பகல் 11-50)

அதைப் போலத்தான் அண்ணா அறிவாலயத்திற்கான அந்தப் பணிகளுக்காக நாங்கள் 1980 ஆம் ஆண்டிலே அரசு ஆணை 702, வீட்டு வசதி வாரியத் துறையின் மூலம் அனுமதி பெற்றோம். 1971 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு அறக்கட்டளையை உருவாக்க—அந்த அறக்கட்டளையிலே என்னுடைய அருமை நண்பர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களும் இடம் பெற்றிருந்த அந்த அறக்கட்டளை சார்பாக அப்போது ஏறத்தாழ 10, 12 இலட்சம் ரூபாய் செலவிலே 89 கிரவுண்ட் நிலத்தை இன்று உள்ள அண்ணாசாலையிலே தேனாம்பேட்டைக்கு அருகாமையிலே வாங்கினோம். ஆனால் பண வசதி இல்லாத காரணத்தினால் பல்வேறு இடர்ப்பாடுகளால் 1980இல் நாங்கள் அரசு ஆணை 702-இன்படி அண்ணா அறிவாலயத்தை எழுப்ப உரிமை பெற்றும்கூட, எம்.எம்.டி.ஏ. வினுடைய சிபாரிசும் அரசாங்கத்தால் 1980-இல் எங்களுக்குக் கிடைத்தும் கூட, நிதிநிலை பற்றாக்குறை, சிமெண்ட் தட்டுப்பாடு, கடுமையான வறட்சி நிலை ஆகியவற்றால் கட்டிடத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளே கட்டி முடிக்க முடியவில்லை. ஆனால் அதற்கான அஸ்திவாரங்கள் எல்லாம் போடப்பட்டு வேலைகள் நடைபெற்றன. இதற்கிடையே எம். எம். டி. ஏ. வில் சில விதிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டன. அந்த மாற்றங்களிலே முக்கியமானது ஒன்று, மொத்தப் பரப்பளவில் 10 சதவிகிதத்தைத் திறந்த வெளி இடமாகப் பராமரிக்க மாநகராட்சி அல்லது எம்.எம்.டி.ஏ. விடம் ஒப்படைக்கவேண்டும் என்கின்ற புதிய திருத்தம் வந்தது.

தி.மு. கழக அறக்கட்டளை 10—1—1986 அன்று ஒரு கடிதம் எழுதி, பழைய எம்.எம்.டி.ஏ. விதிகளின்படி வழங்கப்பட்ட கட்டிட அனுமதியைப் பயன்படுத்தி கட்டிடப் பணிகளை முடிக்க இயலவில்லை என்றும், எனவே, இந்தப் புதிய விதிமுறையை வற்புறுத்தாமல் கட்டிடத்தை முடிக்க கால நீட்டிப்புத் தர வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொண்டோம். எம்.எம்.டி.ஏ. சார்பில் 25—1—1986இல் அரசு வீட்டு வசதித் துறைக்கு எழுதிய கடிதத்தில் பழைய விதிகளின்படி தி.மு.க. அறக்கட்டளைக்கு வழங்கப்பட்ட கட்டிட அனுமதிக்கான காலக்கெடுவை, சட்ட விதி எண் 50-ஐத்தளர்த்தினால் தரலாம் என்றும் அல்லது புதிய விதிகளின்படி தரப்படவேண்டிய 10 சதவிகித இடத்தை அண்ணா அறிவாலயமே பூங்காவாகப் பராமரித்து வரலாம் என்ற கோரிக்கையை ஏற்று அது சம்மதிக்கப்பட்ட

19 (டி), 2, 6 விதிகளைத் தளர்த்தி அரசு ஆணையிடலாமென்றும் எம். எம். டி. ஏ. தெரிவித்தது எங்களுக்குச் சார்பாக. வீட்டு வசதித்துறைச் செயலாளர், அமைச்சரின் முடிவிற்கு அந்தக் கோப்பை, அந்த் ஃபைலை 31—1—1986இல் அனுப்பி வைக்கிறார். வீட்டு வசதித்துறை அமைச்சர் சுமார் மூன்றரை மாதம் அதை வைத்திருந்து 13—5—1986இல் அந்தக் கோப்பிலே எழுதுகிறார், அலுவலகக் கோப்பில் குறிப்பைத் தமிழிலே அனுப்புங்கள் என்று எழுதித் திருப்பி அனுப்பி விடுகிறார்; கோப்பைத் திருப்பி அனுப்ப ஒரு சாக்கு, தமிழிலே அனுப்புங்கள் என்று (குறுக்கீடு) (அப்போது நீங்கள் இல்லை) 13—5—1986 அன்று திருப்பி அனுப்புகிறார். (குறுக்கீடு) திரு. நல்லுசாமி என்று நினைக்கிறேன். தமிழில் குறிப்பு தயாரித்து மீண்டும் வீட்டு வசதித் துறை அமைச்சருக்கு 18—6—1986இல் கோப்பு செயலாளரால் அனுப்பப்படுகிறது. ஆங்கிலத்தில் இருந்ததால் அதைக் கவனிக்கமுடியவில்லையாம், தமிழிலே எழுதி அனுப்பச் சொல்லி இருக்கிறார்.

தமிழிலே எழுதி 18—6—1986இல் கோப்பு செயலாளரால் அனுப்பப்படுகிறது. 1—7—1986 அன்று அமைச்சர் அந்தக் கோப்பினை முடிவு எடுப்பதற்காக முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அனுப்புகிறார். முதலமைச்சரது அலுவலகத்திற்குச் சென்ற கோப்பு அந்த அமைச்சருக்குத் திரும்ப வரவேயில்லை. பின்னர், வேறு ஒருவர் அந்தத் துறையின் அமைச்சர் ஆகிறார். அருமை நண்பர் திரு. திருநாவுக்கரசு அமைச்சர் ஆகிறார். எனவே, முதலமைச்சர் அலுவலகத்திலேயுள்ள ஒரு அதிகாரி அந்தக் கோப்பினை மீண்டும் அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள அமைச்சருக்கு அனுப்பி அவரது கருத்தையும் அறிந்த பின்னர், தேவைப்பட்டால் முதலமைச்சருக்கு அனுப்புமாறு 5—6—1987இல், அதாவது சுமார் 11 மாதங்கள் கழித்துத் திரும்ப அனுப்புகிறார்—அண்ணா அறிவாலயத்திற்கு அனுமதி — இதற்கிடையில் — இந்த விதிவிலக்குக் கேட்கிற அனுமதி—இதற்கிடையில் ஏற்கெனவே பெற்றுள்ள அனுமதியின் அடிப்படையில் கட்டிடங்கள் சம்பந்தப்பட்ட பூர்வாங்க வேலைகளை தி. மு. கழக அறக்கட்டளை துவக்கியது.

10 சதவிகிதம் காலி இடம் ஒதுக்குவது சம்பந்தமான பிரச்சினைக்குத் தீர்வு காண சென்னை உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து, தி. மு. கழக அறக்கட்டளை சார்பாக வழக்குத் தொடர்ந்து உரிய உத்தரவைப் பெற்றுக்கட்டிடம் கட்டப்பட்டது. கோர்ட் ஆர்டரை வைத்துக்கொண்டு கட்டிடம் கட்டப்பட்டது. முந்தைய அரசின் பரிசீலனையிலுள்ள கோப்பு அப்போதும் நகரவில்லை.

பிறகு 6—7—1987 அன்று வீட்டு வசதித் துறைச் செயலாளரால் புதிய வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கு மீண்டும்



அது அனுப்பப்படுகிறது. அமைச்சர் 9—7—1987இல் முதலமைச்சரின் முடிவிற்காக அந்தக் கோப்பை அனுப்புகிறார். 9—7—1987இல் (குறுக்கீடு) நீங்கள் மறுக்கவில்லை, சிபாரிசும் பண்ணவில்லை. (குறுக்கீடு) முதலமைச்சருடைய முடிவிற்கு விடப்படுகிறது என்று அனுப்புகிறீர்கள். (குறுக்கீடு) நான் கதை தானே சொல்லிக் கொண்டு வருகிறேன், அந்த நடந்த கதையை. முதலமைச்சரின் அலுவலகத்திற்குச் சென்ற கோப்பின் கதி பின்னர் அவர் மறைகிற வரையிலே என்னவென்றே தெரியவில்லை.

9—7—1987-ல் அனுப்பப்பட்டது, மீண்டும் 23—1—1988ல் திருமதி ஜானகி அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது அவருக்குக் கோப்பு அனுப்பப்படுகிறது. அவரும் ஒன்றும் முடிவு எடுக்கவில்லை. பின்னர் குடியரசுத் தலைவர் ஆட்சியில் கோப்பு கவர்னரின் ஆலோசகருக்கு அனுப்பப்பட்டது. நாங்கள் முறையிடாமலேயே இந்தக் கோப்பு கவர்னர் ஆலோசகருக்கு அனுப்பப்படுகிறது, அலுவலகம் வாயிலாக வீட்டுவசதித்துறைச் செயலாளர் அந்தக் கோப்பிலே கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"We generally take a lenient view of the Charitable Trust promoted by Public Organisation. The proposal in para 4 above may be approved. This is one of the long pending cases in which the previous Government could not decide obviously for political reasons. The proposal is based on the recommendation of the M.M.D.A.

[Signed. Secretary, Housing.]

அரசியல் காரணங்களுக்காக இது அங்கீகரிக்கப்படாமல் இருந்தது, எனவே இதை அங்கீகரிக்கலாம் என்று கவர்னர் ஆட்சியிலே தான் கருணை பிறக்கிறது. அண்ணா அறிவாலயத்திற்கு அந்த விதிமுறைகள் பற்றி நிபந்தனைகளை நினைவூட்டி அங்கீகாரம் அளிக்கிறார்கள். அந்த 26—7—1988-லே கவர்னருடைய ஆலோசகர் கையெழுத்திட்டு அனுமதி தந்த பிறகு 5—8—1988-இல் அரசாணை எண். 1100-இன்படி ஆணை வெளியிடப்படுகிறது, அண்ணா அறிவாலயத்திற்குச் சாதகமாக.

காமராஜர் நினைவு மண்டபம். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அறக்கட்டளை, தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் காமராஜர் நினைவு மண்டபம் ஒன்றை எம்.எம்.டி.ஏ. அனுமதியை எதிர்பார்த்துக் கட்டத் தொடங்கியது. அதையும் எதிர்பார்த்துத்தான் கட்டத்தொடங்கி விட்டார்கள். 16-12-1986இல் காங்கிரஸ் கமிட்டி அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியது. 10 சதவீதம் காலி இடத்தை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும் என்ற எம். எம். டி. ஏ. விதியிலிருந்து விலக்கு அளித்து கட்டிட அனுமதி வழங்கவேண்டும் என்று காங்கிரஸ் கமிட்டியால்

கோரப்பட்டது. இந்த வேண்டுகோள் குறித்து முந்தைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசு எம்.எம்.டி.ஏ. கருத்தைக் கேட்டது. எம்.எம்.டி.ஏ. தனது 5—2—1987ஆம் தேதிய அறிக்கையில் விதிகளைத்தளர்த்தி கட்டிட அனுமதிவழங்க வேண்டும் என்ற காங்கிரஸ் கமிட்டியின் கோரிக்கையை நிராகரித்து விட்டது. இதை எம்.எம்.டி.ஏ. நிராகரித்து விட்டது, அமைச்சர் சொன்னார்—எம்.எம்.டி.ஏ. நிராகரித்தாலும் நாங்கள் அதை மீறி கையெழுத்துப் போட உரிமைபெற்றவர்கள் என்று. ஆனால் போடவில்லை. போடவில்லை (குறுக்கீடு) நீங்கள் போடவில்லை. எம்.எம்.டி.ஏ. நிராகரிக்கிறது. காங்கிரஸ் கமிட்டி கோரிக்கையை எம்.எம்.டி.ஏ. நிராகரித்து விடுகிறது. ஆணைக்காக அந்தக் கோப்பு வீட்டு வசதித்துறை அமைச்சருக்கு 26-2-87இல் சுற்றோட்டத்தில் அனுப்பியபோது அமைச்சர் எந்தவிதப் பரிந்துரையும் செய்யாமல் மேல் முடிவுக்காக முதலமைச்சருக்கு 11—7—1987இல் அனுப்பிவிடுகிறார். ஆனால் முதலமைச்சர் ஆணை எதையும் பிறப்பிக்கவில்லை. கோப்பு திரும்பவும் அலுவலகத்திற்கே வந்து விடுகிறது. முதலமைச்சர் பார்வைக்கு இவர் அனுப்புகிறார், அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் கோப்பை அனுப்புகிறார், முதலமைச்சர் எந்த ஆணையையும் பிறப்பிக்காமல்—ஆணை பிறப்பித்தால், அனுமதி கொடுப்பதாக ஆகிவிடுமே—எனவே அனுமதி மறுக்கவும் செய்யாமல், கொடுக்கவும் செய்யாமல் திரும்ப அலுவலகத்திற்கே வந்து விடுகிறது. மீண்டும் ஒரு முறை கோப்பு சுற்றுக்கு அனுப்பப்பட்டபோது அப்போதும் முதலமைச்சர் எவ்வித முடிவும் எடுக்காமல் கோப்பு, திரும்ப அனுப்பப்பட்டுவிடுகிறது. குறுகிய காலத்திலே திருமதி ஜானகி இராமச்சந்திரன் அம்மையார் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பு வகித்தபோது மறுபடியும் கோப்பு ஆணைக்காக சுற்றோட்டத்தில் அனுப்பப்பட்டது. ஆனால் அப்போதும் ஆணை எதுவும் பிறப்பிக்காமல் கோப்பு அந்தத் துறைக்கே திரும்ப வந்து விடுகிறது. கவர்னர் ஆட்சியில் 23—2—1988 அன்று மீண்டும் கோப்பு ஆணைக்காக அனுப்பப்படுகிறது. இதில் வீட்டுவசதித் துறைச் செயலாளர் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார். அதாவது திராவிட முன்னேற்றக் கழகக் கோப்பும், காங்கிரஸ் கோப்பும் சேர்ந்து போகிறது கவர்னர் ஆட்சியிலே. யாராலே யாருக்கு நன்மையோ தெரியவில்லை; எங்களால் உங்களுக்கோ அல்லது உங்களால் எங்களுக்கோ தெரியவில்லை. அதிலே எழுதுகிறார் அவர்

"The construction is nearing completion. Nothing much can be done now to set things right. It is ventured by a Charitable Trust and the Kamaraj Memorial will satisfy the long felt need of the country. We may issue the planning permission. The file relating to D. M. K. Charitable Trust has already been put to the Adviser." என்று.

ஆக சேர்ந்து இணைந்து 2 பேரும் வந்து இருக்கிறோம்; இப்போது இணையாவிட்டாலும் (சிரிப்பு) கோப்பில் இணைந்து. ஆக



இறுதியாக அந்தக்கோப்பில் ஆலோசகர் 26-7-1988இல் ஒப்புதல் அளித்து, அரசு ஆணை, எங்களுக்கு என்றைக்கு ஆணை வருகிறதோ அதே நாளில், 5—8—1988-இல் வெளியிடப்படுகிறது. நான் சொல்வதெல்லாம், இப்படியெல்லாம், அறக்கட்டளைகளுடைய கோரிக்கைகள் கேட்பாரற்று, நத்தை வேகத்தில் நகர்ந்து, ஆமை வேகத்தில் ஊர்ந்து, முதலமைச்சர் அலுவலகத்திலேயிருந்து, திரும்பித் திரும்பி, அதிகாரிகளுடைய ஆணைகளை, அவர்களுடைய அபிப்பிராயங்களை எல்லாம் அமைச்சர் அவர்கள் மறுக்க உரிமை இருந்தும், மறுக்காமல், முதல் அமைச்சர் அவர்களுடைய முடிவுக்கே விட்டு விட்டு, இவ்வளவு காலதாமதமாக, இடையில் கவர்னர் ஆட்சி வந்த ஒரே. ஒரு காரணத்தால் காமராஜர் மணடபத்திற்கும், அண்ணா அறிவாலயத்திற்கும் அனுமதி கிடைக்கக் கூடிய அளவிற்கு தாமதம் ஏற்படுகிறது. ஆனால் இதே சூழ்நிலையில், மற்ற ஜட்டங்களுக்கு எவ்வளவு அவசரமாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன என்பதற்கும் ஒருசில உதாரணங்களை மாத்திரம் தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

(நண்பகல் 12–00)

சென்னையில், ஆழ்வார்பேட்டையிலே, டி. ஆர். சீனிவாசன் என்பவருக்கு 6 மாடிக் கட்டிடம் கட்ட எம்.எம்.டி.ஏ. 22—11—1987 அன்று முதலில் மறுக்கிறது. பிறகு 24—11—1987இல் அரசுக்கு அவர் மேல்முறையீடு, அப்பீல் செய்கிறார். எம்.எம். டி. ஏ. மறுத்த அதே காரணங்களைச் சுட்டிக்காட்டி அந்த மனுவை மறுத்துவிடலாம் என்று துறையின் சார்பில் கோப்பு மறுபடியும் அனுப்பப்படுகிறது. அதே காரணத்தைச் சுட்டிக்காட்டி மறுபடியும் அதை மறுக்கிறார். அந்தக் கோப்பிலே உதவி பிரிவு அலுவலர் முதல் செயலாளர் வரை ஒரே நாளில் அதாவது 23—12—1987இல் கையெழுத்து இடுகிறார்கள். 23—12—1987, இதை நினைவிலே வைத்துக் கொள்ளவேண்டும். மறுநாள்தான் அருமை நண்பர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் மறைந்தார் தம்மை விட்டு. இந்தக் கோப்பில், அமைச்சர் 30—12—1987 அன்று விதிகளுக்கு விலக்கு அளித்து 4, 5, 6-ஆவது மாடிகளைக் கட்டிக்கொள்ள அனுமதி கொடுத்து, எழுதி கையெழுத்துப் போடுகிறார். அலுவலகக் குறிப்பிலே அமைச்சர் 30—12—1987 அன்று கையெழுத்துப் போட்டு, அது மீண்டும் திரும்பி அலுவலகத்திற்கு வந்து, அன்றைக்கே ஆணை பிறப்பிக்கப்படுகிறது. அதுமாத்திரமல்ல, அந்த ஆணையை, அந்த மனுதாரருக்குத் தபாலில்கூட அனுப்பவில்லை. அந்த நபருக்குப் பதிலாக, அந்த மனுதாரருக்குப் பதிலாக, ஒருவர் நேராக அலுவலகத்துக்கு வந்து அரசு ஆணையைப் பெற்றுக்கொண்டு, கையெழுத்துப் போட்டுக் கொடுத்ததோடு, அரசு அச்சகத்திற்கு அனுப்ப வேண்டிய ஆணை காப்பியையும் அவரே பெற்றுச் சென்றிருக்கிறார். என்றைக்கு கையெழுத்து

போடப்படுகிறதோ அன்றைக்கே, அங்கீகரிக்கப்பெற்ற அன்றைக்கே, தபாலில்கூட அனுப்பாமல், நேராக வரவழைத்துக் கொடுத்து இருக்கிறார்கள். அந்த ஃபைல் எல்லாம் கையிலே வைத்து இருக்கிறேன்.

இன்னொன்று, ஏ. கணேசன் என்பவர், இராதாகிருஷ்ணன் சாலையிலே அடுக்கு மாடிக் கட்டிடம் கட்ட, விதிகளைத் தளர்த்தி ஆணை பெற்றிருக்கிறார். (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கோப்பிலே அமைச்சர் உத்தரவிட்டு அலுவலகத்திற்கு அனுப்புவதோடு அமைச்சரின் பணி முடிகிறது. பின்னாலே, நீங்கள் சொன்னதெல்லாம் அலுவலகத்திலே நடைபெறுகிற பணிகள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நானும் அமைச்சர் என்று சொல்லவில்லையே, உடனடியாக வந்து வாங்கிக் கொண்டு சென்றுவிட்டார்கள். சாயந்திரமே வாங்கிக் கொண்டு சென்று விட்டார்கள். அதைத்தான் சொன்னேன். அரசு ஆணை எண். 1098. தேதி 20—12—1984இல் எம்.எம்.டி.ஏ. இப்படி அனுமதி அளித்தது சரியல்ல என்றும் அதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும், 11—1—1985 அன்று அரசுக்கு எழுதி யது. அதற்கிடையில் திரு. கணேசன் கட்டிட வேலைகளை மேற்கொண்டிருக்கிறார். கோப்பு 25—4—1985 அன்று விரி வான அலுவலகக் குறிப்புடன் ஏற்கெனவே அரசு எடுத்துள்ள முடிவை அமல்படுத்திஆணையிடலாமா அல்லது எம்.எம்.டி.ஏ.வின் கருத்துப்படி பழைய உத்தரவை ரத்துச் செய்யலாமா என்று ஆணை கேட்டு சுற்றுக்கு அனுப்பப்பட்டது. அப்போதைய வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. நல்லுசாமி கோப்பை 10—5—1985-இல் முதலமைச்சரின் முடிவிற்கு அனுப்பினார். முதல்வர் முடிவு எதுவும் எடுக்கவில்லை. அதன் பிறகு ஏறத்தாழ 1-1/2 ஆண்டுக் காலம் அந்தக் கோப்பில் எந்த நடவடிக்கையும் இல்லை. இதற்கிடையில் வீட்டு வசதித் துறை அமைச்சரும் மாறி அன்பர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் அமைச்சராகிவிட்டார். திரு.எம்.ஜி. ஆர். மறைந்த பிறகு 28—12—1987 அன்று அமைச்சர் அவர்கள் அந்தக் கோப்பிலே பின்வருமாறு உத்தரவு போடுகிறார்: ''மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பேசப்பட்டது. 5 மாடி வரை அனுமதி வழங்க முதல்வர் அவர்கள் சம்மதம் தந்து அதன் அடிப்படையில் இதேபோல நிறுத்தப்பட்டிருந்த சில கோப்புகளிலும் முதல்வர் அவர்களால் 5 மாடிக்கு உத்தரவு இடப்பட்டுள்ளது. கட்டிடம் முன்னமே கட்டி முடிக்கப்பட்டு விட்டதால், மீறப்பட்டுள்ள அனைத்து விதிகளில் இருந்தும் விலக்கு அளித்து 5 மாடி வரை அனுமதி வழங்கி உத்தரவிடலாம்'' என்று இந்த அமைச்சர் உத்தரவிடுகிறார். திரு. எம். ஜி. ஆரிடம் பேசப்பட்டதாக. ஆனால் திரு. எம். ஜி. ஆரோடு பேசப்படக் கூடிய சூழ்நிலை இருந்ததா என்றால் இல்லை. எப்படி ?



28—12—1987 அன்று அதாவது முதலமைச்சர் எம். ஜி.ஆர். மறைந்த 4-வது நாள் முதலமைச்சரோடு பேசப்பட்டதாகக் கூறி ஆணை பிறப்பிக்கிறார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் ஏற்கெனவே சொன்னதைப் போல நீங்கள் உங்களுடைய கற்பனைத் திறனைத் தயவுசெய்து இதிலே காட்டாதீர்கள். ஏற்கெனவே 5 மாடிக்கு சி.எம்.மே கையெழுத்துப் போட்டிருக்கிறார். இதே மாதிரி, ஒரே ஃபைலில் 5, 6 ஃபைல்ஸ் அனுப்பப்பட்டன. அதில் ஏற்கெனவே திரு. இராம வானந்தம் போட்டு, திரு. எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் இருக்கும் போது போட்டு, அவர் வந்து நிறுத்தி வைத்தார். அதாவது திரு. நல்லுசாமி வந்து நிறுத்திவைத்திருந்தார், திருப்பி முதலமைச்ச ருக்குப் போகும்போது, 4, 5 ஃபைல்களில் கையெழுத்துப்போட் டிருக்கிறார், 2, 3 கோப்புகள் இருந்தன. இது சம்பந்தப்பட்ட இதேமாதிரியான கோப்புகளில் முதலமைச்சரே கையெழுத்துப் போட்டிருக்கிறார். அவருடன் பேசினேன் என்று சொல்லி, நானும் போட்டிருக்கிறேன். அது அல்லாமல் செத்தவரோடு பேச முடியுமா ? இவை எல்லாம் பத்திரிகையில் வரவேண்டு மென்றால் சொல்லுங்கள், நன்றாக இருக்கும். என்னென்ன சொல்ல வேண்டுமோ அதை எல்லாம் சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : செத்தவரோடு பேசப்படுமா என்றுதான் நானும் ஆச்சரியப்பட்டுக் கேட்கிறேன். எப்படி முடியும்? அதுதான் எனக்கு இருக்கிற ஆச்சரியம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : இல்லை. இந்தமாதிரி பத்திரிகை யில் வரவேண்டும் என்பதற்காக நீங்கள் என்ன பிளான் பண்ணிச் சொல்கிறீர்கள் என்பது தெரியாதா ?' சொல்லுங்கள், பத்திரிகை யில் வரட்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்கள் இவ்வளவு வேகமாகப் பேசும்போது நான் எவ்வளவு பொறுமையாக உட் கார்ந்திருந்தேன். (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது நான் பொறுமையாக உட்கார்ந்திருந்தேன். நீங்கள் சிக்கல் உண்டாக்கு கிற மாதிரிப் பேசக் கூடாது. நீங்கள் விளக்கம் வேண்டு மானால் சொல்லுங்கள். நானும் விளக்கம் கொடுக்கிறேன். எனவே, தயவு செய்து விளக்கம் இருந்தால் சொல்லுங்கள்.

இந்த மாதிரியே இன்னொன்று: சென்னை மெசர்ஸ் அபக்ஸ் பில்டர்ஸ் நிறுவனம், 6 மாடிகள் கொண்ட கட்டிடம் ஒன்று கட்டுவதற்காக அனுமதியைக் கோருகிறார்கள். இந்தக் கோப்பு சுற்றுக்கு அனுப்பப்படுகிறது. 20—4—1986 இல் அமைச்சர் திரு. நல்லுசாமி முதலமைச்சருக்கு கையெழுத்துப்போட்டு அனுப்பு கிறார். அந்தக் கோப்பில் முதலமைச்சர் அவர்கள் ''பேசவும்'' என்று எழுதுகிறார். முதலமைச்சர் ''ஸ்பீக்'' என்று போட்டு, பேசவும் என்று தமிழிலே முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் திரு. நல்லுசாமிக்கு எழுதுகிறார்.

17–8–1986 அன்று கையெழுத்துப் போடுகிறார். பேசவும் என்று எழுதி கையெழுத்துப் போடுகிறார். ஆனால் அதுபற்றி முதலமைச்சரோடு பேசப்படவே இல்லை. எல்லாக் கோப்பு களையும் பார்த்தாலும் பேசப்பட்டதற்கான தகவலே கிடை யாது. வீட்டுவசதித் துறைக்குப் புதிய அமைச்சர் 21–10–1986-ல் திரு. திருநாவுக்கரசு பொறுப்பு ஏற்கிறார். 22–10–1986 அன்று வீட்டுவசதித் துறை அமைச்சரின் உதவியாளர் அந்தக் கோப்பில் ''வீட்டுவசதித் துறை அமைச்சர் முதலமைச்சரோடு பேசவில்லை'' என்ற குறிப்போடு துறைக்குக் கோப்பைப் திரும்ப அனுப்புவதாகக் கூறி, அதுவும் தட்டச்சு செய்யப்பட்ட கோப்பில் ஒரு பேப்பரின் மீது ஒட்டி அனுப்பப்படுகிறது.

புதிய வீட்டுவசதித் துறை அமைச்சருக்கு கோப்பு மீண்டும் 28–10–1986 இல் அனுப்பப்படுகிறது. 1986 ஆம் ஆண்டு அக்டோ பர் மாதம் அனுப்பப்பட்ட இந்தக் கோப்பு திரு. எம்.ஜி.ஆர். இறந்த மாதம் வரை தூங்கிக் கொண்டிருக்கிறது. திரு. எம்.ஜி.ஆர் டிசம்பர் 24 ஆம் தேதி இறந்து விடுகிறார். அதே மாதம் 22 ஆம் தேதி அந்தக் கோப்பில் அமைச்சர் என்ன எழுதுகிறார் தெரியுமா? 22 ஆம் தேதி திரு. எம்.ஜி.ஆர். நிலை என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். அப்போதே அவருக்கு முடியாத நிலை. நேரு சிலைத் திறப்பு விழாவுக்காக பிரதமர் திரு. ராஜீவ் காந்தி வந்தபோது கூட அந்த மேடையில் ஏற முடியாமல் அவர் தத்தளித்தது எல்லாம் தெரியும். 22 ஆம் தேதி கோப்பில் அமைச்சர் என்ன எழுதுகிறார் என்றால் மாண்புமிகு முதலமைச்ச ரோடு பேசப்பட்டது; 5 மாடி வரை அனுமதி வழங்க முதலமைச் சர் சம்மதம் தந்து, அதே அடிப்படையில், இதைப் போல நிறுத் தப்பட்டிருந்த சில கோப்புகளிலும் 5 மாடிக்கு உத்திரவிடப் பட்டுள்ளது; எனவே, 5 மாடி வரையில் அனுமதி வழங்க உத்திர விடலாம். என்று இவ்வாறு எழுதி, 22 ஆம் தேதி அன்று அந்தக் கோப்பிலே அமைச்சர் கையெழுத்துப் போட்டிருக்கிறார்.

மற்ற கோப்புகள் அமைச்சர் கையெழுத்திட்ட அன்றைய தினமே ஆணை வெளியிடப்பட்டதைச் சுட்டிக்காட்டினேனே, அதைப் போல இத்தனை மாத காலம் தூங்கிய கோப்பு 22 ஆம் தேதி கையெழுத்திட்டவுடன் ஆணை பிறப்பிக்கப்பட்டதா? கிடையாது. என்ன காரணம்? அமைச்சர் 22–12–1987 ஆம் தேதி கையெழுத்திட்டிருந்தாலும் 28–12–1987 அன்றுதான் துறைக்கு கோப்பு திரும்ப வந்துள்ளது. துறையில் கோப்பு பார்க்கப்பட்ட அன்றே 28 ஆம் தேதியே துணைச் செயலாளர் உடனடியாக ஆணை வெளியிடும்படி எழுதியிருக்கிறார். அரசு ஆணை வெளியிடுகிறது.

அதைப் போல தேவராஜ் கார்டியா என்பவர் மிக முக்கிய மானவர். அண்ணாசாலையில் அமைந்த 5 மாடிக் கட்டிடத்தில்



மேற்கொண்டு 4 மாடி கட்ட அனுமதி கோரிய போது எம்.எம். டி.ஏ. மறுக்கிறது. அரசுக்கு மேல் முறையீடு செய்த போது வீட்டுவசதித் துறைச் செயலாளர் ''இந்த மேல்முறையீட்டை அனுமதித்தால் தளப்பரப்பு விதிகள் வெகுவாக மீறப்படும்'' என்றும், இதை அனுமதிக்கக் கூடாது என்றும் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

'' If the proposal for 9 floors is agreed to, the extent of F.S.I. violation may be very large and it is not advisable to allow such violation, since it will lead to a lot of violation. The file was earlier circulated to C. M. since the party had already constructed five floors and had come to Government for post facto regularisation In the present case, the party has not commenced con struction beyond five floors. The Minister (Housing) will have to take a decesion on the petition keeping in view the large F. S. I. violation involved.''

(பிற்பகல் 12-10).

இப்படிப்பட்ட இந்த க்கோப்பில் துறைச் செயலாளரிடம் இருந்து2 6–7–1985 இல் அனுப்பப்பட்ட கோப்பில், அமைச் அவர்கள் 26–12–1987 அன்று—நான் அன்றைக்குச் சொல்லும் போது கூட நான்கு நாட்கள் என்று சொல்லிவிட்டேன், ஆனால் 26 ஆம் தேதி. திரு. எம். ஜி. ஆர். புதைக்கப் பட்டது 25 ஆம் தேதி. ஆக 26 ஆம் தேதி—திரு. எம். ஜி. ஆர். இறந்த இரண்டாவது நாள் ஆணை யிட்டிருக்கிறார். ''Relevant violated (Development Control)– rules may be relaxed and planning permission may be issued for construction of multi-storeyed building block 6, 7, 8 and 9th floors'' என்று கையெழுத்து இடுகிறார். இதுவும் கூட 31–12–1987 அன்று அந்த ஆணை வெளியிடப்பட்டு, அதாவது அவர் பதவியில் இருந்த கடைசி நாளன்று இந்த ஆணை வெளியிடப்பட்டு அதே நாளில் விண்ணப்பதாரருக்கு ஆணையின் நகல் நேரடியாக வழங்கப்படு கிறது. ஒப்புதல், ''அக்னாலஜ்மென்ட்'', பெற்றுக் கொண்டு அவரிடமே அன்றே, அரசு அச்சகத்திற்கான ஆணை நகலும் அன்றைக்கே அவருக்குக் கொடுக்கப்பட்டு விடுகிறது. இதே போல் இன்னும் பல இருக்கின்றன. அவற்றை நான் சொல்லிக் கொண்டே போக விரும்பவில்லை. ஏதோ அமைச்சர்களாக இருப்பவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டதாகச் சொல்லியிருக் கிறார்கள். விதியை மீறி எது கொடுக்கப்பட்டிருந்தாலும் அது கண்டிக்கத்தக்கது தான். பொது இடங்களில் அதாவது பூங் காக்கள், சமூகக் கூடங்கள் போன்ற இவைகளுக்காக ஒதுக்கப் பட்டுள்ள இந்த இடங்களை வீட்டுவசதிக்காகத் தரக்கூடாது என்ற விதியை மீறி இருக்கிறது என்று தான் சொல்லப்பட்டது. அதைப் போல், அவசரம், அவசரமாக இப்படிப்பட்ட முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆனால் அண்ணா அறிவாலயத்திற்கும், காம

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 ஏப்ரல் 5

ராஜர் நினைவு மண்டபத்திற்கும் காட்டப்படாத அவசரமும், முக்கியத்துவமும் இவைகளுக்குக்காட்டப்பட்டதன் மர்மம் என்ன என்பதைத் தான் நான் நேற்றைய தினம் பொது நோக்கோடு எடுத்து வைத்து இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னேனே தவிர அருமை நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்களைப் பழி வாங்க வேண்டும் என்றோ அல்லது வேறு எந்த உள்நோக்கத்தோடோ இதைச் சொல்லவில்லை என்பதை மீண்டும், மீண்டும் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தன்னிலை விளக்கம். ஏன் என்றால் நேற்றைய தினம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே ஒரு அறிக்கை வைத்ததை ஒட்டி நேற்று மாலைப் பத்திரிகைகளில் நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் செய்திகளைச் சொல்கிற நேரத்தில் என்னுடைய பெயரை இணைத்துச் சொல்லியிருப்பதன் காரணத்தாலும், இன்றும் அவர் பேசுகிற நேரத்தில் அமைச்சர்களில் சிலர் என்று—குறிப்பிட்டு பெயரைச் சொல்லாவிட்டாலும்—சொல்லி ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். என்னுடைய பெயர் நேற்றைய தினம் பத்திரிகைகளில் வந்திருக்கிற காரணத்தாலே ஒரு விளக்கத்தைத் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

1966-67ஆம் ஆண்டில் அண்ணா நகர் உருவாக்கப்பட்ட நேரத்தில் வீட்டுவசதி வாரியம் பொதுமக்களிடமிருந்து வீட்டு மனைகளை ஒதுக்க விண்ணப்பங்கள் கோரியது. அப்போது விண்ணப்பித்தவர்களில் நானும் ஒருவன். எனக்கு ஒதுக்கப்பட்ட மனை வீட்டுவசதி வாரியத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு ஒதுக்கப்பட்டது. வீட்டுவசதி வாரியத்தில் விதிமுறைகளைத் தளர்த்தியோ, எம். எம். டி. ஏ. அனுமதி இல்லாமலோ எனக்கு மனை ஒதுக்கப்படவில்லை. அத்தோடு வீட்டுவசதி வாரியம் பொதுமக்கள் நன்மைக்காக ஒதுக்கி இருந்த பார்க் போன்ற இடங்களை மாற்றியும் எனக்கு இடம் ஒதுக்கவில்லை. மேலும் கட்டிடம் கட்ட பிளான் அப்ரூவல் கூட 1975 ஆம் ஆண்டு எம். எம். டி. ஏ. வழங்கியது. ஆனால் 1976 ஆம் ஆண்டு ஜனவரி 31-ஆம் தேதி மாலை 6 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி கலைக்கப்பட்டு அன்று இரவு 12 மணிக்கு மிசா சட்டத்தின் கீழ் நான் கைது செய்யப்பட்டேன். ஓராண்டுக் காலம் மிசா கைதியாக சிறைச்சாலையிலே இருந்த காரணத்தால் கட்டிடத்தை உரிய காலத்தில் கட்ட முடியவில்லை.

கட்டிடம் கட்டக் கொடுத்திருந்த கால அவகாசம் முடிந்து விட்டது. 1977 இல் மிசா சட்டத்திலிருந்து விடுதலை வழங்கப்பட்டதும், 1978 ஆம் ஆண்டு அ. தி. மு. க. ஆட்சி நடந்தபோது ப்ளான் அப்ரூவலுக்காக அனுப்பி இருந்தேன். (குறுக்கீடு)—தவ



1989 ஏப்ரல் 5] [திரு. நா. வீராசாமி]

றான கருத்து மக்கள் மத்தியில் வந்தாவிட்டது. — அப்போது என்மீது பற்றும், பாசமும் கொண்ட அ. இ. அ. தி. மு. க. அரசு ரெனுவல் பிளானை எடுத்து வைத்துக்கொண்டு டிலை ஒதுக்கிய திலிருந்து ப்ளான் அப்ரூவல் செய்தது வரையில் ஏதாவது முறை கேடுகள் இருக்கின்றனவா என்று சுமார் இரண்டாண்டுக்காலம் எல்லாக் கோப்புகளையும் சரிபார்த்து எந்த விதிமுறையும் மீறப்படவில்லை என்று தெரிந்ததும் எனக்கு ப்ளான் ரெனுவல் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும் எனக்குக் கொடுக்கப்பட்ட மனை ஒதுக்கீட்டில் ஏதாவது ஒழுங்கீனம் உள்ளதா என்று 1979 ஆம் ஆண்டு, எமர்ஜென்சி காலத்தில், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரால் எழுப்பப்பட்ட அந்தப்பிரச்சினைக்கு, முன்பிருந்த ஆளுநர் அவர்களுடைய ஆட்சியில் தமிழக அரசு கோப்புகளை எல்லாம் பரிசீலனை செய்து, முறையாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என அன்றைய ஆட்சியும் முடிவுக்கு வந்தது.

அதுமாத்திரமல்ல. வருமான வரி அதிகாரிகளுக்கும் இந்தப் பிரச்சினை அனுப்பப்பட்டு, அதிலே அவர்களும் அதிகக் கவனம் செலுத்தி, நான் மிசா-விலே இருந்தபோது சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பின்னர் வருமான வரி அதிகாரிகள் வீட்டுவசதி வாரியத்திலே சென்று கோப்புகளையெல்லாம் சரி பார்த்து ஒதுக்கப்பட்ட மனையில் எந்த முறைகேடும் நடைபெறவில்லை என்று கருதி என் மீது எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் திரும்பப் பெறப்பட்டன என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 8. தீர்மானம்

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரம் வீசியவர்மீது நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓா அறிவிப்பு:

இன்று முற்பகல் சுமார் 10-20 மணிக்குப் பார்வையாளர்கள் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீசிய சென்னை நந்தம்பாக்கம், எஸ். எஸ். போஸ் தெருவில் குடியிருக்கும் ராமசாமியின் மகன் வெண்பா வீராசாமி என்று சொல்லிக் கொள்ளும் நபர் தற்போது பேரவைக் காவலரின் காவலில் இருக்கிறார். விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அவரது செய்கை அவையினுடைய உரிமைமீறிய செயலாகும் என்பதைப்பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது குறித்து மாண்புமிகு பேரவையின் முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள். (குறுக்கீடுகள்).

**திரு. எம். அப்துல் லத்தீப் :** அந்த முறை தப்பு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** தமிழ் அறிஞர் ஒருவர்தான் இப்படிப் போட்டிருக்கின்றார்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்திற்கு நண்பர் திரு. திருநாவுக்கரசு, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதைப் போல ஆலோசனை வழங்க எல்லோருக்கும் உரிமையுண்டு. இந்த அவை சில நேரங்களிலே அதிர்ச்சி அடையக்கூடிய முறையில், அவையிலே உள்ளவர்கள் ஏதோ ஒருவிதமான நோக்கம் உள்ளது என்று எண்ணப்படும் வகையில் நடந்து கொள்வதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. எனவே இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

"இன்று முற்பகல் சுமார் 10-20 மணிக்குச் சட்டமன்றப் பார்வையாளர்கள் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசிய உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள, சென்னை நந்தம்பாக்கம், எஸ்.எஸ். போஸ் தெருவில் குடியிருக்கும் ராமசாமியின் மகன் வெண்பா வீராசாமி என்று சொல்லிக்கொள்ளும் நபர் இந்தச் சட்டமன்றத்திலே நடைமுறைக்கு மாறாகப் பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய செயல் இப்பேரவையை அவமதிக்கும் பெருங்குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது. இருப்பினும், இன்று பிற்பகல் 1 மணி வரை அவரைச் சட்டமன்றப் பேரவைக் காவலர் காவலில் வைக்கலாம்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

**7. விதி 109-இன் கீழ் உறுப்பினர் தன்னிலை விளக்கம்—தொடர்ச்சி.**

**சென்னையில் வீட்டுவசதி வாரியமனை ஒதுக்கீடு, அடுக்கு மாடிக் கட்டிட அனுமதி ஆகியவற்றில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை—தொடர்ச்சி.**

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள் தனிப்பட்ட முறையிலே வருத்தப்பட்டுப் பேசுவது போல நான் உணர்கிறேன். அவரைக் குறைசொல்வதற்காகவோ அல்லது குற்றம் சாட்டவோ சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. நான் சொல்வது, இரண்டு பேர்கள், அ.தி.மு.க. வினர் என்று சொன்னதால் சொன்னேன். இதை நான் தப்பு என்று



சொல்லவில்லை. அந்தந்த ஆட்சியிலே அந்தந்தக் கட்சியிலே ஆயிரம் பேர்கள் போடுகிறார்கள். அப்படிப் போடுகிறபோது 10 பேர், 20 பேர் வந்து இருப்பார்கள். இதுமாதிரி பலபேர்கள் வாங்கியிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் நான் சொன்னேனே தவிர, தனிப்பட்ட முறையிலே அவர்மீது களங்கம் கற்பிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. சட்டப்படி அவர் வாங்கி இருக்கிறார். அதுபோல மற்றவர்களும் வாங்கியிருப்பார்கள் என்பதற்காகத்தான் நான் சொன்னேன்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் இங்கு 109 ஆவது விதியைச் சுட்டிக்காட்டி, தன்னிலை விளக்கம் என்ற முறையில் நீண்ட உரை நிகழ்த்தி இருக்கின்றார்கள். இந்த விதியின்கீழ் எந்த அளவுக்கு ஒரு உறுப்பினர் சர்ச்சைக்குரிய, விவாதத்திற்குரிய பிரச்சினையை எழுப்ப முடியும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** அது முடிந்துவிட்டது.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** அது முடிவு பெற்று இருந்தாலும் விதி வேண்டுமா இல்லையா? அவையின் நேரத்தை வீணடித்துக்கொண்டு இருந்தால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சரி, அதை விட்டுவிடுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அருமை நண்பர் திரு. லத்தீப் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். வேளாண்மை மானியம் அப்படியே நிற்கிறது. இன்று அவைத் தலைவரவர்கள் இடத்திலும், மற்றவர்களிடத்திலும் பேசி நாம் உரிமை பெற்றிருப்பது, இன்று இரண்டு மணி வரையிலே இந்த அவை நேரத்தை நீட்டித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்குப் பிறகு இன்று நிகழ்ச்சிகளை முடிக்கலாம் என்று. எதிர்க்கட்சியில் உள்ள தலைவர்களோடு பேசப்பட்டது. நீங்களும் அதை ஏற்றுக்கொள்வீர்கள் என்று கருதுகிறேன். அது குறித்து தலைவர் அவர்கள் அறிவிப்புச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

(முற்பகல் 12-20)

(திரு. திருநாவுக்கரசும், திரு. அப்துல் லத்தீபும் எழுந்து நின்றார்கள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டு பேருமே உட்காருங்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது அவையினுடைய மிக முக்கிய மான பிரச்சினை. அவர் அப்படிச் சொல்லலாமா? He says that it is infructuous. Even if it is infructuous and even though he has talked, I have every right to bring it to the knowledge of the House because this concerns the procedure. It should be according to the Rules. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அனைத்து உறுப்பினர்களும் உட்கார வேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, on a point of order. நேற்றைக்கு தவறான விதியின்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து, எங்களைப் பழிவாங்கும் நோக்கத்தில் ஒன்றைப் படித்தார்கள் என்கிற குற்றச்சாட்டைச் சொல்லி, இது ஒரு தவறான முன் உதாரணமாக ஆகி, மாண்புமிகு முதலமைச் சருக்கும் பின்னாலே வரும் காலங்களில் இந்த நடைமுறை பின்பற்றப்படும்போது இப்போது இருப்பவர்களுக்கும் அது ஆபத்துதான் என்பதைச் சுட்டிக்காட்டி இதற்குக் கண்டனம் தெரிவித்து நாங்கள் அ.தி.மு.க வினர் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய கண்ணியத்தைக் குறைப்பதற்காக திரும்பத் திரும்ப ஏதோ தாங்கள் உத்தமர்களைப் போல, யோக்கியர்களைப் போலப் பேசுவது (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னதால் இது எல்லாம் வரும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நேற்று சில விவரங்களை எடுத்துச் சொன்னேன். பொது நோக்கில் ஓர் அறிக்கை வைக்க லாம் என்று தலைப்பிலே சில விவரங்களை எடுத்துச் சொன்னேன். (குறுக்கீடுகள்). அதற்கு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தன்னிலை விளக்கம் என்கின்ற பெயரால் நீண்ட நேரம் பேசியிருக்கிறார் நான் பல ஆதாரங்களோடு இங்கே பேசியிருக்கிறேன். இத்துடன் விஷயம் முடிந்துவிட்டது. அதன் பிறகு இன்றைக்கு இங்கே ஒரு மணி நேரம் பேசிவிட்டு பிறகு அவர்கள் வெளிநடப்புச் செய்வது ஏன் என்றுதான் எனக்குப் புரியவில்லை. அன்றைக்குக் கூட திரு. குமரி அனந்தன் அவர்கள் ஒரு மணி நேரம் பேசினார்கள். அதுபோல இன்றைக்கு திரு.





திருநாவுக்கரசு அவர்கள் ஒரு மணி நேரம் பேசியிருக்கிறார்கள். இவர்கள் மட்டும் பேசலாம், அதற்கு நான் பதில் அளிக்க உரிமையில்லை, என்னைப் பேச வேண்டாம், ராஜிநாமா செய் என்று சொன்னால் இது என்ன ஜனநாயகம்? திரு. மூப்பனார் அவர்கள் வெளியே ஜனநாயகம் பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். அவர்கள்தான் இதைப் புரிய வைக்க வேண்டும் (சிரிப்பு)

9 மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும்—வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 20—வேளாண்மை.

கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

*திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவரும், தமிழினக் காவலருமாகிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வணக்கம் தெரிவித்து என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 1989–90 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையானது, கழகம் தேர்தல் அறிக்கையில் அறிவித்ததை நிறைவேற்றியதோடு, ஒளிமயமான எதிர்காலத்திற்கான திட்டங்கள் பல அறிவித்திருப்பது ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

எங்களது ஒட்டன்சத்திரம் தொகுதி மிகவும் பின்தங்கிய வறட்சிப் பகுதியாகும். இங்கு பெரிய ஆறுகளோ, குளங்களோ கிடையாது. பெரும்பகுதி மக்களின் முக்கியத் தொழில் விவசாயம் தான். வேறு பெரிய, நடுத்தர குறிப்பிடத் தகுந்த தொழிற்சாலைகள் எதுவுமில்லை. பருவ மழை பெய்யாவிட்டால் விவசாயம் செய்ய இயலாது. எனவே, பருவ மழை பெய்யாத காலங்களில் மக்கள் தங்களின் வாழ்க்கைக்கு வேறு இடம் செல்வது வழக்கமான ஒன்றாகும். விவசாயிகளுக்கும் வருடம் முழுவதும் வேலை இருப்பதில்லை. விவசாயத்தில் கிடைக்கும் குறைந்த வருமானத்தைக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதியின் அதிகப்படியான விவசாய விளைபொருள் தக்காளி மற்றும் காய்கறிகளாகும். தக்காளிக்கு ஒட்டன்சத்திரத்தில் மிகப்பெரிய மார்க்கெட் ஒன்று உள்ளது. ஒரு நாளைக்கு சுமார் 500 டன் தக்காளி முதல் அதிக பட்சம் 1,000 டன் வரை மார்க்கெட்டுக்கு வந்து விற்பனையாகிறது. ஆனால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு கிலோவிற்கு ஒரு ரூபாய் கூட

கிடைப்பதில்லை. தக்காளிக்கு ஒரு குறிப்பிட்ட நிர்ணய விலை அளிக்க முடிந்தால், விவசாயிகளின் வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அத்துடன் ஒட்டன்சத்திரத்தைச் சுற்றியுள்ள வத்தலக்குண்டு, திண்டுக்கல், வேடசந்தூர், வடமதுரை மற்றும் பழனியில் அதிக அளவு தக்காளி பயிரிடப்படுகிறது. எனவே ஒட்டன்சத்திரத்தை மையமாகக் கொண்டு, தக்காளியை மூலப் பொருளாகக் கொண்டு தக்காளியை பவுடர் செய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டத்துடன் ஒரு பெரிய தொழிற்சாலையினை ஒட்டன்சத்திரத்தில் துவங்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டிக் கொள்கிறேன். இதனால் விவசாயிகளுக்கு ஒரு நல்ல விலையும், அங்கு வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும், அரசுக்கு அன்னியச் செலாவணியும் கிடைப்பதுடன், இப்பகுதியில் மக்களின் வாழ்வில் பெரியதொரு மாற்றம் ஏற்படுத்த இயலும்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில் பெரிய நதிகளோ, குளங்களோ இல்லை. எனவே பெரிய திட்டங்கள் எதுவும் செயற்படுத்தும் வாய்ப்பில்லை. இருந்தபோதிலும் இப்பகுதியில் ஏற்கெனவே பரிசீலனையிலிருந்த இடையகோட்டை அணைக்கட்டுத் திட்டத்தையும், கொத்தையம் அணைக்கட்டு, மஞ்சநாயக்கன் பட்டி கண்மாய் மற்றும் பெருமாள் குளத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இடையகோட்டை அணைக்கட்டுத் திட்டத்தினால் இத்தொகுதியும், அரவக்குறிச்சி தொகுதியும் பயன்பெறும். பாலாறு - பொருந்தலாற்றிலிருந்து தொப்பம்பட்டிக்கு வாய்க்கால் போடும் திட்டம் முன்பு கழக ஆட்சியில் பரிசீலனையில் இருந்தது. அந்தத் திட்டத்தினை நிறைவேற்றினால் கூடுதலாக 2,000 ஹெக்டேர் நஞ்சை நிலம் சாகுபடிக்கு வந்து, விவசாயிகளுக்கு மகிழ்ச்சிகரமானதாக அமையும். இத்திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொடுத்தால், ஒட்டன்சத்திரம் தொகுதி முழுவதும் விவசாயத்திற்கு ஓரளவு தண்ணீரும், வறட்சிக் காலங்களில் குடி தண்ணீர்ப் பற்றாக்குறை இல்லாமலும் செய்ய இயலும். மேற்கூறிய திட்டங்களில் இடையகோட்டை அணைக்கட்டுக்கு மட்டுமே கொஞ்சம் அதிகமாக திட்டச் செலவாகும்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒரு கல்லூரிகூட இல்லை. அப்பகுதியில் உள்ள ஏழை மாணவர்கள் கல்லூரியில் படிக்க 30 கிலோ மீட்டர் தூரமுள்ள பழனி அல்லது திண்டுக்கல் செல்ல வேண்டியுள்ளது. இச்செலவைச் செய்ய இயலாத ஏழை மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெற்று திறமை மிக்கவர்களாக இருந்தும் பள்ளிக் கல்வியுடன் நிறுத்த வேண்டியுள்ளது. மேற்கொண்டு



பயில வாய்ப்பில்லை. எனவே ஏழை மாணவர்கள் கல்லூரிக் கல்வி
கற்க ஒட்டன்சத்திரத்தில் கலைக் கல்லூரி ஒன்றினை ஏற்படுத்தி
தர மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களை வேண்டுகிறேன்.

ஒட்டன்சத்திரத்தில் அரசு மருத்துவமனை இல்லை. அரசு
மருத்துவமனைக்கு 30 கிலோ மீட்டர் தூரமுள்ள திண்டுக்கல்
அல்லது பழனி போக வேண்டியுள்ளது. தனியார் மருத்துவ
மனைகளில் சிகிச்சை பெற இயலாத ஏழைகள் நிலை மிகவும்
கவலை அளிப்பதாகும். அதனால் ஒட்டன்சத்திரத்தில் ஒரு அரசு
மருத்துவமனை கண்டிப்பாக ஏற்படுத்தித்தர வேண்டுகிறேன்.

ஒட்டன்சத்திரம் நகரம் மக்களின் எண்ணிக்கையிலும்,
போக்குவரத்துத் தொடர்பிலும், விவசாய வியாபாரத் துறையிலும்
முன்னணி வகிக்கிறது. இது தற்போது பழனி தாலுக்காவிற்குள்
அமைந்துள்ளது. பழனி தாலுக்காவை இரண்டாகப் பிரித்து
ஒட்டன்சத்திரத்தை தாலுக்காவாக அமைத்துத் தருமாறு
மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களை வேண்டுகிறேன்.

ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குள் 75 பஞ்சாயத்
துக்களும், ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி என இரண்டு
ஒன்றியங்களும் உள்ளன. நிர்வாக வசதிக்காகவும் கழக அரசின்
திட்டங்கள் மக்களுக்குச் சென்றடையவும் 25 பஞ்சாயத்துக்களுக்கு
ஒரு ஒன்றியம் என்ற அளவில் மூன்று ஒன்றியங்களை அமைக்
கலாம். ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி இரண்டுக்கும் இடை
யில் வளர்ந்து வரும் நகரமான கள்ளிமந்தையத்தை தலைமை
இடமாகக் கொண்டு ஒரு ஒன்றியத்தை அமைத்துத் தருமாறு
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை வேண்டு
கிறேன். எங்கள் காயிதே மில்லத் மாவட்டம் வறட்சி மாவட்ட
மாக இருப்பதால், அந்த மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக
அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, எனக்கு வாய்ப்பு நல்கிய
சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்
வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை.)

(பிற்பகல் 12–30)

திரு. கே. சின்னசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்
களே, இந்த மாமன்றத்திற்கு என்னை அனுப்பிய சேந்தமங்கலம்
தொகுதி மக்களுக்கும், புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா
அவர்களுக்கும், எனக்கு இந்த மன்றத்தில் பேச வாய்ப்
பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. சின்னசாமி] [1989 ஏப்ரல் 5

விவசாயத்தை நம்பி 70 சதவீத மக்கள் வாழ்கின்றனர். மக்கள் தொகையைக் கணக்கிட்டால் 3½ கோடி மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர். விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பது 10 சதவீதத்திற்குக் குறைவாகத்தான் இருக்கிறது. ஆகவே, விவசாயத் தொழில், வேலை வாய்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும், வேளாண்மை விரிவாக்கப் பணியாளருக்கு ரூ. 25 கோடி ஒதுக்கியிருப்பது மிகவும் குறைந்த தொகையாக இருக்கிறது. இதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வடகிழக்குப் பருவமழை இல்லாத காரணத்தால், விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு நிவாரணம் அளிக்கும் வகையில், விவசாய வங்கிப் பயிர்க் கடன்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட வேண்டும். வறட்சியானது சிறிய, பெரிய விவசாயிகளுக்கு இருவருக்கும் பொதுவானது. ஆதலால், சிறிய, பெரிய விவசாயிகள் என்று பாகுபாடு கொள்ளாமல், கடனை ரத்து செய்ய வேண்டுமாய் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சேந்தமங்கலம் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். விவசாயி உற்பத்தி செய்யும் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 350 விலை நிர்ணயம் செய்ய வேண்டுமாய் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் சொந்தமாகக் கரும்பு ஆலைகளை வைத்து, அரைவை செய்து இதன் மூலமாக வெல்லம், நாட்டுச் சர்க்கரை ஆகியவற்றை உற்பத்தி செய்கிறார்கள். இது கிராமத்தின் ஒரு குடிசைத் தொழிலாகவும், அதிகம்பேர் வேலை செய்வதற்கான வாய்ப்பும் அளிப்பதால் இவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் அரசு இத்தொழிலுக்கு மான்யம் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயப் பாசன நிலங்களை அதிகப்படுத்த, விரிவான திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. குறிப்பாக சில மாவட்டங்களுக்கு மட்டும் ஏரிகள் அமைத்து அதன் மூலம் பாசனம் பெறப்படுவதாகக் கூறப்பட்டு இருக்கின்றது. அது மேலும் விரிவாக்கப்பட்டு, சேலம், தர்மபுரி போன்ற வறட்சி மாவட்டங்களுக்கும் ஏரிகள் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். அதுவும் எனது சேந்தமங்கலம் தொகுதி வறட்சிப் பகுதியாக இருப்பதால், பாசனத்திற்காக அதிக ஏரிகள் அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் உழுவதற்கு டிராக்டர் வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 5] [திரு. கே. சின்னசாமி]

விவசாயிகள் நடவு செய்யும்போது ஒரு விலை உள்ளது. பயிர் அறுவடை செய்யும்போது ஒரு விலை உள்ளது. இதனால் பெரிதும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். விவசாயிகள் உற்பத்தி செய்யும் அனைத்து விளைபொருட்களுக்கும் அடிப்படை விலை நிர்ணயம் செய்ய வேண்டுமாய் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால், நிலவரி, நீர்க் கூலி ஆகியவற்றை ரத்துச் செய்யும்படி இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். சேலம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகள் மின் இணைப்புக் கோரி பதிவு செய்தால் 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது. இதைத் தவிர்த்து, மின் இணைப்புக்கோரி பதிவு செய்தால் ஓராண்டுக் காலத்திற்குள் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக விவசாயிகளுக்குத் தங்குதடையின்றி மின்சாரம் கிடைக்க அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுடைய மகன்களுக்கு வேளாண்மைத் துறையில் பட்டப் படிப்பு படிப்பதற்கு அரசு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் மர வள்ளிக் கிழங்கு அதிகம் உற்பத்தி செய்யப்படுவதால், மர வள்ளியை அரசே கூட்டுறவு முறையில் கொள்முதல் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலையில் பாசனத்திற்கு அதிக ஏரிகள் கட்டுவதற்கு அரசை வேண்டிக்கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை குறித்த மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்குத் தங்களுக்கும், என்னை வாசுதேவநல்லூர் சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குத் தேர்ந்தெடுத்த பாரதப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களுக்கும் எங்கள் அன்புத் தலைவர் திரு. ஜி. கே. மூப்பனார் அவர்களுக்கும், எனக்கு வாக்களித்து இங்கே அனுப்பி வைத்த பெருமக்களுக்கும் நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்த கொள்கை விளக்கக் குறிப்பில் தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து விவசாயிகளுக்கும் நல்ல பல திட்டங்கள் இருக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் 1989–90 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இதற்கு

D
V2l1,31'N89
N89.8.1
144297

கோடிதான் ஒதுக்கியுள்ளார்கள்: இந்த 25 கோடி ரூபாய் போதுமானது அல்ல. விவசாயிகள் வெயிலிலும் மழையிலும் பல்வேறு கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய நலனை முன்னிட்டு அனைத்து விவசாயிகளுக்கும் உழவு மாடுகள் இனாமாக வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் விவசாயிகளுக்கு பூச்சிமருந்துகளை மத்திய மாநில அரசுகள் சமபங்காக வழங்குவதற்காக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பூச்சி மருந்தை எடுத்தாலும்சரி, பொறுக்கு விதைகளாக இருந்தாலும்சரி அல்லது பசையான உரமாக இருந்தாலும் அனைத்துப் பொருள்களிலுமே கலப்படம் செய்யப்படுகின்றது. பூச்சி மருந்தைப் பொறுத்தவரையில் விவசாயிகள், மகசூல் பாதிக்கப்பட்டிருக்கிற நேரங்களில் எந்த மருந்தை அடித்தாலுமே மகசூலைக் காப்பாற்ற முடியாத நிலைமை இருக்கிறது. அந்தப் பாட்டில்களுக்குள்ளே இருக்கிற மருந்துகளை அங்கே இருக்கிற அதிகாரிகள் பரிசோதனை செய்து நல்லமுறையில் அவைகளைச் சோதனை செய்ய வேண்டுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேமாதிரி உரங்களை எடுத்தாலும், ரசாயன உரங்களை எடுத்தாலும், உரங்களில் பல்வேறு மாற்று மண்களை கலப்படம் செய்து அந்த மூட்டைகளில் புதுமையான சாக்குகள் தூக்கி வைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிக்கக்கூடிய நிலையில் அந்தக் கலப்பட உரங்கள் தமிழகத்தில் முழுமையாக வியாபாரம் செய்யப்படுகின்றன. இந்த மாதிரியான கலப்படங்களை வியாபாரம் செய்யும் வியாபாரிகளால் விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய நிலைமையும் இருக்கிறது. அதை நீங்கள் இந்த இலாக்காவின் சார்பாக ஆங்காங்கு சோதனையிட்டுத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் விவசாயிகள் கிணறு வெட்டுவதற்கும், மின் இணைப்புப் பெறுவதற்கும் அரசினுடைய சார்பில் 700 அடி தூரம் இருந்தால்தான் கிணறு வெட்டுவதற்கு நிலவள வங்கியாக இருந்தாலும் அல்லது அரசுடைமையாக்கப்பட்ட வங்கியாக இருந்தாலும் அவைகளிலிருந்து கடன் கிடைக்குமென்று சொல்லப்படுகிறது. அந்த 700 அடி தூரம் இருக்க வேண்டுமென்று சொல்கிற காரணத்தால் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலே இருந்து நிதி பெறமுடியாத காரணத்தால், விவசாயிகள் மிகவும் பாதிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதேமாதிரி மின்சார இணைப்புக் கொடுக்கும்போது இந்த 700 அடி தூரம் இருக்க வேண்டுமென்கிற காரணத்தால் விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கும் மறுக்கப்படு



கிறது. ஆக இந்த இரண்டு நிபந்தனைகளையும் விவசாயிகளுடைய நலனைக் கருதி ரத்துச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய நெல்லை மாவட்டம் தென்காசி பகுதியில் மல்லிகைப் பூவிலிருந்து வாசனைத் தைலம் தயாரிக்கும் ஆலை ஒன்று நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மதிப்பு சுமார் 125 இலட்ச ரூபாய் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இதற்கு மைய அரசு அனுமதி வழங்கியும், மாநில அரசு இதுவரை காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த மல்லிகைப் பூ தொழிற்சாலை வரும்போது, ஒரு ஆண்டுக்கு 750 மெட்ரிக் டன் எடையுள்ள மல்லிகைப் பூக்களைப் பிழியும் திறன் கொண்டதாகவும், ஆண்டு ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான விவசாயிகள் நன்மை பெறக்கூடிய ஒரு திட்டமாகவும் அது இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் இந்த ஆண்டிலேயே அந்தத் திட்டம் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு விவசாய நாணயச் சங்கத்தில் பணம் கட்டிய விவசாயிகளுக்கு அரசு சலுகை கொடுப்பதில்லை. அதேமாதிரி பணம் கட்டாமல் இருக்கும் விவசாயிகளுக்கு அரசினுடைய சலுகை கிடைக்கிறது. ஆகவே பணம் கட்டியவர்களுக்கும் அரசினுடைய சலுகை நிரந்தரமாகக் கிடைப்பதற்கு இந்த அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு மின்சாரம் பகலில் 4 மணி நேரம் தான் வழங்கப்படுகிறது. இதை முழுவதுமாக பகலில் 6 மணி நேரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுடைய தேர்தல் அறிக்கையில் விவசாயிகளின் பழைய கூட்டுறவுக் கடன் பாக்கி அனைத்தும் அறவே ரத்துச் செய்யப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் உங்கள் நிதிநிலை அறிக்கையில் ஏமாற்றம் தான் இருக்கிறது.

(பிற்பகல் 12-40)

புதிதாக 6 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புத் தருவதாக உங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நிதிநிலை அறிக்கையில் இந்தமாதிரி மக்களை ஏமாற்றக் கூடிய நிலையில்தான் உங்களுடைய நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

அதேமாதிரி 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா நிலம் என்ற உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்து, அதன்மூலமாக சுமார்

38,000 நிலமற்ற விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும் என்று உங்களுடைய தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் உங்களுடைய நிதிநிலை அறிக்கையில் அதைப் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. இது மக்களைப் பெரிதும் ஏமாற்றக்கூடிய காரியமாக இருக்கிறது.

தமிழகத்தில் இருக்கக்கூடிய வாகனங்களில் ஹெல்மெட் அணிந்து கொண்டு வாகனங்களை ஓட்டுவது மிகக் கஷ்டமான நிலையாக இருக்கிறது. ஆகையால் மோட்டார் பைக்கிலேயோ அல்லது ஸ்கூட்டரிலேயோ போகும்போது அந்த ஹெல்மெட்டைக் கையில் ஏந்திக்கொண்டு செல்வது ஆண், பெண் எல்லோருக்குமே மிகப்பெரிய கஷ்டமாக இருக்கிறது. இது வேளாண்மைத் துறையாக இருந்தாலும்கூட, ஹெல்மெட் அணியக்கூடியதை இந்த அரசு உடனடியாக ரத்துச் செய்ய வேண்டுமென்று மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய வாசுதேவநல்லூர் தொகுதியிலுள்ள அனைத்து நெடுஞ்சாலைகளுமே மிக மோசமான......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. பெ. சீனிவாசன்) : நீங்கள் விவசாய மானியக்கோரிக்கையிலே பேசுங்கள். ஹெல்மெட் எப்படி விவசாயத்திலே வரும்?

திரு. ஆர். ஈஸ்வரன் : விவசாயிகள் அதில் போகிறார்கள். அனைத்து அரசு அதிகாரிகளும் போகிறார்கள். எல்லோரும் போகும் பொழுது, ஹோட்டலுக்கோ அல்லது வேறு எங்கேயுமோ போகும் பொழுது, பிள்ளைகளை ஒரு மடியிலே தூக்க வேண்டியிருக்கிறது, ஹெல்மெட்டை ஒரு மடியிலே தூக்க வேண்டியிருக்கிறது. அதனாலே பெரிய கஷ்டமாக இருக்கிறது. இதனாலே காதும் கேட்கவில்லை. அதனால் இதை ரத்துச் செய்தால் நல்லதாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் குண்டும் குழியுமாக மோசமாக இருக்கிறது. நான் முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் பொழுதும் சொன்னேன். வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும் சொல்லியிருக்கிறேன். வாகனங்களை, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக வாகனங்களின் அந்த ஓட்டுநர்கள்கூட ஓட்ட மாட்டோம் என்கிறார்கள். அவ்வளவு மோசமான சூழ்நிலையிலே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் முன்னுரிமை கொடுத்து, அதற்கு நிதி வழங்க வேண்டுமென்று மிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சீனிவர்சன்) மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்த விவசாய மானியக் கோரிக்கையைப் பற்றித்தான் பேச முடியும். (குறுக்கீடு) தொகுதிப் பிரச்சினை என்றால் சம்பந்தப்பட்ட அமைச்சர் இங்கேஇல்லையே என்ன செய்வது? சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. ஆர். ஈஸ்வரன் : தொகுதிப் பிரச்சினையைச் சொல்லப் போகிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள புளியங்குடி ஆஸ்பத்திரி மருந்தகமாக இருக்கிறது. சுமார் 70,000 மக்கள் தொகை இருக்கிறது. ஆகவே, அதை ஒரு அரசு மருத்துவ மனையாக ஆக்கி அனைத்து மருத்துவ வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகிரியில் ஒரு அரசு மருத்துவமனையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சீனிவாசன்) : மாண்புமிகு உறுப்பினரவர்கள் முன்னாலே எம்.எல்.ஏ.வாக இருந்திருக்கிறார்கள். இந்த டிமான்டிலே பேசும்பொழுது நீங்கள் பொது பட்ஜெட்டிலே பேசுவது மாதிரிப் பேசாமல், ஒரு நிமிடத்திலே முடியுங்கள்.

திரு. ஆர். ஈஸ்வரன் : தொகுதிப் பிரச்சினையைப் பற்றிப் பேச வேண்டாமா? பத்து நாட்களாக.........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சீனிவாசன்) : ஏற்கெனவே அவையினுடைய நேரம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இதிலே எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் பேச வேண்டும். உங்களுடைய நேரம் முடிந்துவிட்டது. தயவுசெய்து ஒரே நிமிடத்திலே, வரிசையாகக் கோரிக்கைகளைச் சொல்லி முடித்து விடுங்கள்.

திரு. ஆர். ஈஸ்வரன் : ஆகவே, இப்பொழுது மதுவிலக்குப் பிரச்சினையைப்பற்றி எடுத்துக்கொண்டால், எங்களுடைய பகுதி மட்டுமல்ல, தமிழகம் முழுவதுமே அரசு எவ்வளவுதான் துரிதமாக நடவடிக்கை எடுத்தாலுமே அங்கு ஒரு மாற்று அரசாங்கம் ஏற்பட்டது மாதிரி தமிழகத்தில் முழுமையாகக் காவல் துறையாலே ஏலம் போடப்படுவதைப்போல நடந்து கொண்டிருக்கிறது. இதை எந்த அளவிற்கு மாற்றப் போகிறீர்கள்? தமிழகத்தில் அரசு எவ்வளவு ஏலம் விட்டதோ, அப்படி அரசு ஏலம் விட்டதற்கு அதிகப்படியாக நான்கு மடங்கு அளவிற்குக் கடைகள் ஏலம் விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஒன்று, அரசு ஏலம் விட வேண்டும் அல்லது மாற்று வழியில் அவரவர்கள் விருப்பப்படியாவது விட வேண்டும். தனிப்பட்ட ஒரு இலாக்காவே—

அரசுக்குச் சேர வேண்டிய பணத்தை—தனிப்பட்ட ஒரு நிறுவனமே கைப்பற்றிக்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு இதற்கு உடனடியாக மாற்று வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சத்துணவுத் திட்டத்தைப்பற்றி இங்கே பல்வேறு புகார்கள் பெறப்பட்டிருக்கின்றன. நான் அந்தப் பகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்யும்பொழுது என்னுடைய ஒன்றியத்திலேயே 60 சத்துணவுக் கூடங்கள் இருக்கின்றன. 60 இல் மாவட்ட ஆட்சித் தலைவர் . . . .

**திரு. வே. தங்கபாண்டியன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் பொது நிதி நிலை அறிக்கை விவாதத்தில் பேசுகிறாரா அல்லது இன்றைக்கு சம்பந்தப்பட்ட விவசாய மானியக் கோரிக்கை மீது பேசுகிறாரா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆர். ஈஸ்வரன் :** விவசாய மானியக் கோரிக்கையிலே தான் பேசுகிறேன். என்னுடைய தொகுதி சம்பந்தமாகப் பேச வேண்டும். கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து சத்துணவுத் திட்டம். இந்தச் சத்துணவுத் திட்டம் என்பது, எங்கள் அன்புத் தலைவர் திரு. காமராஜர் அவர்கள் கொண்டு வந்த திட்டம் தான். தற்போது விரிவாக்கப்பட்டு இருக்கிறது. தற்போது தமிழகத்தில் நூற்றுக்கு எழுபது சதவீதம் சத்துணவுத் திட்டத்தில் தவறுகள் நடை பெறுகின்றன. அங்கேயிருக்கிற பாமாயில், துவரம் பருப்பு, அரிசி வந்து ரைஸ் மில்லுக்கே போகிறது. அங்கேயிருக்கிற பாமாயில் கடலை எண்ணெயிலே கலப்பதற்காகப் போகிறது, துவரம் பருப்பு வெளி மார்க்கெட்டிற்குப் போகிறது. இது போன்ற பொருட்களை ஒழுங்காகக் கண்காணிக்கவேண்டும்.

அதற்கு அடுத்தாற்போல, முட்டைகளை எல்லாம் கொடுப்பதாகச் சொல்லுகிறீர்கள். முட்டைகள் எல்லாம் கூட திருடு போகப் போகிறது. ஆகவே இந்த சனி, ஞாயிறு ஆகிய இந்த நாட்களில் மட்டும், இந்தச் சத்துணவுத் திட்டத்திலே மாற்றம் செய்தால் நல்லது என்று நினைக்கிறேன். இது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். 100 பிள்ளைகளின் பெயர்கள் வருகைப் பதிவேட்டில் இருந்தால், அங்கே இருப்பது 25 அல்லது 50 பிள்ளைகள்தான். (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சீனிவாசன்) :** சீக்கிரமாக முடித்துவிடுங்கள்.

**திரு. ஆர். ஈஸ்ரவன் :** எனவே இந்தச் சத்துணவுத் திட்டத்திலே சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களுக்கு விடுமுறை செய்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்து ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற கல்விக் கூடங்களுக்கு, முன்னாலே 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தால், இப்போது 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தாலும், இது காணாது. ஆகவே இதற்கு அதிகப்படியான நிதி ஒதுக்கப்படவேண்டும், என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. ஆர். மகேந்திரன் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தங்களை வணங்கி என் கன்னி உரையைத் துவங்குகின்றேன். நாட்ரம்பள்ளி தொகுதிக்கு என்னைக் கழக வேட்பாளராக அறிவித்த தமிழகத் தலைவர், இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்ரம்பள்ளித் தொகுதி வாக்காளப் பெருமக்கள், பெருவாரியான வாக்குகளை கழகத்திற்கு அளித்து, என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தமைக்கு, அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் மூலம் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களது சீரிய திட்டத்திறன் நன்கு புலப்படுகிறது. அத்தகைய ஒரு வளர்ச்சித் திட்டத்தை, தமிழக மக்களுக்கு அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள், அனைவரும் வியந்து நன்றியுடன் பாராட்டுகின்ற அளவில், வேளாண்மை, பாசனம், மின்சாரம், விவசாயக் கடனுதவி போன்ற பல்வேறு துறைகள் மூலம் தமிழக விவசாயிகளுக்கு, பலவகையான சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதோடுமட்டுமின்றி, வேளாண்மை விரிவாக்கப் பணிகளுக்காக ரூ. 25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் வரும் ஆண்டில், திருச்சி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரியைத் தொடங்க உள்ள அரசின் முடிவை வரவேற்கிறேன். அதேநேரத்தில் வட ஆற்காடு மாவட்டத்திலும், அத்தகைய ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்பட வேண்டுமென நான் இந்த அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற கல்லூரிகளில் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமெனவும் கழக அரசை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைப் பொறியியல் துறையை மேலும் விரிவாக்கி, அவற்றை ஒரு புதிய உத்வேகத்துடன், விவசாயிகள் முழு அளவில் பயன்படுத்தும்படியாக அமைக்க வேண்டும் என நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் விவசாயப் பணிகளை உரிய காலத்தில் செய்து முடிக்க

வசதியாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் வசமும் ஐந்து டிராக்டர்களும், ஒவ்வொரு ஊராட்சி மன்றத்தின் வசம் ஒரு பவர் டில்லரும் ஊராட்சிக்கு அளித்து, இதர விவசாயக் கருவிகளும், மற்றும் உயர் ரக பூச்சிக் கொல்லி மருந்துகளும் அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தில் இருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களின் ஊதியத்தை நிர்ணயம் செய்து, அந்தத் தொழிலாளர்களின் வாழ்வில் முன்னேற்றம் காணச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், விவசாய விளை பொருட்கள் அனைத்திற்கும் நியாயமான விலையை நிர்ணயம் செய்து, முடிந்தவரையில், அரசே கொள்முதல் செய்து, சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மற்றும் தர்மபுரி மாவட்டங்களில், உயர்ந்த ரக மாங்கன்றுகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்த விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களுக்கு மானியத் தொகை கொடுக்க அரசு முன்வர வேண்டும். மேலும் இது போன்ற உயர்ந்த ரக மாங்கன்றுகளை உற்பத்தி செய்யத் தேவையான அளவு கடனுதவி அளிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

'மா' வகைகளிலே அதிக அளவில் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுகின்ற 'அல்போன்சா' காதர் மாம்பழம் என்றும் சொல்வார்கள். மா விளைச்சலைப் பெருக்கி, தமிழக விவசாயிகள் அதிக வருவாய் பெறுவதற்கான வழி வகைகளை, தகுந்த முயற்சிகளை தமிழக அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மேலும், அரசு பழப் பண்ணைகளில் 'அல்போன்சா' என்ற உயர்ந்த ரக மாஞ்செடிகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அரசு பழப் பண்ணைகளில் விளைகின்ற பழங்களை மொத்தமாக ஏலம் விடாமல், அண்டை மாநிலங்களில் செய்வது போல், மக்களுக்கு நேரடியாக அரசாங்கமே விற்பனை செய்ய வேண்மென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், பெரியஅளவில் பழத் தோட்டங்களை Giant orchard மாவட்டந்தோறும் அமைத்துத் தர வேண்டுமென்று கழக அரசை நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதன் மூலம் பல விவசாயத் தொழிலாளர்கள் பயன் அடையக் கூடும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



அடுத்தபடியாக, நீர்த் தேக்கத்தைப் பொறுத்தவரையில், நீர்த்தேக்க அணையில் உள்ள தண்ணீரில் ஆயக்கட்டு பாசன முறையை முழுமையாகத் தடை செய்து, அருகில் இருக்கும் ஏரிகளுக்கும், குளங்களுக்கும் கால்வாய் மூலம் தண்ணீரைக் கொண்டு செலுத்தி, அந்த ஏரிகளிலும், குளங்களிலும் நிலையான நீர்த்தேக்கம் (Perculation Tank) இருக்கும்படிச் செய்து, நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்க வேண்டுமென்று அரசை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியான நாட்ராம்பள்ளியில் மிகவும் முக்கியமான பிரச்சினை என்னவென்றால், தண்ணீர் பிரச்சினைதான். விவசாயத்திற்குப் போதுமான தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, உடனடியாக தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதே நேரத்தில் நாட்டில் நிலவிவரும் கடும் வறட்சியை மனதில் கொண்டு வடார்க்காடு மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க எங்கள் பகுதியிலுள்ள விவசாயிகளுக்குப் போதிய அளவில் கிணறுகள் வெட்டுவதற்குத் தேவையான அளவு கடனுதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் வறண்டு கிடக்கும் கிணறுகளை மேலும் ஆழப்படுத்தியும், பக்கவாட்டில துளையிட்டும் நீர்வளம் பெருக தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், வாடகை முறையில் துளைக் கருவிகளை அதிகமான அளவில் வழங்க வேண்டுமென்று கழக அரசை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

சுமார் 15 வருடங்களுக்கு முன்பு நாட்ராம்பள்ளி தொகுதியில் வெலகல்நத்தம் கிராமம் அருகில், கொட்டாற்றின் குறுக்கே செட்டேரி அணை கட்டி, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி அணை கட்டப்பட்டதன் நோக்கம் அந்த வட்டாரத்திலுள்ள முப்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களிலுள்ள எல்லா ஏரிகளும் தண்ணீர் நிரம்பிய பிறகு, அணையின் கீழ் வெட்டப்பட்டுள்ள இரண்டு கால்வாய்கள் மூலமாக சுமார் 830 ஏக்கர் நிலங்களுக்கு நேரடிப் பாசனம் செய்ய திட்டம் தீட்டப்பட்டு, அணை கட்டி முடிக்கப்பட்டது. மேற்படி ஆற்றில் அணை கட்டப்பட்ட பிறகு தண்ணீர் வராத காரணத்தால் எல்லா ஏரிகளும், விவசாயப் பாசன கிணறுகளும் தண்ணீர் இல்லாமல் வற்றி, வறண்டு காணப்படுகிறது. இதனால் சுமார் 2 ஆயிரம் பாசனக் கிணறுகளும், குடிநீர்க் கிணறுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, செட்டேரி அணைக்குத் தண்ணீர் வர வழிவகை செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். மகேந்திரன்] [1989 ஏப்ரல் 5

செட்டேரி அணைக்குத் தண்ணீர் கொண்டுவர இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று, தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி அருகில் உள்ள பெண்ணை ஆற்றிலிருந்து செட்டேரி அணைக்குப் புதிய கால்வாய் வெட்டி தண்ணீரைக் கொண்டு வரலாம். இரண்டாவதாக, ஆந்திர மாநிலத்தில் கொட்டாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஏரியிலிருந்து கால்வாய் வெட்டி அணைக்குத் தண்ணீர் கொண்டு வரவும் வழி உள்ளது. எனவே, இந்த இரண்டு வழிகளில் ஏதாவது ஒன்றை நிறைவேற்றி, இப்பகுதியில் வாழும் சுமார் 1 இலட்சம் மக்களின் குறைகளை உடனடியாகக் களைய வேண்டும். விவசாயம் வளம் பெறவும், குடிநீர்ப் பிரச்சினை தீரவும் அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், அந்த அணையை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 14–3–1989 அன்று பார்வையிட்டுள்ளார்கள். பிறகு அந்த அணைக்குத் தண்ணீர் வர அனைத்து முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படும் என்று உறுதி அளித்துள்ளார்கள். மேலும், நாட்ராம்பள்ளி தொகுதியில் புல்லூர் அணை கட்டும் திட்டம் கடந்த சுமார் 15 வருடங்களுக்கு முன்னால் கழக ஆட்சியில் திட்டம் தீட்டப்பட்டு, மதிப்பீடுகள் தயார் செய்து, செயல்படுத்தும் நேரத்தில் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. இடைக்கால ஆட்சி அதை அறவே மறந்துவிட்டது.

இப்போது, நமது ஆட்சியில் புல்லூர் அணை கட்டும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென கேட்டுக் கொளள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களும், திரு. அப்துல் சமத் அவர்களும் பேசும்போது புல்லூர் அணைக்கட்டு திட்டத்தைப் பற்றிப் பேசி, அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்கள். அவர்களுக்கும் இந்த மாமன்றத்தின் மூலமாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அணையைக் கட்டுவதன் மூலமாக நாட்ராம்பள்ளி, திருப்பத்தூர், வாணியம்பாடி, பேரணாம்பட்டு, குடியாத்தம், காட்பாடி ஆகிய ஆறு தொகுதிகளிலும் உள்ள விவசாயப் பெரு மக்கள் பயன் அடைவார்கள். எனவே, புல்லூர் அணை கட்டப்பட வேண்டும் என்று கழக அரசைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

14–3–1989 அன்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் புல்லூர் அணை கட்டும் இடத்தைப் பார்வையிட்டுள்ளார்கள். மேற்கொண்டு அணையைக் கட்ட ஆவன செய்வதாகவும் உறுதி அளித்துள்ளார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.



1989 ஏப்ரல் 5]

**திரு. பொன். விஜயராகவன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே..............

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) :** தலைவர் அவர்களே, என்றுதான் கூப்பிட வேண்டும். மாற்றுத் தலைவர் என்று எல்லாம் கூப்பிடக் கூடாது.

**திரு. பொன். விஜயராகவன் :** வேளாண்மைத் துறை குறித்த மானியக் கோரிக்கையின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில், கடந்த சில ஆண்டுகளாக வேளாண்மைத் துறையின் மூலம் பெருகிக் கொண்டு வரக்கூடிய உணவு உற்பத்தி குறைந்து கொண்டே வருகிறது என்பதை நான் கவலையோடு குறிப்பிட விரும்புகிறேன். அதற்குக் காரணம் விவசாயிகளுடைய மத்தியில் ஆர்வக் குறைவு ஏற்பட்டிருப்பது என்று நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். எல்லாத் தொழில்களிலும் இருக்கக்கூடிய ஊக்கம், விவசாயத் துறையிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்குப் போதிய அளவில் கிடைக்கவில்லையென்கிற குறைபாடு விவசாயிகள் மத்தியிலே இருக்கிறது என்பதையும் நான் இந்த அவைக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். விவசாய இடுபொருள்களுக்கு ஒரு பக்கம் விலைவாசி உயர்ந்து கொண்டே போகிறது. அதே நேரத்தில் விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதில்லையென்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய ஒன்று என்று கருதுகிறேன். இடுபொருள்களுடைய விலை இன்றைக்குப் பெருகிக் கொண்டே போகிறது என்பது மட்டுமல்ல, பொறுக்கு விதையை நாம் விற்கின்றோம். அப்படிப் பொறுக்கு விதையை நாம் விற்கின்ற பொழுது கூட சரியான நேரத்தில், உரிய விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை என்பதை இந்த மன்றத்திலே ஒத்துக்கொள்வார்கள் என்று நான் குறிப்பிடுகின்றேன்.

இன்னொன்று, வீரியம் குறைந்த பூச்சி மருந்துகள்தான் இலாகாவினுடைய மூலமாக விவசாயிகளுக்குக் கிடைக்கின்றது. கிடைக்கின்ற விதைகள்கூட சரியான முறையிலே இல்லையென்பதை நான் உதாரணத்தின் மூலம் சுட்டிக்காட்ட முடியும். கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த சம்பா போகத்திலே திருப்பலிவசிகரம் விவசாய ஆராய்ச்சி நிலையத்திலிருந்து கொடுக்கப்பட்ட நெல் விதைகள் முளைக்கவே இல்லையென்கிற குறைபாட்டை இங்கே இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் வருத்தத்தோடு குறிப்பிட்டார்கள். இப்படி நாம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கொடுக்கக்கூடிய விதைகளுக்கு விலையையும் வாங்கிக் கொண்டு, அந்த விதைகள் ஒழுங்கான தன்மை

யிலே இல்லை என்று சொன்னால் நாம் யாரைப் போய் குறை சொல்வது? ஆகவே, கொடுக்கக்கூடிய விதைகள் ஒழுங்கான விதைகளாக இருக்க வேண்டுமென்பது மட்டுமல்ல, கொடுக்கக்கூடிய பூச்சி மருந்துகளும் தரம் உள்ளதாக இருக்கவேண்டுமென்று இந்த மன்றத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அக்ரிகல்ச்சுரல் பிரைசஸ் கமிஷன்—விலைவாசி நிர்ணயம் செய்யக்கூடிய குழுவை மத்திய சர்க்கார் நியமித்திருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் உற்பத்தி செய்யக்கூடிய ஒவ்வொரு பயிருக்கும் விலை வேறுபடுகிறது. இன்றைக்கு நெல்லை எடுத்துக் கொள்வார்களானால் பஞ்சாபிலும் அருணாசலப் பிரதேசத்திலும் அவர்கள் கோடைக் காலத்திலே 3 போகம் பயிர் செய்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக உற்பத்தி செய்கிறார்கள். ஆகவே, அங்கே ஒரு விலை நிர்ணயித்து அதற்கேற்ப ஒரு விலையை இங்கே நிர்ணயிப்பது பொருத்தமுடையதாக ஆகாது. இந்த மன்றத்திலே ஏற்கனவே எங்கள் கட்சியின் சார்பிலே பேசும்பொழுது மதிப்பிற்குரிய குருமூர்த்தி கூடச் சொன்னார்கள். மாநிலத்திலிருக்கின்ற விவசாய விளைபொருளுக்கு இங்கேயே விலை நிர்ணயிக்க வேண்டுமென்று நான் இந்த மன்றத்திலே வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சொட்டு நீர்ப் பாசனத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய மிகப் பெரிய பிரச்சினை பாசன வசதி கிடைப்பது அரிதாகி விட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, இந்தியாவிலேயே அதிகப்படியாக கிணற்றுப் பாசனத்தை நம்பி வாழ்கிற மக்கள் இந்த மாநிலத்திலேதான் இருக்கிறார்கள். ஆகவே, சொட்டு நீர்ப் பாசனத்தில் நீரை மிச்சப்படுத்துகிற—ஸ்பிரிங்ளர் இரிகேஷன்—என்று சொல்லக் கூடியது மாநிலத்தில் பிரபல தேவை என்பது மட்டுமல்ல, அதிகப்படியான அளவுக்கு ஊக்கம் கொடுத்து, வங்கிகளிலே கடன்கள் கொடுத்து, விவசாயிகள் பெருவாரியாக அதைப் பயன்படுத்துவதற்கான முறைகளை நாம் மேற்கொள்ளவேண்டும். 40 சதவீதத்திலிருந்து 70 சதவீதம் வரையிலே தண்ணீரை சிக்கனப் படுத்தலாம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில், தண்ணீரைச் சிக்கனப்படுத்துவது மிகவும் அவசியம் ஆகிவிடுகிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, விவசாயிகளுக்குச் சரியான பயிற்சி இல்லை. பயிற்சி செயல்முறை திட்டம் என்று ஒன்று இப்போழுது செயல்படுகிறது. அது சரியான முறையிலே விவசாயிகளைச் சென்று அடைவதில்லை. நாம் எவ்வளவோ திட்டமிடுகிறோம்.



விவசாயிகளுக்கு அது கடைசி வரை போய்ச் சேரவில்லை என்கிற குறைபாட்டை நீக்கவேண்டும். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன்.

'மஷ்ரூம்' என்று சொல்லப்படும் காளான் வளர்ப்பு விவசாயம் லாபகரமான ஒரு தொழிலாக கருதப்படக் கூடியது.

(பிற்பகல் 1-00)

இந்தக் காளான் வளர்ப்பைப் பொறுத்தவரையில் ஆய்ஸ்டர் மஷ்ரூம், பட்டன் மஷ்ரூம் என்பவைகளை வெளிநாடுகளிலேகூட ஏராளமான அளவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதைப் படித்து வேலை இல்லாமல் உள்ள விவசாயக் குடும்பங்களிலேயிருந்து வருகின்ற பட்டதாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் முன்னுரிமை அளித்து, அவர்களுக்குக் கடன் உதவி வழங்கி, விவசாயப் பல்கலைக் கழகத்தின் மூலமாக அதனுடைய தொழில்நுட்பத்தை எல்லாம் சொல்லிக் கொடுத்து, அவற்றைப் பதப்படுத்துதல் இதுபோன்ற காரியங்களை ஏராளமாகச் செய்வதற்கு முன்வரவேண்டும்.

அடுத்தபடியாக இன்றைக்கு 'Food Processing Industry, உணவைப் பதப்படுத்துகின்ற தொழில் மிக வேகமாகப் பெருகி வருகின்றபோது அதை ஊக்குவிக்கின்ற முறையிலே மா மற்றும் கனிகள் விளைகின்ற மாவட்டங்களிலே இதுபோன்று தொடங்குவதற்கு முன்வரவேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) : பேரவை உறுப்பினர்களின் அனுமதியோடு பேரவை அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

திரு. பொன். விஜயராகவன் : அடுத்தது, தோட்டக் கலையை மையமாக வைத்துக்கொண்டு, 'Agro Based Industries' என்று சொல்வார்களே, அதுபோன்றவைகளுக்கு ஊக்கம் கொடுப்பதற்கு, அவைகளை விளக்கி, செயல்முறைப்படுத்துவதற்கான 'ட்ரெயினிங்' விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தோட்டக் கலையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கக்கூடிய ஏராளமான வறண்ட மானாவரிப் பகுதியிலே தோட்டக்கலையை பயன்படுத்துவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளவேண்டும். அதற்கான தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையங்கள் இன்னும் அதிகமாக உருவாக்கப்படவேண்டும் என்பது மட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டக்

கலை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய மலைப் பொருட்கள், தோட்டக் கலை இவைகளை மையமாக வைத்துக்கொண்டு, ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்ற ஒரு மாவட்டம். ஆராய்ச்சி செய்வதற்கான எல்லாவிதமான பயிர்களும் அங்கே உற்பத்தியாகின்றன என்பதைக் கருத்தில்கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு இடத்தில்—குறிப்பாக நான் சொல்லவேண்டுமென்று சொன்னால்—புலியூர்குறிச்சி கோட்டை என்ற இடத்தில் அரசுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. ஏறத்தாழ 100 ஏக்கருக்கு மேலான ஒரு இடம் ஒரு மிகப் பெரிய அளவிலே கோட்டையிலே இருக்கிறது. அதைக்கூட ஆராய்ச்சிக்குப் பயன்படுத்துகின்ற முறையிலே விவசாயத் துறையின் சார்பிலே அதை எடுத்துக்கொண்டு, ஒரு மிகப் பெரிய தோட்டக் கலையை—அத்தோடு சேர்த்து 'Tuber Crop Reaserch Centre' என்று சொல்வார்கள். கிழங்கு வகைகளைக்கூட ஆராய்ச்சி செய்கின்ற ஒரு மிகப் பெரிய ஆராய்ச்சி மையத்தை அங்கே ஏற்படுத்துகின்ற முயற்சியில் இந்த அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறது. இன்னொன்று அதுபோன்று ஆராய்ச்சி நிலையத்தை — கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த விளவங்கோடு தாலுக்காவில் இருக்கக்கூடிய கலிங்கராஜபுரத்தில் ஏராளமான இடம் இருக்கிறது. கலிங்கராஜபுரம் என்ற இடத்தில் தென்னை ஆராய்ச்சி செய்வதற்கான தென்னங்கன்றுகளை உருவாக்கி, அவற்றை ஆராய்ச்சி செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன, ஆகவே கலிங்கராஜபுரத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையத்தை— ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் அவர்களே, இந்த விவசாயத் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றவற்றைப் பற்றி நான் குறிப்பிட்டதைப்போல், இந்த நாட்டிலே இருக்கக்கூடிய 70 சதவீத மக்களோடு இன்றைக்கு அவர்களுடைய வாழ்க்கையோடு ஒன்றியிருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய துறை. இதைத் தனியாக கவனத்தில் கொண்டு, விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவேண்டும். அவர்களுக்கு இடுபொருட்களுக்கான விலைவாசியை குறைக்கவேண்டுமென்பதைக் கருத்தில்கொண்டு, எல்லாவிதமான முயற்சிகளையும், இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நன்றிகூறி, அமைகிறேன், நன்றி, வணக்கம்.



திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்தைக் கூறத் துவங்கும்போது எப்படி தொடர்ச்சியாக பரம்பரையாக, இந்த விவசாயி பின்னுக்குத் தள்ளப்படுகின்றானோ அவன் சமுதாயத்திலே மிகவும் கேவலப் படுத்தப்படுகின்றானோ அதேபோன்று வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையிலும் கூட அது பின்னுக்குத் தள்ளப் பட்டு, 70 சதவீத மக்கள் என்று நாம் பெருமையாக சொல்லிக் கொண்டாலும்கூட தமிழகத்திலே 5 கோடி மக்களிலே 3½ கோடி மக்கள் சார்ந்திருக்கின்ற ஒரு தொழில் அவர்களுடைய நலன் அவர்களுடைய பிரச்சினைகள் இவைகளைப் பற்றிப் பேசுவதற்குக்கூட முடியாத அளவில் பின்னுக்குத் தள்ளப்பட்டு இங்கேயும் தமிழகத்தில் விவசாயிகள் எல்லாம் அவமானப் படுத்தப்படுகிறார்கள், கேவலப்படுத்தப்படுகிறார்கள் என்பதை நான் வேதனையோடு தெரிவித்து இந்தப் போக்கு சரியானதல்ல என்ற என்னுடைய கண்டனத்தையும் தெரிவித்துக் கொண்டு என்னுடைய கருத்தை நான் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக வேளாண்மைத் துறையை எடுத்துக் கொள்ளும் போது முதன் முதலிலே அதனுடைய கல்வியைப் பொறுத்த வரையில் நாம் எடுத்துக் கொண்டால் இந்த ஆண்டுகூட ஒரு வேளாண்மைக் கல்லூரியை திருச்சியிலே துவங்க இருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். பல்வேறு மாவட்டங்களிலேயிருந்தும்கூட வேளாண்மைக் கல்லூரி வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது. நியாயமாக நீண்ட நாட்களாக தஞ்சை மாவட்டத்திலே விவசாயிகளுடைய கோரிக்கையாக ஒரு கல்லூரி வேண்டுமென்று எழுப்பப்பட்டு ஆனால் என்ன காரணத்தினாலோ அதை மறுக்கிறோம் என்று சொல்லாமலும், ஏற்றுக்கொள்கிறோம் என்றுகூட சொல் லாமலும், அது கவனிப்பாரற்று விடப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதோடு அந்தக் கல்வியிலே இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில், வேளாண் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதிலே நம்முடைய அரசு குறிப்பாக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மாணவர்களை சேர்க்க வேண்டுமென்று வரும்போது நகரத்திலே இருந்து வரக்கூடிய மாணவர்களும் கிராமத்திலே யிருந்து வரக்கூடிய மாணவர்களும் பங்கு கொள்ளும்போது, நகரத்திலே எல்லாவித சிறப்போடு பயிற்சி பெறக்கூடிய மாணவனும் மாட்டுக்கு புல் அறுத்துப் போட்டு விட்டு பள்ளிக்கூடத்திற்குச் சென்று படிக்கக் கூடிய மாணவனும் ஒரே மதிப்பெண் பெறுவது சாத்தியம் இல்லாதது. சமுதாய

சூழ்நிலை அப்படி இருக்கிறது. எனவே ஒரே மதிப்பெண் எடுக்கக்கூடிய மாணவர்களை அந்தக் கல்விக்கு தேர்ந்தெடுக்கக் கூடிய நிலை வரும்போது சாதாரண கிராமத்து மாணவர்கள் அல்லது விவசாயி வீட்டுப் பிள்ளைகள் படித்து பயிற்சி பெற்று விவசாயத் துறையினுடைய அதிகாரிகளாகவோ அல்லது விவசாயத் துறையினுடைய ஆராய்ச்சியாளராகவோ அல்லது விவசாயத் துறையினுடைய விஞ்ஞானியாகவோ வருவதற்கு முடியாத நிலை இருக்கிறது. எனவே அந்த மாணவர்களைச் சேர்க்கும்போது கிராமத்து மாணவர்களுக்கு மதிப்பெண்களில் கழிவு செய்து அனுமதிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கால்நடைக் கல்வியும் விவசாயத் துறையோடு இணைக்கப்பட்டிருக்கிற காரணத்தால் குறிப்பிட விரும்புகிறேன். அந்தக் கால்நடைக் கல்வியிலே பி.வி.எஸ்சி. படித்து பட்டம் பெற்று வருவதற்கு முன்னாலே இன்றைக்கு சில மேல் பட்டப் படிப்புகள் டி.பி.எச்., டி.எஸ். மற்றும் ஜி.எச்., டி.ஜி.டி., டி.சி.எச். போன்ற உயர் படிப்புக் கல்விகள், பி.வி.எஸ்சி. படிப்பதற்கு முன்னாலேயே மேல் நிலை பள்ளிப் படிப்பு படித்த உடனே பட்டப் படிப்புக்கு சேரக் கூடிய நிலை இருக்கிறது. இது மாற்றப்பட வேண்டுமா, திருத்தப்பட வேண்டுமா என்பதையும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இப்படி இந்த வேளாண்மைத் துறைக் கல்வியைப் பொறுத்த மட்டிலே கொஞ்சம் விசேஷமாக இதிலே இருக்கக்கூடிய குறைபாடுகளை அல்லது விவசாயி வீட்டுப் பிள்ளைகள் அந்தக் கல்வியை பெறுவதற்கு இருக்கக்கூடிய கஷ்டங்களைப் போக்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில் எடுத்துக் கொண்டால் வேளாண்மைத் துறை கிட்டத்தட்ட 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பொதுப் பிரிவு, எண்ணெய் வித்துத் துறை, தோட்டக் கலை, என்ஜினியரிங் என்று 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிற காரணத்தாலே கீழ் வரையிலும் 4 நிர்வாகம் இருக்கிற காரணத்தாலே விவசாயிகள் பூச்சி மருந்து வாங்குவதற்கு ஒரு இடத்திலும், உரம் வாங்க வேறு ஒரு இடத்திற்கும், காய்கறி, பூ, விதை வாங்குவதற்கு வேறு ஒரு இடத்திற்கும் செல்ல வேண்டிய கஷ்டங்கள் இருக்கின்றன. எனவே இவைகளை ஒன்றாக இணைக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



அதோடு மட்டும் அல்லாமல் முன்னாலே சொன்னார்கள், அது உள்ளாட்சித் துறையினுடைய நிர்வாகத்திற்கு நாங்கள் மாற்றியிருக்கிறோம் என்று. அப்படி உள்ளாட்சித் துறையினுடைய நிர்வாகத்திற்கு வேளாண்மைத் துறையினுடைய வேலைகளையும் மாற்றியதற்குப் பிறகு, இந்த உள்ளாட்சித் துறையில் வேலை செய்யக்கூடிய விவசாய விரிவாக்க அலுவலர்கள், தனி ஒரு விரிவாக்க அலுவலரை நியமித்து அவருடைய கட்டுப்பாட்டின்கீழ் அந்த உள்ளாட்சி அமைப்பிலே அது ஒரு தனி நிர்வாகமாக ஊதியப் பட்டுவாடா உள்பட நடக்க இருப்பதாக அறிகிறேன். அப்படி இருப்பது இணக்கமான நிலையை உண்டாக்குமா என்று அதை பரிசீலித்து சரியான முடிவிற்கு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறு பாசனத்தைக் குறிப்பிடும்போது ஒரு வார்த்தையை இந்த நேரத்திலே சொல்ல வேண்டும். சிறு பாசனம் என்ற முறையிலேதான் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி விவசாயம்செய்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.......(மணியடிக்கப் பெற்றது) தான் வேண்டுமானால் பேசுவதை நிறுத்தி விடுகிறேன். 2, 3 நிமிடங்களில். மணியடித்தால் ஒன்றும் சொல்ல முடியாது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: திரு. என். கணபதி.** 7 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன. இன்னும் 4 உறுப்பினர்கள் பேசி அமைச்சர் பதில் தர வேண்டும். அவை 2 மணிக்கு முடிய வேண்டும்.

**திரு. கோ. வீரையன்:** நேற்றைக்கு முன் தினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மின்சாரக் கட்டணத்திலே பாக்கி இருப்பவர்கள் 30–9–1989 வரையில் கட்டணத்தைக் கட்டினால், வட்டி இருந்தால் தள்ளுபடி செய்யப்படும் என்று இங்கே அறிவித்தார்கள். இங்கே நீங்கள் செய்கிற அறிவிப்புகளும் உத்திரவுகளும் எவ்வளவுதான் இருந்தாலும் அவை எல்லாம் அரசு ஆணையாக வெளியிடும்போது சரியாக வெளியிடப்படவில்லை என்று சொன்னால் அது விவசாயிக்கு சிக்கலை உண்டாக்குகிறது. எனவே எந்தத் தேதிவரையில் அந்த வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்பதை அரசு ஆணை மூலம் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். 30–9–1989-க்குள் கட்டக் கூடிய அனைத்து விவசாயிகளுக்கும், அவர்கள் உரிய கட்டணத்தைக் கட்டி விட்டால், அவர்களுக்குரிய வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்பதை அரசு ஆணையில் தெளிவுபடுத்தவில்லை என்று சொன்னால் அது மீண்டும் குழப்பத்தை நீடிக்கச் செய்யும். எனவே அது தெளிவுபடுத்தப்பட வேண்டும். அதோடு மட்டும்

அல்லாமல், 5,000 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும் என்று கொள்கைக் குறிப்பிலே கொடுத்திருக்கிறீர்கள். இந்த 5,000 குழாய்க் கிணறுகள் அமைக்கபபடுவதை நிச்சயமாக நாங்கள் வரவேற்கிறோம். அதை தனிப்பட்ட நபர்களுக்கு கொடுப்பதன் மூலமாக எங்களுக்கு ஏற்படக்கூடிய சங்கடமே-குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில், தமிழகத்திலே பல்வேறு கிராமங்களிலே கோயில்களுக்கும், மடங்களுக்கும், அறக்கட்டளைகளுக்கும் தனியார் அறக்கட்டளைக்குமான நிலங்களிலே பூராவும் குத்தகை விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள்—அவர்கள் அரசுக் கடனை பயன்படுத்தி குழாய்க் கிணறுகள அமைக்க முடியாது. அமைப்பதற்கான எந்த சாத்தியமும் இல்லை. குத்தகை விவசாயிகளில் பதிவு பெற்றவர்களும் இருக்கிறார்கள், பதிவு பெறாதவர்களும் இருக்கிறார்கள். பதிவு பெற வேண்டும் என்று சொன்னாலே எவ்வளவு பெரிய நஷ்டம் இருக்கிறது என்பதை நான் கூற வேண்டிய அவசியம் இல்லை.

(பிற்பகல் 1-10)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) :** உறுப்பினர் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொளகிறேன்.

**திரு. கோ. வீரையன் :** தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் ஒரு நிமிடம் கூட வீணாக்கவில்லை. எனவே மேலும் ஐந்து நிமிடம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த பாபநாசம் வட்ட நல்லூர் கிராமத்தில் ரங்கராஜன் என்ற விவசாயி தன்னை குத்தகை விவசாயி என்று பதியப்பட வேண்டும் என்று மனு போட்டவுடனேயே அவனுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய கதி என்னவென்று இந்த நாடு அறியும். இந்த அரசுக்கும் தெரியும். அவன் தன்னை குத்தகை விவசாயி என்று பதிய வேண்டுமென்று மனு போட்ட ஒரே காரணத்திற்காக அவன் மீது வேறு ஒரு பொய்யான வழக்கை ஜோடித்து $7\frac{1}{2}$ ஆண்டுகள அந்தக் குற்றத்தின் கீழ் தண்டிக்கப்பட்டு அவன் சிறையிலே வாழ வேண்டிய அவதி இருக்கிறது. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், குத்தகை விவசாயிகள் குழாய்க் கிணறுகள் திட்டத்தினால் பயனை அடைய முடியவில்லை. எனவே அரசே நேரடியாக அந்தக் குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்து அதிலே ஏற்படக் கூடிய செலவை தண்ணீர் பாய்ச்சக் கூடிய அந்த விவசாயிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டும். அப்படி செய்தால் கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் செலவாகும். ஒரே நேரத்தில் செய்ய நான் கேட்கவில்லை. ஒரு ஆண்டுக்கு 10 கோடி ரூபாய் இதற்கு ஒதுக்கினால் 20,000 கிணறுகளை 4 ஆண்டுகளில் அமைக்க முடியும். இதன் காரணமாக மாவட்டத்தினுடைய வளர்ச்சியும், வேலை வாய்ப்பும் உயரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



விதையைப் பொறுத்த மட்டில் இந்தக் கொள்கை குறிப்பிலே 5-வது பக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். நெல் விதையினுடைய இலக்கு சென்ற ஆண்டு 3,895 மெட்ரிக் டன் என்று இருப்பு வைப்பது என்று போடப்பட்டிருக்கிறது. இதிலே கொடுத்திருப்பது 510.3 சாதனை என்று தான் போட்டிருக்கிறது. இலக்குக்கும், நாம் எட்டியிருப்பதற்கும் எவ்வளவு இடைவெளி இருக்கிறது என்பதைப் பார்ப்போமானால் எந்த அளவிற்கு விவசாயி புறக்கணிக்கப்படுகிறார், நிராகரிக்கப்படுகிறார் என்பதற்கு இது உதாரணமாக இருக்கும்.

அதைப் போல இந்தக் கொள்கை குறிப்பனுடைய 8-வது பக்கத்திலே நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் இலக்கு என்பது 26 இலட்சம் ரூபாய்க்குத் தீர்மானிக்கப்பட்டு, சாதனை என்பது 00 என்று போடப்பட்டு இருக்கிறது. இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதே தவிர அந்த மருந்து அவர்களுக்கு போய்ச் சேராத நிலைமை இருக்கிறது. இப்படி மொத்தமாகப் பார்த்தால், 7-வது பக்கத்தில் உர விநியோகத்தை நாம் பார்ப்போமானால் நம்முடைய குறியீட்டிற்கும், சாதனைக்கும் மிகப் பெரிய இடைவெளியிருக்கிறது. எனவே இதைக் கவனிக்க வேண்டுமென்று கேடடுக் கொள்கிறேன்....

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, அது டிசம்பர் முடிய உள்ள குறியீடு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோ. வீரையன் :** தலைவர் அவர்களே, மிகப் பெரிய சாதனை படைத்த ஆளுநர் ஆட்சி என்று சொன்ன அந்தக் காலத்திலே தான் இந்த வேதனைகள் பூராவும் விவசாயிகளுக்கு வந்திருக்கிறது. 9 மாதத்தினுடைய சாதனை ஏது. மறுபடியும் 3 மாதம் தானே இருக்கிறது? ஆக அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு இருக்கக் கூடிய வேதனையைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயப் பொருள்களுடைய விலைகளைப் பொறுத்தமட்டில் நீங்கள் கவனத்தோடு, கவலையோடு பார்க்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் உற்பத்திச் செலவு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. எனவே அந்த உற்பத்திச் செலவு அதிகரிப்பதற்கும், விலையைத் தீர்மானிப்பதற்கும் சம்பந்தமே இல்லாமல் இருக்கிறது. விவசாயத் தொழிலாளர்களுடைய கூலியை உயர்த்தி அறிவித்திருக்கிறீர்கள். நாங்கள் வரவேற்கிறோம். அப்படி வரும்போது உற்பத்திச் செலவு கூடுகிறது என்பதை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு எப்படியும் ஒரு குவிண்டால் நெல்லுக்கு 250 ரூபாய் வரக் கூடிய அளவிற்கு, விலை கிடைக்கக் கூடிய அளவிற்கு அரசு மானியம் 50 ரூபாய், மத்திய அரசிடமிருந்து 200 ரூபாய் பெற்றுத் தருவதற்கான முயற்சியிலே நீங்கள் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்

கொள்கிறேன். அதைப் போல எண்ணெய் வித்துக்களுக்கு இன்று தீர்மானித்திருக்கக் கூடிய விலை போதுமானது அல்ல. கடலை, எள், சூரியகாந்தி பொருள்களுக்கு ஒரு கிலோவிற்கு 10 ரூபாயாவது கொடுக்கக் கூடிய அளவிற்கு விலை தீர்மானிக்கப்பட வேண்டும். கரும்புக்கு 350 ரூபாய் விலை கொடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். மாநிலத்திற்கு ஒரு விலை நிர்ணய கமிஷனை ஏற்படுத்துவதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒன்றே ஒன்று. கரும்பு விவசாயிகள். இன்றைக்கு அவர்கள் கரும்பை உற்பத்தி செய்தாலும் கசப்பான வாழ்க்கையை இன்று அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய கொள்கைக் குறிப்பிலேயே சொல்லி இருக்கிறீர்கள். தனியார் சர்க்கரை ஆலைகள் முழுவதும் அந்தச் சாலை நிதி என்பது அரசிடம் கொடுக்கப்பட்டு வந்தது. (மணியடிக்கப்பெற்றது). அதை எதிர்த்துக் கோர்ட்டில் உத்தரவு பெற்றிருப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். எனவே, ரோடு பராமரிப்பு செய்ய முடியவில்லை. இன்னும் அந்தக் கரும்பு விவசாயிகள் மீது வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன. அமராவதி சர்க்கரை ஆலையிலே, அதே போல, கோத்தாரி சர்க்கரை ஆலையிலே அந்த வழக்குகளைத் திரும்பப் பெருவதற்கும் முயற்சிகள் செய்யப்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, விவசாயிகளுடைய குறைகளைக் கூற முடியவில்லையே என்ற வேதனையோடு நான் முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்த தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர், தானைத் தலைவர், தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழக மக்களில் 100-க்கு 70 பேர்களுக்கு மேலாக வேளாண்மைத் துறையை நம்பி வாழ்கின்றார்கள். வேளாண்மையையே நம்பியிருக்கும் விவசாயிகளுடைய நலன் கருதி வேளாண்மை விரிவாக்கப் பணிகளுக்காக தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு இன்றைய தினம் 25 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. 25 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதன் மூலமாக வேளாண்மைப் பணிகள் பெருகி பல்வேறு வகையான நெல், பருத்தி, கரும்பு, கடலை போன்ற நவதானியங்கள் எல்லாம் உற்பத்திப் பெருக்கம் ஏற்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது.



பருவ மழையின்றிப் பெரும் அவதிக்குள்ளாகிக் கொண்டு இருக்கும் ஏழை விவசாயிகளுக்கு, ஏழை விவசாயிகளுடைய இதயத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மாற்றி அமைக்கப்பட்ட குறுகிய காலப் பயிர்க் கடன்களின் தவணை தவறிய கடன் தொகைகள் அனைத்தையும் ரத்து செய்திருப்பதாலும், குறுகிய, மத்திய காலக் கடன்கள் மீதுள்ள அபராத வட்டியை அறவே தள்ளுபடி செய்து இருப்பதாலும், நீண்ட காலக் கடன்கள் மீது ஒத்தி வைக்கப்பட்டுள்ள வட்டியையும் அறவே ரத்து செய்திருப்பதாலும் அந்தக் கடன் தள்ளுபடியால் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் சிறு விவசாயிகள் ஏறத்தாழ 9.36 இலட்சம் பேர் பயனடைகிறார்கள். கடன் சுமையோடு, நிம்மதி இல்லாமல் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டு இருக்கும் ஏழை விவசாயிகள் தலைவர் கலைஞருடைய கடன் தள்ளுபடி அறிவிப்பின் சலுகை பெற்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நன்றிப் பெருக்குடன் பாராட்டிக் கொண்டு, மகிழ்ச்சியோடு வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்குவார்கள் என்று நாம் நம்புவோம்.

வேளாண்மையைப் பெருக்குவதற்காக அதிக மகசூல் தரக் கூடிய தரமான விதைகளையும், உரம், பூச்சி மருந்து போன்றவைகளையும் அரசு 50 சதவிகித மானிய விலையிலே கொடுத்து உதவிட வேண்டும். விவசாய மோட்டார் பம்பு செட்டுகளுக்கு காலதாமதமின்றி மின் இணைப்புத் தந்து உதவிட வேண்டும். விவசாயம் செய்யாமல் தேவையற்றுக் கிடக்கும் தரிசு நிலங்களை எல்லாம் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்து அவற்றை எல்லாம் விளை நிலங்களாக மாற்றி வேளாண்மையைப் பெருக்க வேண்டும்.

குறிப்பாக என்னுடைய பெரியகுளம் தொகுதியில் கொடைக்கானல் மேல்மலைப் பகுதியில் கவுஞ்சி என்ற கிராமத்திற்குப் பக்கத்தில் ஆட்டுப் பண்ணை என்ற பெயரால் இரண்டாயிரம் ஏக்கர் நிலம் தரிசாகக் கிடக்கிறது. ஆனால் அங்கே 200 ஆடுகள் தான் வளர்க்கப்படுகின்றன. அப்படிப்பட்ட தரிசு நிலங்களை எல்லாம் அரசு கையகப்படுத்தி, ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்து அவர்கள் விவசாயம் செய்வதன் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கிடுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அதே சமயம், பெரியகுளம் தொகுதியில் கொடைக்கானல் மேல் மலைப் பகுதியில் 20, 30 ஆண்டுக் காலமாக ஏழை விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்ற தங்களுடைய இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் நிலங்களுக்குப் பட்டா கிடைக்காமல் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் பட்டா வழங்குவதன்மூலமாக, அவர்கள் எல்லாம் மிக மகிழ்ச்சியோடு விவசாயத்தில் ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்குகின்ற வாய்ப்பு உருவாகும் என்று எடுத்துச் சொல்லி, அந்த விவசாயிகளுக்கு எல்லாம் பட்டா கொடுக்க வேண்டும் என்று நான்

கேட்டுக்கொள்கிறேன். மோட்டார் பம்புசெட்டுகளுக்கு முழு நேரமும் மின்சாரம் வழங்கினால் அதிகமான உற்பத்தி செய்வதற்கு வாய்ப்புகள் ஏற்படும்.

(பிற்பகல் 1-20)

ஏரி, குளங்களை எல்லாம் ஆழப்படுத்த வேண்டும். ஏரிகளுக்கும், குளங்களுக்கும் செல்லுகின்ற கால்வாய்களை ஒட்டியுள்ள நிலச்சுவான்தார்கள் அதை நெருக்கிவிட்ட காரணத்தால் மழைக் காலங்களில் தண்ணீர் அதிகமாக வருகின்றபோது வாய்க்கால்கள் உடைப்பு எடுத்து அந்தத் தண்ணீர் எல்லாம் குளங்களுக்கும், ஏரிகளுக்கும் செல்லாமல் வீணாகப் போய்விடுகிறது. ஆகவே குளங்களுக்கும், ஏரிகளுக்கும் செல்லுகின்ற வாய்க்கால்களை அகலப்படுத்த வேண்டும். மழைக் காலங்களில் வருகின்ற நீரை வாய்க்கால் வழியாகஅனுப்பி ஏரி, குளங்களை நிரப்புவதன் மூலம் வேளாண்மை அபிவிருத்தி அடையும். விவசாயம் செய்யும் விவசாயிகள் பயன் அடைவார்கள்.

அதோடு மட்டும் அல்லாமல் ஏரி, குளங்களில் தண்ணீர் நிரம்பினால் அதன் அருகில் இருக்கக் கூடிய கிணறுகளுக்கு எல்லாம் ஊற்று கிடைக்கும். ஊற்று கிடைப்பதன் மூலம் விவசாய உற்பத்தி பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைக் கருதி ஏரிகளையும் குளங்களையும் ஆழப்படுத்த வேண்டும், வாய்க்கால்களை எல்லாம் அகலப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பெரியகுளம் தொகுதியில் உள்ள சோத்துப் பாறைத் திட்டம் 1980 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு ஆமை வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த அணைத் திட்டம் விரைந்து செயல்படுமானால் விரைந்து கட்டி முடிக்கப்பட்டு இருக்குமானால் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைச்சல் பேற்று அங்கே தரிசு நிலங்கள் எல்லாம் இன்றைய தினம் விளை நிலங்களாக ஆகி இருக்கக் கூடும். ஆகவே அந்த அணைத திட்டத்தை ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறக் கூடிய அந்த அணைத் திட்டத்தை விரைந்து கட்டிக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களையும் நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. என். கணபதி) :** ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. எல். மூக்கையா :** பெரியகுளம் தொகுதியைட் பொறுத்தவரையில் ஏராளமான மாங்காய் விளைகிறது. அதை அவர்கள் வெளியூர்களுக்கு எடுத்துச் சென்று விற்கும் போது



விலை மிகவும் குறைவாகக் கிடைக்கின்ற காரணத்தால் அவர்கள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். மாங்காய் சீசனில் தினமும் 100 லாரி மாங்காய் பெரியகுளத்திலிருந்து வெளியூர்களுக்கு செல்கிறது. அந்தப் பகுதியில் மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கினால் அந்த விவசாயிகளுக்கு அதிகமான விலை கிடைக்கும். அதன் மூலம் அவர்கள் மேலும் உற்சாகத்தோடு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு தொழிற்சாலையும் இல்லாத பெரியகுளம் பகுதியில் மாம்பழம் பதனிடும் தொழிற்சாலையை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கொடைக்கானலில் மேல் மலைப் பகுதி, கீழ் மலைப் பகுதி என்று இரண்டு பகுதிகள் இருக்கின்றன. கொடைக்கானல் மேல் மலைப் பகுதி திண்டுக்கல்—காயிதேமில்லத் மாவட்டத்தைச் சேர்ந்தது. பெரியகுளம் ஒன்றியம் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பகுதி ஆகும். கொடைக்கானல் மேல்மலைப் பகுதியில் பூண்டு, கோஸ், காரட், உருளைக் கிழங்கு இவைகளை அங்கே மானாவாரியாக பயிர் செய்கிறார்கள். அங்கே மானாவாரியாக பயிர் செய்கின்ற காரணத்தால் மழை பொய்த்துவிடுமானால் அங்கே செய்கின்ற அந்த விவசாயம் பாழடைந்து, சீரழிந்து அந்த விவசாயிகள் மிகவும் நஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அந்த மேல்மலைப் பகுதியில் மலைச் சாதி மக்களைப் போல வாழ்கின்ற அந்தப் பகுதி மக்கள் அந்த மானாவாரிப் பயிர் செய்து மிகவும் நஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கக்கூடிய அந்தப் பகுதி மக்களுக்கு அந்தப் பகுதியில் சிறு சிறு அணைத் திட்டங்களை, நீர்த்தேக்கங்களை கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் பூண்டி கிராமப்பகுதியில் குருங்குருமனாறு நீர்த் தேக்கத்தையும், கவுஞ்சி கிராமப்பகுதியில் அறம்பள்ளிப் பாறை நீர்த்தேக்கத்தையும், மன்னமனூர் கிராமப்பகுதியில் உருளிக்கொம்பு நீர்த்தேக்கத்தையும், கூக்கால் கிராமப்பகுதியில் பெரியஜம் நீர்த்தேக்கத்தையும், வில்பட்டியில் வில்பட்டி நீர்த்தேக்கத்தையும் இந்த அரசு கட்டிக் கொடுக்குமானால் அங்கே மலைச் சாதியினரைப் போல போக்குவரத்து வசதி இல்லாமல் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற அந்த மக்கள் பயன் அடைவார்கள் என்று சொல்லிக் கொண்டு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. கோ. பூவராகன் :** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு நிமிடம் தான் என்று

சொன்னால் நான் "ஓம்" என்று சொல்வதோடு உட்கார்ந்து விட வேண்டியது இருக்கும். இது விவசாயப் பிரச்சினை. இந்தப் பிரச்சினை எல்லோருக்கும் உணவு அளிக்கின்ற பிரச்சினை. உடை கொடுக்கின்ற பிரச்சினை. மிக முக்கியமான பிரச்சினை. இந்த இலாக்காவினால்தான் ஏராளமான பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியும். மற்ற இலாக்காக்களுக்கு என்னதான் நீங்கள் செலவிட்டாலும் நிறைய பேருக்கு வேலை வாய்ப்புத் தர முடியாது. உணவு இருந்தால்தான், உடை இருந்தால்தான் இந்த ஆட்சி செம்மையாக நடைபெறும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியும். உணவுப் பிரச்சினை வந்தது என்று சொன்னால் அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்னவெல்லாம் முயற்சி எடுத்தாலும்கூட நம்மாலே முடியாது. அதனாலே இந்த உணவு இலாக்காவுக்கு கடைசியாக நேரம் ஒதுக்கி அதிலே பேசுவதற்குக்கூட சந்தர்ப்பம் இல்லாமல் மணியடித்து உட்கார வைக்கின்ற ஒரு நிலை இருக்கும் என்று சொன்னால் அமைச்சர் அவர்கள் தயவு கூர்ந்து எங்கள் நேரத்தை அதிகமாக எடுத்துக் கொள்ளாமல் எங்களுக்கும், எங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கும் அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இத்தோடு இதுபற்றி அடுத்த ஆண்டுதான் பேச வாய்ப்பு இருக்கிறது. உணவு நிலை பற்றியும், மற்ற நிலை பற்றியும், இந்த விவசாய இலாக்கா மானியம் வருகின்ற போதுதான் பேசமுடியும். குறிப்பாக இந்த விவசாய இலாக்காவிலே எவ்வளவு தூரத்திற்கு நாம் கவனம் காட்டுகின்றோமோ அந்த விவசாயப் பணியிலே ஈடுபடுகின்ற தொழிலாளியானாலும்சரி, விவசாயத்திலே ஈடுபடுகின்ற மக்களானாலும் சரி எந்த அளவிற்கு நாம் அதிலே அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கிறோமா என்று பார்க்கின்றபோது ஊக்கம் குறைந்ததாகவே இருக்கிறது. நிறைய அளவிலே நாம் சொல்கிறோம். ஆனால் பேசுகின்ற அளவிலேதான் இருக்கிறதே தவிர அவையெல்லாம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று இந்தச் சமயத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு எடுக்கப்படுகின்ற அந்த முயற்சிகள் சரியான வகையிலே இல்லையென்று நான் இந்தச் சமயத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இலாக்கா, முறையாக, சரியாக, நல்லவிதமாக செயல்படவில்லை என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால், அந்த இலாக்காவிலே இருக்கின்ற பல துறைகளில் அதிகாரிகள்தான் பெருகி இருக்கிறார்களே தவிர, மக்களுக்கு பயன்படக்கூடிய அளவிற்கு அவர்கள் வேலை செய்கிறார்களா என்றால் இல்லை என்றே நான் இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பொறுக்கு விதை, நல்ல தரமான விதை அளிக்கவேண்டியது நம்முடைய கடமை. அந்தத் தரமான விதைகளை



அளிப்பதற்காக ஆங்காங்கு அரசாங்க விதைப் பண்ணைகள் ஏற்படுத்தி இருக்கிறோம். எத்தனை விதைப் பண்ணைகள் சரியான முறையிலே நடைபெறுகின்றன? எத்தனை சரியான முறையிலே நடைபெறவில்லை? அப்படி நடைபெறாததற்கு என்ன காரணம் என்று கண்டு கொள்ளவேண்டும்.

அதே போன்று, பூச்சி மருந்துகள் வழங்கப்பட வேண்டுமென்று முன்பு சொன்னார்கள். அந்தத் துறை சரியாக இல்லை. அது சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. காலாகாலத்திலே பூச்சி மருந்துகள் வழங்கப்படுவதில்லை. அப்படி வழங்கப்படுகின்ற பூச்சி மருந்துகளும் தரமானதாக இல்லை என்று இந்தச் சமயத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். அதன் பொருட்டு அதிக கவனத்தை அரசு செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அம்பத்தூரிலும், அண்ணா நகரிலும் சில பூச்சிமருந்துகளைத் தயாரிக்கிறார்கள். அந்தப் பூச்சி மருந்துகள் தரமானதாக இல்லை. அதிலே சில பெரியவர்கள் புகுந்து கொண்டு அதற்கென்று கிடைக்கின்ற மானியங்களைப் பெற்று தவறான முறையிலே பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோன்று, பொறுக்கு விதை, பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு கொடுக்கப்படுகின்ற மானியங்கள் சரியான முறையிலே தக்கவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. சிறு விவசாயிகள் என்று சொல்லிக்கொண்டு பலர் அந்த மானியங்களைப் பெற்றுவிடுகிறார்கள். மானியம் என்று சொன்னாலே, அதைச் சரியாகப் பயன்படுத்தவேண்டும், அப்படிப் பயன்படுத்துவதில்லை. இந்த மானியமெல்லாம் யாருக்கோ போய்ச் சேருகிறது. போகவேண்டியவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை.

அரிசனங்களுக்கு மானியம் கொடுக்கின்றோம், சிறு விவசாயிகளுக்கு மானியம் கொடுக்கின்றோம்; கருவிகள் கொடுக்கின்றோம்; பூச்சி மருந்துகள் கொடுக்கின்றோம்; விதைகள் வழங்குகின்றோம் என்றெல்லாம் நாம் சொல்லிக்கொண்டே இருக்கிறோமே தவிர, அது முறையாக விவசாயம் செய்கின்றவர்களுக்கு போய்ச் சேருவதில்லை. அது கடைக்காரர்களுக்கும், மற்றவர்களுக்கும் போய்ச் சேருவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு எதிலே ஊக்கம் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து சரியான முறையிலே ஊக்குவித்து அந்தந்தத் துறையிலே அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு பகுதியிலே நெல் உற்பத்தி அதிகமாகிறது என்று சொன்னால்

அந்த நெல் உற்பத்தியைச் செய்கின்றவர்களுக்கு என்ன ஊக்கம் அளிக்கின்றோம் என்று பார்க்கவேண்டும். நெல் உற்பத்தியைச் செய்கின்றவர்களுக்கு காலாகாலத்திலே நல்ல பொறுக்கு விதைகளையும், பூச்சி மருந்துகளையும், பண வசதியும் கிடைப்பதற்கு விவசாய இலாக்கா அவர்களுக்கு வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும்.

ஒரு பகுதியிலே வாழை உற்பத்தி அதிகமாக இருக்கிறது. அந்த வாழை உற்பத்திக்கு நம்முடைய அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கின்றது என்று பார்க்கும்போது, மிகக் குறைவான அளவிலேதான் இன்றைய தினம் ஊக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கின்றோம். நல்ல வாழை உற்பத்தி இருக்கின்றது. ஆனால் விலை குறைந்து விடுகின்றது. அப்படி விலை குறைகின்ற நேரத்தில் அவர்களுக்கு ஏதாவது மானியமாக உதவிகள் செய்யக்கூடாதா என்று கேட்பதோடு நம்முடைய விவசாய இலாக்காவிலே அவர்களுக்கு அந்த நேரத்தில் நஷ்ட ஈடு கொடுப்பதற்கு ஒத்துக் கொள்ளவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

சாதாரண மக்கள், ஏழை மக்கள், உண்ணக்கூடியவாழைப்பழம், கொய்யாப்பழம் இதுபோன்ற பழங்களின் விலைகூட அதிகமான அளவுக்கு ஏறிக் கொண்டே இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்தப் பழங்களை ஏராளமாக உற்பத்தி செய்வதற்கு என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று பார்க்க வேண்டும். மாம்பழம் உற்பத்தியில்கூட நாம் போதுமான முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. மாம்பழத்தை சாதாரண ஏழை எளிய மக்கள் வாங்கிச் சாப்பிடக்கூடிய அளவுக்கு உற்பத்தியைப் பெருக்குவதற்கு தேவையான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். ஸ்வீடன் நாட்டிலிருந்து கன்றுகளை, மரங்களை வளர்ப்பதற்கு ஏராளமான பணம் வருகிறது. அதை எப்படி செலவிடுகிறார்கள், எங்கே செலவிடுகிறார்கள் எதற்காகச் செலவிடுகிறார்கள், எந்தத் துறைக்கு செலவிடுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். அந்தப் பணத்தைக்கொண்டு பயன்தரும் நல்ல பழமரங்களை வளர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதை எந்த அளவுக்குச் செய்ய முடியுமென்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதைப்போன்று புளி, மா, பலா போன்ற மரங்களை வளர்ப்பதற்கு என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? அதிலே ஏதாவது பலன் ஏற்பட்டிருக்கிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன். அதைப் போன்று எல்லாத் துறைகளிலும் பார்க்க வேண்டும். இதை எல்லாம் விரிவாகப் பேச வேண்டுமென்றாலும் நேரம் இல்லாத காரணத்தால் விரிவாகப் பேசவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டந்தோறும் சென்று அங்



காங்கே அவர்களுடைய இலாகாவைப் பொறுத்தவரையிலே கருத்துக்களை அறிந்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் மட்டும் போதாது. எங்களைப் போன்றவர்களை எல்லாம் அவர்கள் மாவட்டத்திற்கு வரும்போது சந்தித்து விவாதம் நடத்தி, தெரிவிக்கின்ற கருத்தின் அடிப்படையில் இருக்கிற குறைபாடுகளைக் களைய முயற்சி எடுக்க வேண்டும்.

குறிப்பாக, விவசாயத்திற்கு இந்த இலாகாவில் அதிகமான உற்சாகம் காட்ட வேண்டும். மற்ற எல்லாத் துறைகளையும்விட இந்தச் சமயத்தில் நமக்கு பேருதவியாக இருப்பது விவசாயம் தான். தமிழ்நாட்டில் நல்ல விவசாயிகள், தரமான விவசாயிகள், உற்பத்தியைப் பெருக்குகின்ற விவசாயிகள் ஏராளமாக இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக விவசாயத்தின் மூலம் தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிற விவசாயிகளின் குறைகளைப் போக்கி, அவர்கள் நல்ல பயன் அடையக்கூடிய வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

'போர் வெல்' போட்டு இருக்கிறோம். மேலும் போர்வெல் போடுவதற்கு நிறைய 'ட்ரில்' எல்லாம் வாங்கியிருக்கிறார்கள். வாங்கினோம் என்றால் போதாது. அதனால் என்ன பயன் ஏற்பட்டது? எத்தனை விவசாயிகள் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். இந்தக் கணக்கைப் பார்த்தால் ஒன்றும் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்குத்தான் இருக்கிறது. தண்ணீர் வழங்குவதற்காக 'வாட்டர் போர்டு'க்கு கொடுத்திருக்கிறார்கள். அதிலே பணம் வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, நீர்ப்பாசனம் இல்லாமல் தண்ணீர் தட்டுப்பாடாக இருக்கிற பகுதிகளில் 'பவர் ட்ரில்' போடுவதற்காக வாங்கப்பட்டது. அதற்கு ஏன் பயன்படுத்தவில்லை? தண்ணீர் தட்டுப்பாடான இடங்களில் விவசாயம் செய்வதற்கு ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது என்று இந்தச் சமயத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று 'புல்டோசர்கள்' வாங்கியிருக்கிறார்கள். அது விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படக் கூடியதுதான். ஆனால் எதற்காக வாங்கினோமோ அதற்குப் பயன்படுகிறதா? அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்று பார்க்க வேண்டும்.

அதைப் போன்றுதான் 'ட்ராக்டர்'கள் வாங்கியிருக்கிறார்கள். அதுவும் வாங்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக, சரியாகப் பயன்படுத்தவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ட்ராக்டர்களை வாடகைக்கு விட்டதினால் 60 இலட்சம் ரூபாய் வருமானம் வந்திருக்கிறது 1988 டிசம்பர் வரையில். மார்ச் மாதம் 3.0 இலட்சம் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே

எவ்வளவு முதலீடு போடப்பட்டது என்று சொல்லவில்லை. வருமானத்தை மட்டும் சொல்லியிருக்கிறார்கள். வாடகைக் கட்டணத்தை மட்டும்தான் சொல்லியிருக்கிறார்கள். போட்ட மூலதனம் எவ்வளவு? பழுதுபார்க்கும் செலவு எவ்வளவு? 'மேன் பவர்' எவ்வளவு? எத்தனை 'மேன் பவர்' எதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பன போன்ற விவரங்களை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை அளிக்கும்போது தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று இன்றைக்கு 'எஞ்ஜினியரிங் டிபார்ட்மெண்ட்' நம்முடைய விவசாயத் துறைக்கு சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. அது வேறு ஒரு துறைக்கு பயன்படுகிறது. ரோடு ரோலர் வாங்கியிருக்கிறார்கள். அதுவும் விவசாயத்திற்குத்தான் என்று சொல்லியிருக்கிறார்கள். ரோடு ரோலருக்கும் விவசாயத்திற்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது? கிராமங்களில் ரோடு போடுவதற்காக வாங்கினோம் என்று சொல்கிறார்கள். கிராமங்களில் ரோடு போடுவதற்கு பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அங்கே இருப்பவர்கள் பார்த்துக் கொள்கிறார்கள். விவசாயத் துறையில் எவ்வளவோ வேலைகள் இருக்கின்றன. அந்த வேலைகளை சரியாகச் செய்தாலே ஓரளவுக்குப் பயன் கிடைக்கும்.

ரோடு ரோலரை, ட்ராக்டர்கள் போன்று வாங்கி வாடகைக்கு விட்டிருக்கிறோம், அதன் மூலம் பணம் கிடைக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். வருமானத்தை மட்டும் சொன்னால் போதுமா? அதற்கு செலவு, முதலீடு, வருமானம், போன்ற கணக்குகள் எல்லாம் இருக்கின்றன. வாங்கப்பட்டவைகளில் எத்தனை வேலை செய்கிறது, எத்தனை பழுதுபட்டிருக்கிறது, வேலை செய்யவில்லை என்றால் காரணம் என்ன என்கின்ற விவரங்களை எல்லாம் பார்க்க வேண்டியிருக்கிறது. மொத்தத்தில் இந்த இலாகாவுக்கு எவ்வளவோ மானியம் கொடுக்கிறார்கள், பணம் ஒதுக்குகிறார்கள். இந்த இலாகாவுக்காக நாம் கோடிக் கணக்கான ரூபாயைச் செலவிடுகிறோம். (மணியடிக்கப்பெற்றது) இதிலே நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. அரை மணி நேரமாவது கொடுக்க வேண்டும். நேரம் இல்லை என்றால் பேசாமலே உட்கார்ந்து விடுகிறேன். இந்த இலாகா சம்பந்தப்பட்ட விவரங்களை மட்டுமே நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் ஒரு உறுப்பினர் பேச வேண்டும்; அதற்குப் பின்னால் அமைச்சர் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, விரைவில் முடித்து விடுங்கள்.

திரு.கோ. பூவராகன்: சுருக்கமாகச் சொல்கிறேன்; இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள். எந்த எந்தத் துறையிலே எண்ணெய் ஆலை வைத்திருக்கிறார்கள் என்ற விவரம் சரியாக



இல்லை. இதற்கு முன்னாலே பல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 'போர் வெல்' போட்டு கரும்பு உற்பத்திக்கு எப்படி பாசன வசதி செய்யப்படுகிறதோ அதைப் போன்று கடலைப் பயிருக்கும் பாசன வசதி செய்ய வேண்டும். கடலை விவசாயத்திற்கு பாசன வசதி செய்து, அந்த வட்டாரத்தில் எண்ணெய் ஆலை வைத்தால் பயனுடையதாக இருக்கும். அது மட்டுமல்லாமல் கரும்பாலைக்கு என்னென்ன உதவிகள் செய்யப்படுகின்றனவோ அதைப் போன்று இந்த எண்ணெய் ஆலைக்கும் உதவி செய்ய வேண்டும். அந்த அடிப்படையிலே இரண்டு எண்ணெய் ஆலைகளை திருவண்ணாமலையிலும், விருத்தாசலத்திலும் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்குத் தேவையான இடங்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதன் பிறகு என்ன செய்தார்கள் என்பது தெரியவில்லை. எத்தனை இடங்களில் 'போர் வெல்' போட்டு, கடலை விவசாயத்திற்கு ஊக்கமளித்து ஏற்பாடு செய்தார்கள் என்றால் விவரம் இல்லை. இன்றைக்கு எண்ணெய் உற்பத்திக்கு கடலை இல்லை. ஆலையும் இல்லை. அதற்கு என்ன காரணம்? இன்றைக்கு அந்த இரண்டு ஆலைகளும் சரியாக நடக்கவில்லை. அதற்கு ஏதேதோ காரணம் சொல்கிறார்கள். அதாவது அவ்வப்போது விஸ்தரிப்பு செய்வதற்கு மெசினரி வாங்குகிறார்கள். மெசினரி வாங்குவதிலே காலதாமதம். மெசினரி வாங்கி அந்த இடத்தில் கொண்டுபோய் பொருத்துகிறோம் என்று சொல்கிறார்கள். பொருத்துவதற்குள் எல்லாம் போய் விடுகிறது. சரியாக இல்லை. சரியான அறையில் அந்த இலக்கை எட்டவில்லை. இந்த மெசினரிகளைப் பயன்படுத்தவில்லை. அதற்காக ஒதுக்கிய பணம் சரியாகச் செயல்படுத்தப்படவில்லை. இன்னும் 50 ஏக்கர் 60 ஏக்கர் என்று ஏக்கர் கணக்கிலே போட்டுக்கொண்டே போகிறோம். ஆக எண்ணிக்கை ஏற்ற அளவில் போய்க்கொண்டிருக்கிறதே தவிர உண்மையிலே கடலை, சூரியகாந்தி, சோயா பீன்ஸ் போன்றவற்றிலிருந்து எண்ணெய் எடுக்கிற அந்தப் பகுதியிலே என்ன கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். இவை எல்லாம் கணக்கில் இருக்கிறதே தவிர நடைமுறையில் எந்த இடத்திலும் இல்லை என்பதை மொத்தமாகச் சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, கரும்பு உற்பத்தியைப் பொறுத்த வரையில் எந்த அளவுக்குக் கவலைப்படுகிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். அவர்களே கூறியிருக்கிறார்கள், கரும்பு செஸ் பல வருஷமாகக் கட்டப்படாமல் இருக்கிறது என்று. அது பல ஆண்டுகளாகக் கட்டப்படாமல் இருக்கிறது. அந்தப் பணத்தை எங்கே கட்டுகிறார்கள், யார் கணக்கில் கட்டுகிறார்கள், அந்தப் பணத்தை எடுக்கக்கூடிய அளவில் யார் இருக்கிறார்கள். ஏன் கட்டவில்லை என்பதை எல்லாம் பார்க்க வேண்டும். நம்முடைய நீதிமன்றங்களில் இருக்கிற வழக்கறிஞர்கள் என்ன செயது

கொண்டிருக்கிறார்கள்? ஏன் அந்த 'ஸ்டே'-வை எல்லாம் 'வித்ட்ரா' பண்ண முடியவில்லை? அதற்கான முயற்சியை எடுத்தார்களா? அதற்கென்று ஒரு டைரக்டரேட் இருக்கிறது. அதாவது கரும்பாலை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென்று இருக்கிறது. அவர்கள் எந்த அளவுக்கு நகர்ந்திருக்கிறார்கள் என்று பார்த்தால், நகரவே இல்லை. சுத்தமாக நகரவே இல்லை என்று நான் சொல்கிறேன். 11-வது மாதத்தில் அதாவது நவம்பர் மாதத்தில் கரும்பை எடுத்து ஆலைக்குக் கொண்டு சென்றிருக்க வேண்டும். ஆனால் நவம்பர் போய் விட்டது, டிசம்பர் போய்விட்டது, ஜனவரி போய்விட்டது, மார்ச் போய்விட்டது, ஏப்ரல் போய்விட்டது. இப்படி 5 மாதங்கள் ஆகியும் கூட கரும்பாலைகளுக்கு கரும்பை அனுப்புவில்லை என்றால் அந்தக் கரும்பு என்ன ஆகும்? காய்ந்து விடும். வருஷம் பூராவும் வேலை செய்து கரும்பை உற்பத்தி செய்து அதைக் கரும்பாலைக்கு காலாகாலத்தில் அனுப்ப முடியவில்லை என்றால் அதற்கு என்ன காரணம் என்று கண்டறிகின்ற பொறுப்பு அவர்களுக்கு உண்டு. அவர்கள் கண்டுபிடித்து உடனடியாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மேலும் கரும்பை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அனுப்பக்கூடாது என்று விதி வைத்திருக்கிறார்கள். எதனால் அந்த விதி ஏற்பட்டது என்பது தெரியவில்லை. ஒரு இடத்தில் அவர்களால் அரைக்க முடியவில்லை என்று இன்னொரு இடத்திற்கு அனுப்பினாலும் கூட அதற்கு அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். அப்படி இன்னொரு இடத்திற்குச் சென்று அரைக்க வேண்டுமென்றால் இந்த வட்டாரத்தில் இருக்கிறவர்களுக்கு 30 ரூபாய், 35 ரூபாய் என்று கமிஷன் கொடுக்க வேண்டி இருக்கிறது. எனவே நம்முடைய மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்களிடத்திலே இது மிக முக்கியமான பிரச்சினை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது விவசாயிகளின் முக்கியமான பிரச்சினை, அவர்களுடைய பணப் பிரச்சினை. ஏதோ நாம் ஒருவருக்கு உதவி செய்கிறோம் என்றால் அந்த உதவியை இந்தக் கையிலே கொடுத்தால் அந்தக் கையிலே அதை வாங்கிக் கொண்டு போகிறார்கள். அந்த நிலை கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். இப்படி ஒரு வட்டாரத்தைச் சேர்ந்த கரும்பை அந்த வட்டாரத்தைச் சேர்ந்த கரும்பாலையால் பிழிய முடியவில்லை என்றால் வேறு ஒரு ஆலைக்கு அனுப்புகிறார்கள். அப்படி அனுப்புகிறபோது அங்கேயுள்ள அந்த ஆலைக்காரர்கள் இங்கே இருப்பவர்களுக்குக் கமிஷன் கொடுக்க வேண்டுமா? ஒரு டன்னுக்கு 30 ரூபாய், 35 ரூபாய் என்று ஏன் கொடுக்க வேண்டும். அப்படி ஏன் கொடுக்கிறார்கள். கொண்டு வருகிற கரும்பைப் பதிவு செய்ய மாட்டார்கள், பிழிந்தும் கொடுக்க மாட்டார்கள். பிறகு அதை இன்னொரு ஆலைக்கு அனுப்புகிறபோது அனுமதி மறுக்கிறார்கள். அப்படி அனுமதி வேண்டுமென்றால் அவர்



களுக்குக் கிடைக்கிற பணத்தில் கமிஷன் வாங்கிக் கொள்கிறார்கள். இந்த நிலைமை இருந்தால் எந்த அளவுக்கு அவர்கள் பாதிக்கப்படுவார்கள்........

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் இன்னின்ன ஆலைகளில் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்பது பற்றி இப்போது தெரிவிக்காவிட்டாலும் மாலையாவது எழுதித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஆனால் எனக்கு நேரம் இல்லை. ஒவ்வொரு ஆலையாக நான் பெயர்களைச் சொல்லிக் கொண்டு வந்தால் பிறகு குப்புசாமி, ராமசாமி என்ற அளவுக்குப் போய்விடும். எனவே அவற்றை நான் சொல்ல விரும்பவில்லை. நீங்களே கேட்டுக் கொள்ளலாம். எந்தெந்த இடங்களில் இவ்வாறு டைவர்ட் செய்கிறார்கள்? ஒரு கரும்பை இன்னொரு ஆலைக்கு கொண்டு போகிறார்கள், ரிஜிஸ்டர் செய்யப்படாத கரும்பு எந்தெந்த ஆலைக்குப் போகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்து ஒரு வட்டாரத்திலிருந்து இன்னொரு வட்டாரத்திற்குச் சென்றால் ஏன் கமிஷன் தரவேண்டும் என்பதையும் கவனிக்கவேண்டும் என்று இந்தச் சமயத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். மார்ச் போய் விட்டது, இப்போது ஏப்ரல் நடக்கிறது. இந்த நடைமுறைகள் காரணமாக அவர்கள் இரண்டு மாதங்கள் காலதாமதம் செய்து அவற்றை அரைப்பதற்கு எடுத்துக் கொள்கிறார்கள் என்றால் அந்த விவசாயிகள் எந்த அளவுக்குக் கஷ்டப்படுவார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். ஒருசில ஆலைகளிலே 24 மணி நேரத்தில் அந்தக் கரும்பை எடுத்துக் கொண்டு அந்த விவசாயிகளை அனுப்பிவிடுகிறார்கள். சில இடங்களில் 3 நாட்கள் ஆகிவிடுகின்றன. இப்படி கரும்பை வெட்டி மூன்று நாட்கள் காய்ந்தால் அந்த விவசாயி எந்த அளவுக்கு நஷ்டப்படுவான் என்பதைப் பார்க்க வேண்டும். எனவே தான் இந்த டைரக்டரேட் இருப்பதை விட இல்லாமல் இருப்பதே நல்லது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த டைரக்டரேட்டைச் சேர்ந்தவர்கள் எந்த அளவுக்கு ஊர்களிலே இருக்கின்ற கரும்பாலைகளுக்கெல்லாம் சென்று எவ்வாறு கண்காணித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அதோடு எடையில் கூட இல்லுமுல்லு இருக்கிறது.

அடுத்து ரெக்கவரியைப் பொறுத்தவரையில் எவ்வளவு வரும் என்பதை அவர்கள் கண்டறிந்து அறிவிக்கை செய்ய வேண்டும். இந்த வட்டாரத்தில் உள்ள கரும்பைப் பொறுத்த

வரையில் இந்த அளவுக்கு ரெக்கவரி இருக்கிறது என்ற நிலை யைக் கண்டு கொள்ளவேண்டும். தற்சமயம் ஆட்டோமீட்டர் மாதிரி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதை வைத்து விட்டாலே அதிலே எவ்வளவு ரெக்கவரி வரும் என்று கண்ட றிந்துகொள்ள முடியும் என்று சொல்கிறார்கள். கம்ப்யூட்டர் மாதிரி இருக்கிறது. இதை எல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கரும்பு விவசாயம் செய்பவர்களுக்கு அந்த டைரக்டரேட் உதவி செய்யவில்லை, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஜாயின்ட் டைரக்டர் என்ற அளவில் அல்லது ஒரு கமிஷனர் என்ற அளவில் ஒருவர் இருந்தார். அவர்கள் இந்தப் பொறுப்பை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

(பிற்பகல் 1–40)

இப்போது தாய் இல்லாத பிள்ளை மாதிரி எந்தப் பக்கம் போவது என்று இல்லாமல் எங்கெங்கோ அலைந்துகொண்டிருக் கிறார்கள். இந்த நிலை போக்கப்படவேண்டும். அது மட்டு மல்ல, இந்த செஸ் 6 வருடம் 8 வருடம் என்று, கிட்டத்தட்ட ரூ. 15 கோடி வரையில் ஆலைக்காரர்களிடம் நமக்கு கிடைக்க வேண்டிய தொகை, பணம் அங்கே தேங்கிக்கிடக்கிறது. அந்தப் பகுதியிலே கட்டை வண்டி போகிறது லாரி, போகிறது, யாரும் தனியாக நடந்துபோனால்கூட திரும்பி வரமாட் டார்கள். அப்படி பள்ளம் மேடாக இருக்கின்றது. அந்தப் பணம் பயன்படவேண்டும். இதையெல்லாம் சீர் செய்வதற்கு அந்தப் பணம் கொடுக்கப்படவில்லை. அது அரசாங்கத்தின் கஜானாவிலோ அல்லது வங்கிகளிலோ, தனிப்பட்ட முதலாளி களிடத்திலோ இருப்பதற்காக வாங்கப்படவில்லை. அதற்கு அவர்கள் சொல்கிற காரணம், இந்த பர்ச்சேஸ் டேக்ஸ் நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த பர்ச்சேஸ் டேக்ஸ் மற்ற மாநிலங்களிலே இல்லை. அதேமாதிரி நம்முடைய பர்ச்சேஸ் டேக்ஸ்-ம் இல்லாமல் இருந்தால் நாம் எல்லாம் கட்டிவிடுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று, இதெல்லாம் உங்களுடைய பிரச்சினை, கரும்பு ஆலைகளுக்கும் அரசாங் கத்துக்கும் உள்ள பிரச்சினை. எங்களுடைய பிரச்சினை எல் லாம் ரோடு சீர் செய்வதற்கு இந்த செஸ் நிதியைப் பயன் படுத்தவேண்டும் என்பது. இன்று இந்த இலாகாவிலே நல்ல சுறுசுறுப்பாகப் பணியாற்றுகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்து இருக்கிறார்கள். குறுகிய காலத்திலே பல மாவட்டங்களிலே சென்று பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்பதை நன்றாக அறிவேன். இந்த சுறுசுறுப்பு போதாது. ஏற்கெனவே உறங்கிக் கிடக்கின்ற இந்த இலாகாவை இன்னும் கொஞ்சம் தூக்கி நிறுத்தி வேகமாகப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



* திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியத்தின் மீது கலந்துகொண்டு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த குளித்தலை சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர், புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக தமிழகத்திலே விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். அவர்களுடைய நலனிலே அக் கறை கொண்ட அரசு பலவித சலுகைகளை அளித்திருக்கிறது. அப்படி அறிவித்திருந்தாலும், தமிழகத்திலே இப்போதும் விவசாயிகளின் நிலைமைகள் சரியாக இல்லை. அவர்கள் கஷ்டத் திற்குள்ளாகின்றார்கள். அவர்கள் நஷ்டத்திற்குள்ளாகின்றார் கள். தமிழகத்தில் பொதுவாக விளைகின்ற விளைபொருள் களுக்குத் தமிழகத்திலே விலை நிர்ணயம் செய்வதில்லை. அங்கே இருக்கின்ற மத்திய அரசுதான் விலை நிர்ணயம் செய் கிறது. அப்படி விலை நிர்ணயம் செய்கின்ற நேரத்திலே, இங்கே இருக்கின்ற கூலி தன்மை, நிலத்தின் தன்மை, இங்கே இருக்கின்ற இயற்கை சூழ்நிலை, பாதிக்கப்பட்ட சூழ்நிலை இவைகளைப் பார்த்து விலை நிர்ணயம் செய்வதில்லை. அந்த விலை நிர்ணயம் செய்யும் குழுவிலே நம்முடைய விவசாயிகள் இடம் பெறுவதில்லை. எனவே அங்கு விவசாயிகள் எல்லாம் இடம் பெற்றாகவேண்டும். அந்தக் குழுவை தமிழகத்திலே அமைத் திடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக விவ சாயிகளின் விளைபொருள்கள் அத்தியாவசியப் பொருள்களாக இருப்பதால், அவைகளின் விலைகள் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்று அரசு நினைப்பதிலே தவறு இல்லை. இருந் தாலும் இந்த அரசு அறிவிக்கின்ற கூலி உயர்வும், அவர்கள் இடுகின்ற இடுபொருள்களுடைய விலையையும் மனதில் கொண்டு விவசாயிகளின் விளைபொருள்களுக்கு அதிக விலை நிர்ணயம் செய்யவேண்டும். மானியமாக எவ்வளவு தொகைகள், எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்வது என்று பார்க்கவேண்டும். விவசாயிகளுக்கு அதிக மான்யம் ஒதுக்கீடு செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே இந்த விளைபொருள்களுக்கு பல சலுகைகள் அளித்திருக்கிறார்கள். குறிப்பாக மின்சார மோட்டார்களுக்கு வரிச் சலுகை அளித்திருக்கிறார்கள். அது பாராட்டப்படக்கூடிய ஒன்றுதான்.

அதுபோலவே, விவசாயிகள் உபயோகப்படுத்துகின்ற டிராக் டர்கள், உழுகின்ற கலப்பைகள், பவர் டில்லர்ஸ் போன்றவை களுக்கும் விவசாய இலாகா சமமான வரிவிதிப்பில் விலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே விவசாயிகள் ரோடுகளிலே விவசாயிகளுடைய குப்பைகளை, உரங்களை எடுத்துச்செல்கின்ற டிராக்டர்களுக்கு ரோட் பெர்மிட் தேவை என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆக அந்த டிராக்டர்களுக்கு ரோட் பெர்மிட் தேவையில்லை என்று விவசாயிகளுக்கு சலுகையாக இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் பொறியியல் துறை மூலமாக புல்டோசர்கள், டிராக்டர்கள் எல்லாம் வாங்கியிருக்கின்றார்கள் என்று சொல் லப்பட்டது. ஆனால் கிணறு வெட்டுவதற்கும் அங்கே இயந் திரங்கள் வாங்கியிருக்கிறார்கள். விவசாயப் பொறியியல் துறை மூலமாக கிணறு வெட்டுவதற்கோ, மண்ணைத் தள்ளு வதற்கோ கூடுமானவரை கோடைக்காலத்தில்தான் வசதியாக இருக்கும். ஆனால் கோடைக்காலத்தில் இப்படிப்பட்ட இயந்திரங் கள் வேண்டுமென்று பதிவு செய்தால் அங்கே கிடைக்கின்ற இயந்திரங் கள் கம்மியாக இருப்பதால், அந்த புல்டோசர்கள் அல்லது பாறை உடைக்கும் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு குறிப்பிட்ட காலத்திலே கிடைப்பது இல்லை. கோடைக்காலத்திலே செய்யவேண்டியது மாரிக்காலத்திலேதான் செய்யவேண்டியதாக இருக்கிறது. அது விவசாயிகளுக்கு பயனற்றதாகப் போய்விடுகிறது. ஆகவே அந்தந்த மையங்களிலேயே கூடுதலான புல்டோசர்களை, டிராக்டர்களை வாங்கிக்கொடுத்து விவசாயிகள் பயன் அடையுமாறு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கரும்பு விலை பற்றி சொன்னார்கள். இதற்கு முன்பு மத்திய அரசு அதைப் பற்றி அறிவிக்கும்போது, தமிழக அரசு முத்தரப்பு மாநாடு ஒன்றைக் கூட்டி, ஆலை அதிபர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் விவசாயிகளைக் கேட்டு கரும்பு விலையை நிர்ணயம் செய்யும் நடைமுறை இருந்து வந்தது. ஆனால் கடந்த 2, 3 ஆண்டுகளாக அப்படிச் செய்யவில்லை. ஆகவே, எப்போதும் வருங்காலத்தில் விவசாயிகளைக் கலந்து கரும்புக்கு விலை நிர்ணயிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முந்தைய ஆண்டுகளில் கரும்புகளிலிருந்து கிடைக்கும் விற்பனை வரியிலிருந்து ஒரு பகுதியை டன் ஒன்றுக்கு ரூபாய் பத்து முதல் இருபது வரை மானியமாக விவசாயிகளுக்கு அரசு வழங்கி உள்ளது. அதேபோல் இந்த ஆண்டும் விவசாயிகளுக்கு கரும்பு விற்பனை வரியிலிருந்து ரூபாய் இருபதை மானியமாக வழங்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்வது என்து கோரிக்கையாகும். விவசாயிகள் இன்றைக்கு கஷ்டப்படும் நிலையை மனதில் கொண்டு, அவர்களே வரியாகக் கொடுக்கின்ற தொகையிலிருந்து ஒரு பகுதியை அவர்களின் நன்மைக்காகவே இந்த அரசு இந்தவகையில் வழங்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,



அடுத்து, குளங்களைச் சீர்படுத்துவது, பாசன வசதிகள் ஏற்படுத்துவதுபற்றி எல்லாம் இந்த அரசு கூறியிருக்கிறது. குளங்களைச் சீர்படுத்துவதற்கு எவ்வளவு பணம் செலவு செய்தாலும் புல குளங்களுக்கு மழை பெய்யும் காலங்களில்தான் வாரிகள் மூலமாக தண்ணீர் வந்து நிரம்ப வேண்டும். அவ்வாறு வாரிகள் மூலமாக தண்ணீர் குளங்களுக்கு வருகின்றபோது, பெரிய மழை பெய்யும்போது ஏராளமான தண்ணீர் வரும்போது, நல்ல பெரிய வாய்க்கால் வசதியில்லாததால் தண்ணீர் திசை மாறி பல ஊர்களையும், விளை நிலங்களையும் அழித்து விடுகிறது. மேலும் அவ்வாறு தண்ணீர் வரும் வாரி புறம்போக்கு நிலங்களை பலர் ஆக்கிரமித்து இருப்பதால் குளங்களுக்கு வருவதற்கு மாறாக வேறு வகையில் திசை மாறி ஓடிக்கொண்டிருக்கிறது. அவ்வாறு போகின்ற காட்டு வாரி தண்ணீர், சேதங்களை விளைவிப்பதுடன், குளங் களுக்கும் தண்ணீர் வந்து சேருவதில்லை. ஆகவே, வாரி புறம் போக்கில் ஆக்கிரமித்து இருப்பவர்களை வெளியேற்றி குளங் களுக்கு முறையாக தண்ணீர் வந்தடையுமாறும், அந்தத் தண்ணீரை பாசன வசதிகளுக்கு பயன்படுத்துமாறும் உரிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காவிரி டெல்டா பகுதியில் வருகின்ற தண்ணீரும் விளை நிலங்களில் உள்ள பயிர்களை அழிக்கிறது. ஆகவே, திருச்சி மாவட்டத்தில் காவிரி டெல்டா பகுதியிலுள்ள பல வாரி களில் உள்ள புறம்போக்கு ஆக்கிரமிப்பாளர்களையும் அகற்ற வேண்டும் என்பதே என்னுடைய பணிவான வேண்டுகோளாகும். ஆக, நான் சொல்லியுள்ள வடிகால் வசதிகளை எல்லாம் இந்த அரசு நல்லமுறையில் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, என் தொகுதியில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிற தோகைமலை பகுதியிலுள்ள சில குளங்களை இந்த அரசு சீர்படுத்த வேண்டும், வெட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கூடலூர், கீழவெளியூர், மறவனூர் போன்ற இடங்களில் எல்லாம் பெரிய ஏரிகள் இருக் கின்றன. அங்கே 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் விவசா யத்தை நம்பி வாழ்கிறார்கள். அங்கே 5 ஆயிரம் ஏக்கர் சாகுபடி நிலங்கள் இருக்கின்றன. ஆகவே, அவசியம் இந்த ஏரிகளை சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மணப்பாறையில் மிகவும் கஷ்டமான நிலைமையில் குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அங் குள்ள மக்கள் புகைவண்டியில் இருந்து குடிதண்ணீர் எடுத்து வருகிறார்கள். அதுபோல கூடாத கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுப்பதால் அங்கே காலரா பரவியிருக்கிறது. ஆகவே, அப்பகுதி யிலுள்ள குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு காவிரியி லிருந்து தண்ணீர் கொண்டு வருகின்ற திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. பாப்பா சுந்தரம்] [1989 ஏப்ரல் 5

அடுத்து, விவசாயக் கல்லூரி ஒன்றை திருச்சியில் அரசு ஆரம்பிப்பதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தக் கல்லூரியை திருச்சிக்கு அருகில் உள்ள குளித்தலையில் தொழில்வளம் எதுவும் இல்லாத இடத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குளித்தலையில் பஸ் ஸ்டாண்ட் கட்டப்படாத நிலையும் பஸ் ஸ்டாண்ட் மிகவும் சீரழிந்த நிலையும் இருக்கிறது. அதை சீரமைக்க ஏற்பாடு செய்து தரவேண்டும். என்னுடைய கன்னிப் பேச்சில் நான் இதைப்பற்றி குறிப்பிடுகிறேன், அரசு ஆவனசெய்ய வேண்டும். அதேபோல தோகைமலைப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே, அங்கே தொழில் மையும் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டு. வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையில் நேற்றைய தினம் சமர்ப்பித்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது 21 மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு நல்ல, சிறந்த கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய அரிய யோசனைகளுக்கு இந்த அவையில் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை என்று நாம் இங்கே எடுத்துச்சொன்னாலும், இந்தத் துறையைப் பொறுத்தவரையில் 6 துறைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. அவை வேளாண்மைத் துறை, எண்ணெய் வித்துக்கள் துறை, தோட்டக் கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனைத் துறை, விதைச் சான்று துறை ஆகியவையாகும். இப்படி 6 துறைகள் மட்டுமல்லாமல் கழகங்கள் என்று எடுத்துக்கொண்டால் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகம், வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் ஆகிய இரண்டு கழகங்களும் சேர்ந்து அத்துடன் வேளாண்மைப் பல்கலைக் கழகமும் சேர்ந்து பணியாற்றும்போது ஒருங்கிணைந்து வருவது தான் வேளாண்மைத் துறை என்பதை நான் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்துறை பற்றி பேசப்பட்ட கருத்துக்கள் அத்தனையும், பேசப்பட்ட குறைபாடுகள் அத்தனையும், பேசிய உறுப்பினர்கள் அனைவரையும் நினைவில் கொண்டிருந்தாலும், நேரம் இல்லாததால், அவரவர்களுக்குத் தனித் தனியாகப் பதில் அளிக்கின்ற வாய்ப்பு எனக்கு கிடைக்காத காரணத்தால், அதற்கு அனுமதி தந்தால் பிற்பகுதியில் பதிலளிக்கிறேன் என்று சொல்லி, நான் என்னுடைய உரையைத் துவக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-50)



1989 ஏப்ரல் 5] [திரு. கோ. சி. மணி]

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் நான் ஆரம்பத்தில் சொன்னதைப்போல 6 துறைகள் இணைக்கப்பட்டு, ஒரு துறையாகப் பணியாற்றி வந்தாலும், அவைகள் இன்றையதினம் உயர்ந்த கோட்பாடுகளை உலகுக்கு உணர்த்திய இந்தத் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையான பங்கு பெறுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களில் 70 சதவிகிதத்தினரின் வளமான வாழ்க்கைக்கு வழி வகுப்பதோடு, 50 சதவிகித மக்களுக்கு வேலையும், மாநிலத்தின் மொத்த வருவாயில் கணிசமான பங்கை ஏற்று, உறு பசியும் ஓவாப் பிணியும் வராமல் காக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண் குடி மக்கள் பொருளாதார உயர்வுக்கு மிகவும் அவசியமான பயிர் விளைச்சல் உற்பத்தியை அடைவதன் மூலம் கிராம வளர்ச்சி பெற பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு செயலாக்கப்படுகின்றன. அவை தரமான விரிவாக்கப் பணி, காலத்தே தேவையான அளவு இடுபொருள் வழங்குதல், ஒருங்கிணைந்த உர மேலாண்மை, தேவைக்கேற்ப பயிர் பாதுகாப்பு, பண்ணைத் தொழிலாளர்கள் மற்றும் மகளிர் பயிற்சி, நெல் ஒட்டுமொத்தக் கொள்முதல் செய்யப்படும் காவிரி நதிப் படுகை விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கமளிப்பு, ஸ்வீடன் நாட்டு உதவியுடன் வேளாண் காடு வளர்ப்பு ஆகியவை. இம்முன்னேற்றத் திட்டங்கள் யாவும் தேவைக்கேற்றவாறு மாறுதல்களுடன் 1989-90 ஆம் ஆண்டில் தீவிரமாகச் செயற்படுத்தப்படும். கொடுப்பது, கெடுப்பது எல்லாம் மழை என்று கிராமங்களில் சொல்கிற பழக்கமுண்டு. ஏறத்தாழ 5 ஆண்டுகாலமாக தமிழகத்தைப் பொறுத்த வரையில் தொடர்ந்து அது நடந்து கொண்டு வருகிற காரணத்தால், அதை உறுதியிட்டு, அறுதியிட்டு, திட்டமிட்டு செயற்படுத்த முடியாத சூழ்நிலை சிற்சில நேரங்களில் இந்த இலாக்காவிற்கு வந்துவிடுகிறது என்பதை இங்குள்ள உறுப்பினர்கள் அனைவிற்கு அறிவார்களென்று கருதுகிறேன். 1988-89 ஆம் ஆண்டில் தென் மேற்குப் பருவ மழை இயல்பான அளவைவிட அதிகமாகப் பெய்திருக்கிறது. ஆனால் வடகிழக்குப் பருவ மழை காலத்தே தொடங்காமலும், குறைவாகவும் பெய்தது. மேட்டூர் நீர்த் தேக்கம் 55 நாட்கள் தாமதத்துடன் திறக்கப்பட்டிருக்கிறது. அது ஆகஸ்டு மாதம் 7ஆம் தேதி திறக்கப்பட்டிக்கிறது. ஜூன் மாதம் 12-ம் தேதி வழக்கமாகத் திறக்கப்பட வேண்டும். முக்கியமாக தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு பகுதி ஆகிய பகுதிகளுக்கு பாசன வசதி கொடுப்பதற்கு இது ஒரு உற்பாதமாக அமைந்துவிட்டது. இதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், நான் கொடுத்திருக்கிற கொள்கைக் குறிப்பில் காணப்பட்டிருக்கிற புள்ளி விவரங்களில் குறைவாக இருக்கிறது, கூட இருக்கிறது என்று எண்ணிப் பார்த்து, ஒரேயடியாக விவசாயிகளுடைய உற்பத்திக்கு இந்த இலாக்கா உதவவில்லை, அதனால்தான் விளைசல் குறைந்து விட்டது என்ற அளவுக்கு உறுப்பினர்கள் தயவுசெ

சென்று விடுவார்களோ என்பதற்காகத்தான் கடைசி நேரத்தில் உங்கள் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று சொல்கிறேன். முழு நிலங்களும் விவசாயம் செய்ய முடியாத நிலையில், ஓரளவு நிலம் குறைந்தாலும்கூட, ஆண்டுக்காண்டு விளைச்சலைக் குறைக்காமல் கொண்டு வந்திருக்கிறது இந்த இலாக்கா என்பதை இந்த அவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கெல்லாம் க ரணம், இடுபொருள் வழங்குதல், காலத்தில் உரமிட பயிற்சி கொடுத்தல் இது போன்ற பல காரியங்களைத் தொடர்ந்து செய்வதுதான். அதில் தவறுகள் இருக்கலாம். பூச்சி மருந்தில் தப்பு, உரத்திலே குறை, பணியாளர்கள் சரியாகப் டணி செய்யவில்லை — இது வழக்கம். ஒரு குடும்பத்தில் 10 பிள்ளைகள் இருந்தாலும்கூட எல்லாப் பிள்ளைகளும் ஒரே மாதிரி செய்வதில்லை. அங்கொன்றும், இங்கொன்றும் தவறு நடக்கும். அப்போதும் நடக்கும், இப்போதும் நடக்கும், எப்போதும் நடக்கும். எனவே ஒட்டு மொத்தமாக தவறு நடந்திருக்கிறதென்று சொல்வது அவ்வளவு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேட்டூர் 7ஆம் தேதி பாசனத்திற்குத் திறக்கப்பட்டது. அதன் காரணமாக கார், குறுவை மற்றும் சொர்ணவாரிப் பட்டங்களின் சாகுபடி பாதிக்கப்பட்டு, இயல்பான பரப்பளவான 4.15 இலட்சம் ஹெக்டேருக்கு மாறாக 2 இலட்சம் ஹெக்டேரே பயிரிடப்பட்டது. சாகுபடி அளவு குறைந்திருப்பதற்கு இது ஒரு காரணம்.

இப்படி காவிரி நீர் பொய்த்த காரணத்தால் — மழையும் மற்ற பகுதிகளில் சரியான காலத்தில் பெய்யாத காரணத்தால்— குறிப்பாகத் தமிழகத்தின் நெல் களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தின் குறுவை இயல்பான பரப்பான 1.68 லட்சம் ஹெக்டேருக்கு பதிலாக 25,000 ஹெக்டேரில் மட்டுமே இந்த ஆண்டு பயிரிடப்பட்டு இருக்கிறது. சம்பா தாளடியின் 4.52 லட்சம் ஹெக்டேர் இயல்பான பரப்பில் 4.32 லட்சம் ஹெக்டேரில்தான் பயிராக்கப்பட்டிருக்கிறது இந்த மாவட்டத்தில். இவைகளையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் நம்முடைய சாகுபடியின் மொத்தப் பரப்பில் குறைவு ஏற்பட்ட போதிலும், புதிய தொழில்நுட்பக் கூறுகள் — நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டுச் சொன்னபடி — இவைகளைப் பயன்படுத்தியும் விவசாயிகளின் விடாமுயற்சியாலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் இந்த ஆண்டுக்கு 15 லட்சம் டன் அரிசி உற்பத்தியை அடையக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கணக்குகள் வருவதில் காலதாமதம் இருப்பதால்தான் அதை நான் சரியாகச் சொல்லாமல் 15 லட்சம் டன் என்று சொல்லுகிறேன். கொஞ்சம் எட்டியும் இருக்கலாம்.



மாநில அளவில் கடந்த ஆண்டுகளில் இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் காவிரி நதிநீர்ப் பங்கீடு பிரச்சினை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டது என்றாலும் 25 லட்சம் ஹெக்டேரிலிருந்து படிப்படியாக குறைந்து, 19 லட்சம் ஹெக்டேருக்கு வந்தாலும், நாம் விட்ட இடத்திலிருந்து தொடருவோமானால், தொடர்ந்து இந்தப் பணியில் வெற்றி பெறுவோம் என்ற உறுதியை இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உற்பத்தித் திறனை 2,138 கிலோவிலிருந்து, வேளாண்மைத் துறையின் விடா முயற்சியின் காரணமாக 3,000 கிலோ அளவுக்கு ஒரு ஹெக்டேருக்கு அரிசி உற்பத்தி குறைந்து விடாமல் — நடப்பு ஆண்டில் 57 லட்சம் டன் அடையவாய்ப்பு ஏற்படுத்தி விடலாம்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்களைப் படிக்கிறார்கள். அவரிடம் மற்ற மாநிலங்களில் — அதாவது நெல் உற்பத்தி செய்கிற மாநிலங்களில் — ஒரு ஹெக்டேருக்கு எவ்வளவு நெல் உற்பத்தி செய்கிறார்கள் என்ற விவரம் இருக்கிறதா? பஞ்சாப் மாநிலத்தில் நெல் உற்பத்தி ஒரு ஹெக்டேருக்கு எவ்வளவு என்ற விவரம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: விளைச்சலைப் பொறுத்தவரை பல்வேறு மாநிலங்களிலும் ஆங்காங்கே இருக்கிற நீர்ப்பாசன வசதிகளுக்கு ஏற்பவும், தட்ப வெட்ப நிலைகளுக்கு ஏற்பவும் ஒவ்வொரு இடத்திலும் ஒரு ஒரு மாதிரியாக விளைகிறது. ஒரு இடத்திலே கரும்பு அதிகமாக விளைகிறது. ஆனால் ஏறத்தாழ இந்தியாவில் உள்ள 8 மாநிலங்களோடு தமிழ்நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது எல்லா மாநிலங்களையும் விட நம் மாநிலத்தில்தான் கரும்பில் அதிக விளைச்சல் இருக்கிறது. அரியானா மாநிலத்தில் கூட எல்லாப் பகுதிகளிலும் சரியாக விளைகிற நிலை இல்லை. அங்கெல்லாம் கூட நான் சென்று பார்த்து வந்தேன். சில பகுதிகளில், சில இடங்களில் நம்மைவிட மோசமான கண்டு முதல் ஆவதாகச் சொன்னார்கள்.

ஆயினும் இந்த மாநில அளவில், கடந்த 5 ஆண்டுகளின் இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் காவிரி நதிநீர்ப் பங்கீடு பிரச்சினை காரணமாக 19 லட்சம் ஹெக்டேருக்கு — இப்போது இந்தக் கணக்குப்படி பார்த்தால் — நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டதைப்போல் 2,138 கிலோ— 3000 கிலோ அளவுக்கு உயர்த்தியதன் பயனாக நாம் 57 லட்சம் டன்னை எட்டி விடுவோம் என்ற உறுதியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்,

[திரு. கோ. சி. மணி] [1989 ஏப்ரல் 5

ஏனைய பயிர்களில் 14.60 லட்சம் சிறு தானியமும் 5.0
லட்சம் பயிறு வகைகளும் 22.0 லட்சம் டன் கரும்பு — வெல்ல
மும் மற்றும் 5.20 லட்சம் பொதிகள் பஞ்சு உற்பத்தியும் அடை
யக் கூடும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

1989–90 பருவத்தில் பருவ நிலை சாதகமாக அமையும்
என்று எதிர்பார்த்து 60 லட்சம் டன்கள் அரிசியும், 18 லட்சம்
டன் சிறுதானியமும், 5.20 லட்சம் டன் பயறு வகைகளும், 24.2
லட்சம் டன் கரும்பு — வெல்லமும், 5.20 லட்சம் டன் பொதி
கள் பஞ்சு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த இலக்குகளை அடைய 24 லட்சம் ஹெக்டேரில் நெல்
பயிரிடப்படும். அதில் 95 சதவீதம் நிலப் பரப்பில் உயர் விளைச்
சல் ரகங்கள் பயிரிடப்படும். செங்கை, அண்ணா தென்னாற்
காடு, வடாற்காடு, திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, மதுரை
மற்றும் நெல்லை— கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில்
1988-89-ல் சிறப்பு உணவுத் திட்டத்தின் அடிப்படையில் 3.06
கோடி செலவில் இத் திட்டம் செயலாக்கப்பட்டது. 1989–90
-ல் சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 8.20 கோடி
ஒதுக்கி இதன் மூலம் விதை, துத்தநாக சல்பேட், ஜிப்சம், களைக்
கொல்லிகள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் போன்ற இடு
பொருள்கள் மானிய விலையில் வழங்கப்பெற்றன. ஏறத்தாழ
5 கோடி அதிகரித்திருக்கிறது.

(பிற்பகல் 2-00)

அதிக விளைச்சல் திறன்கொண்ட பகுதிகளைத் தேர்ந்
தெடுத்து, ஹெக்டேருக்கு 9 டன் மகசூல் அடைய தேவையான
இடுபொருள்கள், புதிய உக்திகள், ஒருங்கிணைந்த பயிர்ப் பாது
காப்பு, உர மேலாண்மை, மற்றும் கடன் வசதிகள்
விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்ய 1988–89 ஆம் ஆண்டில்
ஒரு லட்சம் ஹெக்டேரில் முயற்சிகள் செய்யப்படலாம் என்று
திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 1989–90 ஆம் ஆண்டில் 1.10
லட்சம் ஹெக்டேரில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்
பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
1988–89 ஆம் ஆண்டில் 16 விழுக்காடு நெல் விதை விநியோகம்
செய்ய 18,620 டன்கள் ஏற்பாடு செய்யப்பட்டது. விதை சரி
யாக இல்லை, முளைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்
தாலும், இவ்வளவு நெல் விதைகளை சென்ற ஆண்டு துறையின்
மூலம் விவசாயிகள் பெற்று அவைகளை விதைத்திருக்கிறார்கள்.
அதை இந்த ஆண்டில் 20 சதவீதமாக உயர்த்துவதற்கு,
இந்த அரசு பொறுப்பேற்றவுடன் முதலில் கவனம் செலுத்தி
யது. விதைகள் போதிய அளவுக்கு கொடுக்க மறுக்கிறார்கள்.
நேர்த்தியான விதைகள் அதிகம் தேவை என்று கேட்கும் அள
வுக்கு எண்ணிக்கை அதிகரித்த காரணத்தால் இந்த ஆண்



1989 ஏப்ரல் 5] [மாண்புமிகு திரு. கோ. சி. மணி]

அதனுடைய சதவீதத்தை 14-லிருந்து 20 ஆக உயர்த்தியிருக்
கிறோம். புதிய ரகங்கள் விளைவதைவிட மேலும் கணக்கிட்டுப்
பார்க்கும்போது—நெல்லைப் பார்த்துக் கொண்டே இருக்கி
றாயே, கரும்பைப் பற்றியும் பார்க்கக் கூடாதா என்று மாண்பு
மிகு முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் போன்ற
வர்கள் எல்லாம் மனதிலே எண்ணிக் கொண்டிருப்பார்கள்;
விளைச்சல் பற்றியோ அல்லது வருவாய் பற்றியோ அல்ல;
நிர்வாகத் தரத்தைப் பற்றி அவர்கள் சொல்கிறார்கள். அது
உடனடியாகக் கவனிக்கப்பட்டு, அதற்கு இன்னொருமுறை
பதில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மைய அரசு நிதியோடு 30 ஆயிரம் ஹெக்டேரில் புகையான்,
40 ஆயிரம் ஹெக்டேரில் புலை நோய், 30 ஆயிரம் ஹெக்டே
ரில் பச்சை தத்துப் பூச்சி, 40 ஆயிரம் ஹெக்டேரில் இலை
சுருட்டுப் புழு, 2 லட்சம் ஹெக்டேரில் எலி ஒழிப்பு, 10
ஆயிரம் ஹெக்டேரில் சோளம் சுருட்டு இலை ஒழிப்பு ஆகிய
வற்றுக்குத் தேவையான பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 50
சதவீத விலையில் இந்த ஆண்டு வழங்கப்பட இருக்கின்றன.

தரமான பூச்சி மற்றும் பூஞ்சான்கொல்லி மருந்துகள் விவ
சாயிகளுக்குக் கிடைத்திட பூச்சி மருந்துச் சட்டம் செயல்படுத்
தப்பட்டு வருகிறது. இச் சட்டத்தின் கீழ் 1988–89-ல் 14,136
மாதிரிகள் எடுக்கப்பட்டன. இது ரொம்பக் குறைவுதான்.
ஆனால் கணக்குகளைப் பார்க்கும்போது, 14,136 மாதிரிகள்
எடுத்து ஆய்வு செய்ததில் 306 மாதிரிகள் தரக் குறைவாக
காணப்பட்டன. இதன் காரணமாகக் கொடுக்கப்பட்ட
66 உரிமங்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கின்றன. 29 வழக்கு
கள் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்
பட்டுள்ளது. மற்றவைகள் மீது துறை நடவடிக்கை மேற்
கொண்டு வருகிறது.

டென்மார்க் அரசு நிதி உதவியுடன் செங்கை—அண்ணா,
தென் ஆற்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும்
நெல்லை மாவட்டங்களிலுள்ள உழவர் பயிற்சி நிலையங்கள்
மூலம் பண்ணை மகளிருக்கு பயிற்சி அளிக்க 30 மகளிர் கொண்ட
80 கிராம அளவு பயிற்சிகளும், 14 நிலையப் பயிற்சிகளும் நடத்
தப்படும்.

சுவீடன் நாட்டு உதவியுடன் 162 லட்ச ரூபாய் செலவில்
வேளாண் காடு வளர்ப்புப் பணியில் 60 லட்சம் பழம் மற்றும்
எரிபொருள்கள், மரக் கன்றுகள் வழங்கப்படும்.

யான் வெளியில் உள்ள தழைச் சத்தைக் கிரகித்து பயிருக்கு
அளிக்கத் தேவையான முயற்சி செய்து, 20 லட்சம் நுண்ணுயிர்
கலவைப் பொட்டலங்கள் வழங்கப்படும்.

1000 டன் மின் ஊட்ட சத்து கலவை உரம் தயாரித்து
வழங்கப்படும்.

ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் இழந்த அதிகாரங்
களைத் திரும்ப அவைகளுக்கு அளிக்கப்படுமென்று ஏற்கென
வே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த வாக்குப்படி,
வேளாண்மைப் பணிகள் 1981 ஆம் ஆண்டுக்கு முன்பு செயலில்
இருந்தபடி ஊராட்சிகள் பொறுப்பில் விடப்படும். இதற்குரிய
ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, ஆரம்பக் கட்ட வேலைகள்
முடிந்து விட்டன.

கிராமப்புற மக்கள் எளிதாக வேளாண்மை அலுவலர்
களையும், அது தொடர்புள்ள அதிகாரிகளையும் தொடர்பு
கொள்ள வேண்டுமென்ற நோக்கோடு மக்கள் பிரதிநிதிகள்
வெகுவாக இடம் பெற்று ஊராட்சி ஒன்றியங்கள் மூலம்
வேளாண்மைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. 1981
ஆம் ஆண்டு உலக வங்கி உதவியோடு வந்த வேண்டுகோள்படி
ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பிரிக்கப்பட்ட துறை தனியாக
செயல்பட்டு வந்தது. மறுபடியும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு
இப்பணி திரும்பத் தரப்படுவதால், ஊராட்சிமன்றத் தலை
வர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இத்துறையின் பணி
களில் பெரிதும் ஈடுபடுவதோடு துறை செயலாக்கப் பணிகள்
பற்றிய தகவல்கள் மிகவும் எளிதாக பரவலான முறையில்
மக்களை அடைய வாய்ப்பு உள்ளது. எந்தத் துறையிலுள்ள
அலுவலர்களையும் நாங்கள் இரண்டாம் பட்சமாகக் கருதிய
தில்லை; கருதப் போவதுமில்லை. நம்முடைய நோக்கம் விவ
சாய விரிவாக்கத் திட்டங்கள், இடுபொருள்கள், தொழில்
நுட்பக் கருவிகள் ஆகிய அனைத்தும் மிகவும் எளிதாக, விரி
வாக, பரவலாக மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதே,

இதை அமல்படுத்தும் விதத்தில்தான் மக்களுடைய மன்ற
மான ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக வேளாண்மைத் துறை
செயல்பாடு நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது. இதன்
அடிப்படையில் வேளாண்மை உற்பத்தியையும், அதன் மூலம்
விவசாயிகளினுடைய வருமானத்தையும் உயர்த்தி, கிராம அள
வில் விவசாயிகள் பங்கேற்க அடிமட்டத்தில் திட்டமிடுதல்,
கூட்டுறவு மற்றும் இதர நிறுவனம் மூலம் அதிக அளவில் இடு
பொருள் வழங்குதல், இயற்கை வளங்களான நிலம் மற்றும்
நீர் நிலைகளைப் பாதுகாக்கத் திட்டமிடுதல் மற்றும் சாகு
படிக்கு உபயோகமற்ற நிலங்களை மேம்படுத்துதல் போன்ற
பணிகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின்
ஆலோசனையைப் பெறும் வகையில் தமிழ்நாடு வேளாண்மை
மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். 1989–90 ஆம்
ஆண்டில் பகுதி-2 திட்டத்தில், அண்ணா பண்ணை,
கா. குப்பம், மேலகரம் ஆகிய இடங்களிலுள்ள அரசு விதைப்



பண்ணையில் 1.50 இலட்சம் செலவில் 20 ஏக்கருக்கு சொட்டு
நீர்ப்பாசன வசதி அமைக்கப்படும். இங்கே இதை ரொம்பப்
பாராட்டிச் சொன்னார்கள். அதிலே ஒரு விளக்கத்தை நான்
சொல்வது............

திரு. வி. கே. சின்னசாமி: குறுக்கிடுவதற்கு மன்னிக்க
வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்பு
மிகு அமைச்சரவர்கள் கரும்பைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது
நான் ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்
றைக்குப் பெரியார் மாவட்டத்தில் சக்தி சுகர்ஸ் என்று ஆப்பக்
கூடலிலே ஒரு சர்க்கரை ஆலை அமைக்கப்பட்டிருக்கிறது.
அதற்குப் பின்னால் பன்னாரி அம்மன் சுகர்ஸ் என்று சத்திய
மங்கலத்தில் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, எங்க
ளுடைய பகுதியெல்லாம் கோபி தாலுக்காவின் கடைமடையிலே
இருக்கிறது. சத்தியமங்கலத்திற்குப் பக்கத்திலேயிருக்கிற
பன்னாரி அம்மன் சுகர்ஸ்-க்குக் கரும்பு அனுப்ப வேண்டுமென்
றால் எங்களுடைய தாலுக்கா முழுவதும், எங்களுடைய ஏரியா
முழுவதும் ஆப்பக்கூடலில் உள்ள சக்தி சுகர்ஸினுடைய பேக்
டரிக்குத்தான் அனுப்பப்பட வேண்டுமென்று சொல்லியிருக்
கிறார்கள். இது எந்த அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறது?
விவசாயிகளைக் கலக்காமல் இப்படிப் பிரிக்கப்பட்டிருக்கிறது.
ஆகவே, இந்தக் கரும்பை எடுத்துச் செல்வதற்கு டன்னுக்கு
இவ்வளவு ரூபாய் என்று விவசாயிகளிடத்திலே வசூல் செய்
கிறார்கள். ஆகவே, பன்னாரி அம்மன் சுகர்ஸ்-க்கு எங்களைப்
போன்றவர்கள் அதாவது, கடத்தூர் கிராமம், கொடுவேலி
போன்ற இடங்களில் 4 கிலோ மீட்டர் தூரத்திலேதான் இருக்
கிறது. எங்களுடைய எலத்தூர் கிராமம் போன்ற கிராமங்
களெல்லாம் பத்து கிலோமீட்டர் சென்றால் பன்னாரி அம்மன்
சுகர்ஸிலே கரும்பைக் கொடுத்துவிடலாம். ஆனால் நாங்கள்
ஆப்பக்கூடலுக்குச் செல்ல வேண்டுமென்றால் 40 கிலோ மீட்
டருக்கு மேல் தொலைதூரம் செல்ல வேண்டியதாக இருக்கிறது.
ஆகவே, கரும்பு விவசாயிகள் கரும்பு போடுவதற்கு அச்சப்
படுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட விவ
சாயிகளுடைய கருத்தைக்கேட்டு பன்னாரி அம்மன் சுகர்ஸ்-க்கு
நாங்கள் கரும்பை அனுப்புவதற்கு முயற்சிகளை எடுப்பதற்கு
அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி : தலைவரவர்களே, உறுப்
பினர் சொல்லுகின்ற இந்தக் கருத்து ஏற்கெனவே அவர்கள்
ஆட்சியில்தான் அது பிரிக்கப்பட்டதே தவிர, நாங்கள் பொறுப்
பேற்ற இந்தக் குறுகிய காலத்தில் அது பிரிக்கப்படவில்லை
என்பதை முதலிலே சொல்லிக்கொள்கிறேன். இப்படிப் பிரித்
திருப்பது தவறு, இதைத் திரும்பவும் எங்களுக்கு அங்கே
கொடுக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை நான்கு தினங்களுக்கு
முன்னால் வந்தது. அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிற

பொழுதே கேரளத்தில் இருக்கிற அந்தச் சர்க்கரை ஆலைக்குத்
தான் கொடுப்போம், அங்கேதான் கொடுக்க வேண்டும், எங்
களை எடுக்கக்கூடாது என்று இன்னொரு மகஜரும் வந்தது.
இதற்கிடையில் நிதிநிலை அறிக்கையும் வந்தது. இதையொட்டி
விரிவான விசாரணை நடத்தி விவசாயிகள் எதை விரும்புகிறார்
களோ அவர்களுக்கு எது இலாபகரமானதோ அதைச் செய்
வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமென்பதை நான்
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த இருபது ஏக்கருக்குச் சொட்டு நீர்ப்பாசன வசதி
அமைக்கப்படுமென்று நான் இங்கே குறிப்பிட்டேன். அந்தச்
சொட்டு நீர்ப் பாசனத்தைப்பற்றி ரொம்பபேருக்குத் தெரியாமல்
இருந்தது, இந்த இலாக்கா எடுத்துக்கொண்ட பெரும் முயற்சி
யினால்தான் --- மாண்புமிகு விஜயராகவன் அவர்கள் கூட அது
ஒரு நல்ல திட்டம், அந்தத் திட்டத்தைப் பயன்படுத்த வேண்
டும்; அந்தத் திட்டம் எல்லாயிடங்களுக்கும் அறிமுகப்
படுத்தப்படவேண்டுமென்று வாதாடிக் கேட்டார்கள் —
அதனுடைய முக்கியத்துவம் ரொம்ப அதிகமாகத் தென்
பட்டது. ஆனால் ஒரு சூழ்நிலை அதற்குத் தருகிற மானி
யத்தை சிறு விவசாயிகளுக்கு மட்டும் தான் தர வேண்டுமென்று
ஒரு கட்டுப்பாட்டை மத்திய அரசு விதித்து விட்டது. அப்படி
விதித்துவிட்ட காரணத்தால், அதைப் பயன்படுத்திக் கொள்
வதற்குச் சிறு விவசாயிகளால் முடியவில்லை. சென்ற ஆண்டுகூட
இது சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட தொகை செலவழிக்க முடியா
மல் திரும்பிப் போயிருப்பதாக நம்முடைய துறை மூலம் நான்
நேற்றுத்தான் தெரிந்துகொண்டேன். இந்த ஆண்டு அப்படி
யில்லாமல் எல்லா விவசாயிகளுக்கும் அறிமுகப்படுத்த வேண்டும்.
அது மிக முக்கியமான திட்டம். இது பயிரை வளர்க்கிற திட்டம்.
இப்படி ஒரு வறட்சியான நேரத்தில் மிகப் புனிதமான ஒரு
காரியம் என்பதை மத்திய அரசுக்குத் தெரிவித்து அவர்கள்
தருகிற சில கண்டிஷன்களை ரிலாக்ஸ் செய்து கொடுக்குமாறு
ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு நாங்கள்
எழுத இருக்கிறோம் என்பதையும் இந்த அவையில் தெரிவித்துக்
கொள்கிறேன்.

10,20 இலட்சம் ரூபாய் செலவில் அரசு விதைப் பண்ணை
களில் கட்டுமானப் பணிகள்—விதைப்பண்ணை என்பது, நாம்
இப்பொழுது விதைப் பண்ணையை மட்டும் வைத்துக்கொள்ளா
மல், அதிலே தயார் பண்ணுவதோடு மட்டுமல்லாமல் வெளி
யிலேயும் வாங்குகிறோம், விவசாயிகளிடத்திலே. அவர்
களிடத்திலே ஒரு ரூபாய் கூடக்கொடுத்து வாங்கி
அதற்குப்பிறகு நாம் சுத்தம் செய்து ஒரு முறை சரிசெய்யப்
பட்டுஅதற்குப்பிறகு வண்டிச் சத்தம் இவைகள் சேர்க்கப்
பட்டு அதற்குப்பிறகு ஒன்றரை ரூபாய் மானியம் விவசாயி
களுக்குத் தள்ளுபடி செய்து அவர்களிடதிலே விற்கிறோம்.



இது அத்தனையையும் நாமே இவ்வளவு விலையில் தயார் செய்ய முடியவில்லை. ஆகவே படிப்படியாக இருக்கிற நிலங்களை வைத்துக் கொண்டும், தேவைப்படுகிற நிலங்களைச் சேர்த்துக் கொண்டும், புதிதாக அல்லாமல் இருப்பதை உயர்த்தவேண்டும். 14 சதவீதத்தை குறைந்தபட்சம் 20 சதவீதமாக ஆக்கி, அவர்களுக்கு விதை அளிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இவ்வளவு ரூபாயை அதற்கு ஒதுக்கியிருக்கிறோம்.

(பிற்பகல் 2-10)

பயிர் உற்பத்தி உத்திகளை செயல் விளக்கம் மூலம் விளக்க, 2 ஹெக்டரில் செயல் விளக்கத் திட்டங்கள் உதவி வேளாண்மை அலுவலகத்திற்கு ஒன்று என்ற அளவில் 4 ஆயிரம் திட்டங்கள் அமைக்கப்படும். இதற்கு 8 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டு உள்ளது. 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் வேளாண் விரிவாக்க மையங்கள் பழுதுபார்க்க வேண்டிய நிலைமையில் உள்ளது. புதியக் கட்டிடங்கள் வேண்டுமென்று சொன்னார்கள். பழையக் கட்டிடங்களைப் பழுதுபார்க்கவேண்டும் என்று ஒருவரும் யோசனை சொல்லவில்லை. ஆனால் நான் பார்த்த 2, 3 இடங்களில் இந்தக் கட்டிடங்கள் பழுதடைந்திருக்கின்றன. புதிதாக கட்டவேண்டிய சூழ்நிலைகளும் இருக்கின்றன. ஆனால் பொருளாதாரத் துறையில், அதற்கான ஏற்பாடுகளை நம்மால் எட்டிப் பார்க்க முடியவில்லை. ஆனால் போகப் போக நிச்சயமாக இவைகளைச் செய்வதற்கு தகுதியான யோசனைகள் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் பிரம்மதேசத்திலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ரெட்டணை மற்றும் ரிஷிவந்தியம் மற்றும் திருச்சி மாவட்டத்தில் விக்கிரமங்களம் ஆகிய இடங்களில் 4 புதிய வேளாண் விரிவாக்க மையங்கள் அமைக்கப்படும். இங்கே சொன்னார்கள். விரிவாக்க மையங்களாவது பல்கலைக் கழகத்தில் துவங்கி, கல்லூரிக்கு வந்து, அதற்குப் பிறகு பயிற்சி முகாமுக்கு வந்து கடைசியில், இதாவது கிடைக்காதா என்று கேட்டார்கள். இந்த வருடம் 4 இடங்களில் விரிவாக்க மையங்களை ஏற்படுத்தலாம் என்று இருக்கிறோம். இருக்கிற நிதிக்குத் தக்கவாறு அதை ஏற்படுத்த இருக்கிறோம்.

எல்லாவற்றையும் விட விதை. வித்துக்கள். இந்த விதை வித்துக்களைப்பற்றி நாம் அதிகமாக பேசாவிட்டாலும், நேரம் இல்லை, உங்களுக்கும் இல்லை, எனக்கும் இல்லை,—இது முக்கியமான ஒரு பிரச்சினை. நாட்டிலே இப்போது இதுதான்—பண வியாபாரம்—நெல், கரும்பு, அதைவிட முக்கியமாக பணப் பயிரிலே இருப்பது இதுதான். இந்த எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் மாநில நிதி உதவியுடன் நிலக்

[திரு. கோ. சி. மணி] [1989 ஏப்ரல் 5

கடலை, எள், சூரியகாந்தி, மற்றும் ஆமணக்கு ஆகியவை
களுக்கு தரமான வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயி
க்ளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. நடப்பாண்டில்
12,330 டன் நிலக்கடலை, 120 டன் ஆமணக்கு விதைகள்
வினியோகம் செய்யப்பட்டுள்ளன. விதையை நாம் சுத்திகரித்து
சீராக சரிபார்த்து, கொடுக்கப்பட்டவைகள், நடப்பாண்டிற்கு
மட்டும், இந்தத் திட்டத்திற்கு 519.33 லட்சம் நிதி ஒதுக்கீடு
செய்து, செலவு செய்யப்பட்டுள்ளது. சற்று அதிகம்.

தேசிய எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகரிப்புத் திட்டத்
தின் பேரில் இந்த மத்திய அரசுத் திட்டம், மாநில மற்றும்
மத்திய அரசு, சமஅளவில் நிதி ஒதுக்கீடு செய்து, எல்லா மாவட்
டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நிலக்கடலை,
மகசூலைப் பாதிக்கும் முறைகளை ஆராய்ந்து, தக்க பரிந்துரை
களை வழங்கி, உற்பத்தியை அதிகரிப்பது இந்தத் திட்டத்தின்
நோக்கம். நிலக்கடலை எவ்வளவு பெரிய முக்கியமான பணப்
பயிர் என்பதை உணர்ந்துதான் இந்தத் திட்டத்தை முழுமை
யாகச் செயல்படுத்துவதற்கு நாம் இன்றைக்கு இசைவைத் தந்
திருக்கிறோம். இந்தத் திட்டத்திற்கு 150 பெருவிளக்கப்
பாத்திகள் மூலமாக 4,800 சிறு, குறு விவசாயிகள் இந்த ஆண்டு
மட்டும் பயன் அடைந்து இருக்கிறார்கள்.

அதேபோல் இடுபொருட்கள் மற்றும் நுண்ணூட்டச்
சத்து ஆகியவைகள் 40 ஆயிரம் ஹெக்டருக்கு வினியோகம்
செய்யப்பட்டு உள்ளன. பயிர் பாதுகாப்புக் கருவிகள் 2,543,
வேளாண்மைக் கருவிகள் 1,000 ஆகியவைகள் விநியோகிக்கப்
படுகின்றன.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி சிறப்புத்திட்டத்தின்கீழ்
மத்திய அரசின் முழுமையான மானியம் பெறும் திட்டமாக, இவ்
வாண்டில் எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்த இருக்
கின்றன இந்தத் திட்டத்தின் கீழ் நிலக்கடலை, சூரியகாந்தி,
சோயா. மொச்சை போன்ற எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி
யைப் பெருக்க விவசாயிகளுக்கு விதை உற்பத்தி பயிர் பாது
காப்பு, திட்டமிடுதல், சிறுதளை மூலம் விதை வினியோகம்
மற்றும் விவசாயிகள் பயிற்சிக்கு மானியங்கள் அளிக்கப்படும்.
இவ்வளவு திட்டங்களும் இதிலே அடங்கியிருக்கின்றன. இந்தத்
திட்டத்தால் 300 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டுள்
ளன. இந்த ஆண்டு 2,180 பயிர் காக்கும் கருவிகளும்,
1,450 பண்ணைக் கருவிகளும் விநியோகிக்கப்பட்டு உள்ளன.
மேலும் 70 ஆயிரம் ஹெக்டேர் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி
பரப்பில், பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளோடு மேற்கொள்ளப்
பட்டுள்ளன. மேற்கண்ட திட்டத்தால் சுமார் 48 ஆயிரம் சிறு,
குறு விவசாயிகள் பலன் பெற்றுள்ளனர்.



1989 ஏப்ரல் 5] [திரு. கோ. சி. மணி]

இதைவிட உரத்தை, விதையை, கூடுதலாக மூட்டைக்கணக்கில்
வைத்து அதை சுத்திகரித்த இடத்திலிருந்து திரும்பக் கொண்டு
வந்து, விவசாயிகளிடையே விநியோகிக்கிறபோது, பிரித்தால் அதை
கீழே கொட்டிவிட்டால், ஏற்கனவே இருப்பவைகளும் அதிலே
சேர்ந்துவிட்டால் கலப்படம் வந்துவிடும் என்ற அச்சத்தின் காரண
மாக இந்தப் பசலி முதல், இந்த ஆண்டிலிருந்து, 3 விதமாக,
50 கிலோ, 20 கிலோ, 10 கிலோ என்று—ஏன் என்றால் 50
கிலோவை அதிமாகக் கேட்கிறார்கள்— ஒரு விவசாயிக்கு குறைந்த
பட்சம் 50 கிலோ விதை கொடுக்கவேண்டியதாக இருக்கிறது.
அதற்குப்பிறகு குறைந்தால், 20 கிலோ, 10 கிலோ என்று
அப்படி விற்க முடியவில்லை என்றால், 10, 5 மூட்டை
களைக் கொடுத்தால் 50 கிலோ ஆகிவிடுகிறது.
அதற்காக எந்த இடத்திலே நேர்த்தி செய்யப்படுகின்றதோ,
எந்த இடத்திலே சர்ட்டிபிகேட் வழங்கப்படுகின்றதோ, அந்த
இடத்திலே, அந்த மூட்டைக்கு உள்ளேயே சர்ட்டிபிகேட்டை
வைத்து, கையொப்பமிட்டு, அதைத் தைத்து, அதைப் பிரிக்கக்
கூடாத அளவிற்கு, அதைப் பிரிக்க முடியாத அளவிற்கு புதிய
பைகள் ஏற்பாடு செய்து, கொஞ்சம் அதிகமாகச் செலவானாலும்
கூட, அந்தச் செலவை நாமே ஏற்றுக்கொண்டு, விவசாயின் தலை
யில் கை வைக்காமல் அதற்கான ஏற்பாடு செய்யும் திட்டத்தை
இந்த ஆண்டு முதல் அமல்படுத்தலாம் என்பதை நான் உங்களுக்
குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்னையைப்பற்றிச் சொன்னார்கள். தென்னை விலை
வீழ்ச்சியின் காரணத்தால் ஏற்படும் நிலையைப் பற்றிச் சொன்
னார்கள். நான் சொல்ல விரும்புவது, நெல்லுக்குத்தான் விலை
வீழ்ச்சி சட்டம் இருந்தது. இந்த வருஷம் உற்பத்தியை விட
தென்னைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாகத்தான்
தஞ்சை மாவட்டத்திலே கூட சில வியாபாரிகள், விவசாயிகள்
என்னிடத்திலே வந்து முறையிட்டார்கள். அதிலே கூட,
1988–89ஆம்ஆண்டில் 1.7 லட்சம் எக்டேர் பரப்பாக இருந்ததை
1.14 இலட்சம் எக்டேருக்கு உயர்த்தி, 86 இலட்சம் எக்டேருக்கு
உயர்த்தி 197 கோடி எண்ணிக்கையில் தேங்காய்கள் உற்பத்தி
செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அது இந்த ஆண்டு அதிகமாக
விளைந்தாலும் கூட, விவசாயிகளுடைய எதிர்பார்ப்பில் அதிக
எண்ணிக்கையில் தெரிந்தாலும் கூட, விலை கட்டுப்படாமல்
இருந்த காரணத்தால், விலை குறைந்து விட்ட காரணத்தால்
இது விவசாயிகளை பாதித்துக்கொண்டுதான் இருக்கும் என்று
நானும் கருதுகிறேன். இருந்தாலும் அதைத் தொடர்ந்து,
இந்தத் தொழில் மழுங்கிவிடாமல் ஊக்குவிக்கப்படவேண்டு
மென்பதற்காக இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து, இந்தத்
திட்டத்தை வளர்க்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

தோட்டக் கலைப் பயிரைப் பொறுத்தவரையில், தோட்டப்
பயிர்களின் சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்துதல், சாகுபடி உள்ள

பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துதல், புதிய வகை பயிர்களை சாகுபடிக்கு அறிமுகப்படுத்துதல் என்ற மூன்று குறிக்கோள்களுடன் செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 10,000 எக்டேர் நிலப்பரப்பில் புதியதாக நீண்டகாலத் தோட்டக் கலைப் பயிராக பழ மரங்கள், முந்திரி, காபி, தேயிலை, கிராம்பு, மிளகு, போன்ற பயிர்கள், மற்றும் மலர்ப் பயிர்களை சாகுபடிக்குக் கொண்டு வர செம்மையான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களுக்குத் தேவையான, தரமான உயர் விளைச்சல் தர, பிற செடிகள், தோட்டக் கலைத் துறையின் கீழ் செயல்படும் 54 அரசுத் தோட்டக் கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகின்றன. இப்பண்ணைகளின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 163 இலட்சம் செடிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. சாகுபடியிலுள்ள பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி, புதிய தொழிற் நுட்பங்களை உபயோகப்படுத்தி மாதிரி பாத்திகள் அமைத்தல், கருத்தரங்குகள் நடத்துதல், கலந்துரையாடல்கள் செய்தல், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல், கருத்துக் காட்சிகள் போன்ற பல்வேறு நிர்வாக முறைகள் மூலம் விவசாயிகளுக்கு தெளிவாக்கப்பட்டு வந்திருக்கிறது. இன்னும் அதை விரிவுபடுத்த இருக்கிறது. மற்றும் பல பயிர், அடுக்குப் பயிர், பல ஊடு பயிர்கள் போன்ற ஒருங்கிணைந்த சாகுபடி பயிர்களையும் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடி. கரும்பு, சர்க்கரை இனிக்கும் என்பது எல்லோருக்கும் விருப்பம் தான். ஆனால் நம்முடைய உறுப்பினர்கள் பல பேர் கரும்பு சர்க்கரை ஆலைகளில் ஏற்பட்டிருக்கின்ற சில திடீர் மாற்றத்தினாலும், இயற்கை உபாதையாலும் பல சங்கடங்களால் கரும்பே கசக்கும் என்கின்ற அளவிற்கு இப்போது விவாதங்களைத் துவக்கியிருக்கிறார்கள். நிச்சயமாக கரும்பு கசக்காது, இனிக்கும் என்பதை இந்த நிர்வாகம் எடுத்துக் காட்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்தையும் விட அதிகமாக தமிழகத்தில் ஒரு ஏக்கருக்கு 108 டன் மகசூல் கிடைப்பது ஒரு அரிய சாதனையாகும். இது இயற்கைச் சாதனை. அத்தோடு நாமும் ஒத்துழைத்திருக்கிறோம். தமிழ்நாட்டில் சுமார் 2 லட்சம் எக்டேர் நிலத்தில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. மொத்த பயிர்ச் சாகுபடியில் 2½ சதவீதமாகும். இப்போது பரப்பளவில் 220 இலட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. உற்பத்தி செய்யப்படும் கரும்பின் அளவில் 50 முதல் 55 சதவீதம் சர்க்கரை ஆலைகளில் அரவை செய்யப்படுகிறது. 89-ல் 100 இலட்சம் டன் கரும்பு அரைக்கப்பட்டு, 9 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் இதுவரை இல்லாத உச்ச சாதனையாகும் இது. அரவை



செய்கின்ற கரும்புக்கு மொத்த விலை விவசாயிகளுக்கு ரூ. 260 கோடி வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1985-ல் மத்திய அரசு சட்டபூர்வ விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 190 என்று அறிவித்தது. மேலும் இந்த விலையை ரூ. 5 ஆக உயர்த்தி, டிசம்பர் மாதம் 1988-ல் ரூ. 195 என்று அறிவித்தது. மாநில அரசு டன் ஒன்றுக்கு ரூ. 220 ஆக பரிந்துரை செய்து, விலையை அறிவித்தது. மேலும் இந்த அரசு ஒரு டன் ஒன்றுக்கு ரூ. 5 என்ற அளவில் உயர்த்தி ரூ. 225 ஆக அறிவித்துள்ளது. இதிலே கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகளிடம் இருப்பதை—இதை நீங்கள் கொஞ்சம் கவனித்துக் கொள்ளவேண்டும்—அவர்கள் மத்திய சர்க்காரிடத்திலே லைசன்சு வாங்குகிறார்கள். நீங்கள் மாநில சர்க்காரிடத்திலே முறையிடுகிறீர்கள். லைசன்சு வழங்குவது அவர்கள். கண்டிஷன் போடுவது மத்திய சர்க்கார். அதை ஒட்டி இங்கே தனியார்க்கு கிடைக்கும் லாபத்தை இவ்வளவு கூட்டுறவுத் துறைக்கு அதிகமான லாபம் கிடைக்கிறது என்று சொல்லக் கூடிய அளவிற்கு, அவர்கள் கிடைக்கிற லாபத்தில் போனஸ் என்பதும் இல்லாமல், டிவிடெண்டு என்று இல்லாமல், எவ்வளவு விவசாயிகள் கரும்பு கொடுத்திருக்கிறார்களோ, அந்த அடிப்படையில் சதவீத கணக்கு பார்த்துக் கொடுக்கிறபோது ஏறத்தாழ ரூ. 8 கோடி பிரத்யேகமாக பொதுத்துறை, கூட்டுறவுத் துறையில் வேலை செய்கின்ற மில்கள் மட்டும் வழங்க திட்டமிடப்பட்டு வழங்கியும் உள்ளது. ஏறத்தாழ, 280-ஐ தாண்டி 300-க்கு கிட்டத்தட்ட சிலபேர் பயன்பெறுவார்கள் என்ற நிலை தெரிய வந்திருக்கிறது. அதற்கு என்னுடைய பாராட்டுதலை அந்தத் துறையினருக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுவரையில் எல்லாம் என்னதான் சொன்னாலும் எப்படிச் சொன்னாலும் உணவு உற்பத்தி செய்கிற இந்த இலாகா மத்தியான நேரத்தில் வந்திருக்கிறது. என்ன இடர்ப்பாடுகள் என்பதை விளக்கிச் சொல்ல முடியவில்லை. இரண்டு மூன்று பேர்கள் இங்கே சொன்ன கருத்துக்கள்......

(பிற்பகல் 2-20)

திரு. கோ. பூவராகன் : ஷுகர் கேன் டைரக்டர்ஸ் அன்-ரெஜிஸ்டர்ட் கரும்புக்கு மத்திய அரசாங்கம் விலையைக் கொடுத்தால் போதும் என்று ரிவைஸ்டு ஆர்டர் போட்டிருக்கிறார்கள். அந்த மாதிரி போடுகிற பழக்கம் இல்லை. இது யாருடைய தூண்டுதலினாலே அன்-ரெஜிஸ்டர்ட் கரும்புக்கு மத்திய அரசாங்கம் கொடுக்கிற அந்த விலையைக் கொடுத்தால் போதும், மாநில அரசாங்கம் கொடுக்கிற விலையை கொடுக்க வேண்டாம் என்று போடுவதற்கு காரணமானவர்கள் யார்? எப்படிப்போடப்பட்டது? உற்பத்தி செய்கிறவர்களுக்கு சாகுபடிச் செலவு ரெஜிஸ்டர்ட் ஆனாலும் அன்-ரெஜிஸ்டர்ட் ஆனாலும்

ஒரே செலவு தான் ஆகிறது. நாம் கொடுக்கிற பணத்தைக் கூடக்கொடுக்கவேண்டாம் என்று திருத்த ஆர்டர் போடுவார்கள் என்று சொன்னால் அது சரியா என்று அமைச்சர் அவர்கள் தான் அறிவிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : என்னுடைய எண்ணம் இதிலே என்ன என்றால் கரும்பை எடுத்துக் கொண்டால் போதும் என்று ரொம்ப விவசாயிகள் இப்போது நினைக்கிறார் கள். விலையைப் பற்றி பார்க்காமல் அன்-ரெஜிஸ்டர்ட் என்று உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். அவர்கள் எடுத் துக் கொள்ளக் கூடாதா, முடியாத அந்தக் கரும்பை எடுத்து வருவதற்கு ஏதாவது உடன்பாடு செய்திருப்பார்கள் என்று கருதுகிறேன். விசாரிக்கிறேன். நம்முடைய பூவராகன் அவர்களே சொன்னார்கள்.

திரு. என. பழனிவேல் : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னது போல் சில நேரங்களில் கரும்பை விவசாயிகளிடத்திலே இருந்து அந்த ஆலைகள் எடுப்ப தில்லை. சில நேரங்களில் அவர்கள் கொடுக்காவிட்டாலும் விடுவதில்லை. அந்த நிலை என்னுடைய தொகுதியிலே அமராவதி ஷுகர் பேக்டரியிலே போன ஆண்டு, அதாவது ஆளுநரின் ஆட்சியின்போது 30 விவசாயிகள் பதிவு செய்யாதவர்கள். அவர் கள் சொந்தமாக ஆலை போட்டு ஆட்டும்போது அங்கே போய் அதிகாரிகள் வழக்கு தொடுத்து ஆலையை சீல்பண்ணி இன் றைக்கு மதுரை கோர்ட்டிலே கிரிமினல் வழக்கு தொடர்ந்து, அந்த விவசாயிகள் வக்கீல் வைத்து வழக்கு நடத்திக்கொண்டிருக் கிறார்கள். அது சம்பந்தமாக அரசுக்கு மனு அனுப்பியிருக்கிறார் கள். அதைத் திரும்பப் பெறுவதற்கு தங்கள் துறை ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : வழக்குகளைப் பற்றி எல்லாம் திடீர் என அவையில் பேசுவது முறையல்ல. அழகும் அல்ல. பிறகு நேரில் வந்து உறுப்பினர் அதைப்பற்றி எழுதிக் கொடுத்தால் பரிசீலிக்கலாம்.

நம்முடைய முன்னாள் அமைச்சர் அவர்கள் டிராக்டர் களைப் பற்றிச் சொன்னார்கள். வாங்கியிருக்கிறார்கள் என்று சொன்னீர்களே தவிர; எண்ணிக்கையைச் சொன்னீர்களே தவிர எவ்வளவு ரிப்பேர் என்று சொல்லவில்லை என்று சொன் னார்கள். நம்முடைய ஊர்களில் ஓடிக்கொண்டிருக்கிற சைக்கிள் கூட ரிப்பேர் ஆகிறது. இயந்திரங்கள் என்று சொன்னாலே ரிப்பேர் ஆகாமல் இருக்கவே முடியாது. 159 டிராக்டர்களில் 5 டிராக்டர்கள் தற்சமயம் ரிப்பேரில் இருக்கின்றன. அவைகள் பழுது பார்க்கப்பட்டு விரைவில் வேலை செய்யும். கன்டெம்டு எல்லாம் கூட கிடையாது. 120 புல்டோசர்கள் தற்போது



இருக்கின்றன. அதிலே ஒன்றும் பழுது இல்லை, அப்போதைக்கு அப்போது வந்தால் ரிப்பேர் செய்து வண்டியை அனுப்பி விடு கிறோம். ரோடு ரோலர் பற்றிச் சொன்னார்கள். அதை என் னுடைய இலாகாவிலே வாங்க வேண்டிய அவசியமே இல்லை. வாங்குவதும் இல்லை. 1988–89 பிப்ரவரி முடிய டிராக்டர்கள் மூலம் வாடகைக்கு கொடுத்தது—அதையும் கேட்டீர்கள்—வாட கைக்கு கொடுத்தது—32 லட்சத்து 87 ஆயிரம் ரூபாய், புல்டோசர் 394 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய். இந்த வருஷம் பிப்ரவரி மாதத்தோடு. மார்ச் 1-க்குப் பிறகு வேறு கணக்கு.

எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த சி. பி. எம்., கோ. வீரையன் அவர்கள் நிறைய கருத்துக்களைச் சொன்னார்கள். இன்னும் சொல்வதற்கு இயலாமல் தடுத்து நிறுத்திவிட்டோம். இருந் தாலும் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் சென்ற ஆண்டில்--இந்த ஆண்டு நடைமுறை என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் பேசினார் களோ என்பது தெரியவில்லை, விவசாயிகளே அட்மிஷன் ஆக வில்லை என்று இருக்கிறது. (குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, விவசாயத்தின் மூலம் உணவு உற்பத்தி செய்யப்படுவதே சாப்பிடு வதற்காகத்தான். ஏற்கெனவே 2-30 மணியாகிவிட்டது. 2 மணி வரை என்று தான் ஒதுக்கியிருந்தீர்கள். ஆக உற்பத்தியைப் பற்றியே சொல்லி, மேலும் மேலும் அந்த உற்பத்தியைச் சாப்பிட விடாமல் செய்து கொண்டிருக்கிறீர்களே, ஒருவேளை இன்னும் நீண்ட நேரம் ஆகுமானால் நாளை கூட அமைச்சர் அவர்கள் வந்து பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்களுடைய பதிலுரையைக் கேட்டால் உங்களுக்கு பசி தீர்ந்துவிடும்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்களே, அதிலே 783 மாணவர்கள் மொத்தம். அதிலே 45 மாணவர்கள் நேரிடையாக விவசாயிகளுடைய பிள்ளைகள். 45 சதவீதம் அதற்குப் பிறகு, ஏதாவது தொடர்பு விவசாயத் திலே அவர்களுக்கு இருந்தால் தான் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது என்ற பிரின்சிபிள் வைத்திருக்கிறார்கள். கூடுமான வரையில் விவசாயிகள் பிள்ளையாகவே சேர்ப்பதற்கு வைத்திருக் கிறோம். அதிலே சேர்ப்பதில் எந்தவிதமான...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கிளாரிபிகேஷன் கேட்கலாம். அமைச்சருடைய பேச்சிற்குப் பிறகு வேண்டுமானால் சந்தேகம் கேட்கலாம்.

[1989 ஏப்ரல் 5

திரு. கோ. வீரையன் : துணைத் தலைவர் அவர்களே, கிளாரிபிகேஷன் தானே தவிர நேரத்தை எடுத்துக்கொள்கிற நோக்கம் எனக்கு இல்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயி வீட்டுப் பிள்ளையே சேர்க்க வில்லை என்று நான் சொல்லவில்லை. இன்றைக்கு இருக்கக் கூடிய அட்மிஷன் செட்-அப்பிலே அந்த மார்க்கை வைத்து சேர்க் கும்போது, நகரத்திலிருந்து வரக்கூடிய........

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய பிள்ளைகள் அதிகமாக சேர்க்கப் படும். போதுமா ? மாண்புமிகு ஜனதா உறுப்பினர் விஜய ராகவன் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர் இங்கு இல்லை என்று நினைக்கிறேன். இருந்தாலும் சொல்லிவிடுகிறேன். திருப்பதிசாரம் வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையிலிருந்து வழங்கப்படுவதெல்லாம் சரியாக முளைக்கவில்லை என்று சொன் னார்கள். அந்த விதைகளை சாக்கிலே போடும்போதே அது சரியாக முளைக்குமா என்று பார்த்ததற்குப் பிறகு தான் போடுகிறார்கள். அது முளைத்துதான் சர்ட்டிபிகேட் கொடுத்துத் தான் போயிருக்கிறது. எங்கேயாவது வைத்திருந்து ஏதாவது கோளாறு ஏற்பட்டிருக்கலாம். திருப்பதிசாரம் அரசு பண்ணையிலே சான்று பெற்ற விதைகளே உற்பத்தி செய்யப் படுவதே தவிர வெளியிலிருந்து வாங்கிக் கொடுப்பது இல்லை. சந்தேகத்திற்கு இடமே இல்லை. மதிப்பிற்குரிய ஈசுவரன் அவர்கள் சொன்னார்கள். பூச்சி மருந்து கலப்படமாக விற் பனை செய்யப்படுவது குறித்து நிறைய ரிப்போர்ட் வந்தது. பரிசீலனை பண்ணினோம். நான் ஆரம்பத்திலேயே படித்தேன். 306 மாதிரிகள் தரக்குறைவு என்று கண்டுபிடித்து வழக்கு போட்டு இருக்கிறோம். அவ்வளவு தான். இத்துறையில் என்ன தான் எடுத்துச் சொன்னாலும் கூட பசி நேரத்தில் உங்கள் செவியில் விழாது என்பதை அறிந்து வீணாக உங்களை........

* திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவசாயி. கஷ்டப்படுகிற விவசாயி. அதாவது யூ. டி. ஆர். திட்டம் என்ற ஒரு திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தின் மூலமாக ஆங்காங்கே சர்வே அளவு செய்வதற்காகச் சொல்லி இன்றைக்கு வரைக்கும் பணம் வசூல் செய்துகொண்டு இருக்கிறார்களே, அதை நிறுத்துவதற்கும், இரண்டாவது தண்ணீர் இல்லாமல் மழைக் காலங்களில் கஷ்டப்பட்டு வாட்டர் டிவைனர் வைத்துப் பார்த்து போர் கூட இன்றைக்கு 200, 150 அடி என்று போடுகின்றோம். அந்தத் தண்ணீரை வெளியே எடுப்பதற்கு ஆங்காங்கே மிஷின்கள் சப்மெர்ஜிபிள் அல்லது கம்ப்ரசர் இவைகளை வைத்துத்தான் தண்ணீர் எடுக்க முடிகிறது. இலாக்காவிலே கேட்டால் இல்லை என்று சொல் கிறார்கள். வெளியிலே கேட்டால் ஒரு நாளைக்கு வாடகை 500 என்று சொல்கிறார்கள். இதனை எங்களை மாதிரி



1989 ஏப்ரல் 5] [திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்]

உள்ளவர்கள் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகையினால் அந்த மெஷின்களையெல்லாம் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, எங்கள் நிலம் அளக்க வேண்டும் என்றாலும் கூட ரெவின்யூ டிபார்ட்மெண்டிற்குத்தான் நாங்கள் போக வேண்டும். எங்க ளிடம் சர்வே இலாக்கா இல்லை. கம்ப்ரசர் கொஞ்சம் வாங்கி வைத்திருக்கிறோம். போதுமானதாக இல்லை. பண வசதி இல்லை. பணம் நிறைய கொடுத்தீர்களானால் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம். அது தேவை தான். சிறந்த முறையில் காலம் கடந்தாலும் பசியையும் மறந்து இருந்த உங்களுக்கு நன்றி தெரிவித்து, இந்த அறிக்கையை நான் எடுத்துச் சொல்லு கின்ற வாய்ப்பை அளித்த உங்களுக்கு நன்றிதெரிவித்து கூடுமான வரையில் வேளாண்மைத் துறையைச் சார்ந்த இயக்குநர்கள், செயலாளர் மற்றும் அதிகாரிகள், அலுவலர்கள், என்னுடைய அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலர்கள் ஆகியோ ருக்கு எனக்கு தகவல் சேகரிப்பதற்கு உதவி செய்ததற்கு நன்றி கூறி தயவு செய்து 100 ரூபாயைக் குறைக்காமல் முழுவதுமாக நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 20

வேளாண்மை

திருவாளர்கள் பி. வி. இராஜேந்திரன், பொன். விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் என். பழனிவேல், ஜி. பழனிச்சாமி ஆகியவர் களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

(பிற்பகல் 2–30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ், ரூ. 1,86,5,59,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 50

வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

திருவாளர்கள் ரவி அருணன், பொன். விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றவனாகக் கருதப்பெற்றன.

திரு. கோ. வீரையன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி ;

"மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ.2,26,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுதினம் (7—4—1989) காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

42. நகராட்சி நிர்வாகம்-குடிநீர் வழங்கல் துறையின் 13—4—1987 ஆம் நாளிட்ட SRO ஏ-97(a)/87 ஆம் எண் அறிவிக்கையில் வெளியிடப்பட்ட விதிகளை ரத்து செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம்-குடிநீர் வழங்கல் துறையின் 27—2—1998 ஆம் நாளிட்ட 136 ஆம் எண். அரசாணையில்



வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

43. அண்ணா மாவட்டம், நத்தம் தாலூகாவைச் சேர்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 15—11—1988 ஆம் நாளிட்ட 701 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

144297
D
V211,31'N89
N89.8.1